வெளியீடு 3-2-1981] [Issued 3-2-1981

1532

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1980 ஜூலை 29

TUESDAY THE 29TH JULY 1980

தொகுதி VI—எண் 3—VOL. VI—No. 3

தமிழ்நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத்துறை, சென்னை-600 009
Assembly Department, Fort. St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price Rs. 3.15 Paise

## உள்ளடக்கம்.

### 29—7—1980


பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 331—353

2. தகவல் கோரல்—

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு .. 354

3. வரவு-செலவுத் திட்டம் 1980-81 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)— 354—448

(அ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்—தொடர்ச்சி. ..

(ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்—தொடர்ச்சி. ..

(இ) கோரிக்கை எண் 15—காவல் துறை—தொடர்ச்சி. ..

(ஈ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி. ..

(உ) கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள், கட்டிடங்கள்—தொடர்ச்சி. ..

(ஊ) கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்—தொடர்ச்சி. ..

(எ) கோரிக்கை எண் 51—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி— ..

திரு. பி. முகமது இஸ்மாயில். 354—358

திரு. ஏ. சாகுல் ஹமீது. 358—364

திரு. நா. சுந்தரராஜ். 364—377

| | பக்கங்கள். |
|---|---|
| மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு. | 370 |
| திரு. ப. நெடுமாறன். | 377 |
| டாக்டர் மு. கருணாநிதி. | 378—404 |
| மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன். | 404—445 |
| (ஏ) கோரிக்கை எண் 32—பின் தங்கிய வகுப்பினர் நலன்— | 448—481 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 471—481 |
| திரு. சி. த. சிதம்பரம். | 449—451 |
| திரு. சி. கோபால். | 451—453 |
| திரு. இல. பலராமன். | 453—456 |
| திரு. என். வரதராஜன். | 456—457 |
| திரு. மு. அம்பிகாபதி. | 458—460 |
| திரு. எஸ். ஆண்டித் தேவர். | 460—463 |
| டாக்டர் மு. கருணாநிதி. | 463—471 |
| (ஐ) கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம். | 481—522 |
| (ஒ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்— | 482—522 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். | 513—522 |
| திரு. பாபு கோவிந்தராஜன். | 484—487 |
| டாக்டர் கே. சமரசம். | 487—492 |
| திரு. என். எஸ். வி. சித்தன். | 492—498 |
| திரு. என். வரதராஜன். | 498—502 |
| திரு. மு. அம்பிகாபதி. | 502—504 |
| திரு. பொ. விஜயராகவன். | 504—507 |
| திரு. கி. சட்டநாத கரையாளர். | 507—510 |
| திரு. பெ. சு. திருவேங்கடம். | 510—513 |





| | பக்கங்கள் |
|---|---|
| (ஓ) கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும். | 523 |
| (ஔ) கோரிக்கை எண் 43—பல்வகை. | 523 |
| (க) கோரிக்கை எண் 55—பல்வகை மூலதனச் செலவு. | 523 |
| (ங) கோரிக்கை எண் 56—மாநில அரசு வழங்கும் கடன்களும்—முன் பணங்களும். | 523 |
| **4. அறிவிப்பு—** | |
| ஆளுநர் இசைவு—நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு 1980. | 524 |
| **5. அரசினர் சட்ட முன்வடிவு—** | |
| நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு 1980 | 524 |
| **6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்** .. | 524—525 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### செவ்வாய்க் கிழமை 1980 ஜூலை 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கில் வைந்து.''

நோயில்லாதிருத்தல், செல்வ வளமோடு திகழ்தல், அதிகரித்த விளைச்சல், இன்பநலன்கள், நல்ல பாதுகாப்பு ஆகிய இவை ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்.

### I. வினாக்கள்——விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பேரூராட்சிகளுக்கு வீட்டுவரி ஈட்டு மானியம்.

*வினா எண் 66——திரு. இரா. தாமரைக்கனி——மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்——கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா!

அ) கிராம பஞ்சாயத்துக்களுக்கு வீட்டுவரி ஈட்டுமானி யம் கொடுக்கும் திட்டத்தை பேரூராட்சிகளுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் நடைமுறைக்கு வரும்?

<u>மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு</u> : அ) இல்லை.

ஆ) கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. இரா. தாமரைக்கனி</u>: பேரூராட்சிகளுக்கு வீட்டு வரி ஈட்டு மானியம் கொடுப்பதற்குப் பதிலாக கிராண்ட் கொடுக்கப் படுகிறது. பேரூராட்சிகள் அதைச் சரியாகப் பயன்படுத்துவ தில்லை. இதன் காரணமாக பேரூராட்சிகளில் ரஸ்தாக்கள் பழுதடைந்து விட்டன. அரசாங்கம் கொடுக்கும் கிராண்டை ஒப்பந்தக்காரர்கள் எந்தக் காரியத்திற்காக கிராண்ட் பெற்றார் களோ அந்தக் காரியத்திற்காகப் பயன்படுத்துவது கிடையாது. அதிகாரிகளும் இதை கண்காணிப்பதில்லை. ஆகவே பேரூராட்சி களுக்குக் கொடுக்கப்படும் கிராண்டை நிறுத்திவிட்டு....

வகையிலே பக்கத்திலே இருக்கக்கூடிய பகுதிகளை இணைத்துக்
கொள்ளக்கூடிய வகையிலே இதனை நல்ல முறையிலே சீரமைப்
பதற்கு இந்த அரசு முன்வருமா ? என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே;
மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியின்படி பல்வேறு
பஞ்சாயத்துக்கள் சேர்க்கப்பட்டதன் பிரிக்கப்பட்டதன் காரண
மாக நிதி நிலை வசதி இப்போது சரியாக இல்லாமல் பேரூராட்சி
கள் இன்னும் பல ஊராட்சி ஒன்றியங்கள் இருந்து கொண்டிருக்
கின்றன. ஆனால் இப்போது சேர்ப்பதோ பிரிப்பதோ
கூடாது என்று மைய அரசு ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள்.
எலக்ஷன் பேன் என்ற உத்தரவின்படி வருகின்ற 30—6—81
வரை எந்தவிதமான சேர்த்தலும் பிரித்தலும் கூடாது என்ற
அடிப்படையில் இனிமேல் வருகின்ற 30—6—81-க்குப்பிறகுதான்
சேர்த்தலோ அல்லது பிரித்தலோ முடியும் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
நிதி நிலை பற்றாக்குறை காரணமாக எந்த வேலையும் நிற்காது
என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் நிதி
நிலை பற்றாக்குறை காரணமாக பல பேரூராட்சிகளில் பல
வேலைகள் இன்றைக்கு நின்று கொண்டிருக்கின்றன. அதைப்
போக்கும் முறையிலே பேரூராட்சிகளிலே நிதி நிலையை
அபிவிருத்தி செய்யும் முறையிலே இந்த வீட்டு வரி ஈட்டு
மானியத்தை மீண்டும் பரிசீலித்து கொண்டு வர முடியுமா?என்று
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே
நான் ஏற்கெனவே சொன்னேன். நிதி நிலை வசதி பற்றி
ஆய்வுக் குழு அறிக்கையை 74-லே கொடுத்தார்கள். அதை
இந்த அரசு மீண்டும் பரிசீலித்து வருகிறது. அதைச் செய்தா
மேலும் பேரூராட்சிகளுக்கு வேண்டிய நிதி ஒதுக்கீடு பற்றி
பணத்தை நிர்ணயிக்கலாம்.

திரு. வெ. அரங்கராசன் : பேரவைத் தலைவர் அவர்களே,
டவுன் பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் இல்லாததன் காரண
மாக அவற்றை கிராம பஞ்சாயத்துக்களாக மாற்றும்
திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா? என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல் பல பேரூராட்சிகள்
தங்களுடைய பேரூராட்சிகளை கிராமப் பஞ்சாயத்துக்களாக
மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை வந்து கொண்டிருக்கின்றன.
நிதி நிலை காரணமாக அவைகளை எல்லாம் இப்போது செய்ய

1980 ஜுலை 29]

திரு. மு. ஜான் வின்செண்ட் : அநேகப் பேரூராட்சிகளில் சிறிய சிறிய வேலைகள் செய்யவேண்டும் என்று எடுத்துக் கூறினால் பணம் இல்லை என்று ஒரேயடியாக முடிவை சொல்லி விடுகிறார்கள். அப்படிச் சொல்கிற பேரூராட்சிகளில் உள்ள குறைகளை யாரிடம் சொல்வது, எப்படி அவற்றை நிவர்த்தி செய்வது என்பது குறித்து ஆராய இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : எந்த திட்டமானாலும் நிதிவசதி காரணமாக நிதி இல்லை என்ற காரணத்திற்காக நிறுத்தி வைக்கக்கூடாது என்பதுதான் அரசின் கொள்கை. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எங்கு நிதிப் பற்றாக்குறை இருந்தாலும் அதையெல்லாம் சரிகட்டி போடுகிற திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு செய்து கொண்டிருக்கிறோம். அதற்காகத்தான் இப்போதெல்லாம் தமிழக முதல்வர் அவர்கள் இந்த தன்னிறைவுத் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் மூலம் இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து அது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த பேரூராட்சிகளில் சமுதாயப் பணிகள் பெருமளவுக்கு நடைபெறாமல் இருக்கின்றது என்பது ஒரு முக்கியமான உண்மை. ஆகவே, அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலிலே ஒரு கோடி ரூபாய் அளவிலே செலவாகும் என்று சொன்னார்கள். ஆகவே, இந்த வீட்டு வரி ஈட்டு மானியத்தை மீண்டும் பேரூராட்சிகளுக்கு விஸ்தரிப்பதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கடந்த 1974-லே நிதி வசதி பற்றி ஆய்வுக் குழு இந்த அறிக்கையை கொடுத்தது. அதன் மூலமாக கிராமப் பஞ்சாயத்து ஊராட்சி ஒன்றியங்கள் 6 வகையாக நிதி நிலை வசதியின் அடிப்படையிலே பிரிக்கப்பட்டதன் காரணமாக இந்தக் குழுவின் அறிக்கையிலே 105 லட்சம் அதாவது ஒரு கோடியே 5லட்சம் என்கின்ற கணக்கைத் தெரிவித்தார்கள். அதனால் அப்போதிருந்த அரசு இதைக் கைவிட்டது. ஆனால் இந்த அரசு அதைப் பரிசீலிக்கும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, டவுன் பஞ்சாயத்துக்கள் என்று சொல்லக்கூடிய வகையில் தேவையற்ற நியாயமற்ற முறையற்ற வகையிலே பிரித்ததன் காரணமாக சரியாக நிர்வாகத்தை நடத்த முடியாமல் இருக்கின்றன. அதை மாற்றி இப்போது மேலும் விரிவாக்குகின்ற

முடியாது இருக்கிறோம். தவிர எலக்ஷன் பேன் என்ற ஒரு உத்தரவு தடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் நிதி நிலை பற்றாக்குறையின் காரணமாக பல வேலைகள் தடைபடுகின்றன என்று சொன்னார்கள். ஆனால் நிதி நிலை அதிகமாக பஞ்சாயத்துக்களுக்கு வரக்கூடிய அளவிலே ஆங்காங்கு புறம்போக்காக இருக்கின்ற நிலங்களிலே ஜினியா போன்ற புல் வகைகளையும் மரங்களையும் நடுவதற்கான திட்டம் இருக்கிறதா? தவிர நகர பஞ்சாயத்துக்களில் தண்ணீர் கொடுக்காமல் தண்ணீருக்காக அதிகமான வரியைப் போட்டிருக்கிறார்கள். ஆகவே நகரத்தோடு சேர்ந்த அத்தனை கிராமங்களுக்கும் அதிகமாக பணம் பெறுவதால் தண்ணீர் கொடுப்பதற்கான வழிவகை செய்ய முயற்சிக்குமா? என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–10]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வீட்டு வரியை அதிகப்படுத்துவது என்பது இப்போது சாலப் பொருத்தமுடையதாகாது என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம். ஆனால் எங்கெங்கு நிதிநிலை குறைவாக இருக்கிறதோ அவைகளைச் சரிகட்டி திட்டங்களை ஒழுங்காகச் செயல்படுத்த வேண்டுமென்பது அரசின் நோக்கம். நிதிப் பற்றாக்குறை காரணமாக ஒரு திட்டம் செயலிழந்து போகக்கூடாது, அதன் மூலம் கிடைக்கக்கூடிய வசதி ஏற்பட காலதாமதம் ஏற்படக்கூடாது என்பது இந்த அரசின் நோக்கம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பல பேரூராட்சிகளில் நிதிப் பற்றாக்குறை காரணமாக அதிலே பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்குச் சம்பளம் கூடக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அதை மனதில் கொண்டு அந்தப் பேரூராட்சிகளுக்கும் வீட்டு வரி ஈட்டு மானியம் கொடுக்க அரசு முயற்சி எடுக்குமா? ஊராட்சிகளின் பொருளாதார நிலையும் கஷ்டமான நிலையில் இருக்கின்றன. ஊராட்சி மன்றங்களுக்கும் வீட்டு வரி ஈட்டு மானியத்தை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வீட்டு வரி ஈட்டு மானியத்தை அதிகரித்துக் கொடுக்கவேண்டுமென்று போடப்பட்ட உத்தரவு இப்போது போடப்பட்டதல்ல. 1974-லேயே நிதிநிலை பற்றிய ஆய்வுக்குழு அறிக்கைகொடுத்த நேரத்தில் அப்போது இருந்த அரசு இதை கவனிக்காமல் காலம் கடத்தினாலும் இப்போது பரிசீலித்து ஏற்கெனவே நான் எடுத்துச்

சொன்னதுபோல் எங்கெங்கு கிராம பஞ்சாயத்துக்கள் ஊராட்சி ஒன்றியங்கள் பேரூராட்சிகள் பண வசதி இல்லாமல் சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருந்தால் பரிசீலித்து அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து உதவி செய்து வருகிறது. மாண்புமிகு கருப்பையா அவர்கள் நங்கவரம் பேரூராட்சிக்கு பண உதவி தேவை என்று சொன்னார்கள். அப்போதே அரசு ஆணையின் மூலமாக பணம் கொடுக்கப்பட்டு வருகிறது. எங்கிருந்தாலும் நிலைமைகளை ஆராய்ந்து செயல்படுகிறது.

திரு. தி. அன்பழகன்: நிதி வசதி குறைவாக உள்ள ஊராட்சி மன்றங்களுக்கும் பேரூராட்சிகளுக்கும் அரசு கடன் வழங்க முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: திட்டங்களின் அடிப் படையில் கடன் கேட்டால் அரசு உதவி செய்யும்.

திரு. இரா. தாமரைக்கனி: கிராமங்களில் வீட்டு வரி ஒழுங்காக வசூலிப்பது கிடையாது. பேரூராட்சிகளில் வீட்டு வரி ஒழுங்காக வசூலிக்கப்படுகிறது. கிராமங்களில் ஐந்து வருஷங் கள் வீட்டு வரி கட்டாமல் பஞ்சாயத்து முன்னால் தலைவர்கள், அதிகாரிகள் மூலம் ரைட் ஆப் செய்து அரசாங்கத்திற்குத் தீர் மானம் போட்டு அனுப்புகிறார்கள். ஆகையால் அந்தக் கிராமங் களுக்கு கிரான்ட் கொடுக்கவும், பேரூராட்சிகளுக்கு வீட்டு வரி ஈட்டு மானியம் கொடுக்கவும் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏற்கெனவே நான் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். இருக்கின்ற நிலைமை களை ஆராய்ந்து பார்த்து அரசு முடிவு எடுக்கும்.

திரு. ஜெ. ஹேமச்சந்திரன்: கன்னியாகுமரி மாவட்டத்தி லுள்ள பஞ்சாயத்துக்களுக்கு வீட்டு வரி ஈட்டு மானியம் ஏற்கெனவே கொடுத்து வந்ததைத் தொடர்ந்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது. வேண்டாமென்று சொன்னால் நிறுத்திவிடலாம்.

திரு. கே. ஆர். சுந்தரம்: பேரூராட்சிகளுக்கு வீட்டு வரி ஈட்டு மானியம் கொடுக்கப்படுவதில்லை, ஆராயப்படுகிறது என்று சொன்னார்கள். குறைந்தபட்சம் கிராமங்களுக்குக் கொடுக்கப்படும் வீட்டு வரி ஈட்டு மானியத்தில் 50 சதவிகித மாவது கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அரசு பரிசீலனை செய்யும்.



## நகரசபை மற்றும் பஞ்சாயத்துக்களுக்கான தேர்தல்கள்.

*வினா எண். 67—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா;—

நகரசபை, பஞ்சாயத்து தேர்தல்களை 6 மாத காலத்திற்குள் நடத்த வேண்டும் என மத்திய அரசு மாநில அரசை கேட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

திரு. மி. வின்சென்ட்: மத்திய அரசு மாநில அரசிடம் இந்த ஆலோசனை வழங்கிட ஏதேனும் காரணங்களைச் சுட்டிக் காட்டியுள்ளனரா? அதற்கான காரியங்களை அரசு விளக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கடந்த 24—7—80-ல் ஒரு கடிதம் இந்த அரசுக்கு மத்திய அரசின் விவசாயத்துறை அமைச்சர் மூலமாக அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தத் தேர்தல் கள் தள்ளிப்போடக்கூடாது என்பதை அவர்கள் குறிப்பிட்டு ஆறு மாதத்தில் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்த வேண்டு மென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனேயே நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், மாநகராட்சிகள் போன்றவற்றுக் கெல்லாம் ஆறு மாதத்தில் தேர்தல் நடைபெறும் என்பதை அறிவித்திருக்கிறோம். அதற்கு முன்பாகவே கடந்த ஜனவரியிலே கூட, ஏபரல் மாதத்திலே தேர்தல் நடைபெறும் என்று நாம் அறிவித்தோம். ஆனாலும் அவர்கள் பிப்ரவரி மாதத்திலே இந்த ஆட்சியைக் கலைத்த தன் காரணமாக தேர்தல்கள் ஏப்ரல் மாதத்திலே நடைபெறா மல் போயிற்று. ஆனாலும் சொல்லிய வாக்குறுதிப்படி தேர்தல் ஆறு மாதத்திலே நடைபெறும்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, தமிழக அரசு நகரசபைகள், பஞ்சாயத்துக்கள் தேர்தலை 6 மாத காலத்திற் குள்ளாக நடத்தும் என்று அறிவித்ததற்குப் பிறகும் மத்திய அரசு அந்தத் தேர்தல்களை 6 மாத காலத்திற்குள் நடத்த வேண்டுமென்று தெரிவித்திருப்பது மாநில அரசை ஊக்குவிப்ப தற்காகவா அல்லது ஒரே எண்ணத்தோடு மாநில அரசு, மத்திய அரசு இருக்கின்றன என்ற ஒருமைப்பாட்டைக் காட்டுவதற் காகவா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அது தமிழ்நாட்டிலே மட்டுமல்ல. பல்வேறு மாநிலங்களிலே இதுபோன்று உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறாமல்

இருப்பதன் காரணமாக அவர்கள் தபால் அனுப்பி—இட் இஸ் எ ரொட்டீன் மேட்டர்—அதன் மூலமாக 6 மாதத்திற்குள்ளாக தேர்தல் நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கி றார்கள். அவர்களுடைய வேண்டுகோளின்படி 6 மாதத்திலே நடைபெறும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்ற பதிலிலே ஏப்ரல் மாதத்திலே அந்தத் தேர்தலை நடத்துவதாக இருந்தோம், ஆனால் பிப்ரவரி மாதத்திலே ஆட்சியைக் கலைத்துவிட்ட காரணத்தினால் அந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை என்று சொன்னார்கள். அதற்கு முன்னாலேகூட பல தடவைகள் 6 மாதத்திலே தேர்தல் நடைபெறும், நடைபெறும் என்று பலமுறைகள் சொல்லி தேர்தலை ஒத்திவைத்ததை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இப்போதுகூட 6 மாதத்திற் குள்ளே தேர்தல் நடத்தப்படும் என்பதை அரசாங்கம் திட்ட வட்டமாக அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கடைசியாக தேர்தல் நடந்தது 1970-இல். 1975 ஆம் ஆண்டிலே மீண்டும் தேர்தல் நடத்தியிருக்கவேண்டும். அதை யார் நடத்த வில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதற்குப் பின்னிட்டு தேர்தல்களை ஒத்திவைத்ததன் மூலமாக 31—1—1977 வரை நீட்டிக்கப்பட்டது. 1—2—1977 இல் கோட்டாச்சி வளர்ச்சி அலுவலர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் தனி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டார்கள். அவர்களுடைய பதவிக்காலம் 11—9—1979 வரையிலே இருந்தது. அந்த ஊராட்சித் தலைவர்களுடைய பதவிக்காலமும் 11—9—1979 வரை நீட்டிக்கப்பட்டது என்பதை மறந்திருக்க மாட்டார்கள். உடனடியாக தேர்தல் நடத்தப்படவேண்டுமென்ற முறையிலே இந்த ஆட்சி ஏப்ரல் மாதத்திலே தேர்தல் நடைபெறும் என்று சொன்னது. அப்போதும்கூட ஜனவரி மாதத்திலே நடந்த நாடாளு மன்றத்திற்கான தேர்தலிலே எங்களுக்கு பெரும்பான்மையான இடங்கள் கிடைக்கவில்லையென்றாலும்கூட தேர்தலைத் தள்ளி போடவில்லை. உடனடியாக நடத்த வேண்டும் என்ற முறை யிலேதான் அந்த தேர்தல் ஏப்ரல் மாதத்திலே நடைபெறும் என்று சொன்னோம். ஆனால் மத்திய அரசினுடைய நட வடிக்கையின் காரணமாக—அரசியல் குரோதம் காரணமாக என்றுகூடச் சொல்லலாம்—17—2—1980 இல் ஆட்சி கலைக் கப்பட்டது, அந்தக் காரணத்தினால் அந்தத் தேர்தலை ஏப்ரலில் நடத்த முடியாமல் போயிற்று. இப்போது நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறோம். 6 மாத காலத்திலே தேர்தலை நடத்துவோம் என்று ஏற்கெனவே தெரிவித்திருக் கிறோம். மீண்டும் அதைக் கூறியிருக்கிறோம்.



திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தேர்தல்கள் துரித மாக நடைபெற வேண்டுமென்று ஆட்சியைக் கலைப்பதற்கு முன்னாலே இதுபற்றி விவாதிக்கப்பட்டு வாக்குறுதிகள் அளிக்கப் பட்டு நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நேரத்திலே என்ன நடந்தது என்பதைப்பற்றி எல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்பது எல்லாம் நகரசபைகள். பஞ்சாயத்துக்கள் தேர்தலில் வயது நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் மாநில சர்க்காருடையது. ஆனால் தேர்தலை நீங்கள் நடத்த வேண்டுமென்று மத்திய அரசு உத்திரவிடுவது மாநில அரசின் அதிகாரத்தின்மீது என்க்ரோச்மென்ட் அல்லவா? நம் அதிகாரத்தின் மீது கைவைப்பது அல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாக மாநில அரசையோ மத்திய அரசையோ குற்றஞ்சாட்டத் தேவையில்லை. ஆனாலும் "இட் இஸ் எ ரெக்வஸ்ட் ஃபிரம் தி மினிஸ்டர் பார் அக்ரிகல்சர் அன்ட் இரிகேஷன் ஆப் கவர்மென்ட் ஆப் இண்டியா" என்ற முறை யிலே அவர்களுடைய வேண்டுகோள் தானே தவிர அதிகாரத்தை எடுப்பதோ அல்லது கொடுப்பதோ இல்லை என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். ஆகவே தேர்தல் முறைப்படி நடக்கும்.

திரு. ஏ. டி. கருப்பையா : 6 மாதத்திற்குள் கட்டாயம் தேர்தல் நடத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஏற்கனவே அதுபற்றி அரசு அறிவித்திருக்கிறது, 18 வயது உடை யவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கிற அடிப்படையிலே அந்தத் தேர்தல் நடைபெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அதற்குரிய சட்டத்திருத்த மசோதாவும்கூட இந்தத் தொடர் கூட்டத்திலேயே வருகிறது என்பதனைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே, ஆறு மாத காலத்துற்குள் ஊராட்சித் தேர்தலை நடத்த வேண்டி யதைத் தமிழகம் உணர்ந்திருந்தும் அதை அறிவித்திருந்தும் கூட மாநில அரசின் சட்டத்திற்கு உட்பட்டது ஊராட்சித் தேர்தலாகும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு ரமணி அவர்கள் இதே கேள்வியை கேட்டு விட்டார்.

திரு. வ. சத்தியமூர்த்தி : ஊராட்சி முறையையேகூட அகற்று வதற்கு தனிப்பட்ட முறையில் மாநில அரசுக்கு அதிகாரம் இருக்க இப்படிப்பட்ட உத்தரவைப் பிறப்பித்தது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மைய அரசிலே இருந்து வந்த கடிதத்தின் கடைசி பாராவில் கூட அவர்கள் சொல்லியிருப்பதெல்லாம்

I am to request you to ensure that Elections to the Panchayats are held without further delay என்பதுதான். ஆகவே, அவர்கள் வேண்டுதல் கொடுத்திருக்கின்றார்கள். காரணம் காலவரையறையின்றி தேர்தலைத் தள்ளிப்போடக்கூடாது. அப்படி தள்ளிப்போடுவதன் மூலமாக மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற உரிமைகள் பறிக்கப்படுமோ என்ற எண்ணத்தை ஐயப்பாட்டினை உருவாக்கும் என்பதனைத் தான் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் இந்த அரசைப் பொறுத்தவரையிலும் பல்வேறு சமயங்களில் மைய அரசு எப்படியெல்லாம் பறித்துக் கொண்டது என்பதைச் சொல்லியிருக்கிறது என்பது நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

திரு. ஏ. தங்கராசு : தலைவர் அவர்களே, பல ஊராட்சிகள் நிறைய கிராமங்களைக் கொண்ட ஊராட்சிகளாக இருக்கின்றன. அவற்றை வசதிக்கேற்ப இரண்டாகப் பிரிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே. நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : தலைவர் அவர்களே, இங்கு ஊராட்சி—நகராட்சி தேர்தல்களை 6 மாதத்தில் நடத்துவோம் என்று சொல்கிறார்கள். எந்தத் தேதியிலிருந்து 6 மாதம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன் மாண்புமிகு உறுப்பினர் திரு. சோமு அவர்களுக்கு புரியவில்லையென்று சொன்னால் கண்டிப்பாக அவரிடத்திலே தனியாகச் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : திரு. சோமுவுக்குப் புரியவில்லையா? எந்தத் தேதியிலிருந்து.........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சோமு பி.எ., பி.எல். படித்தவர். அவருக்கு ஏன் நீங்கள் வக்காலத்து வாங்குகிறீர்கள்?

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நானும் பி.ஏ. பி.எல். அமைச்சர் அவர்களும் பி.ஏ. பி.எல்.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்னது நீங்கள் பெரிய வக்கீல். உங்களுக்கு திரு. ரகுமான்கான் வக்காலத்து வாங்க வேண்டியதில்லையென்பதுதான்.



திரு. என். வி. என். சோமு : மிக்க நன்றி. எந்த தேதியிலிருந்து 6 மாதம் என்று கேட்க விரும்புகிறேன். ஏனென்றால் 6 மாதம் ரொம்ப நாளாக அடிபடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 6 மாதம் என்று சொல்வது எந்த தேதியிலிருந்து என்று எப்படி சொல்வது?

திரு. அ. ரகுமான்கான் : Let the Hon. Minister reply If the Minister replies, the members will be satisfied. நீங்கள் மந்திரியாக இருந்திருந்தால் ரொம்ப சந்தோஷமாக இருந்திருக்கும். நிறைய கேள்விகளைக் கேட்கலாம் பதில் சொல்வீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் இன்றைக்குப் பதில் சொல்லிவிட்டார். இன்றிலிருந்து 6 மாதம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவே அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒத்துக்கொண்ட பிரகாரம் 18 வயதானவர்களுக்கெல்லாம் வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இந்த அரசும் அதைத்தான் உங்களிடத்திலே தெரிவித்து இருக்கிறது. ஆகவே 18 வயதானவர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டத்திருத்தத்தை இந்த அவையிலே நிறைவேற்றிய பின்னால் 6 மாதம்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே அடுத்த மாதம் 1-ம் தேதியிலிருந்து 6 மாதம் என்றால் ஜனவரி மாதம் தேர்தல் முடியவேண்டுமென்ற நிர்பந்தம் அரசுக்கு இருக்கிறது என்று நான் உணருகிறேன். 6 மாதத்தில் கிராமங்களிலே பஞ்சாயத்து தேர்தல் என்று வரும்போது அறுவடை நேரம் மழை நேரம் என்று வரும்போது அரசு ஜனவரி மாதம் தேர்தலை நடத்த முடியுமா? ஆகவே அதற்கு முன்னால் தேர்தல் வைப்பதற்கான சூழ்நிலை அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அறுவடை காலம் நாற்று நடுகின்ற காலம் தண்ணீர் பாய்ச்சுகின்ற காலம் உழவடைக் காலம் இவைகளை எல்லாம் அனுசரித்துத்தான் இந்த அரசு உடனடியாகத் தேர்தலை வைக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஊராட்சி ஒன்றியங்களுடைய தேர்தலை வைக்க வேண்டாம் வைத்து விட்டால் நமக்கு எதிராகப் போகுமே என்று பயந்தவர்கள் இதைப் பற்றி பேசமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

[1980 ஜூலை 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உத்தரவு அல்ல, லெட்டர்தான்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : பேரவைத் தலைவரவர்களே, நகராட்சி ஊராட்சி மன்றத் தேர்தல் ஆறு மாதங்களுக்குள்ளாக நடக்கும் என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். சில பேரு ராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்களாக எடுக்கப்படும் என்று உத்தரவு பிறப்பித்தும்கூட இன்னும் நகராட்சிகளாக ஆக்கப் படாமல் இருக்கின்றன. தேர்தலுக்கு முன்பு அவைகளை நகராட்சி மன்றங்களாக ஆக்கித் தேர்தல் நடத்தப்படுமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஏற்கனவே இன்னொரு கேள்விக்குப் பதில் சொல்கின்ற நேரத் திலே சொன்னேன் Election ban பற்றி அதாவது மக்கள் தொகை கணக்கெடுப்பின் காரணமாக 1981 ஜனவரி மாதத்திலே கணக்கெடுக்கின்ற காரணத்தினால் அவைகளையெல்லாம் மாற்றக் கூடாது என்ற உத்தரவை மைய அரசு போட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கேள, உள்ளாட்சி ஊராட்சி ஒன்றியங்களுக்கெல்லாம் நடை பெறக்கூடிய தேர்தலில் பெண்களுக்கு அதிக ஒதுக்கீடுகள் குறிப் பாக ஐம்பது இடங்களுக்கு மேலே தரப்படும் என்று நம்முடைய முதல்வரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதுபோன்று பெண் களுக்கு அதிக இடம் ஒதுக்கீடு செய்து வருகின்ற இந்தத் தேர் தலிலே திருத்தம் கொண்டுவரப்படுமா? ஏற்பாடு செய்யப்படு மா? ரிசர்வேஷன் ஒதுக்கப்படுமா? வாக்குறுதி காப்பாற்றப்படுமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஏற்கனவே இதுபற்றி எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்கள் கூட்டம் கடந்த 11—7—1980 இலே நடைபெற்றது. அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அருமை அண்ணன் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார் கள். அவர்களே கூறியிருக்கிறார்கள் இதுபோன்ற ஒதுக்கீடு தேவையில்லை என்று. அப்படியிருக்க மாண்புமிகு உறுப்பினர வர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பது எந்த வகையிலே சிறந் ததாக இருக்க முடியும் என்பதை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*     *     *

என்கின்ற எண்ணத்தைத்தான் பிரதிபலிக்கிறது என்பதை நான் பணிவன்போடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1980 ஜூலை 29]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அமைச்சரவர்கள் சொல்லிய அந்தப் பகுதியை எக்ஸ்குளூட் செய்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *     *     *     * என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : இதில் எங்களுக்குள் கருத்துவேறு பாடு கிடையது. ஆனால் முதல்வர் கொடுத்த வாக்குறுதிக் காப்பாற்றப்படுமா? நேர் கேள்விக்கு நேர் பதில் வேண்டும். அது தான் பிரச்னை.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, நகராட்சி உள் ளாட்சித் தேர்தல்களில் வாக்காளர்களுக்குப் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் குறிப் பில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, புகைப்படங்கள் எடுத்து வாக்காளர்களுக்கு 'ஐடென்டிட்டி கார்டு'—அடையாள கார்டு கொடுப்பது என்றால் கால தாமதம் ஆகும் என்கின்ற காரணத்தினால் அவைகள் இப்பொழுது அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : மாண் மிகு சபாநாயகர் அவர்களே, ஆறு மாதங்களுக்குள் ஊராட்சித் தேர்தலை நடத்துவதாக இன்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். மிகவும் மகிழ்ச்சி. அந்த தேர்தலை ஊராட் சித் தேர்தலையும் நகராட்சித் தேர்தலையும் ஒன்றாக நடத்து கின்ற உத்தேசம் இருக்கிறதா அல்லது நகராட்சித் தேர்தலை தனியாக நடத்திவிட்டு ஊராட்சித் தேர்தலைப் பின்பு நடத்து கின்ற உத்தேசத்தில் அரசு உள்ளதா என்பதை அறிய விரும் கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே அதுபற்றி அரசு சீக்கிரத்திலே முடிவெடுத்து அறிவிக்கும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவரவ களே மத்திய அரசு எழுதியிருக்கக்கூடிய இந்தக் கடிதம் இன்ட ஃபியரன்ஸ் அல்ல. அது ஒரு வேண்டுகோள் என்று அமைச்சரவ கள் சொன்னார்கள். பல கட்டங்களில் மத்திய அரசு சட்டமன் தேர்தல்களைப் பல மாநிலங்களில் ஒத்திப் போட்டுக்கொண்டே வந்திருக்கிறது. அப்படிப்பட்ட கட்டங்களில் மாநில அரசுக இதுபோன்ற கடிதத்தை மத்திய அரசுக்கு எழுதினால் அதை சகித்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங் அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வில்லிவாக்கத்தைப் பற்றியது.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, வில்லிவாக்கமும் தற்போது சென்னையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் உண்டா என்றுதான் நான் கேட்டேன்.

DR. K. SOURIRAJAN: All the extended areas also come under the same category. Is there any programme or policy with the State Government to enlarge the present under ground drainage scheme. That is what the question pertains to. There is a lot of areas in the entire South Madras where sewage is over flowing. What is the programme or policy on the part of the Government to see that sewage is properly disposed of. That is what is wanted.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கேள்வி மிகத் தெளிவாக வில்லிவாக்கம் 32, 33 என்று இருக்கிறது. நீங்கள் கேட்பது சென்னை மாநகரம் பூராவையும் பற்றியதாகும்.



DR. K. SOURIRAJAN: How long it will take?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்.

DR. K. SOURIRAJAN: 'Araichi' means, it may take even 20 years. There is no use at all. How long it will take? Probable time, we want to know. We have to satisfy the people. We have come here to represent the grievances of the people. They are asking us 'what is to be done?.

MR. SPEAKER: Probable time சொல்ல முடியாது. உலக வங்கித் திட்டம் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருவதாகச் சொல்லி இருக்கிறார். அது எப்போது முடியும் என்று எப்படி இப்போதே சொல்ல முடியும்?

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, வில்லிவாக்கத்தில் பாதாளச் சாக்கடை திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். பொதுவாக வில்லிவாக்கம் மழையால் பெரிய அளவில் சுகாதார வசதியில் சீர்கேடு அடைந்து ரோடுகளில் கொசு உற்பத்தியாகி சென்னை மாநகரத்திற்கே கொசு சப்ளை ஆகும் ஒரு நிலைமை அங்கே இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு இரவு தங்கினால் அந்தக் கொடுமையை உணர முடியும். ஆகவே சென்னை மாநகரம் பூராவிற்கும் ஒரு திட்டம் ஆராய்ச்சியில் இருப்பதாகச் சொல்கிறார்களே, அந்த ஆராய்ச்சி முடிந்த பின்னர் அந்தத் திட்டத்தை நிறைவேற்றும்போது வில்லிவாக்கத்திற்கு முதலிடம் தந்து ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இது சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கும் சென்னை நகருக்கு வெளியே சென்னை புறநகர் எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கும் போடப்பட்டுள்ள மாபெரும் திட்டம். இதில் எது முன்பு எது பின்பு என்று சொல்வதற்கு இயலாது.

மடிச்சல் கால்வாய்த் திட்டம்.

*வினா எண் 69—திரு. டி. மணி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) விளவங்கோடு தாலுகாவில் மடிச்சல் கால்வாய் வெட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

திரு. சி. கோபால் : பேரவைத் தலைவர் அவர்களே மத்திய அரசிடமிருந்து 6 மாததிற்குள் தேர்தல் நடத்த வேண்டுமென்று வேண்டுகோள் வந்திருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கடந்த 12 ஆண்டு காலமாக மேற்கு வங்காளத்திலே பஞ்சாயத்து தேர்தல்கள் நகரசபைத் தேர்தல்கள் நடத்தவில்லை என்று நான் அறிகிறேன். ஆகவே அந்த மாநிலத்திற்கும் ஏதாவது வேண்டுகோள் வந்திருக்கிறதா?..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம் மாநிலத்தைப்பற்றி மட்டும் கேட்டால் போதும். மற்ற மாநிலங்களைப் பற்றிய பிரச்னைகளெல்லாம் இங்கே வரக்கூடாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நீங்கள் அலவ் பண்ணுங்கள் சார். நெடுமாறன் அவர்கள் கேட்ட கேள்வியை அலவ் பண்ணியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ரெக்கமன்ட் பண்ண வேண்டாம். நீங்கள் அலவ் பண்ணச் சொல்வதன் காரணம் எனக்குத் தெரிகிறது. வேறு பக்கம் போகவேண்டாம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் முந்தைய கேள்விக்குப் பதில் கூறும்போது 1981 ஜூன் வரை அமால்கமேஷன் அன்ட் பைஃபர்கேஷன் கூடாது என்று மத்திய அரசினுடைய தாக்கீது இருப்பதாகக் கூறினார்கள். பல்வேறு உறுப்பினர்கள் சில பஞ்சாயத்துகளைப் பிரிக்கவேண்டும். சில பஞ்சாயத்துக்களை ஒன்றாக இணைக்கவேண்டுமென்று கோரிக்கை தந்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிய பிறகு அரசு தேர்தலை நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பல்வேறு நேரங்களில் பல்வேறு இடங்களில் இதற்கான பதிலைச் சொல்லி இருக்கிறேன். 1981 ஆண்டு சென்சஸ் இருக்கிற காரணத்தால் Election ban மத்திய அரசினால்கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதனாலே பிரிப்பதோ அல்லது சேர்ப்பதோ கூடாது என்பதுதான் இந்த அரசின் கொள்கை.



வில்லிவாக்கம் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 68—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை மாநகராட்சி (வில்லிவாக்கம்) 32,33 வட்டங்களில் கழிவு நீரை அகற்ற பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் என்றால், அதற்காக செலவிடப்படும் தொகை எவ்வளவு?

(இ) இத்திட்டம் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில் சென்னை மாநகராட்சி கழிவு நீர் அகற்றும் திட்டத்தை சென்னை மாநகரத்தின் கமிஷனராக மேட்லி என்பவர் இருந்த நேரத்தில் ஏறத்தாழ 10 லட்சம் மக்களுக்குத் தேவையான அடிப்படை நோக்கத்தில் இந்த திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் தற்போது சென்னையில் 30 லட்சம் மக்கள் இருக்கின்ற காரணத்தால் அங்கே கழிவு நீர் அகற்றும் நடவடிக்கைகள் சரியாக இயங்கவில்லை. ஆகவே அதிகமான மக்கள் இருப்பதாலேயும் சென்னை மாநகரத்தோடு பல பகுதிகள் புதிதாக இணைக்கப்பட்டிருப்பதாலும் இந்தத் திட்டத்தை மாற்றி அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கேள்வி ''சென்னை மாநகராட்சி'' (வில்லிவாக்கம்) 32, 33 வட்டங்களில் கழிவு நீரை அகற்றப் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பது.

திரு. சு. பாலன் : இது பொதுவான கேள்வி; அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்காக அரசு நவம்பர் 1978-ல் ரூ. 18.10 லட்சம் அனுமதி அளித்தது. ஆனால் கேரள அரசுடன் இம்மாநில அரசு செய்து கொண்ட ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் கொடுப்பதற்கு பதிலாக தற்போது வினாடிக்கு 80 கன அடி தண்ணீர்தான் கேரள அரசு நெய்யாறு அணையிலிருந்து கொடுக்கிறது. மேலும் ஆயக்கட்டுதாரர்கள் போதிய தண்ணீர் கிடைக்காததால் தங்கள் நிலங்களை மேம்படுத்த முன் வரவில்லை. ஆகையால் இது பற்றி மறு ஆய்வு செய்து ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் உறுதியாகக் கிடைக்கும் என தெரியும் வரை இத்திட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**திரு. டி. மணி :** தலைவர் அவர்களே, நெய்யாற்றில் இருந்து மடிசல் கால்வாய்க்கு வருகின்ற 150 கன அடி தண்ணீர் ஒப்பந்தப்படி கொடுக்கவேண்டும் என்று இந்த அரசு கேரள அரசிடமிருந்து கேட்டு வாங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதா? அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே அது முறையாக கேரள அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அதிகாரிகள் மட்டத்திலும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு இருக்கின்றன. விரைவில் ஒப்பந்தப்படி தண்ணீர் பெறுவதற்கு அரசு முயற்சிக்கும்.

**திரு. டி. மணி :** தலைவர் அவர்களே, அந்த ஒப்பந்தம் நிறைவேறினால் இந்தக் கால்வாய் வெட்டும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, 24—11—1978-லேயே 18.10 லட்சம் ரூபாய்க்கு நாம் செலவிற்கான அனுமதியைக் கொடுத்து இருக்கிறோம். ஒப்பந்தம் ஏற்பட்ட உடனே பணி துவங்க வேண்டியது தான். அதிலே காலதாமதம் இல்லை.

**திரு. டி. மணி:** தலைவர் அவர்களே, எத்தனை ஏக்கர் நிலங்கள் இதனால் நீர்ப்பாசன வசதி பெறும்?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, இந்த 150 கன அடி தண்ணீர் தமிழகத்திற்குக் கொடுக்கும் ஒப்பந்தம் முடிந்த பிறகு முழுமையான தகவல்கள் தெரிவிக்கப்படும்.



## தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டு வாரியம் தலைமையிடம்.

***வினா எண் 70—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அரிசன மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் "தாட்கோ" என்ற ஸ்தாபனம் தலைநகரை விட்டு விழுப்புரத்திற்கு ஏன் மாற்றப்பட்டது?

(ஆ) அதை மீண்டும் தலைநகருக்கே மாற்றும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (அ) சென்னையில் உள்ள பல அலுவலகங்களை வெளியூருக்கு மாற்றி இங்கு நெருக்கடியைக் குறைக்க வேண்டுமென்ற அரசின் கொள்கையின் அடிப்படையிலும் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழக தலைமை அலுவலகத்தை தாழ்த்தப் பட்டவர்கள் அதிகமாக வசிக்கும் மாவட்டத்திற்கு மாற்றி அங்கு நேரடியாக பணிசெய்யும் வாய்ப்பினை நல்க வேண்டும் என்ற கருத்துக்கிணங்க அக்கழக தலைமை அலுவலகம் விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டது.

(ஆ) அதை மீண்டும் சென்னைக்கு மாற்றும் திட்டம் ஏதும் இல்லை.

[முற்பகல் 9-40]

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவரவர்களே, இந்த அலுவலகத்தை சென்னையிலிருந்து விழுப்புரத்திற்கு மாற்றியதனால் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு குறையைச் சொல்லி இதை சாங்ஷன் செய்து கொடுங்கள் என்று அங்குள்ள ஜனங்கள் வருகிறார்கள். அவர்களை அழைத்துக்கொண்டு மீண்டும் விழுப்புரத்திற்குச் சென்று காரியத்தை முடிப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன. இந்த சின்ன அலுவலகத்தை விழுப்புரத்திற்கு மாற்றியதனால் சென்னையில் இருக்கிற நெருக்கடி எதுவும் குறைந்துவிடப் போவதில்லை. எனவே இதை மறுபரிசீலனை செய்து மீண்டும் அந்த அலுவலகத்தை சென்னைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, ஏற்கெனவே இது பற்றி நடைபெற்ற விவாதங்களில் திருவாளர்கள் சின்னையா, துரைசாமி, அண்ணாமலை, பழனிவேல் ஆகியோர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் ஏற்கெனவே

எடுத்துள்ள முடிவுப்படி அந்த அலுவலகம் விழுப்புரத்தில்தான்
இருக்க வேண்டும்; மாற்ற தேவையில்லை என்று முடிவு
செய்யப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. எஸ். இராசு:** தலைவரவர்களே, அரசு போட்ட
உத்தரவுகளை தேவைப்பட்டால் மாற்றக்கூடிய அளவில் இருக்
கிறது நம்முடைய அரசு. அதனால் தலைநகரிலிருந்து விழுப்
புரத்திற்கு மாற்றப்பட்ட அலுவலகத்தை வசதியைக் கருதி
மீண்டும் சென்னைக்கு கொண்டுவர நிச்சயம் தடங்கல் இருக்
காது என்று நினைக்கிறேன். சட்டமன்ற பேரவை உறுப்பினர்
கள் மேலவை உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்
போன்ற மக்கள் பிரதிநிதிகள் பல்வேறு காரியங்களுக்காக பொது
வாக தலைநகருக்கு வரும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.
அப்படி வரும்போது சம்பந்தப்பட்ட அந்த அலுவலகம் சென்னை
யில் இருந்தால்தான் அதிகாரிகளைப் பார்த்து கோரிக்கைகளை
வைத்து தேவைப்பட்டால் சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும்
பார்த்து தேவைகளை வலியுறுத்திச் செல்ல வாய்ப்பு இருக்கும்.
இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அந்த அலுவலகத்தை நிச்சய
மாக மீண்டும் சென்னைக்கு கொண்டுவருவதுதான் நல்லது.
தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால்
அந்த அலுவலகம் அங்கே அமைக்கப்பட்டிருக்கிறது என்று
சொல்வதாக இருந்தால் என்னுடைய பெரம்பலூர் தொகுதியில்
—அது ரிசர்வ் தொகுதி—30 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள்
ஷெட்யூல்டு காஸ்டாக இருக்கிறார்கள்; அப்படியானால்
நாங்கள் விரும்பினால் அந்த அலுவலகத்தை விழுப்புரத்தி
லிருந்து பெரம்பலூருக்கு மாற்றவும் அவசியம் ஏற்படக்கூடும்.
இதையெல்லாம் மனதில்கொண்டு மறுபரிசீலனை செய்து
அந்த அலுவலகத்தை மீண்டும் சென்னைக்கு கொண்டுவர ஏற்பாடு
செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவரவர்களே,
இப்படிப்பட்ட அலுவலகங்களை ஏற்படுத்தும்போது தொகுதி
வாரியாக அல்லது வட்ட வாரியாக கணக்கிடப்படுவதில்லை.
தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழுகிற பகுதி என்பதாலும்
இந்த அலுவலகத்தை அங்கே அமைக்க வேண்டுமென்று பெரும்
பாலானவர்கள் கேட்டுக்கொண்டதாலும் அந்த சமுதாய
மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு
இந்த அலுவலகம் அங்கே மாற்றப்பட்டிருக்கிறது. மக்க
ளுடைய நன்மைக்காகத்தான் இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது.
இந்த அலுவலகத்தை மக்கள் நலனை முன்னிட்டு மீண்டும்
சென்னைக்கு மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்
கள் விரும்பினால், மாண்புமிகு அரிசன நல அமைச்சரிடமும்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் தெரிவித்தால், அவர்
கள் தக்க முடிவை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, இந்த அரிசன நலத் துறையினுடைய தலைமை அலுவலகத்தை விழுப்புரத்திற்கு மாற்றியிருப்பது சரியல்ல. அரிசன மக்கள் அதிகமாக அங்கே இருக்கிறார்கள்; ஆகையால் மாற்றினோம் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. அப்படிப் பார்த்தால் விவசாயிகள் அதிகமாக இருக்கிற தஞ்சாவூருக்கு விவசாயத் துறையின் தலைமை அலுவலகம் மாற்றப்பட வேண்டும். தொழில் வளர்ச்சி பெருகிவருகிற தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிற கோவைக்கு இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்ட் ஹெட்குவார்டர்ஸ் மாற்றப்பட வேண்டும். ஆகவே இது ஒரு ராங் 'பாலிசி'. இந்த தலைநகரில்தான் எல்லா தலைமை அலுவலகங்களும் இருக்க வேண்டும். ஆகவே இதுபற்றி மறு பரிசீலனை செய்து இந்த தலைமை அலுவலகத்தையும் சென்னையில் அமைக்க ஆலோசிக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன், சென்னையிலே இருக்கின்ற இட நெருக்கடியைக் குறைக்கவும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் அதிகமான பகுதியாக அந்த மாவட்டம் இருப்பதால் இந்த அலுவலகத்தை அங்கே ஏற்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு வசதிகளைச் செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதற்காகவும்தான் மாற்றப்பட்டது. அந்த அடிப்படையிலேதான் முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. நான் முதலிலேயே சொன்னதைப்போல அப்படி எடுக்கப்பட்ட முடிவிலே மாற்றம் ஏதும் செய்ய வேண்டுமென்றால்—இந்த அரசு எதிலேயும் பிடிவாதமாக இருந்ததில்லை—மாண்புமிகு உறுப்பினர்கள் இதனை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதற்கேற்ற தகுந்த நடவடிக்கையை புரட்சித் தலைவர் அவர்கள் எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, ...டுக்களில்தான் தீண்டப்படாத சமுதாயத்தினர் இருக்கின்றார்கள் என்றால் இந்த அலுவலகமும் தீண்டப்படாமல் பாதிக்கப்பட வேண்டுமா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. மேலும் விழுப்புரம் ஏற்கெனவே ஜாதிக்கலவரம் ஏற்பட்டிருந்த ஏரியா. சென்னையிலே எவ்வளவோ இடங்கள் வேஸ்டாகக் கிடக்கின்றது. எனவே அந்த அலுவலகத்தை மீண்டும் சென்னைக்கு மாற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே போன்ற கேள்விக்கு ஏற்கெனவே பதில் சொல்லியாகிவிட்டது. ஆகவே இப்போது மீண்டும் பதில் தேவையில்லை.

[1980 ஜுலை 29

திரு. எஸ். இளையபெருமாள் : இந்த அலுவலகத்திலே பணி
புரிகின்ற அனைத்து அலுவலர்கள் சென்னையிலிருந்தும்
செங்கற்பட்டிலிருந்தும் தினமும் சென்று வருவதாகச் சொல்லப்
படுகின்றதே. அப்படியானால் எத்தனைபேர் அவ்வாறு சென்
னையிலிருந்து அந்த அலுவலகத்திற்கு வந்துகொண்டிருக்கிறார்
கள்? அங்கு வேலை செய்கின்ற மொத்த அலுவலர்களின்
எண்ணிக்கை எவ்வளவு? அதிலே நான்-கெஸட்டட்,
கெஸட்டட் அலுவலர்களின் எண்ணிக்கை என்ன? அதிலே
பணியாற்றுகின்றவர்களுக்கு விழுப்புரத்திலே வீடில்லாத நிலை
இருப்பது உண்மையா?



1980 ஜுலை 29]

மற்றும் ஃபைனான்சியல் கார்ப்பரேஷன் போன்ற நிறுவனங்கள்
போன்ற அலுவல்களைச் செய்வதற்காக "தாட்கோ" விற்கு
பணம் ஒதுக்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.
அதன்படி அவர்களுக்கு பாங்குகளிலிருந்து கடன் வாங்கி அரிசனங்
களுக்கு விநியோகம் செய்கின்ற திட்டங்களை இந்தக் கார்ப்ப
ரேஷன் வைத்திருப்பதன் காரணத்தால் அந்த அலுவலகம்
சென்னையிலே இருப்பதுதான் சிறப்பாக இருக்கும். மேலும்
இப்போது அந்த அலுவலகம் அரிசனங்கள் அதிகமாக வாழ்கின்ற
பகுதியிலே இருக்கின்றது என்று சொன்னாலும் அந்த அலுவல
கத்திற்கும் அந்த மக்களுக்கும் நேரடியான தொடர்பு கிடை
யாது. ஆகவே இப்போதைய திட்டத்தின்படி பல்வேறு பாங்கு
களில் இருந்து கடன் வாங்கி தொழில்கள் துவங்க அரிசனங்
களுக்கு விநியோகிக்கின்ற வேலையை அந்தக் கார்ப்பரேஷன்
செய்ய வேண்டி இருப்பதால் அதற்கேற்ற வகையில் "தாட்கோ"
தலைமையகத்தை சென்னையில் வைக்க அரசாங்கம் பரி
சீலிக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, விழுப்புரத்தில் இருக்கின்ற
அந்த தாட்கோ அலுவலகத்தை மீண்டும் சென்னையிலே
ஏற்படுத்த வேண்டும் என்கின்ற கருத்தை அரும்பாக்கம் உறுப்பினர்
திரு. தாமரைக்கனி அவர்களிலே இருந்து அநேகமாக எல்லா
கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் தங்களது கேள்வியிலே
வைத்து கேட்டிருக்கிறார்கள். இப்படி அநேகமாக உறுப்
பினர்கள் விரும்புவதால் இங்கே பேசிய அனைத்தும்
மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கவனத்திற்குச் செல்கின்ற
போது அதற்கேற்ற முடிவை அவர்கள் எடுப்பார்கள் என்பதை
நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-50]

திரு. அ. செல்வராசன் : தலைவர் அவர்களே, மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, தாழ்த்தப்
பட்ட மக்களுக்காக நிறுவப்பட்ட அந்த தாட்கோ நிறுவனம்
அவர்களுடைய வசதிக்காகவே விழுப்புரத்திற்கு மாற்றப்பட்ட
தாக சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்கே வேண்டுகோள்
விடுத்த அத்தனை பேரும் தாழ்த்தப்பட்ட மக்களாகவே இருக்கி
றார்கள். ஆகவே, அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க
இந்த அரசு அந்த நிறுவனத்தை சென்னையிலேயே கொண்டு
வருவதற்கான முடிவினை எடுக்க முன் வருமா?

(பதில் இல்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள்
முடிவுற்றன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில்(*) உடுக்குறியிடப்
பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்க பெற்றது
என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் எதுவும் இன்றைக்கு எடுத்துக் கொள்ளவேண்டாம் என அலுவல் ஆய்வு குழுவில் முடிவு எடுக்கப்பெற்றிருக்கிறது. இன்றைக்கு மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம்தான் தொடர்கிறது.

## 3. வரவு-செலவுத் திட்டம், 1980-81—வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 15—காவல் துறை—தொடர்ச்சி.

(ஈ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

(உ) கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள், கட்டிடங்கள்—தொடர்ச்சி.

(ஊ) கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள் பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்—தொடர்ச்சி.

(எ) கோரிக்கை எண் 51—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு, இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்ற குற்றச்சாட்டை அடிக்கடி நாம் கேட்டு வருகிறோம். சட்டம் ஒழுங்கு சீர் குலைந்து விட்டதற்காக எடுத்த எடுப்பில் அரசாங்கத்தையும்,



போலீஸ் துறையையும் குறை சொல்ல நான் முற்படவில்லை. நாள்தோறும் பல குற்றங்கள் நடைபெறுகின்றன வென்றால், அந்த குற்றங்களை தட்டமிடுவதற்கு முன், குற்றங்களை நிறைவேற்ற வேண்டுமென்று திட்டம் இடுபவர்கள் அரசாங்கத்திற்கு முன் கூட்டியே நோட்டீஸ் தருவது கிடையாது, போலீஸ் துறைக்கும் நோட்டீஸ் தருவது கிடையாது.

எனவே அவர்களால் சில விஷயங்களில் எதிர்பார்த்து முன் கூட்டியே நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். எங்களைப் பொறுத்த அளவில் நடைபெறுகின்ற சட்டம், ஒழுங்கு குறைவதற்கு, பொறுப்பில் இருக்கிற அரசுதான் முழு பொறுப்பு என்று நிச்சயமாக குற்றம் சாட்ட மாட்டோம். சில காலத்திற்கு முன்னர் மத்திய அரசிலும் பல மாநிலங்களிலே ஜனதா அரசு பொறுப் பேற்றிருந்தபோது எதிர்க்கட்சி வரிசையில் இருந்தவர்கள் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்து விட்டது, மக்கள் நிம்மதியாக நடமாட முடியவில்லை, பெண்களுக்கு பாதுகாப்பு கிடையாது, கற்பழிப்பு சம்பவங்கள் அதிகமாக நடைபெறுகின்றன, அரிசனங்களுக்கு பாதுகாப்பு இல்லை; சிறுபான்மையோர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றெல்லாம் குற்றச்சாட்டுகளை எடுத்து வைத்தார்கள். அதே குற்றச் சாட்டை அன்று சொல்லி வந்தவர்கள், இன்று ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கற்பழிப்பு சம்பவங்களால் சட்டம் சீர் குலைந்த நிகழ்ச்சிகளை அரசியலாக்க வேண்டாம் என்று இன்றைய தினம் கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதேமாதிரி அந்த வகை செய்திகள் பத்திரிகைகளில் வெளிவராமல் பார்த்துக் கொள்கிற வகையில், பி.டி.ஐ., யு.என்.ஐ. போன்ற செய்தி நிறுவனங்களுக்கு தாக்கீது தரப் பட்டிருப்பதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண் டிருக்கின்றன. எங்களைப் பொறுத்தவரையில் இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு அரசுதான் முழு பொறுப்பு என்று சொல்ல மாட்டோம். அத்தகைய அசம்பாவித நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதைக் கண்டு ஆராய்ந்து அதை களைவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எங்களுடைய கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இதுபோன்ற குற்றங்கள் நடைபெறுவதற்கு காரணங்கள் ஒன்று, வறுமை. வறுமையால் பாதிக்கப்பட்டவர்கள், களவு, கொள்ளை, கொலை போன்ற குற்றங்களை புரிந்து வருகிறார்கள். எனவே, வறுமை நிலையை போக்குவதற்கு அரசு தகுந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக இருந்தால், பெரும்பான்மையான இத்தகைய குற்றங்களை நடைபெறாமல் தடுத்து நிறுத்து

சமுதாயத்திலே பிற்பட்டோராக இருப்பவர்கள் கடினமாக உழைக்கக் கூடியவர்களாகவும், சமுதாயத்திலே மிகமிகப் பலவீனப்பட்டு, அவர்களுக்கெனத் தனி மரபு, தனி நிலை இருந்தாலும், அவர்கள் இன்றைக்கு மேம்படாமல் இருப்பதற்குக் காரணம், வேலைவாய்ப்புகளும் மற்றவைகளும் இல்லாததால் இன்றைக்கும்அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாகஇருக்கிறார்கள் என்பதை நாம் இன்றைக்குக் கூறிக்கொண்டிருக்கிறோம். இதை மாற்றுவதற்கு ஒரு சோஷலிச சமுதாய அமைப்பிலே அவர்களைக் கொண்டு வருவதற்கு, கல்விக் கோரிக்கைகளாக இருந்தாலும், பொருளாதார வளர்ச்சிக்காக இருந்தாலும் வேறு என்ன செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் யோசிக்க வேண்டும்.

கல்விக்காக இன்னின்ன சலுகைகளை அளிக்க வேண்டுமென்று இருந்தாலும் அவைகளைப் பரவலாக்க வேண்டுமென்பதைப் பற்றி எனக்கு முன் பேசிய நண்பர்கூடக் கூறினார். அந்த அள விற்குக் கல்வித்துறை சலுகைகளையும், தொழில்துறை சலுகை களையும் வழங்குகின்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்விச் சலுகைகள், 9,000 ரூபாய் என்ற வரையறையை நீக்கி இன்றைக்கு எடுத்திருக்கின்ற நிலையை நான் வரவேற்கிறேன். பின் தங்கியவர்களுக்கு 50 சதவீதம் வேலைவாய்ப்பு என்பதைப் பார்க்கின்ற பொழுது அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால், அந்த நிலைகளெல்லாம் நல்லமுறையில் பயன்படுத்தப் படுகிறதா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். அவை களெல்லாம் நல்லமுறையில் பயன்படுத்தப்பட வேண்டும். பின் தங்கியோர் பட்டியலிலே சேர்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர் களுக்குக் கூட ஒரு வேட்கை, ஆசை உண்டாகி, தன்னையும் பின் தங்கிய வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று சொல்கின்ற அளவிற்கு அந்த வகையில் பட்டியல் நீண்டு கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் போட்டி மனப் பான்மைதான் ஏற்படுகிறது.

இதற்கு முன் இருந்த அரசாங்கம், பின் தங்கியவர்கள், மிக வும் பின் தங்கியவர்கள் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார் கள். மிகவும் பின் தங்கியவர்கள் என்று பிரிப்பதற்கான சூழ் நிலைகள் இன்றைக்கும் நாட்டிலே இருக்கின்றன. மிகமிக வறு மைக் கோட்டிற்குக் கீழே பல சமுதாயத்தினர் இருக்கிறார்கள் என்பதை அரசு உணராமல் இல்லை. அந்தச் சமுதாயத்தினர் யார் என்பதைப் பார்த்துப் பிரிப்பதற்காக ஒரு குழுவை அமைக்க அரசு முயலுமா என்று கேட்டு, அதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்றுகூட நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வேலைவாய்ப்பிலே முன்னால், மாவட்ட வாரியாகப் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கிச் செய்தார்கள். ஆனால் உயர்நீதி மன் றத்திலே வழக்கின் காரணமாக மாவட்ட அளவில் ஒதுக்க முடி

ட முடியும் என்பது என்னுடைய கருத்து. அடுத்து பண்ணை பலாத்காரம் செய்வது போன்ற குற்றங்கள் நடை பறுகின்றன என்று சொன்னால், அதற்கு மூலக்காரணம் பெண் ளே தான் என்று சொன்னால், அவர்களே நம்மீது கோபப் டுவார்கள். இன்று நாம் பார்க்கிறோம்.

பெண்கள் அணிகின்ற ஆடைகள் தங்கள் உடலில் உள்ள நளிவு சுளிவுகள் எடுப்பாக தெரிகிற வகையிலும், மென்மையான ாகங்கள் தெளிவாகத் தெரியும் விதத்திலும் ஆடையணிவது புவர்கள் மீது தொடுக்கப்படுகிற தாக்குதலுக்கு ஒரு காரணமாக ிருக்கலாம். அதே நேரத்தில் அவர்கள் தங்களைக் காத்துக் கொள்வதற்காக சில மாற்றங்களைச் செய்து கொள்வது அவர் ளுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்ற என் கருத்தை வலியுறுத்திக்கூற ஆசைப்படுகிறேன்.

குற்றங்கள் அதிகமாக நடப்பதற்கு குடிப்பழக்கம் ஒரு காரணம் ன்பதையும் நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். இந்த அர ாங்கத்தைப் பொறுத்தளவில் குடிப்பழக்கத்தில் ஈடுபட்டிருக் கிறவர்களுக்கு அதற்கான தண்டனை இன்றையதினம் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்தாலும் வழங்கப்படவில்லை. குடிப்பதற்காக ரூ. 25 செலுத்துகிறவர்களுக்கு லைசென்ஸ் வழங் குவது என்ற திட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக சமுதாயத்தில் பரவலாக குடிப்பழக்கம் ஏற்படுகிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதற்காக நான் அரசைக் கண் டிக்கிறேன். குடிப்பழக்கம் பெற்றவர்கள் சில சந்தர்ப்பங்களில் கோழைகளாக இருப்பவர்கள்கூட சில மணி நேரம் தைரியசாலி களாக மாறிவிடுகிறார்கள். ஏற்கனவே நிலை தடுமாறியிருக்கிற வர்கள், நிதானமாகச் சிந்திக்கும் நிலை மாறி பலவித குற்றங் களை செய்யத் தூண்டப்படுகிறார்கள். எனவே ப்ரொஹிபிஷ னைப் பொறுத்தவரையில் அரசு மேற்கொண்டிருக்கிற சில நிலை களை மாற்றிக்கொள்வார்களானால் பலவிதக் குற்றங்கள் ஏற் படுவதைத் தடுக்கமுடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

போலீஸ் அமைப்பைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ் என்றதொரு அமைப்பிருக்கிறது. அந்த அமைப்பில் பணியாற்றுகிறவர்கள் ஐந்தாண்டுகள், பத்தாண்டுகள் 15 ஆண்டு கள் தங்களுடைய மாவட்டங்களை விட்டு, வீடுகளை விட்டு வேறு பல மாவட்டங்களுக்கு, வேறு பல மாநிலங்களுக்கு அனுப்பப்படு கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டிருக்கிறார் கள். அவர்களால் தங்கள் தங்கள் குடும்பங்களைக் கவனிக்க முடிய வில்லை, பிள்ளைகளைக் கவனிக்க முடியவில்லை என்று குறை பாடுகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஏன், குடும்ப வாழ்க்கையே நடத்த முடியாத காரணத்தால், இயற்கையால் ஏற்படுகிற உந்தல்களை சமாளிக்க, தணிப்பதற்குக் கூட அவர்கள்



தவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற குறைபாட்டையும் சொல் லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே ஏறத்தாழ ஐந்தாண்டுகள் தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ் நிர்வாகத்தில் வேலை செய்கிறவர் கள் ரெகுலர் போலீஸ் நிர்வாகத்தோடு சேர்க்கப்பட்டு போலீஸ் நிர்வாகத்தில் பணியாற்றுகிறவர்களுக்கு தருகிற அத்தனை சலு கைகளும் அவர்கள் பெறுகிற அத்தனை வாய்ப்புக்களும் இவர் களுக்கும் கிடைக்கக்கூடிய நிலையை உருவாக்கும் நிலையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திக்கூற ஆசைப்படு கிறேன்.

எமெர்ஜென்ஸி ஆட்சி இருந்தபோது பல போலீஸ் அதிகாரி களும், காவலர்களும் கட்டாய ஓய்வு தரப்பட்டு அனுப்பப்பட்டி ருக்கிறார்கள். அவர்களை மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசு ஆணை தந்திருப்பதாக கூட செய்தி. இருந்தாலும் இன்றைய தினம் பலர் மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்ற குறைபாட்டை பலர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் விஷயமாக அரசு பரிவோடு பரிசீலனை செய்து எமர்ஜென்ஸி ஆட்சி இருந்தபோது வேலை இழந்தவர்களுக்கு மீண்டும் வேலை தருகிற நடவடிக் கையை மேற்கொள்ளவேண்டும் என்று அரசை பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சர்வீஸைப் பொறுத்தவரையில் சில ஆண்டுகளுக்கு முன்பு இளைஞர் குழு என்றதொரு பிரிவை ஏற்படுத்தி அவர்களுக்கு அரசாங்க அலுவலகங்களிலும் இன்னும் பலயிடங்களிலும் தாற் காலிக வேலை தரப்பட்டு வந்தது. அவர்கள் வேலையை நிரந் தரப்படுத்துவதற்காக 1977ம் ஆண்டு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் விசேஷ தேர்வு நடத்தியதாக செய்தி. அந்த விசேஷ தேர்வில் வெற்றி பெற்றவர்கள் படிப்படியாக வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்ற அடிப்படையில் ஏறத்தாழ 28( பேர்கள் நியமனம் பெற்றிருக்கிறார்கள். ஏற்கனவே சர்க்காரி வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் சர்வீஸ் கமிஷ நடத்திய தேர்வில் வரிசைக்கிரமமாக வருவதில் கீழே வந் காரணத்தால் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தை அணு அப்படி தேர்வு பெற்றவர்களுக்கு வேலை அளிக்கப்படுவதா தங்கள் வேலை பாதிக்கப்படக் கூடாது என்று ஸ்டே ஆர்ட வாங்கியிருப்பதாகக் கேள்வி. சுமார் 40 பேர்கள் ஹைகோர்ட சென்று வாங்கியிருக்கிறார்கள். அந்த 40 பேர்களை விட்டுவிட் எஞ்சியிருக்கிற வேலைகளில் புதிதாக தேர்வு எழுதி வந்திரு பவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்ற கொள்கை அரசு ஏற்றிருக்கிறது.

[முற்பகல் 10-00]

அப்படி இருக்கின்ற வேலையில் தாற்காலிகமாக ஏறக்குறை 3,000 பேர்களை வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். அப்ப வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் தாற்காலிகமாக கருதப்பட

ஆங்கிலேயர்கள் ஆண்ட நாளில் ஆரம்பம் பேருக்கு ஒரு போலீஸ் என்ற முறைதான் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அந்த நடைமுறைதான் இன்றளவும் காவல்துறையைப் பொறுத்தவரை கடைப்பிடிக்கப்படுகிறதாகக் கருதுகிறேன்.

மக்களுக்குப் பாதுகாப்பு தருகின்ற காவல் துறைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கினாலும் தகும். கேட்கப்படுகின்ற தொகை காணாது. துணை மானியக் கோரிக்கையில் அதிகமான வசதிகளை மக்களுக்குத் தரும் வகையில் கூடுதல் நிதி கேட்கப்பட வேண்டுகிறேன்.

காவல் துறையில் புது பணிகளுக்கான பணிகளில் ஈடுபடுத்தப்படுவோர் ஐம்பது வயதைத் தாண்டியவர்களாக இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அத்தகையோருக்கு ஓய்வுகொடுத்து ஓய்வு ஊதியமாகப் பத்தாயிரம் ரூபாய் தந்து அவர்களுக்கு ஆறுதலும் தேறுதலும் ஏற்படுத்தப்படவேண்டும். இதன் மூலம் அத்துறையில் புதியவர்களுக்கு இளையவர்களுக்கு, பதவி கிடைத்திட உயர்வு கிடைத்திட வாய்ப்பாக அமையும் என்பதனை கூறிக் கொள்கிறேன்.

காவல் துறையில் பணியாற்றுகின்ற கான்ஸ்டேபில்கள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குப் பணியின் காரணமாகச் செல்லும்கால் கேரளம் போன்ற பிற மாநில அரசுகள் பதினாறு ரூபாய் தினப்படியாகத் தருகிறார்களெனத் தெரிய வருகிறது. ஆனால் தர்மத் தமிழ்நாட்டின் தமிழக அரசோ இப்பணிக்காகச்செல்லுகின்ற கான்ஸ்டேபிள்களுக்குத் தருகின்ற தினப்படியோ ஆறு ரூபாய் என்று கூறப்படுகின்றபோது பிற மாநிலங்களில் தமிழகக் கான்ஸ்டேபிள்கள் உணவுத் தேவைகளை சரிக்கட்டிக் கொள்கின்ற செப்படி வித்தையின் மர்ம இரகசியங்கள் புரியவில்லை.

ஒரு கான்ஸ்டேபிள் மாதச் சம்பளமாக எல்லாச் சலுகைகளுமாகச் சேர்த்துப் பெறுவது ரூ. 320 என்று தெரிய வருகிறது. அதிலே அவர்களுக்கு பிடித்தங்கள் போக கழித்துத் தரப்படுவது ரூ. 150-லிருந்து ரூ. 200 தான் என்கிற நிலை இருக்குமானால் இதை வைத்துக் கொண்டு குடும்பம் நடத்தி பிள்ளை குட்டிகளைப் படிக்க வைத்து கலியாணம், கருமாதி, பேறுகாலம், சடங்கு போன்ற இன்ன பிற செலவினங்களுக்கு ஈடு கொடுத்தும் ரோகிணி ராக்கெட்டின் வேகத்தையும் மிஞ்சிப்பறக்கின்ற இன்றைய விலைவாசி ஏற்றத்தின் பிடியிலிருந்தும் எப்படித்தான் செலவினங்களைச் சரிக்கட்டிக் கொண்டு போகின்ற மாயவித்தை அவர்களுக்கே உரிய கை வந்த கலைபோலும்.

இப்படிப்பட்ட சம்பள விகிதங்களினால் தான் லஞ்ச லாவண்யங்கள் புற்றீசல் போலப் பெருகி வளர்கின்றது எனக் கருதுகிறேன்.



உயிருக்கு அஞ்சாது ஆபத்துக்களைக் கண்டு மனம் தளராது எதிர்ப்புகளின் ஊடே ஊடுருவச் சென்று கடமையாற்றுகின்ற கான்ஸ்டேபிள், சப் இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் போன்றோரின் ஊதியம் உயர்த்தப்பட வேண்டும். அத்தோடு பணிப் பாதுகாப்பும் அதற்கென தனியான அலவன்சும் தரப்பட வேண்டும்.

பஸ்ட் கிரேடு கான்ஸ்டேபில்களுக்கு பிரமோஷன்கள கிடைப்பதில் தாமதங்கள தவிர்க்கப்பட வேண்டும். மேலும் எமர்ஜன்சி காலத்தில் கட்டாயமாக கம்பல்சரி ரிடையர்மெண்ட் தரப்பட்டவர்களுக்கு மறுபடியும் வேலை வாய்ப்பு கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

காவலர்களின் குடியிருப்புக் காலனிகள் கலனாகி சிதிலமடைந்து வசிப்பதற்கு லாயக்கற்ற முறையில் இருப்பதைச் செப்பனிட்டுத் தருவதோடு குடிதண்ணீர் மின் விளக்கு வசதிக் குறைபாட்டை நிவர்த்திக்கவும ஆவன செய்திட அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

வருங்காலங்களிலாவது காவலர்களாக இருக்க வேண்டியவர்கள் கற்பினைப் பறிக்கின்ற காமுகர்களாக விசாரணையின்பேரால் கொடுமைப்படுத்தப்பட்டு குற்றுயிரும் குலை உயிருமாக ஆக்கப்பட்டு சாக்காட்டுப் புதைகுழிக்கு அனுப்புகின்ற வெங்கொடுமைகள் சிறைக்கொடுமைகள் சீர்படுத்தப்பட வேண்டும்.

அரசியல்வாதிகளைக் கூட களவு, கொள்ளை, கொலைக் குற்றம் செய்தவர்களைப் போன்று நடத்தப்படுவதும் அரசியல் இயக்கங்களைச் சார்ந்தவர்களை பொதுமக்களின் சார்பாகச் செல்கின்ற பிரதிநிதிகளை ஏன் சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட மதிக்க மனம் இல்லாது ஏகவசனத்தில் ஏகத்தாளமாகப் பேசுவதும் உட்காரக் கூட இடம் தராமல் பல மணி நேரம் நிற்க வைத்து இழிவு படுத்தப்படுகின்ற போக்குகள் பொல்லாங்குகள் இந்த புதுமையுகத்தில்கூட காக்கி உடைக்காரர்களின் மனப்போக்கில் மாறுதல் பெறவில்லையென்றால் காவல் துறையே ஒரு பாவத்துறையாக மக்கள் மத்தியில் மதிக்கப்படும் கருதப்படும். தரு நாட்டிற்கே ஒரு களங்கம் தந்து கொண்டிருக்கும் குற்றப் பரம்பரையாக காவல் துறை கணிக்கப்பெறும். அரசாதிக்கம் பெற்று ஆட்சிக் கட்டிலிலே கோலோச்சுகின்ற கட்சிக்காரர்களின் கைப்பாவையாக சுட்டும் விரலுக்கு அபிநயம்பிடித்து ஆடுவதும் அவர்களின் அபிலாஷைகளுக்கெல்லாம் அனுசரித்து நடக்கும் நடைமுறைப் பழக்க வழக்கங்கள் மாற்றப்படாத வரை காவல் துறை ஆள்வோரின் ஏவல் துறையாக மாறிவிடும். இப்போக்குகள் நல்லாட்சித் திறனுக்கு நாட்டின் நலனுக்கு ஆரோக்கியம் அளிப்பதாக அமையாது.

சிறைச்சாலைகள் பற்றி நீதிபதி இஸ்மாயில் தந்த தீர்ப்பினை, பரிந்துரைகளை அமல்படுத்த அரசு முன்வரவேண்டும்.

காவல் துறையின் மேல் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அருவருப்பான நினைவுகள், நம்பிக்கைத் தளர்வுகள் மாறும் வகையில் மாற்றங்காண வேண்டும். களவு, கற்பழிப்பு, பலாத்காரம், அடித்தே சாகடித்தல் போன்ற சித்திரவதைக் கொடுமைகளிலிருந்து சாதாரண மக்களுக்கும் சரியான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

காவல் துறை என்றாலே, காவலர்களை நினைத்தாலே நல்ல உணர்வுகள், பாதுகாப்பு கிடைக்கும் என்ற நல்லெண்ணங்கள், நம்பிக்கை ஏற்படும் வகையில் திறமையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும். மக்கள் மத்தியிலே இந்த நல்லுணர்வை ஏற்படுத்தியாக வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் காவல் நிலையங்களின் எண்ணிக்கை மிகக் குறைவே, கிராமத்து ஏழை எளிய மக்கள் காவலர்களின் உதவியை, ஒத்துழைப்பை பெறுவதற்கு பதினைந்து, இருபது மைல்களைக் கடந்துதான் நகரப் பகுதிக்கு வந்து பெற முடிகிறது. கிராமப் பகுதிகளில் களவு, கொள்ளை, தீ வைப்பு, அடிதடி கலவரம், பலாத்காரம் போன்ற வன்முறை சம்பவங்கள் சம்பவிக்கின்றபோது, பொருள்களை உயிர் உடைமைகளை இழந்து பறிகொடுத்தப் பின்புதான் பிரேத விசாரணை நடத்துவதற்குத் தான் நகர்ப் புறங்களிலிருந்து காவலர்கள் வந்து சேருகின்ற நடைமுறைதான் இன்றைக்கு கிராமப்புறங்களைப் பொறுத்தமட்டில் இருக்கின்ற பிரத்தியட்ச நிலைமை.

சம்பவங்கள் நிகழத் தோன்றும் தருவாயிலேயே தடுத்து நிறுத்தி தக்கப் பாதுகாப்பினை காவல் பணி, காக்கும் பணியாக அமைத்தல் வேண்டும். அவர்களை இயக்கும் முறையில், இயங்கும் முறையில் திறமையான நிர்வாக முறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஏறக்குறைய 30 முதல் 40 ஊராட்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. 5 ஊராட்சிகளுக்கு ஒரு காவல் நிலையம் அமைக்கப்படுமாயின், கிராமத்தில் வாழ் மக்களுக்கு நல்ல பாதுகாப்பினை அரசால் நல்கிட வாய்ப்பாக அமையும். ஆள்கின்ற அரசு சிந்தித்துப் பார்த்து சிறப்பான ஒரு நல்ல திட்டத்தை நடைமுறைப்படுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற முறை ஆட்சி அமைத்தபோது 10,000 போலீசார் காவல் பணியில் புதிதாக ஈடுபடுத்தப்படுவார்கள் என்ற புரட்சிகரமான புதிய வாக்குறுதிகளைத் தந்துள்ளார்கள். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் இப்பொழுது வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாகக் கருதுகிறேன். ஜனத்தொகைக்கேற்ப அந்தந்தப் பகுதிகளில் காவல் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

குற்றவாளிகளை விசாரணையிலிருந்து தப்புவிக்க, காவல் நிலையங்கள், காவலர்கள் தாக்கப்படுகின்ற நிலை, காவலர் களுக்கே பாதுகாப்புத் தரவேண்டிய நிலை வளர்வது–வளர்க்கப் படுவது நல்லாட்சிக்கு, திறமையான ஆட்சிக்கு உகந்த நடை முறையாகாது. புலனாய்வுத் துறையிலும் விஜிலென்ஸ் துறை யிலும் ஊழல்கள் லஞ்ச லாவண்யங்கள் தாராளமாகப் புழங்கு வதாக பேசப்படுகிறது. இந்நிலை சீர்படுத்தப்பட வேண்டும்.

தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரை, கிராமப் பகுதி களுக்கு அதன் சேவை உரிய தருணத்தில் கிட்டுவதில்லை. நகர்ப் பகுதியிலேயே தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படுவதால் பதினைந்து மைல்களுக்கு உட்புறமுள்ள கிராமங்களில் ஏற்படு கின்ற சேதங்களை தவிர்ப்பதற்கு முடியாமல் கடைசியாக எரிந்து சாம்பலானபின் அதன் மீது தண்ணீர் ஊற்றி கரைப்பதற்குக தான் வந்து சேர முடிகிறது. ஆகையால் ஊராட்சி ஒன்றியத்தி லுள்ள ஊராட்சிகளின் மையப் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைத்தல், சுற்று வட்டாரங்களில் நாலைந்து மைல்களுக்கும் தீயணைப்புத் துறையின் உதவி எட்ட முடியும். கிட்ட முடியும்.

அடுத்து ரெவின்யூ போர்டைக் கலைத்ததை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக வரவேற்கிறேன். கண்ணியம் நிறைந்த காயிதே மில்லத் அவர்கள் 1946 முதல் 1952 வரை இம்மாமன் றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றியபோதே ரெவின்யூ இலாகா தேவையற்ற ஒன்று என்று கூறியவைகள் சட்டப் பேரவையின் குறிப்புகளில் இடம் பெற்றுள்ளது.

ரெவின்யூ போர்டை ஒழித்து அந்த அதிகாரத்தைத் தலை மைச் செயலகத்தின் அடிஷனல் செக்ரடரிகளிடம் தரப்படுவது துரிதமான நடவடிக்கைக்கு ஏற்புடைத்தது ஆகாது. அதற்குப் பதிலாக மாநிலத்திலுள்ள மாவட்டங்களை இரண்டு இரண் டாக இணைத்து அதற்கொரு கமிஷனர் பதவியை உருவாக்கி அவர்கள் பொறுப்பில் விடுவதால் கலெக்டர்களுக்கு மேலுள்ள அப்பீல்களை விசாரிக்கவும் பஞ்ச நிவாரணம் வெள்ள நிவார ணம் போன்ற பணிகளைக் கவனித்து துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளவும் நிர்வாகத்தில் புதியதொரு வேகத்தை ஏற் படுத்தவும் வாய்ப்பாக அமையும் என்ற என் கருத்தினை உங் கள் முன் வைக்கிறேன்.

[முற்பகல் 10-10]

இறுதியாக சிறுபான்மை முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் பொறுப்பில் நியமித் ததற்கும் போலீஸார் வேலை நிறுத்தத்தின்போது வேலை நீக்கம் செய்யப்பட்ட போலீசார்களை திரும்பவும் பணியில் அமர்த்தியிருந்த தற்கும் அவர்கள் மேல் போடப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெற்றதற்கும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக வரவேற் றுப் பாராட்டுகிறேன்.



அதைப்போன்று விவசாயிகளின் மீதும் அந்த அமைப்பின் தலைவர்கள் மீதும் போடப்பட்ட வழக்குகளையும் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்பதோடு இந்த அரசு கலைக்கப்பட்ட போது நடைபெற்ற கண்டன ஊர்வலத்தில் 232 பேர்மீது போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப்பெற்றது போன்று நடந்து முடிந்துள்ள சட்டமன்றத் தேர்தலின்போது ஆங்காங்கே போடப் பட்ட தேர்தல்கால வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெறு வதின் வாயிலாக ஒரு சுமுக உறவை, ஒரு நல்ல சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்திக் தரவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

முடிவாக சிறுபான்மை முஸ்லீம்களுக்கு காவல் துறையைச் சார்ந்த பல்வேறு பிரிவுகளிலேயும் உரிய வேலை வாய்ப்புகளை தகுதி, திறமையின் அடிப்படையிலே அளிக்கவேண்டுமென்று கேட்டு புலனாய்வுத் துறையில் ஸ்பெஷல் பிராஞ்சில் முஸ்லீம் கள் சேர்க்கப்படுவது இல்லையென்ற முறையைப் போக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த காலத்தில் இந்த அரசு ஆட்சிபுரிந்தபோது நடை பெற்ற சப்இன்ஸ்பெக்டர் செலக்ஷனில் 300 பேர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டதில் முஸ்லீம்களுக்கு 1 சதவீதம் கூட இடம் கிடைக்கவில்லை என்ற குறைபாடு போக்கப்படவேண்டும். நாங் கள் குறை சொல்கிறோமென்றால் அது இல்லை என்று அப்படி பாகுபாடு காட்டப்படவில்லையென்ற விவரத்தை புள்ளி விவரத்தோடு ஆதாரத்தோடு அரசு நிரூபிக்குமானால் அதை மறுக்குமானால் இந்தக் குற்றச்சாட்டுகளைத் திரும்பப்பெற்றுக் கொண்டு உரிய விகிதத்தில் வேலைவாய்ப்பு பதவி உயர்வு தரப் பட்டிருக்குமானால் நன்றியோடு பாராட்டவும் தவற மாட்டோம் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கோட்டாட்சித் தலைவர்கள் நியமனங்களிலும் முறையான உரிய வாய்ப்புகள் தரப்படவேண்டு மென்று கேட்டுக் கொள்கிற அதே நேரத்திலே மாண்புமிகு உமா நாத் அவர்கள் இப்பேரவையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் முஸ் லீம்களுக்கும் காவல்துறைப் பணிகளிலே அதிக இடம் அளிக்கப்பட வேண்டும் என்று கூறிய கருத்தினை ஆதரிப்பதோடு இக்கருத் தைத் தெரிவித்ததற்காக இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக நன்றியும் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் ஆட்சிக் காலத்தில் நேர்முகத் தேர்தல் வாயிலாக முஸ்லீம்களுக்கு டிஎஸ்பி மூன்றும் டெப்டி கலெக்டர் இரண்டும் அளித்ததை இந்தச் சந்தர்ப் பத்தில் நினைவுகூறி இந்த அரசு முஸ்லீம் சமுதாயத்தின் நன் மதிப்பையும் பாராட்டையும் பெறும் வகையில் சிறுபான்மையோர் களுக்கும் பாதுகாப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

26 ஆம் தேதி இராமநாதபுரம் மாவட்டம் அபிராமத்தில் இந்த புனிதமான ரம்ஜான் மாதத்தில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டும் பள்ளிவாயில்களில் தொழச் சென்றவர்கள் மீதும் பள்ளிவாயில் மீதும் தாக்குதல் நடந்துள்ளன, இந்த அசம்பாவிதங்களை விசாரித்து நீதி தரக்கேட்டு பாலக்கோட்டில் பழையபடியும் நிலைமைகள் சீராக இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நினைவுபடுத்தி பாதுகாப்பு இல்லாத நிலையைத் தவிர்க்கவும் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டுமென்ற முறையிலேயும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த சமுதாய மக்களின் சார்பாக இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே கேட்டுக் கொள்கிறேன்.

கடையநல்லூர் தொகுதியில் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ஒன்றும் செங்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ஒன்றும் தென்காசி ஊராட்சிப் பகுதியில் ஒன்றும் வடகரை அல்லது பண்பொழியில் புதிதாக ஒன்றும் காவல்நிலையங்களை அமைத்துத்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த காவல் துறை கொள்கை விளக்கப் புத்தகங்களில் பல இடங்களிலே முஸ்லீம்களை குறிப்பிடும்போது முகமதியர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணத்துக்குச் சொன்னால் பக்கம் 20, 21 இல் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. முஸ்லீம்கள் அல்லது இஸ்லாமியர் என்றுதான் அழைக்கப்படவேண்டும் அல்லது குறிப்பிடப்பட வேண்டும். முகமதியர்கள் என்ற ஒரு மதமே இல்லை ஆகவே இஸ்லாமியர்கள் முஸ்லீம்கள் என்று திருத்திக் கொள்வதோடு மேலும் இந்தத் தவறுகள் நிகழா வண்ணம் அரசு பாதுகாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உண்மைக்குப் புறம்பான வழக்குகளால் நிரபராதி நாட்டின் குடிமகன் தண்டிக்கப்படக்கூடாது என்பதற்காக இண்டியன் பீனல்கோடு இந்தியன் புரசீஜர்கோடு ஆகிய சட்டங்கள் இயற்றப்பட்டன. அந்த முறையிலே நிரபராதிகளுக்கு பாதுகாப்பான நிலைமையை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பைத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் பொறுப்பிலே இருக்கக்கூடிய 7 இலாக்காகளுடைய மானியக் கோரிக்கைகளின் மீது என் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து இங்கே உரையாற்ற இருக்கிறேன். இன்றைய தினம் காவல் துறையை எடுத்துக் கொண்டால், தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பை ஏற்று இந்த புதிய அரசு வந்தபிறகு ஆரம்பத்திலேயிருந்து ஒரு குழப்பமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு இன்றைய தினமும் அது தொடர்ந்து கொண்டிருக்கிறது. என்று சொன்னால் மிகையாகாது. குறிப்பாக சட்டம், ஒழுங்கு ஐ. ஜி. யாக யாரை நியமனம்



செய்வது, மதுவிலக்கு ஐ. ஜி. யாக யாரை நியமனம் செய்வது என்பதிலே குழப்பம் ஏற்பட்டு அது தொடர்ந்து இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். குறிப்பாக ஒரு சீனியர் ஐ. ஜி. அவர்களே அப்படி பந்தாட்டம் நடத்தியதின் காரணமாக அவர் தம்முடைய பணியை செய்யமுடியாத நிலை இருப்பதை நாம் பார்க்கிறோம். தமிழகத்தை எடுத்துக் கொண்டால் புரகிபிஷன் என்பதற்காக தனியாக ஒரு ஐ.ஜி. நியமனம் செய்யப்பட்டு, இந்த அரசாங்கம் அதிலே ஒரு கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிற போது இன்றைய தினம் சாராயம் இல்லாத ஊரே இல்லை. கள் இறக்காத கிராமமே இல்லை என்ற நிலை இருக்கிறது. கடந்த இரண்டரை ஆண்டு காலமாக— உங்கள் கட்சியின் ஆட்சி ஆரம்ப காலத்திலேயிருந்து இதுதான் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் கேட்க விரும்புகிறேன் மது விலக்கு சம்பந்தமாக உங்கள் கொள்கை என்ன! அதைத் திட்டவட்டமாக அறிவித்து விடுங்கள். 25 வயது, 35 வயது, என்று சொல்லி 25 ரூபாய் கொடுத்தால் யாருக்கு வேண்டுமானாலும் மது பர்மிட் அளிக்கலாம் என்றால் அதைக் கட்டுப்பாடாகச் செய்யுங்கள். இல்லை என்றால், கிராமங்களில் சாராயக் கடைகள் வைக்க அனுமதிக்கிறோம் என்றால் அதையாவது செய்யுங்கள். இப்படி இரண்டையும் செய்யாமல் ஏன் இருக்க வேண்டும்? சாராயக் கடைகள் அதிகமாக வருவதற்குக் காரணம் என்ன? இதற்கு யார் காரணம்? அரசாங்கக் கொள்கை ஒரு புறம் காரணம். மற்றொரு புறத்தில் காவல் துறையினர். அவர்களுக்குத் தேவையான பணம் கிடைக்கிறது என்பதற்காக அதை அனுமதிக்கிறார்கள். காய்ச்சாமல் இருந்தால்கூட, இவர்களாகப் போய், நீங்கள் காய்ச்சுங்கள், எங்களுக்கு இவ்வளவு கொடுங்கள் என்று சொல்லக்கூடிய அவல நிலை இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் அல்ல, தமிழகத்தில் எங்கெங்கு தென்னை மரங்கள் இருக்கின்றனவோ அத்தனை இடங்களிலும் கள்ளச் சாராயம் இறக்குகின்ற காட்சியைப் பார்க்கிறோம். சென்னை நகரத்தில் வாலிபர்களுக்குக் கஞ்சா, எல். எஸ். டி. மாத்திரை என்று இருக்கிறது. எப்படி இதைக் கட்டுப்படுத்தப் போகிறீர்கள்!

சென்னையின் பிரதான வீதியான மவுண்ட் ரோட்டில் அண்ணா சிலைக்கு அருகில் இரவு ஒன்பது மணி முதல் இரவு இரண்டு மணி வரையில் பார்த்தால் அங்கே சாராயம் குடித்தவர்களின் அட்டகாசத்தை நிச்சயமாக யாராலும் பொறுத்துக் கொள்ள முடியாது. அந்த அளவிற்குக் கடுமையான நிலைமை அங்கே நிலவுகிறது. எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் செல்ல முடியாத அவல நிலை இருக்கிறது. ஆகவேதான் நான் கேட்கிறேன், தெளிவாக உங்கள் கொள்கை என்ன என்பதை அறிவித்து விடுங்கள். மதுவிலக்கைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கப் போகிறீர்களா அல்லது விட்டு விடப்போகிறீர்களா என்றுகேட்க விரும்புகிறேன்.

காமராஜர் ஆட்சிக் காலத்திலே காட்டன் சூதாட்டம் ஒரு
புறம், பிக்பாக்கெட் ஒருபுறம் என்று நடந்து கொண்டிருந்தது.
அதை ஒரே மாதத்திலே அன்றையதினம் ஐ. ஜி. யாக இருந்த
திரு. அருள்அவர்களால் கட்டுப்படுத்த முடிந்தது என்றால்அதற்கு
காரணம் அரசியல் தலையீடு இல்லாததுதான். அப்படி அரசியல்
தலையீடு இல்லாமல் அதிகாரிகளைக் கட்டுப்படுத்தாத காரணத்தி
னால் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள், எப்படியாவது அதை
நிறுத்த வேண்டுமென்று சொல்லிய காரணத்தால்தான் அது
போன்ற சமூக விரோதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்
படுத்த முடிந்தது. அதேபோல் இன்றைய தினம் நீங்கள்
போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிடுங்கள், எங்களுடைய
ஆளுங் கட்சிக்காரர்கள் தலையிட மாட்டார்கள், அப்படி
அவர்கள் தலையிட்டாலும் நீங்கள் அதைக் கேட்க வேண்டாம்,
உங்கள் விருப்பப்படி செயல்படுங்கள், சாராயம் காய்ச்சுபவர்
களை, சமூக விரோதிகளைக் கட்டுப்படுத்துங்கள் என்று
சொன்னால் நிச்சயமாகத் தமிழ்நாடு காவல்துறை நல்லமுறையில்
செயலாற்றும், நல்லமுறையில் செய்வார்கள் என்ற நம்பிக்கை
உண்டு. ஆனால் அதை நீங்கள் செய்யப் போகிறீர்களா?
செய்ய முடியாது. காரணம், உங்களுடைய பலவீனம்தான்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழகத்திலே
இருக்கின்ற சட்டம் ஒழுங்கைப்பற்றியெல்லாம் சொன்னார்கள்.
நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே ஆட்சி கலைக்
கப்பட்ட பிறகு நடத்தப்பட்ட ஊர்வலத்தில் போலீஸ்காரர்கள்,
ஆளுநர் ஆட்சியிலே கடுமையாக நடந்து கொண்டார்கள்
என்று கூறுகிறார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்
களையே துணையாக அழைக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அவர்கள் சொல்லுகின்ற காரணம், "1980 ஆம் ஆண்டு
மார்ச்சு மாதம் 2 ஆம் நாளன்று, அ.இ.மு.க.வும் அதனைச்
சார்ந்த கட்சிகளும், தமிழ்நாடு சட்டப் பேரவை கலைக்கப்பட்டு
அ.தி.மு.க. அரசு நீக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்
வகையில் சென்னை அண்ணா சாலையில் காமராஜ் சிலையி
லிருந்து சீரணி அரங்கத்திற்கு ஊர்வலமாகச் சென்றன. ஊர்
வலத்தின் போது, ஊர்வலத்தின் கட்சித் தொண்டர்களின்
உணர்ச்சிகளை சில சமூக விரோதிகள் சாதகமாகப் பயன்படுத்திக்
கொண்டு, வன்முறையில் ஈடுபட்டு, தனியார், பொதுச்
சொத்துக்களையும், காவலர்களையும் தாக்கினர். வன்முறை
கூட்டத்தினர் டி-2 காவல் நிலையத்தையும் தாக்கினர். வன்
முறைக் கூட்டம் டி-2 காவல் நிலையத்தில் புகுந்து மேஜ்
நாற்காலிகள் முதலியனவற்றிற்கு சேதம் ஏற்படுத்தி, மின்
விளக்குகளை உடைத்து காவலர்களைத் தாக்கி சென்ட்ரி
காவலரிடமிருந்து துப்பாக்கியை கைப்பற்ற முயற்சி செய்ததால்,

செண்ட்ரி காவலர் 1654 ராமர் தற்காப்புக்காகவும், ஆபத்தான நிலையில் இருந்த பிற காவலர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவும், அரசுச் சொத்துக்களுக்கு மேற்கொண்டும் சேதம் ஏற்படாமல் தடுப்பதற்காகவும் தனது ·410 துப்பாக்கியைக் கொண்டு ஐந்து முறை வானத்தை நோக்கிச் சுட்டார்'' இதுதான் முதலமைச்சரவர்களுடைய அறிக்கையில் கொடுத்திருக்கும் உண்மையான காரணம். இது மறுக்கப்படவில்லை.

முன்னாள் முதலமைச்சரின் சிலையை உடைக்க முயற்சி எடுக்கப்பட்டது. முன்னாள் முதலமைச்சருக்கும் உங்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் சென்னையிலுள்ள அந்தச் சிலையை உடைக்க உங்கள் கட்சியால் அல்லது சமூக விரோதிகள் என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றவர்கள் முயற்சி செய்தால் போலீஸ் துறை அதைச் செய்யக் கூடாதா? நான் கேட்க விரும்புகிறேன், உங்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தால் அந்தச் சிலையை உடைப்பதால் மட்டும் அந்தக் கருத்து வேறுபாடுகள் தீர்ந்து விடுமா? இது போன்ற முயற்சிகள் அங்கே நடைபெற்றதால்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னால் அது பிழையாகாது.

மாண்புமிகு முதலமைச்சரவர்களின் அறிக்கையில், இது காறும் நடந்ததுதான் போகட்டும் என்றால், இனிமேலும் தமிழ்நாட்டு மக்களை எச்சரிக்க செய்ய விரும்புகிறீர்கள். தொடர்ந்து இதுபோன்ற வன்முறைகள் நடைபெறும், கொலைகள் நடைபெறும், குற்றங்கள் நடைபெறும், கற்பழிப்புகள் நடைபெறும் என்று எச்சரிக்கின்ற வகையில், '' 1979-ல் நிலைமைகள் சாதகமாக இருந்ததாலும், குற்றவியல் விதிக் கோவையின் குற்றத் தடுப்புப் பிரிவுகளை அறிவார்ந்த முறையில் பயன்படுத்தியதாலும் மொத்தத்தில் குற்ற நிகழ்வுகள் குறைந்தன.

[முற்பகல் 10.20]

ஆனால், அடுத்த ஆண்டிலும் இதே நிலைமை நீடிக்கும் என்று உத்தரவாதம அளிக்க முடியாது. ஏனெனில், இன்றியமையாப் பொருள்களின் விலைவாசி தொடர்ந்து உயர்ந்து வருதல், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பு, தேவைகள் அதிக அளவு பெருகி வருவது, மக்களின் பெரும் அளவிலான எதிர்பார்ப்புகள் ஆகியவை குற்ற நிகழ்வுகள் பெருகுவதற்கான காரணங்களாக அமைகின்றன.'' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, . கடந்த ஆண்டு குறைவான குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், இனி வரக்கூடிய ஆண்டு அதிகமான குற்றங்கள் தமிழகத்தில் நடைபெறப் போகின்றன என்பதை நாட்டு மக்களுக்கு முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கையாக வைத்திருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன், இங்கே

ஒரு அரசு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது ; குற்றங்களைத்
தடுப்பதற்காகத்தான் அரசு இருக்க வேண்டுமே தவிர,
குற்றங்கள் பெருகி விடும் என்று மக்களை அச்சுறுத்துவதற்காக
அல்ல. மக்களை அச்சுறுத்துவது என்றால், தயவுசெய்து
நீங்கள் ஆட்சியிலே உட்கார்ந்து கொண்டு, இன்மேல் நடக்கும்,
தொடர்ந்து நடக்கும், அதிகமாக நடக்கும் என்று சொல்வீர்
களானால், நீங்கள் எதற்குப் பதவியிலே இருக்கின்றீர்கள்?
அதைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் அரசே தவிர. நீங்கள்
எங்களுக்கோ, மக்களுக்கோ, எச்சரிக்கை விடுவதற்காக அல்ல
என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெளிவாகக் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

இங்கே சென்னையிலே இருக்கக்கூடிய சட்டமன்ற
உறுப்பினர், தோழர் சவுரிராஜன் அவர்கள் வீட்டிலே இரவிலே
அவருடைய மகளுடைய செயின் அறுக்கப்பட்டிருக்கிறது. அவர்
சென்னையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார், இங்கேயிருந்து
அவர் வீட்டுக்கு உடனே போய்விட முடியும். ஆனாலுங்கூட
இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. நான் கூட நினைக்கிறேன்,
அரசியல் காரணமாகத் தான் அவருடைய வீட்டிலே இது போன்ற
செய்கைகள், அவரை அச்சுறுத்துவதற்காக நடைபெற்றனவோ
என்று கூட சந்தேகப்படுகிறேன். ஆனால், பாக்கி இருக்கக்கூடிய
சட்டமன்ற உறுப்பினர்கள், நெடுந்தொலைவிலிருந்து வந்திருக்
கிறார்களே, அவர்களுடைய குடும்பங்களுக்கு யார் பாதுகாப்பு?
யாரை நம்பி விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். உங்களுடைய
ஆட்சியிலே இருக்கக்கூடிய அதிகாரிகளை நம்பி, அங்கே இருக்கக்
கூடிய காவல் துறை அதிகாரிகளை நம்பித் தானே, அங்கே
யிருக்கக் கூடியவர்களை நம்பித்தானே விட்டுவிட்டு வந்திருக்
கிறார்கள். ஆகவே, இங்கே இருக்கக்கூடியவர்களுக்கே இந்த
நிலைமை என்றால், அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு என்ன
நிலைமை என்பதை எண்ணிப் பாருங்கள்.

நெய்வேலியில் 4 சிறுவர்களைக் காணோம், இதுவரையில்
கண்டு பிடிக்கப்படவில்லை. தமிழகம் பூராவும் குழந்தைகள்
காணாமல் போன செய்தியைத்தான் பார்க்கிறோம். நரபலியாக
இருக்கலாம், அல்லது வேறு எந்தப் பலியாக இருக்கலாம்.
ஆக, மொத்தமாக குழந்தைகள் காணோம் என்பதுதான்
இன்றைய தினம் நாம் பத்திரிகையிலே பார்க்கின்ற செய்தியாக
இருக்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்திலே கூட, காட்டுமன்னார்
கோவில் ஒன்றியத்திலே, கே. சப்பாணி என்ற ஆசிரியரை,
ஸ்ரீமுஷ்ணம் என்ற கிராமத்திலே 23—7—1980 அன்று குளத்திலே
கண்டெடுத்திருக்கிறார்கள் உயிரற்ற பிணமாக. அதைச்
செய்தது யார்? அங்கேயிருக்கக்கூடிய சாராய வியாபாரி.
சாராய வியாபாரி, சாராயம் காய்ச்சுவதன் மூலமாக, பொருளை
ஈட்டி, அதன்மூலமாக அவர் ஒரு கொலையையும் செய்யலாம்



என்ற நிலைமை ஏற்படுமானால், தமிழகத்திலே சாராய வ்யா
பாரிகளுக்கு எதிராக யாருமே சாட்சியம் சொல்ல முடியாது
என்பது மட்டுமல்ல, எதையுமே பேச முடியாது என்ற நிலைமை
வந்து விடும். காரணம், பொருளாதாரத்திலே ஒரு மேம்பாடு
பெற்று விட்டால், அவர்களால் எதை வேண்டுமானாலும்
செய்ய முடியும் என்ற நிலைமைதான் வரும் என்பதை நான்
உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, தேர்தல் சமயத்தில் நடைபெற்ற சம்பவங்
களுக்காக இன்றைய தினம் வழக்கு போடப்படுகிறது. குறிப்
பாக, கோவை மாவட்டம் உடுமலை தாலூகாவிலே எங்களுடைய
காங்கிரஸ் கட்சியினுடைய பொதுச் செயலாளர் திரு. எஸ். ஆர்.
சுப்பிரமணியம் அவர்கள் கூட, இங்கே இருக்கக்கூடிய ஐ. ஜி.
அவர்களைச் சந்தித்திருக்கிறார்கள், டைரக்டர் ஜெனரல்
அவர்களைச் சந்தித்திருக்கிறார்கள், இருந்தாலும், அது
சம்பந்தமாக, எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட
வில்லை. காங்கிரஸ் தோழர்கள் மீதும், திராவிட முன்னேற்றக்
கழகத் தோழர்கள் மீதும் கடுமையான முறையில் நடவடிக்கை
எடுத்து, அவர்களை அடித்திருக்கின்றார்கள். அவர்கள் காவல்
நிலையத்திற்கு வாக்கு மூலம் கொடுக்கச் சென்றால் கூட தடுக்
கப்பட்டிருக்கின்றார்கள், அடிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே
குமாரமங்கலம் என்பவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்
களின்மீது பொய் வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, காரைக்குடி பகுதியிலே, ஆளுங்
கட்சிக்கு ஆதரவாக இல்லையென்பதற்காக பெரியவன் என்பவர்,
மித்திராவின் கிராமத்திலே வாழ்கின்றவர், அவரை அடித்
திருக்கிறார்கள், கும்பலாக வந்து அடித்திருக்கிறார்கள். அதே
நேரத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சேர்ந்தவர்கள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மறு
நாள் அவருடைய தகப்பனார் காவல் நிலையத்திற்கு
ரிப்போர்ட் செய்ய சென்ற நேரத்தில், அவரையும் தடுத்து அடித்
திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, அவரைக் கட்டித்
தூக்கிப் போய், கொலை முயற்சி செய்த நேரத்திலே, சுற்று
வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் வந்து காப்பாற்றியிருக்கிறார்கள்.
இதுநாள் வரையில், யார் அடித்தார்களோ அவர்கள் மீது
வழக்கு இல்லை. ஆனால், யார் கம்ப்ளெயின்ட் செய்யச்
சென்றார்களோ அவர்கள் மீது வழக்குகள்.

அதே போல். இன்றைய தினம் கிழக்கு இராமநாதபுரம்,
கடலாடி பகுதியிலேயிருந்து ஃபோட்டோ கொடுத்திருக்கி
றார்கள். உங்களுடைய அனுமதியோடு காட்ட விரும்புகிறேன்.
கீழச் செல்வனூர் என்ற ஊரில் அரிசன மக்களுடைய வீடுகளை
யெல்லாம் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அவர்கள் நடமாட
முடியாத அளவுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். யார்
யார் அவர்களுக்கு உதவிக்குப் போனார்களோ அவ்வளவு

பேரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே தஞ்சம் போனார்
களே, அந்த ஆசிரியர் வீட்டையும் தாக்கியிருக்கிறார்கள்.
ஆசிரியரையும் அடித்திருக்கிறார்கள். இதுபோன்ற நிலைமை
அங்கே தொடர்ந்து இருக்கிறது. பகட்டமான நிலைமை
அங்கே நீடித்துக் கொண்டிருக்கிறது.......................

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே
மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் பேசும்பொழுது,
கடலாடி பகுதியில் கிழுச் செல்லூரில் போலீசார் அடித்து
நொறுக்கியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.
முழுமையாகச் சொல்வதானால், அது எந்த சூழ்நிலையில் எப்படி
நடந்தது என்பதைத் தெளிவாக.......................
(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவை
துணைத் தலைவர் அவர்களே, உடுமலை தாலுகாவில் கூட
ஒரு சம்பவம் நடந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொன்னார்கள். ஆனால் அவர் குறிப்பிட்டுச் சொல்வார்
என்று எதிர்பார்த்தேன், ஆனால் அவர் சொல்லவில்லை.
அதே நேரத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்த நேரத்தில்..
..........(குறுக்கிடு).

திரு. நா. சுந்தரராஜ் : இதற்கு வேண்டுமானால் முதல
மைச்சர் பதில் சொல்லட்டும்,

அடுத்து இன்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் ஒரு
உத்தரவு போட்டார்கள், மாலை 6 மணிக்கு மேல் பெண்களை
லாக்கப்பில் வைக்கக் கூடாது என்று. ஆனால் நான் சொல்லு
கிறேன் இனிமேல் ஆண்களைக் கூட லாக்கப்பிலே வைக்காத
அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன். திருப்பத்தூரிலே நடைபெற்ற சம்பவம்,
இராமநாதபுரம் திருப்பத்தூரிலே காவல் துறை உதவி சப்.
இன்ஸ்பெக்டர் குருசாமி என்பவர், அங்கே அந்த லாக்கப்பில்
இருந்த ஒரு ஆண், அவன் பெயர் ராஜகான்— என்பவனோடு
உடல் உறவு கொண்டு, அதன் விளைவாக அவன் சத்தம்
போட்டு அந்த ஊரைச் சேர்ந்த 5,000 பேர்கள் ஒன்று சேர்ந்து
அந்தப் போலீஸ் ஸ்டேஷனைக் கேரோ செய்தார்கள். எனவே
நான் கேட்டுக் கொள்வதெல்லாம், எப்படி 6 மணிக்கு மேல்
பெண்களை லாக்கப்பில் வைக்கக் கூடாது என்று சொல்லுகிறார்
களோ அதைப் போல ஆண்களையும் லாக்கப்பில் மாலை 6
மணிக்கு மேல் வைக்கக் கூடாது என்று உத்தரவு போட
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் அவர்களுக்கு
பாதுகாப்பு இல்லை. இது போன்ற நிலைமைகள்
நீடிக்குமானால் இந்த இலாகாவுக்கே பெருத்த அவமானம்
ஏற்படும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.





அடுத்து புதுக்கோட்டை மாவட்டத்தில் செக்ஷன் 107
கேஸ்கள் சர்வ சாதாரணமாகப் போடப்படுகிறது. அறந்
தாங்கி டி.எஸ்.பி. அவர்கள் அங்கே இருக்கிற ஏழை கிராம
மக்கள் மீது இந்த 107 வழக்கைப் போட்டிருக்கிறார்கள். பாவம்
அவர்கள் வல்லப சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள்
அந்த வழக்கைச் சந்திப்பதற்காக அறந்தாங்கியிலே இருந்து
புதுக்கோட்டைக்கு வாரம் ஒரு முறை வர வேண்டியிருக்கிறது.
அதற்காக ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழித்திருக்கிறார்
கள். அன்றைக்கு டைரக்டர் ஜெனரலாக இருந்த திரு. ஷெனாய்
அவர்களை நானும் எங்கள் கட்சியைச் சேர்ந்த பெரியசாமி
என்பவரும் சென்று அந்த வழக்குகளை ரத்து செய்யுங்கள் என்று
மனு கொடுத்தோம். ஆனால் என்ன நடந்தது என்றால்
மனு கொடுத்தவர் மீதே 107 செக்ஷன் படி வழக்கு போட்டு
இருக்கிறார்கள் என்று சொன்னால், இது பழிவாங்கும் உள்ளத்
தோடு தான் இந்தத் துறை செயல்படுகிறது என்பதை சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். நான் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், இந்த நிலைமையை
நீடிக்க வைக்கப் போகிறீர்களா? என்பதை கேட்க விரும்பு
கிறேன்.

அடுத்து நெய்வேலி நகரில் சி.ஐ.டி.யு. தோழர்கள்
எங்களுடைய கட்சிக்காரர்களை—செக்ஷன் 32 போலீஸ்
சட்டம் அமல் படுத்தப்பட்டிருந்த நேரத்தில்—கொடும்பாவி
இழுத்துச் சென்று எங்கள் கட்சித் தோழர்களைக் கத்தியால்
குத்தி இருக்கிறார்கள். கொடும்பாவியையும் எரித்திருக்கிறார்
கள். ஐ.என்.டி.யு.சி. என்ற பேரால்.

அதுமட்டுமல்ல, என் தொகுதியைச் சேர்ந்த பொன்னமரா
வதிக்குப் பக்கத்தில் இருக்கிற கொப்பம்பட்டி கிராமத்திலே
ஒரு சாதாரண ஆசிரியரும் அவர் மனைவியும், மிகவும் கஷ்டப்
பட்டு சம்பாதித்து 8 பவுன் செய்னும் 500 ரூபாய் பணமும்
வைத்திருக்கிறார்கள். பட்டப் பகலிலே அவர்கள் வேலைக்குப்
போன நேரத்திலே பக்கத்திலே இருக்கின்ற ஒருவன் திருடி
விட்டான். காவல் துறைக்கு ரிப்போர்ட்டு கொடுத்திருக்
கிறார்கள். 5 மாதங்களாக எந்த விதமான நடவடிக்கையும்
எடுக்கப்படவில்லை. குற்றவாளி யார் என்று தெரிந்தும் கூட
அவன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த நிலைமைதான்
அங்கே இருக்கிறது.

அதேபோல ஊர்க்காவல் படை என்று சொன்னார்கள்.
அந்த ஊர்க்காவல் படைக்கு புதுக்கோட்டையிலே ஒரு பொறுப்
பாளர் இருக்கிறார்—மலையப்பன் என்று பெயர்—ஊர்க்
காவல் படைப் பொறுப்பாளர் என்பதற்குப் பதிலாக ஊரை
அடிக்கிறவர் என்ற பெயரைத்தான் அவர் பெற்றிருக்கிறார்.
யார் ஆட்சிக்கு வந்தாலும் மாலை மரியாதை செய்து அவர்
களுடைய சலுகைகளை பெற்று தொடர்ந்து அவர் அக்கிர

மங்களைச் செய்து கொண்டு வருகிறார்.
காமராஜபுரம் என்ற இடத்தில் ஒரு வீட்டில் புகுந்து அடித்து
நொறுக்கி அங்கே உள்ள அரிசன மக்கள் தண்ணீர் பிடிக்க
முடியாத அளவுக்கு கொடுமைப்படுத்தியிருக்கிறார். ஊர்க்
காவல் படை என்பது போலீஸ் அல்ல. ஊரைக் காவல் புரிய
வேண்டியவர்கள்தான்.

இன்றைய தினம் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை
மீண்டும் வேலைக்கு எடுத்திருக்கிறீர்கள். அவர்களுக்கு பழைய
பாக்கி சம்பளம் கொடுக்கவேண்டும். (மணி அடிக்கப்பட்டது)
அவர்களுடைய சீனியாரிட்டி போகாத அளவுக்கு நீங்கள்
பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மதுரையிலே
10—3—1979-லே நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நடைபெற்ற சம்பவம்,
சிவாஜி ரசிகர் மன்ற தலைவர்கள் ஒரு ஊர்வலத்தை நமது
ராஜசேகரன் அவர்கள் தலைமையில் நடத்தினார்கள். அதில்
ராஜசேகரன் உட்பட 1,000 பேர்கள் சட்டத்தை மீறினார்கள்
என்பதற்காக அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது.
இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் ஒரு ஜி. ஓ. போட்டிருக்
கிறார்கள். ஜி. ஓ. எண். 6114-ல் தொழிலாளர்கள் மீதுள்ள
வழக்குகள் கொலை முயற்சி வழக்குகள் தவிர எல்லா வழக்கு
களும் வாபஸ் பெறப்படும் என்று அந்த ஜி. ஓ.—ல்குறிப்பிட்டு
இருக்கிறார்கள். ஆனால் இது அரசியல் கட்சியினுடைய வழக்கு,
காங்கிரஸ் கொடி போட்டவர்கள் மீது வழக்கு, அருமைத்
தலைவர் சிவாஜி ரசிகர்கள் மீது போட்ட வழக்கு, எங்கள்
கட்சியினர் நடத்திய ஊர்வலத்தின் மீது போட்ட வழக்கு
என்பதால் வாபஸ் வாங்கப்படவில்லை. இதிலே அரசியல்
காழ்ப்புணர்ச்சியை தயவுசெய்து காட்டாதீர்கள். அந்த
வழக்குகள் வாபஸ் வாங்கப்படுமா என்பதை தெரிந்துகொள்ள
விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

முதலமைச்சர் அவர்கள் இங்கே காமராஜர் விழாவில்
பேசுகிறபோது சொன்னார்கள். காங்கிரஸ் கட்சிகள் ஒன்று
சேர வேண்டும் என்று சொன்னார்கள். பாராட்டுகிறேன்.
ஆனால், அதே நேரத்தில் இன்னொரு பக்கத்திலே இன்னொரு
வேலை நடைபெறுகிறது. அகில இந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எம்.எல்.ஏ. ஒருவர் ஒரு
சுற்றறிக்கை விட்டு இருக்கிறார்.

'அன்புடையீர், வணக்கம். இன்றைய அரசியல்
சூழ்நிலையில், இன்றைய அரசியல் சூழ்நிலைப் பற்றியும் இந்த
மாதக் கடைசியில் ஈரோட்டில் நடைபெற உள்ள காங்கிரஸ்
ஊழியர்கள் மாநாட்டில் தங்களுடன் நேரில் கலந்து பேச
விரும்புகிறேன்.''



குறிப்பிட்ட இடத்தில் வந்து சந்திக்கவேண்டும். வீரப்பன் நகர், நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் நாச்சிமுத்து கவுண்டர் இல்லத்தில் சந்திக்கவேண்டும்.

(அன்புள்ள துரை ராமசாமி, எம்.எல்.ஏ. இவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர். அவருக்கு காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது. இது கட்சியை உடைப்பதற்கு முயற்சியா !! கட்சிக்குள்ளே குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சியா? இதற்கு முதலமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருக்கிறார்களா? முதலமைச்சர் அவர்கள் கூட இதிலே கலந்து கொள்ளப் போவதாக அங்கே சொல்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன், ஒரு பக்கத்திலே முதலமைச்சர் அவர்கள் ஒன்று சேரவேண்டும் காங்கிரஸ் கட்சிகள் என்று சொல்கிறார்
. . . . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது காவல் துறை மானியத்தின் மீதான விவாதம் நடந்து கொண்டு இருக்கிறது. கட்சி சம்பந்தப்பட்ட விவகாரங்கள் பேச வேண்டாம்.

திரு. நா. சுந்தரராஜ்: 'மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்' என்ற தலைப்பின் கீழ் இது வருகிறது. ஆகவே பேசுகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒன்று சேர வேண்டும் என்று சொல்கிறார். இன்னொரு பக்கத்திலே கட்சியை உடைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் இதிலே தன்னுடைய தெளிவான நிலையைச் சொல்லிவிட வேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

ஈரோடு பகுதியில் சாதாரண சிறிய பழ வியாபாரிகள் கை வண்டி தள்ளிக் கொண்டு வியாபாரம் செய்பவர்கள் ஒரு நாளைக்கு 20 ரூபாய் சம்பாதிக்கலாம். அவர்களைப் பிடித்து சிறைச் சாலைக்கு அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தக் கொடுமை நீடிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தீயணைப்புத் துறை தமிழகத்தில் மிக முக்கியமான ஒரு துறையாக இருக்கிறது. அதற்குப் புதிதாக பேருந்துகள் வாங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மதுரையில் ஒரு டெபுடி டைரக்டர் இருக்கிறார். அவர் என்ன செய்கிறார் என்றால்— மாநிலத்தில் ஒரே ஒரு ட்ரெயினிங் ஸ்கூல் இங்கே தான் அங்கீகரிக்கப் பட்டு இருக்கிறது. அரசாங்கத்திடம் அங்கீகாரம் வாங்காமலேயே மதுரையில் ஒரு ட்ரெயினிங் ஸ்கூல் நடத்தி குறிப்பிட்ட உயரம் இல்லாதவர்களை எல்லாம் கூட சேர்த்து அதன் மூலம் 3½ லட்சம் 4½ லட்சம் அளவிற்கு

எல்லா இலாக்காக்களுக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போட வேண்டும் என்கிற மனப்போக்கு இப்போது அரசுக்கு இருக்கிறது. அது போக வேண்டும். திறமையான பல டெபுடி கலெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களை வைத்து நிர்வாகத்தை நடத்துங்கள். ஐ.ஏ.எஸ். மோனியாவை கொஞ்சம் தயவு செய்து குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது 'செல்ஃப் சஃபிசியன்சி ஸ்கீம்'. இந்த தன்னிறைவுத் திட்டத்திற்கு மத்திய அரசு நம்முடைய மாநிலத்திற்கு பணம் கொடுத்திருக்கிறது. நீங்கள் பல இலட்சக் கணக்கான ரூபாய்களை இந்தத் திட்டத்திற்காக கொடுக்கிறீர்கள்..

......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த விவாதம் எல்லாம் அன்றே முடிந்து விட்டது. போலீஸ் மானியம் பற்றி சொல்ல வேண்டும் என்றீர்கள். சொல்லிவிட்டீர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை விட 10 நிமிடங்கள் கூடுதலாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். உள்ளாட்சித் துறை மானியம் ஏற்கனவே முடிந்து விட்டது. ஆகவே உங்களுடைய உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: நான் சொல்வது இன்று நடைபெறுகின்ற மானியக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்டதுதான். முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இன்னும் இரண்டு நிமிடங்களில் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

நீங்கள் இந்த தன்னிறைவுத் திட்டத்திற்காக இலட்சக் கணக்கில் பணத்தைக் கொடுக்கிறீர்கள். ஆனால் அதற்குத் தேவையான பணியாளர்களை கொடுக்கவில்லை. எஞ்சினீயர்கள் இல்லை. ஒரு எஞ்சினியர் 4 வட்டங்களை இரண்டு ஊராட்சி ஒன்றியங்களை கண்காணிக்க வேண்டியிருக்கிறது. அதோடு இலட்சக் கணக்கில் கோடிக் கணக்கில் பணம் ஒதுக்கீடு செய்கின்ற இந்தத் திட்டத்தையும் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி இருந்தால் வேலை எப்படி நடக்கும்? அவர்களால் இதற்கான எஸ்டிமேட் தயாரிக்கக் கூட பேப்பர் வாங்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். அரசு அலுவலகத்தில் கோடிக்கணக்கான ரூபாய்க்கு எஸ்டிமேட் போட பேப்பருக்கு எங்கே போவது என்ற நிலை எல்லாம் இருந்தால் இந்த வேலை சரியாக எப்படி நடக்கும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த போதுமான பணியாளர்களை நியமிக்க வேண்டும்; மற்றுமுள்ள வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பெரிய தாலுகாவாக இருப்பதை இரண்டாகப் பிரிக்க வேண்டும். இப்போது 4 தாலுக்காக்கள் இருக்கின்றன. அவைகளை 6 ஆகப் பிரிக்கலாம்.

சம்பாதித்து இருக்கிறார். லாபம் பெற்று இருக்கிறார். கரப்ஷன் செய்து இருக்கிறார் என்கிற வகையில் 12 குற்றச் சாட்டுக்களை தொகுத்து முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்து இருந்தும் இதுவரையில் அதன் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர் தொடர்ந்து அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டு தான் இருக்கிறார். நிம்மதி ாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார். அது குறித்து தலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கட்டுக் கொள்கிறேன்.

பொன்னமரவதிக்கு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் ருவதாக போன ஆண்டே சொன்னார்கள். அதை இந்த ஆண்டாவது முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்கள் ன்று நான் கருதுகிறேன்.

நான் முதலமைச்சர் அவர்களிடத்தில் இந்த நேரத்தில் பணி வோடு கேட்டுக் கொள்வது—தயவு செய்து தினமும் சட்ட மன்றத்திற்கு வாருங்கள். அப்போது தான் எங்களைப் போன்ற வர்கள் உங்களைச் சந்தித்து எங்கள் பகுதியில் மக்கள் கோரிக்கைகளை சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். போன சட்ட மன்றக் கூட்டத்திலேயே சொன்னீர்கள்— நான் தினமும் இங்கே வந்து உட்காருவேன் என்று. நீங்கள் அந்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். (மணியடிக்கப்பட்டது).

இன்றைய தினம் ஆளுநர் அவர்கள் புதிதாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். நான் இனிமேல் முதலமைச்சர் அவர் களிடத்தில் பேசுகிற போது ஒரு ட்ரான்ஸ்லேட்டர் வைத்துக் கொள்ளப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணம்? முதலமைச்சருக்கும் அவருக்கும் ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதா? இதுவரையில் அந்த நிலை இல்லை. இப்போது புதிதாக இந்த நிலை ஏன் வந்தது என்பதை முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநில திட்டக் குழு என்கிற ஒன்றை மாண்புமிகு முதலமைச் சராக கலைஞர் அவர்கள் இருந்த காலத்தில் அவர் தலைமையில் தொடங்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு அந்த திட்டக் குழு செயலற்று இருக்கிறது. அது ஒரு இலாகவாக இருக்கத் தேவை யில்லை என்று அரசு கருதுமானால் தயவு செய்து அதை அரசு பரிசீலிக்க வேண்டும். அது பலன் தரத்தக்க வகையில் உள்ள ஒரு குழு என்று அரசு கருதுமானால் அதை நல்ல முறை யில் அமைத்து அதை மீண்டும் திறமையான முறையில் செய லாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. நா. சுந்தரராஜ்]                [1980 ஜூலை 29

அதைப் போல இரண்டு டிவிஷன்களை அங்கே ஏற்படுத்த
வேண்டும். திருப்பத்தூர், புதுக்கோட்டை வட்டங்களை இணைத்து
ஒரு டிவிஷன் ஆக்கலாம். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே டி.டி.சி. வெறும் ஆலோசனைக் குழுவாக இருக்கிறதே
தவிர காரியம் ஒன்றும் நடக்க வில்லை. எங்கள் மாவட்டத்தில்
குழு தலைவர் — கலெக்டர் — சபாநாயகர் அவர்களைப் போல
மேடை மேல் உட்கார்ந்திருப்பார். மக்கள் பிரதிநிதிகள்
சட்ட மன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்
எல்லாம் இங்கே நாங்கள் உட்கார்ந்திருப்பதைப் போல கீழே
உட்கார்ந்திருப்போம். இந்த வேறுபாடு நீக்கப்பட வேண்டு
மென்று முன்னால் இருந்த மாவட்ட ஆட்சித் தலைவரைக்
கேட்டோம். இன்றைய தினம் இன்னும் டி.டி.சி. கூட்டப்பட
வில்லை. அதனால் மீண்டும் அதைச் சொல்ல வாய்ப்பு ஏற்பட
வில்லை.

தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்ட
சாதாரண ஊழியர்கள் ஒரே ஒரு போஸ்டர் போட்டார்கள்.
இரண்டாண்டு காலம் முடிவு செய்யப்படாத பிரச்சினையைத்
தீர்த்து வைத்த ஆளுநருக்கு நன்றி என்று ஒரு போஸ்டர் போட்
டார்கள். அவர்கள் வேறு எந்த குற்றமும் செய்ய வில்லை.
அந்த போஸ்டர் போட்டதன் காரணமாக புதிதாக மீண்டும்
யாரையும் வேலையில் நியமிக்க வில்லை என்று அறிகிறேன்.
தயவு செய்து அவர்களுக்கு எல்லாம் மீண்டும் வேலை கொடுக்க
வேண்டும்; தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தனை பேர்களுக்கும்
உடனடியாக வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். (மணியடிக்கப்பட்டது). இன்னும் ஒரு நிமிடம்.

கூவம் பக்கிங்காம் கால்வாய்த் திட்டங்களில் வேலை செய்
பவர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்பட வில்லை. ஏற்கனவே
தனியார் துறைகளில் இரண்டு ஆண்டு காலம் பணியாற்றியவர்
களை எல்லாம் நிரந்தரமாக்குவோம் என்று சொன்னார்கள்.
ஆனால் 10 ஆண்டு காலத்திற்கு மேலாக இந்த கூவம் பக்கிங்
ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டத்தில் வேலை செய்கிறவர்கள்
இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை
எல்லாம் நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக இன்றைய தினம் கர்நாடக மாநிலத்தில் விவ
சாயிகள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பல்
வேறு கோரிக்கைகளுக்காக தமிழ்நாட்டிலும் உங்களுடைய
கொள்கையின் காரணமாக அத்தகையப் போராட்டம் வரலாம்
என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். தொடர்ந்து இதைப்
போன்ற நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபடுவீர்களானால்
விவசாயிகள் பிரச்சினை தீர்க்கப்பட வில்லை என்றால் தமிழக
த்திலும் அதைப்



1980 ஜூலை 29]                [திரு. நா. சுந்தரராஜ்]

போன்ற போராட்டம் இங்கும் வரக் கூடும். விவசாயிகள் கடன்களை எல்லாம் ரத்து செய்வோம் என்று சொன்னீர்கள். ஆனால் எல்லா கடன்களையும் ரத்து செய்ய வில்லை. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நீங்கள் முன் வரவில்லை என்பதை நினைவு படுத்தி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: துணைத் தலைவரவர்களே ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது மதுரையில் சிவாஜி ரசிகர் மன்றத்தினர் மீது போட்ட வழக்கு களைப் பற்றிச் சொன்னார்கள். மதுரையில் சிவாஜி ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த குருமூர்த்தி என்பவர் குத்தப்பட்டது பற்றிய புகாரை சொல்கிறார்களா அல்லது வேறு வழக்கு பற்றி சொல்கிறார்களா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே அங்கே சிவாஜி ரசிகர் மன்றத்தார் ஒரு ஊர்வலம் நடத்தினார்கள். போலீசார் மேற்கொண்டு தொடர்ந்து நடந்து செல்லக் கூடாது என்று தடுத்தார்கள். ஆனால் சிவாஜி மன்றத்தார் அதை மீறி போனார்கள். அதனால் 1,000 பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் மீதுள்ள வழக்கைத் தான் நான் சொன்னேன்.

(முற்பகல் 10-40)

திரு. சி. வி. வேலப்பன்: பேரவைத் துணைத் தலைவர வர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது கர்நாடகத்தில் விவசாயிகள் போராட்டம் பற்றிச் சொன்னார்கள். அங்கு எவ்வளவு பேர்களைச் சுட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற விளக்கத்தை அவர்கள் அளிப்பார்களா?

திரு. நா. சுந்தரராஜ்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அங்கே போராட்டம நடைபெறுகின்றது. அது போன்ற போராட்டம் தமிழகத்திலேயும் பரவும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எஸ். பொன்னம்மாள்: மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே இந்தச் சட்ட மன்றத்திலே முன்பு பேசுகின்ற போது ஏதோ திரு. நெடுமாறன் அவர்களுடைய கட்சிக்கு இரண்டு பேர் போதும் என்று சொல்லப்பட்டது. ஆனால் 30 பேர்கள் இருக்கின்ற கட்சியைச் சேர்நத ஒரு உறுப்பினருக்கு தாங்கள் அரை மணி நேரத்தை ஒதுக்கி இருக்கிறீர்களே இது எந்த அடிப்படையிலே ஒதுக்கப்பட்டது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு அவர்களுக்கு சற்று தாராளமாக நேரம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அது போன்று உங்களுக்கும் தாராளமாக நேரம் கொடுக்கிறேன். ஆகவே அதைப் பிரச்சினையாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: [1980 ஜூலை 29
பசுகின்ற போது ஒரு நிமிடம் கேட்டோம். தலைவரவர்களே, நேற்றைக்கு
றுத்தீர்கள்........ அதைக் கொடுக்க

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:
னத்தைப் பெ றுத்த வரையிலே எல்லோருக்கும் ஒரே மாதிரி நேற்றைய
நரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதால் அதன்படி நேரம்
துக்கப்பட்டது. ஆகவே இதைப் பெரிய சர்ச்சையாக ஆக்காமல்
இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். சர்ச்சையாக ஆக்காமல்
இருந்தால் ஓரளவு எலாஸ்டிக்காக இருக்கலாம்.

*டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவரவர்
களே, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தனிலமை
யிடப் பணியாளர்கள் மாவட்ட நிர்வாகம், காவல் துறை,
தியணைப்பு. பொதுப் பணிகள், கட்டிடங்கள் முதலிய 7 மானி
யங்களும் அதற்கான கோரிக்கைகளும் இங்கே வைக்கப்பட்டு
சுமார் 115 கோடி ரூபாய் அதற்கென கோரப்பட்ட அந்த மானி
யங்களின் மீது எதிர்க்கட்சியிலே உள்ள உறுப்பினர்கள் தந்
துள்ள 194 வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து திராவிட முன்
னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரி
விக்க நான் விரும்புகிறேன்.

முதலிலே காவல் துறையைப் பற்றி நாம் கவனிப்போமே
யானால் இன்றைக்கு இந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள்
உட்பட மொத்தம் காவல் துறையிலே இருக்கின்றவர்களின் எண்
ணிக்கை 48,892 பேர் என்று நம்முடைய முதலமைச்சரவர்கள்
கையெழுத்திட்டு இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள ஆய்வு
அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதிலே காவலர்
களுடைய எண்ணிக்கை மாத்திரம் 1979-80 ஆம் ஆண்டு ஆய்வுரை
அறிக்கையின்படி. 37,989 பேர் என்று குறிப்பிடப்
பட்டிருக்கின்றது. நான் இந்த அவையின் கவனத்திற்கு ஒன்றை
கூறிக் கொள்ள விரும்புகிறேன். 1975-76 ஆம் ஆண்டில் வைக்
கப்பட்டுள்ள ஆய்வுரை அறிக்கையின்படி, அதாவது திராவிட
முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் 36,642 பேர்கள்
காவலர்கள் மாத்திரம் இருந்திருக்கிறார்கள். அதாவது ஃபர்ஸ்ட்
கிரேட், செகண்ட் கிரேட் காவலர்கள் மாத்திரம் 36,642 பேர்
இருந்திருக்கிறார்கள். ஆனால் மூன்றாண்டுக் காலத்திற்கு
மேலாக நடைபெறுகின்ற இந்த ஆட்சியில் ஃபர்ஸ்ட், கிரேட்,
செக்கண்ட் கிரேட் என்கிற காவலர்களின் எண்ணிக்கை 1,347
பேர் என்ற அளவிலே தான் உயர்ந்திருக்கின்றது. அதிலே கூட
ஃபர்ஸ்ட் கிரேட் காவலர்கள் 765 பேர் என்ற அளவுக்கும்
கெண்ட் கிரேட் காவலர்கள் 582 பேர் என்ற அளவுக்கும்
உயர்ந்திருப்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப் பட்டிருக்
கிறேன். இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் நம்முடைய
முதலமைச்சரவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் 10,000
காவலர்களைப் புதிதாக நியமிக்கப் போகிறேன் என்று அறிவித்
தார்கள். ஆனால் ஆண்டுகள் 3 உருண்டோடி விட்ட பிறகும்
1,347 பேர்கள் தான் அதிகப்படியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்



1980 ஜூலை 29] [டாக்டர் மு. கருணாநிதி]

கள். அதிலேயும் செகண்ட் கிரேட் காவலர்கள் 582 பேர்கள்
தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அறிவிக்கப்பட்ட 10,000
எங்கே அளிக்கப்பட்ட நியமனங்களின் எண்ணிக்கையான 582
எங்கே என்பதை நான் நினைவுபடுத்துவதில் தவறில்லை.

ஆனால் ஒன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்
தில் இப்படி 10,000 பேர்கள் என்றும், 15,000 பேர்கள்
என்றும் அறிவிக்காமலேயே ஏறத்தாழ 8,000 காவலர்கள் புதி
தாக நியமனம் செய்யப் பெற்றார்கள் என்ற தகவலை இந்த
மாமன்றத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அளிக்கப்பட்டுள்ள ஆய்வு உரையின் 12 ஆம் பக்கத்தில்
நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டு அளிக்கப்
பட்டுள்ள ஆய்வு உரையில் 'குற்றங்களைக் துப்புத் துலக்குதல்'
என்ற தலைப்பில் ''குற்றப் பிரச்சினையைச் சரிய முறையிலும்
திறமையாகவும் சமாளிப்பதற்கு தமிழ்நாடு காவல் துறை
அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. தீர்த்து
வைப்பது மிகக் கடினம் என்று வெளிப்படையாகத் தெரிய
வருகின்ற வழக்குகளும் பதிவு செய்யப்படுகின்றன. 1978 இல்
தண்டனையில் முடிந்த வழக்குகள், விசாரணை முடிவடைந்த
வழக்குகளின் சதவீதம் 47.2 ஆக இருக்க, 1979 ஆம் ஆண்டு
இது 47.6 சதவீதமாக சற்று உயர்ந்து 1980 ஆம் ஆண்டு மார்ச்சு
மாதம் 31 ஆம் நாள் வரை 40 சதவீதமாக உள்ளது.'' என்று
குறிப்பிடப் பெற்றிருக்கிறது.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

வழிப்பறி என்ற தலைப்பில் எடுத்துக் கொண்டால்—

| | | |
|---|---|---|
| 1973 ஆம் ஆண்டு | .. | 13 வழிப்பறிகள் |
| 1974 ஆம் ஆண்டு | .. | 17 வழிப்பறிகள் |
| 1975 ஆம் ஆண்டு | .. | 130 வழிப்பறிகள் |
| 1978 ஆம் ஆண்டு | .. | 192 வழிப்பறிகள் |
| 1979 ஆம் ஆண்டு | .. | 254 வழிப்பறிகள் |

என்கிற அளவிற்கு அந்த வழிப்பறி குற்றங்கள் உயர்ந்திருக்
கின்றன.

கன்னக்கோல் களவு என்ற குற்றத்தினை எடுத்துப் பார்த்தால்

1973 ஆம் ஆண்டில் .. 6,891

1974 ஆம் ஆண்டில் .. 7,717

1975 இல் கழக ஆட்சிக் காலத்தில் 7,387

1979 இல் இந்த ஆட்சிக் காலத்தில். 9,637

என்று உயர்ந்திருப்பதை பார்க்கலாம்.

“பெரிய திருட்டுகள் என்ற தலைப்பில்”

1973-ல் .. 19,463

1974-ல் .. 23,617

1975-ல் .. 22,537

1979-ல் .. 25,406

என்ற அளவிற்கு பெரிய திருட்டுகளின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது.

‘‘சிறிய திருட்டுகள்’’ என்ற தலைப்பில்

1973 ஆம் ஆண்டு .. 634

1974 ஆம் ஆண்டு .. 497

1975 ஆம் ஆண்டு .. 1,510

1978-ல் .. 2,736

1979-ல் .. 2,969

என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது.

குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப் பெற்ற வழக்குகளின் எண்ணிக்கையினுடைய அடிப்படையில் புலனாய்வு செய்த வழக்குகள் எத்தனை சதவீதம் என்று கணக்கிட்டு ஒப்பிட்டு பார்க்கையில்—



திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்

1973 ஆம் ஆண்டு .. 60 சதவீதம் என்றும்

1974 ஆம் ஆண்டு .. 58.1 சதவீதம் என்றும்

1975 ஆம் ஆண்டு .. 58.9 சதவீதம் என்றும்

இருந்த நிலை, இப்பொழுது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்

1978-ல் .. 30.1 சதவீதமாகவும்

1979-ல் . 26 சதவீதமாகவும்

குறைந்துள்ளது.

கடமை அல்லது திறமை குறைந்திருக்கிறது. இது குற்றங்களை குறித்துள்ள விகிதாசாரமல்ல. நான் முன்பே சொன்னபடி, குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப் பெற்ற வழக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், புலனாய்வு செய்த வழக்குகளின் விகிதாசாரம் எத்தனை சதவீதம் என்ற கணக்கை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, கழக ஆட்சிக் காலத்தில் 58.9 சதவீதமாக இருந்த நிலை மாறி 26 சதவீதம் என்கிற அளவிற்கு காவல் துறையினுடைய கடமை உணர்வோ, அல்லது திறமையோ குறைந்துள்ளது என்கிற விகிதாசாரத்தைத் தான் இது காட்டுகிறது.

[முற்பகல் 10.50]

அடுத்து, தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகள், விசாரணை நடைபெறுகிற வழக்குகள் எண்ணிக்கையில், புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகள் எவ்வளவு சதவீதம் என்ற கணக்கை எடுத்துக்கொண்டால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1973 ஆம் ஆண்டு 72.9 சதவீதம் என்றும், 1974-ல் 72.9 சதவீதம் என்றும், 1975-ல் 73. 1சதவீதம் என்றும் இருந்த நிலை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1978 ஆம் ஆண்டில் 47.2 சதவீதம் என்றும் 1979-ல் 47.6 சதவீதம் என்றும் குறைந்திருக்கிறது. இதுவும் காவலர்களுடைய கடமையுணர்ச்சியோ அல்லது திறமையோ குறைந்துள்ள விகிதாசாரத்தைக் காட்டுகிற கணக்கே தவிர வேறு அல்ல என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருட்டுச் சொத்துக்கள் மீட்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று பார்த்தால் விகிதாசார அடிப்படையில் 1973 ஆம் ஆண்டு 49.7 சதவீதம், 1974-ல் 56.7 சதவீதம்,

1975-ல் 56 சதவீதம், 1978-ல் 41.2 சதவீதம், 1979-ல் 41·9 சதவீதம் என்றளவிற்கு திருட்டுச் சொத்துக்கள் மீட்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதை நான் இந்த அவையின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் அடிக்கடி ஆங்கில ஆய்வுரைக்கும் தமிழ் ஆய்வுரைக்கும் இடையே வேறுபாடுகள் வந்து கொண்டேயிருக்கின்றன. அதை நானும் சரி, எதிர்க்கட்சி துணைத்தலைவர் பேராசிரியர் அவர்களும் சரி பலமுறை எடுத்துக்காட்டியும் கூட ஏனோ அதிகாரிகள் தங்களை திருத்திக்கொள்ளத் தயாராகயில்லை. இங்கே கொடுத்துள்ள ஆய்வுரையில் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ளதில் எட்டாவது பக்கத்தில் 1979 ஆம் ஆண்டு சொத்து குறித்துப் பதிவான குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 39,571 என்றுள்ளது. ஆனால் தமிழில் கொடுக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் 38,671 என்றுள்ளது இப்படி ஆயிரம் குற்ற வழக்குகளை ஒரேயடியாக ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாறும்போது விழுங்கிவிடலாமா, இது முறைதானா என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அதிகாரிகளைப் பார்த்து கேட்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆயிரம் வழக்குகள் வித்தியாசம ஆங்கில ஆய்வுரைக்கும் தமிழ் ஆய்வுரைக்கும் இடையே, எப்படி வந்தது என்பதற்கு என்ன காரணம் சொன்னாலும் அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க இயலாது. எனவே இப்படிப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டாக வேண்டும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆய்வுரையில் இருப்பதைச் சொல்கிறேனே தவிர நானாக இங்கே தொகுத்துச் சொல்வதல்ல. ஆய்வுரையில் வைக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்கள் குறித்து நான் எல்லாவற்றையும் இங்கே சொல்வதற்கு நேரம் இல்லாவிட்டாலும் சிலவற்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த 1979-80 ஆம் ஆண்டு மாத்திரம் எவ்வளவு வகுப்புக் கலவரங்கள் அல்லது ஆய்வுரையில் குறிப்பிட்டிருப்பது போல் இனக் கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன என்றால் நீலகிரி மாவட்டத்தில் 5—1—1979 இல் படகர்களுக்கும் படகர்கள் அல்லாத வகுப்புகளைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே நடைபெற்ற போராட்டத்தில் மூன்று படகர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 45 படகர்களும், 22 படகர்கள் அல்லாதவர்களும் படுகாயமுற்றதாக—ஆய்வுரையில் தரப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை என்ற இடத்தில்—இந்த ஆய்வுரையில் உள்ளபடி—முகமதியர்களுக்கும் ஐயப்ப பக்தர்களுக்கும் இடையே பெருத்த கலவரம் மூண்டது:



10—1—1979 அன்று இங்கே பேசிய முஸ்லிம் லீக் உறுப்பினர் அவர்கள், இஸ்லாமியர்கள் என்று இருக்கவேண்டும் அல்லது முஸ்லிம் என்றிருக்கவேண்டும், அப்படியல்லாது முகமதியர்கள் என்று பெயர் மாற்றுவதாக இருந்தால் பல்வேறு குழப்பங்கள் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். அதையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் பல மோதல்கள் ஏற்பட்டன. காவல் துறையினர் நான்கு முறை துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள். தொடர்ந்து நடைபெற்ற போராட்டத்தில் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் தேதி இரவில் கலவரம், தீவைப்பு, கொலை என்றளவிற்கு சென்று முடிந்தது. இரண்டு முஸ்லிம்கள் இறந்தார்கள். காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மேலும் இருவர் இறந்தார்கள். முஸ்லிம் ஒருவர் வீசிய நாட்டு வெடிகுண்டு காரணமாக இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். இதுவும் இந்த அறிக்கையில் காணப்படுகிற கொடுமையான செய்தி.

முகவை மாவட்டத்தில் 1979 ஆம் ஆண்டு அரிஜனங்களுக்கும் தேவர்களுக்கும் இடையே ஜாதிக் கலவரம் ஏற்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மறைந்த தேவர் திருமகனார் பெயரை சூட்டலாம் என்று அரசு கருதியபோது அரிஜனங்கள் டாக்டர் அம்பேத்கார் அல்லது இமானுவேல் பெயரை சூட்ட விரும்பி அதன் காரணமாக இந்த கலவரம் ஏற்பட்டது என்று இந்த ஆய்வுரையில் அரசாங்கச் சார்பில் தரப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் கட்சி துணைத்தலைவர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னது போல், உஞ்சனையில் 1979 ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் தேதி உஞ்சனை கிராமத்தைச் சேர்ந்த அரிஜனங்கள் அல்லாதாருக்கும் அரிஜனங்களுக்கும் இடையே கலவரம் மூண்டு 18 அரிஜனங்களின் வீடுகள் தீக்கிரையாகியது.

ஐந்து அரிசனங்கள் இறந்தார்கள். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். நான் ஆய்வறிக்கையிலே தரப்பட்ட பல விவரங்களை இங்கே விட்டுவிட்டு, 5, 6 சம்பவங்களை மாத்திரம் இங்கே குறிப்பிட்டுக் காட்டினேன்.

இங்கே ஒன்றைப் பார்க்க வேண்டும். உயர் ஜாதிக்காரர்கள், அதற்கடுத்த நிலையிலே உள்ள ஜாதிக்காரர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் என்று பிரிக்கப்படுகின்ற போது அல்லது மதவாதப்படி, புராணீகர் வாதப்படி காலிலே பிறந்தவர்கள், தோளிலே பிறந்தவர்கள், தொடையிலே பிறந்தவர்கள், தலையிலே பிறந்தவர்கள் என்று சொல்லப்பட்டு, பிரிக்கப்பட்டிருக்கின்றனர்.

வர்ணாசிரம தர்மப்படி இன்றைக்கு தலையிலே
பிறந்த உயர்ஜாதிக்காரர்களுக்கும், காலிலே பிறந்தவர்
களுக்கும், சண்டை இல்லை. அதைப்போலவே, தோளிலே
பிறந்தவர்களுக்கும் சண்டை இல்லை. அதைப் போலவே,
தொடையிலே பிறந்த உயர்ஜாதிகாரர்களுக்கும், காலிலே
பிறந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களுக்கும்
சண்டை இல்லை, இவ்வளவு சம்பவங்களை கோர்த்து எடுத்து
பார்ப்போமேயானால், இந்தத் தகராறுகள் எல்லாம் பிற்
படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்
இடையிலேதான் நடைபெற்று வருகின்றன. எனவேதான்,
சமுதாயத்திலே ஒரு பெரிய மறுமலர்ச்சி ஏற்படுத்த, இப்படி
பல்வேறு வருணங்களை, ஜாதிகளைப் பிரித்துவைத்த உயர்ந்த
ஜாதிக்காரர்கள் இன்றைக்கு இதுபோன்ற அமளிகளிலே ஈடுபடா
விட்டாலும், அவர்கள் என்றைக்கோ ஊன்றிய இந்த வகுப்பு
வாத விஷவித்து இன்றைக்கு கடுமையாக வேலை செய்வதன்
காரணத்தினால், ஏற்கெனவே பிற்படுத்தப்பட்ட நிலையிலே
இருக்கின்ற சமுதாய மக்களும், தாழ்த்தப்பட்ட நிலையிலே
இருக்கின்ற மக்களும் தான் தங்கள் கைகளிலே வேல் ஏந்தி,
வாள் ஏந்தி, கத்தி ஏந்தி, கட்டாரி ஏந்தி, வீடுகளை கொளுத்த
வும், ஆட்களைக் கொல்லவும், ஒருவருக்கொருவர் அடித்துக்
கொள்வதன் மூலம் ரத்தம் சிந்தக்கூடிய ஒரு சூழ்நிலை இன்
றைக்குப் பரவலாக இந்திய தரணி முழுவதும், குறிப்பாக,
தமிழ்நாட்டிலே பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகின்றது.
எனவே, பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்க
ளும் மோதிக் கொள்கிறார்கள். இருவரும் பிற்படுத்தப்பட்ட
வர்கள். புராணீகர் கருத்துப்படி, இருவரும் காலிலே பிறந்த
வர்கள். காலிலே பிறந்தவர்கள், ஒரு கால் இன்னொரு காலை
உதைத்துக்கொண்டு, ஒருவருக் கொருவர் சண்டை இடுகின்ற
சங்கடமான, கொடூரமான சூழ்நிலை இருக்கிறது. இதில்
அரசினை மாத்திரம் குற்றஞ்சாட்டிக் கூறிவிடமாட்டேன்.
இதற்கு அரசாங்கத்தை நடத்துகின்றவர்கள் மாத்திரம் அல்லா
மல், தமிழகத்திலே இருக்கின்ற எல்லாக் கட்சியைச் சேர்ந்த
எல்லா உறுப்பினர்களுக்கும், எல்லா கட்சிகளையும் சார்ந்த
தலைவர்களுக்கும் பொறுப்புண்டு; மிகப் பெரிய கடமை இருக்
கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை மீண்டும்
ஏற்றுக்கொண்டு, பொறுப்புக்கு வந்த இந்த இரண்டு மாத
காலத்தில், ஜூன், ஜூலை ஆகிய இந்த இரண்டு மாத காலத்தில்
நடைபெற்ற சம்பவங்களை மாத்திரம் நான் இரண்டு இரண்டு
வரிகளிலே தொகுத்துக் கூற விரும்புகிறேன். ஆய்வறிக்கையிலே
இடம் பெறாத காரணத்தினால், அரசுக்கும் பயன்தரும்,
மக்களுடைய கவனத்திற்கும் வரும். இனிமேலாவது காவல்
துறையினர் நேரம் கண்காணிப்பாக, விழிப்புணர்ச்சியோடு
செயல்படுவதற்கு இது பயன்படும் என்ற நல்ல நோக்கத்
தோடு, இவைகளை நான் இங்கே தொகுத்துக் கூற விரும்பு
கிறேன்.





நம்முடைய அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்கிறார்கள்.
பொதுக் கூட்டங்களிலே பேசுகிறார்கள். சில நேரங்களில் நம்
முடைய அரசாங்க நிகழ்ச்சிகளிலே கூட அரசியல் பேச வேண்டிய
அவசியம் அவர்களுக்கு ஏற்படுகிறது. நான் அவைகளுக்குள் எல்
லாம் ஆழமாகச் செல்ல விரும்பவில்லை. ஏனென்றால் சில
கடமைகளை உணர்த்தவும், பொறுப்புகளை உணர்த்தவும் அனை
வரும் சேர்ந்து சமுதாய மாற்றத்திற்கு, இன்றைக்கு சமுதாயத்
திலே இருக்கிற கேடுபாடுகளை களையவும் உறுதி எடுத்து பணி
யாற்றுகின்ற இந்த அவையில் இந்த முதல் கூட்டத் தொடரி
லேயே நான் அவ்வளவு கடுமையான குற்றச்சாட்டுக்களை இங்கே
வைக்க விரும்பவில்லை. ஆனால் எதையும் விட்டுவிடக்கூடாது
என்பதற்காக பார்வைக்கு வைக்க விரும்புகிறேன்.

[முற்பகல் 11.00]

திருவல்லிக்கேணி கோஷா மருத்துவ மனையில் இலஞ்சியம்
என்பவருடைய பெண் குழந்தை திருடப்பட்ட சம்பவம்.
உத்திரமேரூர் வேதப்பாளையம் கிராமத்தில் பியன் என்பவர்
கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி. சென்னை பட்டினப்
பாக்கத்தில் இரு கோஷ்டிகளுக்கிடையே பயங்கர மோதல்,
குட்டியான் என்பவர் கொலை செய்யப்பட்ட சம்பவம்.
திருவள்ளூரில் ராதாபாய் என்ற பெண் கொலை. சென்னை
ராயப்பேட்டையில் ஜகந்நாதராஜா என்பவரை நள்ளிரவில்
அடித்து வீழ்த்தி அவர் மனைவியைத் தூக்கிப்போய் கத்தி
முனையில் கற்பழிப்பு. சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில்
பாண்டி பஜார் சரோஜாவின் குழந்தை திருட்டு. விழுப்புரம்
சாலமேடு கிராமத்தைச் சேர்ந்த ராஜவல்லி என்ற பெண்
கொலை. சென்னை புரசவாக்கத்தில் பஸ்ஸை வழிமறித்து
டேவிட், நாமின் என்ற இருவர் கொலை. அரூரில் ஆசிரியை
செல்வி கத்தியால் குத்திக் கொலை. போலீஸ்காரர் கிருஷ்
ணய்யா மனைவி லட்சுமி சென்னையில் படுகொலை. பெரியார்
மாவட்டம் வீரப்பன் சத்திரத்தில் முத்துசாமி கவுண்டர்

னைவி பாப்பம்மாள் மூன்று குழந்தைகளோடு உயிரோடு தீ வைக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி. சென்னை வளச்சேரியில் ஈஸ்வரன் என்கிற பேராசிரியர் வீட்டில் ,000 ரூபாய் நகை திருட்டு. பண்ருட்டியில் நகைக் கடையில் ன்னக்கோல் வைத்து 45,000 ரூபாய் நகை திருட்டு. திருச்சி சம்பட்டு அருகில் திருவளாச்சிப்பட்டி விஜயலட்சுமி என்ற பெண் காலை. சிவகாசியில் ராஜகுரு என்ற காவலர் குத்திக் காலை. கிழக்குத் தாம்பரம் புத்தர் தெருவைச் சேர்ந்த துமாலி என்ற வாலியர் கொலை. திருச்சி மாவட்டம் வப்பத்தட்டையில் இரண்டு சிறுவர்கள் நரபலி. சுங்க இலாகா டையில் ரூபாய் அறுபதாயிரம் மதிப்புள்ள வெளிநாட்டுச் மான் திருட்டு. திருவள்ளூர் டெபுடி தாசில்தார் ந்தரம் அவர்கள் மகன் அடித்துக் கொலை. சென்னை கொரட்டூர் 15-வது தெருவில் குடிதண்ணீர் கேட்க உள்ளே குந்து பெண்களுக்குக் கத்திக் குத்து, நகை கொள்ளை. பொள் ளாச்சி அருகே புளியம்பட்டியில் மாணிக்கம்மாள் என்ற பெண்ணை அழைத்துச் சென்று கற்பழிப்பு. சின்ன காஞ்சி புரம் சேக்குப்பேட்டை சாலியர் தெருவில் கத்தி முனையில் பெண்களிடம நகை கொள்ளை. சென்னை மாநகராட்சி ஊழியர் மனைவி அச்சம்மாள் கொலை. சென்னை சிந்தாதிரிப் பேட்டை கூவத்தில் சாக்கு மூட்டையில் பிணம். சென்னை குன்றத்தூரில் இப்ராகிம் என்பவர் வீட்டில் 25,000 ரூபாய் நகை திருட்டு. சென்னை தியாகராய நகர் ஓட்டலில் அறை யிலே தங்கியிருந்த காதலர்களிலே காதலரை வெளியே அழைத்து விரட்டிவிட்டு தனியாக இருந்த பெண்ணைக் கற்பழித்த மூர்க் கத்தனம். சென்னை திருவல்லிக்கேணி அயோத்தியாக்குப்பத் தில் வசிக்கும் குமரன் என்பவர் மகன்கள் இருவர் கடத்தப்பட்ட நிகழ்ச்சி. சென்னை அசோகா நகரில் சாந்தி என்ற பெண் கடத்தப்பட்டு கழுத்தில் கிடந்த தாலியை அறுத்துக் கொண்டு ஓட்டம். விரட்டிச் சென்ற கணவனுக்கு கத்திக்குத்து. துறைமுகத்தில் இரண்டு லட்சம் ரூபாய் சாமான் திருட்டு. சென்னையில் ஆட்டோரிக்ஷா டிரைவர்களிடம் கத்தி முனையில் வழிப்பறி. சென்னை ராயப்பேட்டையில் அதிகாரி மகள் சண்முகப்பிரியா கொலை. சென்னை தியாகராயநகர் சட்ட மன்ற உறுப்பினர் சௌந்திரராஜன் இல்லத்திலேயே அவருடைய மகளிடமே திருட்டு. சென்னை புரசைவாக்கத்தில் தாய் பூனம் மகள் அஞ்சு கொலை. நீதிபதி கோகுலகிருஷ்ணன் வீட்டிலேயே திருட்டு. ஒரு நீக்ரோ 12 வயது ஆங்கிலோ இந்தியப் பெண்ணைக் கற்பழித்ததாகச் செய்தி. நேற்றுக் கூட தண்டையார்பேட்டையில் ஒரு கூலித் தொழிலாளி கத்தி யால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்ற பத்திரிகைச் செய்தி இன்று காலையில்.

ஆக 60 நாட்களில் 51-இப்படிப்பட்ட கேட்கச் சகிக்காத படிக்கவொண்ணாத செய்திகள் பத்திரிகைகளில் வந்திருக்கின் றன என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் காரணம்—இரண்டு மாத காலத்தில் இவ்வளவு நிகழ்ச்சிகள் தமிழகத்தில்



குறிப்பாக நம்முடைய தலைநகரிலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றிருக்கின்றன என்பது யாரும் மகிழ்ச்சி யடையக்கூடிய வகையாகாது அல்ல.

பரிதாபகரமான ஒரு சம்பவத்தை முதலமைச்சர் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். ஏற்கெனவே அவர் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டு என்ன காரணத்தாலோ அது அலட்சியப்படுத்தப்பட்ட சம்பவம். மதுரை மாவட்டம் பெரிய குளம் தாலுகா கண்டமனூரில் ஓய்வு பெற்ற வருவாய் ஆய்வாளர் -ரெவின்யூ இன்ஸ்பெக்டர் உத்தமபாளையம் கம்பம் நகரில் குடியிருந்த வி. முத்துவேல் என்ற பெயருடையார் கடந்த இரண்டரை ஆண்டு காலமாக என்ன ஆனார் என்றே தெரிய வில்லை. காணாமல் போயிருக்கிறார். அவருக்கு மொத்தம் ஒன்பது குழந்தைகள். நான் மதுரை சென்றபோது அவருடைய மனைவியார் குழந்தைகளோடு வந்து என்னைச் சந்தித்து கண்ணீர் விட்டுக் கதறினார். 27—4—1978 இரண்டாண்டு களுக்கு முன்பு அனுமந்தப்பட்டி பிரசிடெண்ட் நல்லுசாமி வீட்டுக்குச் செல்லுவதாகவும் அவர் தன்னை வரும்படி அழைத் திருப்பதாகவும் மனைவியிடம் சொல்லிச் சென்றவர் திரும்பவே இல்லை. இவ்வாறு நாலைந்து நாட்கள் திரும்பாத நிலையில் மகன் நல்லுசாமி வீட்டுக்குச் சென்று தகப்பனாரைப் பற்றி தகவலைக் கேட்டபோது அவர் ஆவேசமாகப் பேசி அவரைத் துரத்தியடித்து விட்டாராம்.

மதுரை மாவட்டத்திற்கு முதலமைச்சர் ஒரு விழாவுக்குச் சென்றபோது அந்த அம்மையார் முதலமைச்சரைச் சந்திக்க வந்தார்கள் என்றும் சந்திப்பதற்கான ஏற்பாட்டை முதலமைச் சரின் செயலாளர் செய்து கொடுத்தார் என்றும் ஆனால் சந்திக்க முடியாத அளவுக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் குறுக்கிட்டு முதலமைச்சர் அந்த அம்மையாரைச் சந்தித்து குறைகளைக் கேட்க முடியாத அளவுக்குச் செய்து விட்டார்கள் என்றும் எனக்குத் தகவல்கள் கிடைத்தன.

அதற்குப் பிறகு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற கம்பம் நடராஜன் அவர்கள் போலீசாருக்கு அதைப்பற்றிப் புகார் செய்தார்கள். ஆனால் வழக்குகளைக் கண்டுபிடிப்ப திலே மிகவும் திறமைபடைத்த தமிழகத்துப் போலீசார் 31—8—1979 ஆம் தேதியன்று கம்பம் நடராஜனுக்கு எழுதிய பதிலில் அந்த வழக்கு கண்டுபிடிக்கப்பட முடியாத ஒன்றாக ஆகிவிட்டது என்று தெரிவித்துவிட்டார்கள். இட போது ஒன்பது குழந்தைகளையுடைய அந்தத் தாயார் கண்ணீ ரும் கம்பலையுமாக நிற்கிறார்கள். அவர்களுடைய வா வுக்கு எந்தவிதமான வகையும் செய்யப்படவில்லை. அவ காணாமல் போய்விட்டாரா அல்லது கொலை செய்யப்பட் மறைக்கப்பட்டதா?

திருவையாற்றிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் வெங்கடாசலத்தினுடைய நிலைமை தான் அவருக்கும் ஏற்பட்டதா? எப்படி வெங்கடாசலத்தினுடைய நிலை என்ன என்பது இன்னமும் தெரிவிக்கப்பட முடியாமல் இருக்கிறதோ அதைப்போலவேதான் அந்த ஓய்வுபெற்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நிலையும் இருக்கிறது என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்கு நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் கையெழுத்திட்டு வழங்கியுள்ள ஆய்வு அறிக்கையில் 67 ஆம் பக்கத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "4—1—1980 ஆம் நாளன்று தி.மு.க. ஊர்வலத்தின் கடைசிப் பகுதியினர் சாலையைக் கடந்து செல்வதற்காக (மதுரை தெற்கு) மதுரையில் சாலைச் சந்திப்பு ஒன்றில் அ.இ.அ.தி.மு.க. தொண்டர்களைக் காவல் துறையினர் தடுத்து நிறுத்தினார்கள்." அதாவது தி.மு.க. ஊர்வலம் சாலையைக் கடந்து செல்வதற்கு அ.இ.அ.தி.மு.க. தொண்டர்களைக் காவல் துறையினர் தடுத்து நிறுத்தினர். "அவ்வாறு செய்கையில் குழப்பம் ஏற்பட்டது. சில சமூக விரோதிகள் இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொண்டு தி.மு.க. கழக ஊர்வலத்தினர் மீது கற்களை வீசினர்." சமூகவிரோதிகள் யார் என்பதைத் தான் கண்டுபிடித்தாக வேண்டும். தடுத்து நிறுத்தப்பட்ட ஊர்வலம் அ.இ.அ.தி.மு.க ஊர்வலம். அப்படித் தடுத்து நிறுத்தியபோது குழப்பம் ஏற்பட்டது என்று முதலமைச்சர் கையெழுத்திட்ட ஆய்வு அறிக்கை குறிப்பிடுகிறது. "அந்தக் குழப்பம் ஏற்பட்ட போது சில சமூக விரோதிகள் இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொண்டு தி.மு.க. கழக ஊர்வலத்தினர் மீது கற்களை வீசினர். தி.மு.க.வினரும் எதிர்த்துக் கற்களை வீசினர். காவல் துறையினர் குறுக்கிட்டு ஒழுங்கை ஏற்படுத்தினர். இக்கலகத்தில் காங்கிரஸ் (இ), தி.மு.க. தேர்தல் அலுவலகங்களும் அலங்கார வளைவுகளும் கொளுத்தப்பட்டன. சில கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. முறையான எச்சரிக்கை விடுத்த பின்னர் 15 கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. ஆனால் அக்கூட்டத்தினர் மிகவும் வன்முறையில் ஈடுபட்டு காவலர்களை அச்சுறுத்தும் வகையில் தொல்லை ஏற்படுத்தினர். அதன் பேரில் காவலர்கள் தடியடி செய்தனர். இதுவும் பலனளிக்காமல் போகவே 5 சுற்று ஊனமக்காயம் ஏற்படுத்தும் தோட்டாக்களைக் கொண்டு சுட்டனர். இதில் ஊர்த்ராஜ் (அ.இ.அ.தி.மு.க.), குட்டி என்னும் ஜெயப்பிரகாஷ் (இ.க.க.) ஆகியோர் இறந்தனர். இவ்வனைத்துச் சம்பவங்களிலும் 35 காவலர்களும் கூட்டத்தினை சேர்ந்த 38 பேரும் காயமடைந்தனர்." என்று இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற முதலமைச்சர் கையெழுத்திட்டு ஏற்றப்பட்டுள்ள இந்த ஆய்வு அறிக்கையில் குறிப்பேட்டிலே காணப்படுகிறது. ஆனால் அந்தச் சமூக விரோதிகள் யார் என்பதைத்தான் நாம் அறிந்துகொள்ள வேண்டி



யவர்களாக இருக்கிறோம். அதைப்பற்றி அப்போது மதுரையிலே இருந்த டி.ஐ.ஜி. ஒரு பேட்டியிலே கூறியிருக்கிறார். அதெல்லாம் பத்திரிக்கைகளிலே வந்திருக்கிறது. டி.ஐ.ஜி. ராஜசேகரன் நாயர் என்பவர் அளித்த பேட்டியில் கூறியது:

அன்று இரண்டு அணிகள், அதாவது தி.மு.க., காங்கிரஸ் (இ) அணியும் அ.இ.அ.தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அணியும் ஊர்வலங்கள் நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. முதல் அணி, அதாவது தி.மு.க., காங்கிரஸ் (இ) அணி காலையிலேயும், மற்றொரு அணி பிற்பகலிலேயும் ஊர்வலம் நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. இரண்டாவது அணியினர், அதாவது அ.இ.அ.தி.மு.க. அணியினர் தங்களுக்கு ஊர்வலம் துவக்க அனுமதி அளிக்கப்பட்ட நேரத்திற்கு நெடுநேரத்திற்கு முன்பே ஊர்வலத்தைத் துவங்கினார்கள். அது மாத்திரமல்லாமல் எந்த இடத்திலே ஊர்வலம் தொடங்கவேண்டுமென்று அனுமதி அளிக்கப்பட்டதோ அந்த இடத்திலே துவங்காமல் வேறு இடத்திலிருந்து புறப்பட்டனர். முதலாவது அணியினர், அதாவது தி.மு.க., காங்கிரஸ் (இ) அணியினர் தங்களுக்கு அளிக்கப்பட்ட அனுமதியின்படி ஊர்வலத்தை நடத்தினார்கள். இரண்டாவது அணியினர், அதாவது அ.இ.அ.தி.மு.க., அணியினர் அவர்களுடைய செயல், வழங்கப்பட்ட அனுமதிக்கு மாறுபட்டு இருப்பதைச் சுட்டிக்காட்டி கலைந்துசெல்லுமாறு போலீசார் கூறியபோது ஊர்வலத்தை நடத்திய அந்த தலைவர்கள் அதற்கு இணங்க மறுத்துவிட்டார்கள். மீண்டும் மீண்டும் காவல் துறையினர் விடுத்த வேண்டுகோள் பயன் அற்றுப் போய்விட்டன. ஊர்வலத்தினர் காவலரையும் சப் இன்ஸ்பெக்டரையும் தாக்கினார்கள். தாக்குதலுக்கு உள்ளான காவல் துறையினர் நிலைமையைச் சமாளிக்கவும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும் தடியடி நடத்தினர். அப்போதும் தாக்குதலைத் தொடர்ந்து ஊர்வலம் கலைந்து செல்லாமல் காவல் துறையினர் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்தனர். அதன் பிறகு துப்பாக்கிப்பிரயோகம் செய்யவே செய்ததிலே இருவர் இறந்தனர் என்று டி.ஐ.ஜி. பேட்டியிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

[முற்பகல் 11.10]

நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இந்தச் சம்பவம் நடைபெற்றது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபொழுது நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் நேரம். அந்த நேரத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் போலீஸ் டி.ஐ.ஜி., தந்திருக்கின்ற அறிக்கையையும், நம்முடைய முதலமைச்சரவர்கள் கையெழுத்திட்டு இங்கு அளிக்கப்பட்டுள்ள ஆய்வுரையையும் காணுகின்ற நேரத்தில் அவர் தனியாகச் சமுதாய விரோதிகள் என்று ஒரு சாரரைப் பிரித்து

அவர்கள்தான் இந்தக் கலவரங்களில் ஈடுபட்டார்கள் என்று குறிப்பிட்டிருப்பது சற்று உண்மைக்கு மாறாக தகவலைத் தருகின்ற ஒன்றாகும் என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

அதே ஆய்வுரை அறிக்கையிலே 69 ஆம் பக்கம் நம்முடைய நண்பர் திரு. சுந்தரராஜன் அவர்கள்கூட இங்கே படித்துக்காட்டினார்கள். இதைத்தான் நான் கொஞ்சம் விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். "1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 2 ஆம் நாளன்று, அ.தி.மு.க.வும் அதனைச் சார்ந்த கட்சிகளும் தமிழ்நாடு சட்டப் பேரவை கலைக்கப்பட்டு அ.தி.மு.க. அரசு நீக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சென்னை அண்ணா சாலையில் காமராஜ் சிலையிலிருந்து சீரணி அரங்கத்திற்கு ஊர்வலமாகச் சென்றனர். ஊர்வலத்தின்போது ஊர்வலத்தின் கட்சி தொண்டர்களின் உணர்ச்சிகளை சில சமூக விரோதிகள் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, வன்முறையில் ஈடுபட்டு தனியார் பொதுச் சொத்துக்களையும் காவலர்களையும் தாக்கினர். வன்முறைக் கூட்டத்தினர் டி2 காவல் நிலையத்தையும் தாக்கினர். வன்முறைக் கூட்டம் டி2 காவல் நிலையத்தில் புகுந்து மேசை நாற்காலிகள் முதலியனவற்றிற்கு சேதம் ஏற்படுத்தி மின் விளக்குகளை உடைத்து காவலர்களைத் தாக்கி சென்ட்ரி காவலரிடமிருந்து துப்பாக்கியைக் கைப்பற்ற முயற்சி செய்ததால் சென்ட்ரி காவலர் 1654 ராமர் தற்காப்புக்காகவும் ஆபத்தான நிலையில் இருந்த பிற காவலர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவும் அரசுச் சொத்துக்களுக்கு மேற்கொண்டும் சேதம் ஏற்படாமல் தடுப்பதற்காகவும் தனது 410 துப்பாக்கியைக் கொண்டு ஐந்து முறை வானத்தை நோக்கிச் சுட்டார். 37 காவலர்களும் 3 தீயணைப்புத் துறை பணியாளர்களும் இச்சம்பவத்தில் காயமுற்றனர்.'' என்று முதலமைச்சருடைய ஆய்வு அறிக்கை இங்கே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. இங்கேயும் சமூக விரோதிகள் வருகிறார்கள். இங்கே ஆட்சி கலைக்கப்பட்டதை எதிர்த்து அனைத்துக் கட்சியினரும் ஊர்வலம் நடத்துகிறார்கள். நம்முடைய நண்பர் சுந்தரராஜன் அவர்கள் சொன்னார்கள் யாரோ ஒருவருடைய சிலையை எதிர்க்கட்சித் தலைவருடைய சிலையை உடைப்பதற்காக முயன்றார்கள் என்று. அந்த நல்ல காரியம் என்னுடைய அருமை நண்பர்களால் விரைவிலே நடைபெறுமானால் உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைவேன். அதற்காக நான் வருத்தப்பட மாட்டேன். ஆனால், நான் இங்கே குறிப்பிட விரும்புவது சமுதாய விரோதிகள் காவல் நிலையத்தைச் சூழ்ந்தார்கள் சமுதாய விரோதிகள் காவலரிடமிருந்து துப்பாக்கியைப் பிடுங்க முயன்றார்கள் என்றெல்லாம் இங்கே நம்முடைய முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்.



நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு ஏடுகளிலே வந்த செய்தியின்படி கிட்டத்தட்ட 235 பேர்—பெரும்பாலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்— அவர்கள்மீது போடப்பட்டிருந்த வழக்கு—இந்தச் சம்பவத்தையொட்டி போடப்பட்டிருந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சமூக விரோதிகள் என்று நீங்கள் திட்டவட்டமாக இந்த ஆய்வுரையிலே கூறியிருக்கின்றீர்களே அப்படியானால் சமூக விரோதிகள் மீது போடப்பட்ட வழக்குகளை நீங்கள் ஏன் வாபஸ் வாங்கினீர்கள்? அவர்கள்தான் தி.மு.க.வும் அல்ல; அ.தி.மு.க. வும் அல்ல சமூக விரோதிகள் அப்படியானால் அந்த 235 பேர் மீது போடப்பட்ட சமூக விரோதிகள் மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறுவதற்கான காரணம் என்னவென்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஆக, சமூக விரோதிகள் என்பதை, ஆளுங்கட்சிக்காரர்கள் என்று சொல்லக் கூச்சப்பட்டு, நீங்கள், சமூக விரோதிகள் என்று சொல்லி இருப்பது—இந்த அறிக்கையின் மூலம் நீங்களே தந்திருக்கின்ற உண்மையான தகவலே தவிர வேறல்ல என்பதையும் சுட்டிக்காட்டுவது என்னுடைய பெரும் கடமையாகும்.

ஆய்வுரையில்—நான் ஆய்வுரையை வைத்துக்கொண்டே பெரும்பாலும் இன்றைக்குப் பேசுகிறேன்—ஆய்வுரையில் முதலமைச்சர் கையெழுத்திட்டு வைக்கப்பட்டுள்ள ஆய்வுரையில் 44-45-ஆம் பக்கங்கள் மிகவும் முக்கியமான பக்கங்கள் ஆகும். 'திருச்சி சிம்கோ மீட்டர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் நாள் முதல் 1979 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18 ஆம் நாள் வரை செய்த வேலை நிறுத்தத்தின்போதும் சேலம் பள்ளிப்பாளையம் சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ஆம் நாள் முதல் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் நாள் வரை வேலை நிறுத்தத்தின் போதும், சட்டம் ஒழுங்கை குறைக்கும் வண்ணம் அவர்கள் நடந்து கொண்டனர்.''

யார்? தொழிலாளிகள். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளிகள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தொழிற்சங்க முன்னேற்ற சங்கப் பேரவை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தொழிற்சங்கப் பிரிவு ஆகிய இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களெல்லாம் சட்டம் ஒழுங்கைக் குறைக்கும் வண்ணம் நடந்து கொண்டார்கள் அந்த இரு நிறுவனங்களிலும் உண்மை ஊழியர்கள், தூக்கப்பட்டார்கள். இந்த ஊழியர்களால்—வேலை

[டாக்டர் மு. கருணாநிதி] [1980 ஜூலை 29

நிறுத்தப் பட்டவர்களால் அந்த நிறுவனத்திலே உள்ள உண்மை ஊழியர்கள் தாக்கப்பட்டார்கள். தருகின்ற ஆய்வுரை இது. நம்முடைய முதலமைச்சர் பேசுகின்ற ஆட்சி என்று தொழிலாளர்களுக்காக பரிந்து சார்பாக வைக்கப்பட்டுள்ள சொல்லப்படுகின்ற இந்த ஆட்சியின் கள், விசுவாச ஊழியர்கள் ஆய்வுரையில் உண்மையான ஊழியர் சொல்லவே மேலாளர் கம்யூனிஸ்டுகளுடைய மொழியிலே பதற்காக வருத்தம் தெரிவிக்கப்பட்டு கருங்காலிகள் தாக்கப்பட்டார்கள் என் செய்துக்கள்மீது கல்லெறியப்பட்டது. 'அந்தொழிற்சாலைகளின் சம்பவங்களின்போதும் காவல் துறையினர் இந்த......எல்லாச் எடுத்தனர்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். உரிய நடவடிக்கை ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கேதான் நான் வங்களின் போதும் காவல் துறையினர் 'இந்த எல்லாச் சம்ப தனர்.' உரிய நடவடிக்கை எடுத்



1980 ஜூலை 29] [டாக்டர் மு. கருணாநிதி]

காவல் துறையினர் கிளர்ச்சி பற்றியும் விளக்கி இந்த ஆய் வுரையிலே கூறப்பட்டிருக்கிறது. இங்கே பல உறுப்பினர்கள் காவல் துறையினர் கிளர்ச்சி பற்றி பேசிவிட்டதால் நான் அதைப் பற்றி விரிவாகப் பேச விரும்பவில்லை. காவல் துறையினருடைய கிளர்ச்சியைப் பற்றி இந்த ஆய்வுரை என்ன கூறுகிறது? ஆனால் முதலமைச்சருடைய தேர்தல் நேரத்து பேச்சுகள் எவ்வாறு இருந்தன என்பதை மறந்து விடக் கூடாது. பக்கம் 56—57-ல் காவலர் கிளர்ச்சி பற்றி முதலமைச்சர் குறிப்பிடுகிறார். அதில் 'திரு. குயிலார்தாஸ் திருத்தணையோடு ராமின் பேரில் வேலூர் மத்திய சிறையிலிருந்து 1979-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டார். அப்படி விடுதலை செய்யப் பட்டவர் போராட்டத்தைக் கைவிடமாறு 25—10—1979-ல் வேண்டுகோள் விடுத்தார்.' அது மட்டுமல்ல 'தனித்தனிய க 3 சங்கங்களை அமைப்பதற்காக அரசு வெளியிட்ட வழிகாட்டிக் குறிப்புகளை அவர் ஆதரிப்பதாகவும் கூறினார். தனித்தனிய க 3 சங்கங்கள் இருப்பதைக் குயிலார்தாஸ் என்கிற அந்தப்போராட் டக் குழுவினுடைய தலைவர்களிலே ஒருவர் ஆதரிப்பதாக அறி வித்தார் என்றும் ஆய்வுரை கூறுகிறது. மதுரையிலேயே நடை பெற்ற இந்தக் கிளர்ச்சியில் 70 சதவிகிதத்துக்கும் மேற்பட்ட காவலர்களும் அதிகாரிகளும் ஆதரவளிக்கவில்லை கிளர்ச்சிக்கு விரோதமாக இருந்தார்கள் என்றும் இந்தக் குறிப்பு கூறு கிறது.

அது மட்டுமல்ல கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களே! தோழர்களே தருகின்ற தத்துவத்திற்கு எதிராக, ஏன் தொழி லாளர்களுக்காக உண்மையிலே பாடுபடுகின்றவர்கள் தருகின்ற தத்துவத்திற்கு எதிராக, இந்த ஆய்வுரையிலே தரப்பட்டிருக்கிறது 'கிளர்ச்சியில் கலந்து கொள்ளாமல் தங்கள் பணியைச் செய்து வந்த உண்மை ஊழியர்களான காவலர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 50 ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.' அத்துடன் 'அட் வான்ஸ் இன்கிரிமெண்டும் அவர்களுக்குத் தரப்பட்டது' என்னும் இந்த ஆய்வுரையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆக இந்தக் கிளர்ச்சி எப்படிப்பட்ட முறையிலே முடிந்து வைக்கப்பட்டது என்பதை ஆய்வுரையினுடைய கடைசி பக்கம் 94 ஆம் பக்கத்தில் குறிப்பிடுகிறார்கள். 'பதவி வாரியாகச் சங்கம் இருக்க வேண்டு மா என்பதே கிளர்ச்சிக்கான முக்கிய காரணமாகும். காவல் துறையிலுள்ள அதிகாரிகளும் பெரும்பான்மையானவர்களும் தங் கள் பதவிக்குரிய பாரம்பரியத்தைக் கட்டிக் காத்து நற்பணி ஆற் றியதால் இக்கிளர்ச்சி சிதறிய நீர்த்துளிகள் போல பிசுபிசுத்துப் போய் விட்டது' என்று முதலமைச்சர் கடைசி பாராவை முடித் திருக்கிறார்.

[முற்பகல் 11.20]

கிளர்ச்சி சிதறிய நீர்த் துளிபோல் பிசுபிசுத்துவிட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். யார் எழுதினாரோ தெரியவில்லை. சிறு

ர்த் துளிகள் காய்ந்து போகுமே தவிர சிதறாது. சிதறிய நீர்த்துளிகள் பிசுபிசுத்துப் போகாது. ஆனால் எழுகி ருக்கிறார்கள். பரவாயில்லை. சிதறிய நீர்த் துளிகள் போய் பிசுபிசுத்து விட்டது இந்த கிளர்ச்சி என்று முதலமைச்சர் தன்னுடைய முடிவுரையிலே இந்த அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் அவர் அளித்த தேர்தல் வாக்குறுதி என்ன? இப்படிப் பிசுபிசுத்துப் போன கிளர்ச்சி; 70 சதவிகிதம் பேர் எதிர்த்து நின்ற கிளர்ச்சி; 30 சதவிகிதம் பேர்தான் நடத்திய கிளர்ச்சி; நைனார்தாசே கூட 3 சங்கங்கள் இருக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்ட பிறகு அணைந்து போன கிளர்ச்சி. இப்படிப்பட்ட கிளர்ச்சியைப் பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றத் தேர்தல் நேரத்திலே அளித்த வாக்குறுதி "காவல் துறையினரின் நலன்களையும் நியாயமான உரிமைகளையும் காண்பதற்காக மிகப் பெரும்பாலோர் விருப்பப்படி காவலர் முதல் ஆய்வாளர் வரை உறுப்பினர்களைக் கொண்ட சங்கம் அமைக்க காவலர் பிரிவுக்கு அனுமதி வழங்கப்படும்". அவர்களுடைய கோரிக்கையே இதுதான். ஆய்வாளர் முதல் காவலர் வரையில் உள்ள அந்தப் பிரிவு இணைக்கப்பட்டு தனி சங்க அங்கீகாரம் அதற்கு வேண்டும் என்பதுதான் அவர்கள் கோரிக்கை. இதுதான் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அது தேவையில்லை என்று நைனார்தாஸ் அறிவித்துவிட்டதாக அவர் பேரால் ஒரு அறிக்கை வெளிவந்தது. இந்தக் கிளர்ச்சி பிசுபிசுத்து விட்டது என்றும் சொல்லப்பட்டாகிவிட்டது. ஆனால் தேர்தல் காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற தேர்தல் நேரத்திலே அவர் அளித்த வாக்குறுதி போலீசார் அந்த கிளர்ச்சியை நடத்திய தலைவர்களை சந்தித்த போதும் பொதுக் கூட்டங்களில் பேசிய போதும் மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார். காவலர் முதல் ஆய்வாளர் வரையில் உறுப்பினர்களாகக் கொண்டு சங்கம் அமைக்க காவலர் பிரிவுக்கு அனுமதி வழங்கப்படும் என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

அது மாத்திரம் அல்ல. டிஸ்மிஸ் செய்யப்பட்டிருந்த 800-க்கு மேற்பட்ட காவல் துறை நண்பர்கள் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர்கள் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆனால் அந்த வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட அனுப்பப்பட்டுள்ள அந்த ஜி.ஓ. என்ன குறிப்பிடுகிறது என்றால்

"Their absence from duty on account of the disciplinary action taken against them shall be treated as extraordinary leave (leave without pay and allowance) but it will not constitute a break in service."



அதாவது சர்வீஸ் பிரேக் இருக்காது என்று சொல்லிவிட்டு அதே நேரத்திலே அவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்ட அந்த நாட்களை லீவு நாட்களாகக் கருதப்படும் என்று கூறி விட்டு அந்த நாட்களை "Without pay and allowances" அதாவது சம்பளமும் அலவன்சும் இல்லாத அளவிலேதான் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள் என்று கூறி அவர்கள் மீதுஉள்ள தண்டனை தளர்த்தப் படாத சூழ்நிலையிலே அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு மாறாக பழி வாங்கப்படும் நிலை தொடருகிறது.

காவல் துறை கிளர்ச்சியிலே ஈடுபட்ட ஒரு ஆய்வாளர்—இன்ஸ்பெக்டர்-அவருடைய பரிதாபகரமான சூழ்நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சுந்தரம் என்கின்ற ஒரு இன்ஸ்பெக்டர் அவர் எம்.ஏ. படித்தவர். அவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்தக் காவல் துறை நடத்திய கிளர்ச்சியிலே தலைமை வகித்து அந்தக் கிளர்ச்சியை நடத்தினார். அவர் கைது செய்யப்பட்டார். பிறகு ஜாமினிலே வெளிவரவேண்டும் என்று கோரப்பட்டபோது கண்டிஷன் பெயில் கொடுக்கப்பட்டது. அது என்ன தெரியுமா? அவர் செக்கந்தராபாத்தில் இருக்கவேண்டும். அவர் தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது. செக்கந்தராபாத்திலே தான் இருக்கவேண்டும் என்ற கண்டிஷனிலே அவருக்குப்பெயில் வழங்கப்படுகிறது. பிறகு 19—12—1979-லே கிளர்ச்சி முடிந்த பிறகு அந்தக் கண்டிஷன் பெயில் நிபந்தனை ரத்து செய்யப்பட்டு அவர் விடுவிக்கப்படுகிறார். அவர் தமிழ்நாட்டுக்கு வந்து சேருவதற்குள்ளாக [illegible] செய்த ஒயர்லெஸ் மூலம் எல்லா இடங்களுக்கும் பரப்பப்படுகிறது. அந்த சுந்தரம் என்கிற இன்ஸ்பெக்டர் எங்கே இருந்தாலும் கைது செய்ய வேண்டும் என்ற உத்தரவு இடப்பட்டு அப்படி கைது செய்து ஒப்படைக்கிறவர்களுக்கு சிறந்த வெகுமானம் அரசாங்கத்தால் அளிக்கப்படும் என்று சுந்தரத்தின் மீது பழிவாங்கப்படுகிற கணை மிக வேகமாக பாய்கிறது.

அது மாத்திரமல்ல. இந்தச் சூழ்நிலையில் அவர் துடித்துக் கொண்டிருக்கும்போது அவர் வீட்டிலே 10,000 ரூபாய் பெருமானமுள்ள நகைகள் களவு போகின்றது. அது பற்றி புகார் செய்கிறார். நடவடிக்கை எடுக்கவில்லை. நாங்கள் நடவடிக்கை எடுக்க கருதினோம் ஆனால் மேலே உள்ள அதிகாரிகள் குறுக்கிடுகிறார்கள் என்று நடவடிக்கை எடுக்கவேண்டிய அதிகாரிகள் அவருக்குத் தெரிவிக்கிறார்கள். அதைத் தொடர்ந்து அவருடைய மகனை கைக்கடிகாரம் திருடிக் கொண்டு போகிறார்கள். அதைத் தொடர்ந்து அவருடைய மோட்டார் சைக்கிள் திருடப்படுகிறது. ஒரு இன்ஸ்பெக்டர் வீட்டில் 10,000 ரூபாய் பெறுமான நகைகள் களவு போகிறது. அதற்கு நான்கு நாளைக்குப் பிறகு மகன் கைக்கடிகாரம் களவாடப்பட்டு இருக்கிறது அதற்குப்பிறகு சில நாட்களுக்கு பின்பு அவருடைய மோட்டார் சைக்கிள் திருடு போகிறது. இதைப் பற்றி எவ்வளவு புகார் செய்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

பிறகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி 23—6—1980 ன்று அவர் வேலைக்கு ஆஜராகிறார். 23-ம் தேதி அன்று தலமைச்சர் உத்தரவுப்படி வேலையில் சேர்ந்த அவரை 7—6—1980-ம் தேதி அன்று வேலை நீக்கம் செய்கிறார்கள் ஸ்மிஸ் செய்கிறார்கள். டிஸ்மிஸ் செய்து விட்டு அவர் தலை றைவாக இருக்கிறார் என்று சொல்லி அவர் மீது போலீஸ் டேசனைத் தாக்க வந்ததாக வழக்கு இருப்பதாகச் சொல்லி பாலீஸ் ஸ்டேஷனுக்கு புகார் செய்யப் போனார் அல்லவா, கடிகாரம் காணாமல் போய்விட்டது நகைகள் காணாமல் போய் பிட்டது சைக்கிள் மோட்டார் காணாமல் போய்விட்டது என்று அதனால் போலீஸ் ஸ்டேஷனைத் தாக்க வந்தார் என்று குற்றம் சாட்டி அவர் மீது பிடி வாரண்ட் எடுக்க வேண்டும் என்று நீதி மன்றத்திற்குச் சென்று, அவர் தலைமறைவாக இருப்பதாகச் சொல்லி பிடிவாரண்டை கோர்ட் மூலமாக எடுக்க முயற்சி எடுக் கப்பட்டு அந்த முயற்சியில் இந்த அரசு அல்லது காவல் துறை வெற்றி பெற்று இருக்கிறார்கள். எனவே பழி வாங்கும் படலம் முடியவில்லை. தனிப்பட்ட ஒரு இன்ஸ்பெக்டரைக் (ஆய்வாளர்) கூட எவ்வளவு படுமோசமாக அது துரத்திக்கொண்டு இருக்கிறது என்பதை அவையின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காகச் சொல்கிறேன்.

எனவே, அளிக்கப்பட்ட உறுதிமொழிகள்—தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்ட பல்வேறு உறுதிமொழிகளைப் போல்—காவல் துறையைப் பொறுத்தவரையில் கூட மறுக்கப்பட்டு விட்டன. புறக்கணிக்கப்பட்டு விட்டன. அலட்சியப்படுத்தப்பட்டு விட்டன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

பல மானியக்கோரிக்கைகள் இருக்கின்ற காரணத்தால், கொஞ்ச நேரம் அதிகம் எடுத்துக்கொள்ள அனுமதிப்பீர்கள் என்று கருது கிறேன்.

தீயணைக்கும் படையைப் பொறுத்தவரையில், அந்த தீய ணைக்கும் படையில் நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சியைப் பற்றி இங்கே காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் மாண்புமிகு திரு சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நேரம் இல்லாத காரணத்தால் படுவேகமாக அதைச் சொல்லிச் சென்றார் கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு— அவருடைய உள்ளத்திலே பதிய வைத்துக்கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு விவரமாகச் சொல்லவிரும்புகிறேன்.

இந்த தமிழ்நாடு தீயணைப்புத் துறை ஆய்வுரை அறிக்கையில் 7-ம் பக்கத்தில் 13வது பாராவில் 'பயிற்சி' என்ற தலைப்பின் கீழ் சொல்லப்பட்டு இருப்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



தீயணைப்புத் துறைக்கென ஒரு மாநிலப் பயிற்சிப்பள்ளி சென்னை யில் 2 நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் மற்றும் முன்னணி தீயணைப்பாளர்கள் உதவியுடன் ஒரு கோட்டத் தீயணைப்பு அலு வலரின் கீழ் செயல்படுகிறது.

நீங்கள் நன்றாக கவனிக்கவேண்டும். சென்னையிலே ஒரே ஒரு மாநிலப் பயிற்சிப் பள்ளி—தீயணைப்புத் துறைக்கு இருக் கிறது. ஒரு மாநில பயிற்சிப் பள்ளி—ட்ரெயினிங் சென்டர்— சென்னையில் மாத்திரம் தான் இருக்கிறது. ஆனால் இந்த பயர் மேன் செலக்ட் செய்கிற அந்தத் தீயணைப்பு மண்டலங்கள் தமிழ கத்தில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மதுரை மண்டலம் என்றும், சென்னை மண்டலம் என்றும் இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டு இருக்கின்றன. மதுரையில் தேர்வு ஆகிற—தேர்வு ஆகிற என்று சொன்னால், ட்ரெயினிங்கில் தேர்வு ஆகிறது என்பது அல்ல முதலில் ட்ரெயினிங்கிற்காக செலக்ட் செய்யப்படுகிறார்களே அவர்கள் எல்லாம் சென்னையில் உள்ள பயிற்சிப் பள்ளிக்குத்தான் அனுப்பப்பட வேண்டும். ஆனால், மதுரை மண்டலத்தில் தேர்வு செய்யப்பட்டவர்கள், மதுரை மண்டலத்தில் ஒரு டெபுடி டைரக் டர் ஆப் பயர் சர்வீஸ் திரு. ஜெயபெருமாள் என்று ஒருவர் இருக் கிறார். அவர் என்ன செய்கிறார் என்றால், வருகிற ஆட்களை தேர்வு செய்கிறார். அதாவது தகுதி அற்றவர்களை, அன்-குவாலி பைடாக இருந்தாலும் கூட—இத்தனை அடி உயரம் இருக்க வேண் டும் என்றால் ஒரு அங்குலம் குறைந்தால் கவலையில்லை. ஒரு அங்குலம் குறைந்தால் அந்த ஒரு அங்குலத்திற்கு ரூபாய் நோட் டுக்களை அடுக்கி வைக்கப்பட்டால், அந்த ஒரு அங்குலக்குறைவு ஒதுக்கிவைக்கப்படுகிறது. இப்படி ஏறத்தாழ 300 பேர் அவர் செலக்ட் செய்து இருக்கிறார். அந்த 300 பேரில் பெரும்பாலும் தகுதி அற்றவர்கள்தான். அன்குவாலிபைட் தான் செலக்ட் செய்து இருப்பதால், அவர்களை செலக்ட் செய்து சென்னைக்கு அனுப்பவில்லை. இங்கே தான் பெரும் பயங்கரம் அடங்கி இருக்கிறது.

சென்னையில் உள்ள ட்ரெயினிங் சென்டருக்கு அவரால் பயர் மென் வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்களை அனுப்பினால் இங்கே சேர்த்துக் கொள்ள மாட்டார்கள் என்பது தெரியும். ஏனெனில் அவர்கள் தகுதி அற்றவர்கள். எனவே, அரசாங்கத் தின் சாங்ஷன் எதையும் பெறாமல் அரசாங்கத்தின் ஒப்புதல் பெறாமல், அவராகவே ஒரு ட்ரெயினிங் சென் டரை அங்கே நடத்துகிறார். இங்கு முதலமைச்சரின் கையெ ழுத்துப்போட்டு தந்து இருக்கிற அறிக்கையில் சென்னையில் தான் ஒரு பயிற்சி நிலையம் என்று போட்டு இருக்கிறீர்கள். ஆனால் அந்த டெபுடி டைரக்டர் ஆப் பயர் சர்வீஸஸ் ஜெயபாலன் அவர் கள் நாம் தேர்ந்தெடுத்தவர்களை அங்கே அனுப்பினால் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள், எடுத்துக்கொள்ள மாட்டார்கள்

எனவே நாமே இங்கேயே ஒரு ட்ரெயினிங் சென்டர் ஆரம்பித்து விடுவோம் என்று சொல்லி, ஒரு ட்ரெயினிங் சென்டரை, கடந்த 6 மாதகாலமாக நடத்திக்கொண்டு இருக்கிறார்.

[முற்பகல் 11-30]

அப்படி நடத்திக்கொண்டிருக்கிற அந்த டிப்டி டைரக்டர் மீது கரப்ஷன் வழக்குகள் மாத்திரம் 12 இருக்கின்றன. அந்த வழக்குகளைப் பற்றி 'ஃபைல்'—கோப்பு ஒன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரிடம் தேங்கிக்கிடக்கிறது என்று சொன்னால் ஒரு வேளை கோபம் வரும்; இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். இப்படி 12 கரப்ஷன் சார்ஜஸ் அவர் மீது. அவர் ஒருமுறை சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். சஸ்பெண்ட் செய்யப்பட்டு, மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார். நான் கேட்கிறேன். அவர் மீதுள்ள இந்த 12 சார்ஜஸ் என்ன ஆயிற்று? அவரே அங்கே சர்க்கார் அனுமதி இல்லாமல் ஒரு ட்ரெயினிங் ஸ்கூல் வைத்து நடத்த அனுமதி கொடுத்தது யார்? அப்படி நடத்த உரிமை உண்டா? ஏறத்தாழ 300 பேர்களை அவராகவே செலக்ட் செய்து, சென்னையில் ஒரு ட்ரெயினிங் சென்டர் இருக்கும்போது அங்கே அனுப்பாமல் இங்கே ட்ரெயினிங் ஸ்கூல் நடத்தும் விசித்திரம் என்ன? இப்படிப்பட்ட ஒரு ஊழல், தீ அணைப்புத் துறையில் நடைபெறுகிறது. இதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

அடுத்து, அமைச்சரவை மாநில, மாவட்ட நிர்வாகம் பற்றி ஒன்றிரண்டைக் கூற விரும்புகிறேன். மானியக் கோரிக்கை 9-ல் அமைச்சரவை செலவு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1975—76 ஆம் ஆண்டு 18.39 இலட்சம் ரூபாய்; இந்த அமைச்சரவை செலவு என்று கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. கணக்கு காட்டப்பட்டிருக்கிறது என்றால் 'ரிவைஸ்ட் எஸ்டிமேட்' வந்த பிறகு கொடுக்கப்பட்ட கணக்கு. அந்தக் கணக்கு 18.39 இலட்சம் ரூபாய். ஆனால் 1979-80-ல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்டது 16.22 இலட்சம் ரூபாய். பார்க்கும்போது ஆஹா! தி.மு.க. 18 இலட்சம் ரூபாயை எடுத்திருக்கிறது அமைச்சரவைச் செலவுக்காக. இந்த ஆட்சியில் 16 இலட்சம் தான் ஒதுக்கினார்கள் என்று திருப்திபடலாம். ஆனால் நிலைமை என்ன? ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் அந்த 16.22 இலட்சம் ரூபாய் 29.80 இலட்சம் என்று உயர்ந்துள்ளது. கிட்டத்தட்ட ஒன்றே முக்கால் மடங்கு அதிகமாக உயர காரணம் என்ன? என்ன காரணத்தால் அவ்வளவு உயர்ந்தது? 16 இலட்சம் அமைச்சரவை செலவுக்கு என்று ஒதுக்கியது 29 இலட்சம் என்று உயர்ந்த காரணம் என்ன? சுற்றுப்பயணச் செலவா? அல்லது டெலிபோன் செலவா? அல்லது இந்த செலவுகளோடு தூதுவருடைய செலவு அடங்குமா? அல்லது தூதுவருடைய செலவு தனியாகத் தரப்படுமா! என்பது எல்லாம் எனக்குத் தெரியவில்லை. நான் சபாநாயகரைச் சொல்லவில்லை; தூதுவரைப்பற்றிச் சொல்கிறேன்.



எனவே, டில்லியிலே இருந்த தூதுவருடைய செலவு எல்லாம் இதிலே அடங்குமா, அடங்காதா? தெரியாது. அந்த தூதுவர் இடம் காலியாக இருக்கிறது. வேறு தூதுவர்கள் அனுப்பப்படுவார்களா? எப்போது? அந்த தூதுவருக்குள்ள பணி நிலைமைகள் என்ன? இவைகள் எல்லாம் கூட, மாநில, மாவட்ட பொறுப்புகள் பல துறை அமைச்சர்களிடம் அளிக்கப்பட்டிருந்தாலும், முழுவதையும் தன்னுடைய கையில் வைத்துக்கொண்டிருக்கிற முதலமைச்சர் இந்த அவைக்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்.

நம்முடைய அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்கிறார்கள். பொதுக் கூட்டங்களிலே பேசுகிறார்கள். சில நேரங்களில் நம்முடைய அரசாங்க நிகழ்ச்சிகளிலே கூட அரசியல் பேச வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படுகிறது. நான் அவைகளுக்குள் எல்லாம் ஆழமாகச் செல்ல விரும்பவில்லை. ஏனென்றால் சில கடமைகளை உணர்த்தவும், பொறுப்புகளை உணர்த்தவும் அனைவரும் சேர்ந்து சமுதாய மாற்றத்திற்கு, இன்றைக்கு சமுதாயத்திலே இருக்கிற கேடுபாடுகளை களையவும் உறுதி எடுத்து பணியாற்றுகின்ற இந்த அவையில் இந்த முதல் கூட்டத் தொடரிலேயே நான் அவ்வளவு கடுமையான குற்றச்சாட்டுக்களை இங்கே வைக்க விரும்பவில்லை. ஆனால் எதையும் விட்டுவிடக்கூடாது என்பதற்காக பார்வைக்கு வைக்க விரும்புகிறேன்.

சில அமைச்சர்கள் பேசுகிறார்கள். என்னுடைய அருமை நண்பர் இராஜாமுகமது அவர்கள் கூட ஒரு கூட்டத்தில் பேசியதாக அண்ணா பத்திரிகையில் வந்திருக்கிறது. அரசியலில் கருணாநிதி ஒதுக்கப்பட்டுவிட்ட ஒருவர் என்று சொல்லியிருக்கிறார். பரவாயில்லை. நான் ஒதுக்கப்பட்டுவிடலாம். ஒதுக்கப்பட்டு கார்ப்பரேஷன் குப்பைத் தொட்டிலே கூட போடப்பட்டவனாகிவிடலாம். ஆனால் ஒன்றை மட்டும் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கார்ப்பரேஷன் குப்பைத் தொட்டியிலே போடப்படும் பொருள்கள் கூட சில நேரங்களில் கனகமணி மண்டபத்திற்கு வந்துவிடக்கூடும். அதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, கொஞ்சம் அடக்கம் தேவை. வயதுக்குத் தகுந்த அல்லது அனுபவத்திற்குத் தகுந்த மரியாதையாவது கொடுக்க வேண்டும். நானும் நம்முடைய முதலமைச்சரும் சண்டை போட்டுக்கொள்கிறோம் என்றால் வேறு விஷயம். நானும் நாவலரும் சண்டை போட்டுக்கொள்கிறோம் என்றால் வேறு விஷயம். எங்களுக்குள்ள நீண்டகால உறவு, நீண்டகால நட்பு, நீண்டகாலமாக இந்த இயக்கத்திலே நாங்கள் ஆற்றிய பணி, இவைகள் மூலம் நாங்கள் ஒருவருக்கொருவர் தாக்கிக்கொள்கிற நேரத்தில் ஏற்படுகிற விளைவுகளும், அதே நேரத்திலே இப்படிப்பட்ட அமைச்சர்கள் சில பேர்கள் இவ்வளவு வேகமாக வார்த்தைகளை பொழிகின்ற இந்த காட்சிகளையும் காணுகின்ற நேரத்தில் அமைச்சர்கள் கொஞ்சம் அடக்கத்தோடு பணியாற்றினால் நல்லது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் அதுவும் நம்முடைய முதலமைச்சரவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற ஒன்று என்ற காரணத்தால் ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தினுடைய கல்வி அலுவலர் அதாவது டீ.ஈ.ஓ. திரு. ஸ்டான்லி சாமுவேல் என்பவர் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளருக்கு மிகமிக அவசரம் என்று ஒரு உத்தரவை பதிவு அஞ்சலில் 23—5—1979 இல் அனுப்புகிறார். அந்த உத்தரவினுடைய எண் 12472 என்பதாகும். அது அனுப்பப்பட்ட தேதி 23—5—1979. அப்படி கமிஷனருக்கு அனுப்பப்பட்ட அந்த உத்தரவை அவர் செயல்படுத்த வேண்டும். என்ன உத்தரவு என்றால் ஆசிரியர்களுடைய பொது மாறுதலுக்குரியது. அதாவது 10, 15 ஆசிரியர்களை பல இடங்களுக்கு மாற்றுதல் குறித்து அந்த உத்தரவை டீ.இ.ஓ.—மதுரை மாவட்ட கல்வி அதிகாரி அவர்கள்—கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் கமிஷனருக்கு அனுப்புகிறார் தேதி 23-ல், 7 நாட்களுக்குள்ளே எவ்வளவு பெரிய மாறுதல் பாருங்கள். அப்போது 1979 இல் இருந்த ஆளும் கட்சி எம்.எல்.ஏ. அவர்கள் அதிலே தலையிடுகிறார். நிர்வாகத்திலே தலையீடே இல்லை நேர்மை நியாயம் நீதி தர்மம் தழைத்து ஓங்குகிறது என்றெல்லாம் பேசப்படுகிறதே அது இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட கோடிட்டுக் காட்ட நான் ஒன்றிரண்டு உதாரணங்களை மட்டும் பல உதாரணங்கள் அல்ல, நேரத்தைக் கருதி ஒன்றிரண்டு மட்டும்—இங்கே சொல்ல விரும்புவதால் குறிப்பிடுகிறேன்.

அவர் தன் கைப்பட 22 ஆசிரியர்களுடைய் பெயரை எழுதுகிறார். அப்படி 22 ஆசிரியர்களுடைய பெயரை எழுதி அவர்களில் யார் யாரை எங்கெங்கே மாற்ற வேண்டும் என்று அதிலே குறிப்பிட்டு அதை கோட்டாட்சி அலுவலரிடம் கொடுக்கிறார். அந்தக் கோட்டாட்சி அலுவலர் அதைக் கமிஷனருக்கு அனுப்புகிறார். அந்தப் பட்டியலை வாங்கிக் கொண்டு கொட்டாம்பட்டி கமிஷனர் அந்த பட்டியலுக்குக் கீழே என்ன எழுதுகிறார் தெரியுமா? ஆசிரியர்கள் மாறுதல் சம்பந்தமாக மேலூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. அ. ம. பரமசிவன் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு மேலூர் கோட்டாட்சி அலுவலர் அவர்கள் மூலம் வரப் பெற்ற பட்டியல் என்று எழுதி தன் கையெழுத்தைப் போட்டு 30—5—1979 என்று தேதியும போட்டிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் கொடுத்த பட்டியலின்படி அலுவலகத்தில் மறுபடியும் ஃபைல் தயாராகிறது. அந்த ஃபைலில் அதிகாரி என்ன எழுதியிருக்கிறார். இன்று கோட்ட வளர்ச்சி அலுவலர் அவர்கள் என்னுடைய அலுவலகத்திற்கு வந்திருந்த போது மேலூர் சட்ட மன்றத் தொகுதி உறுப்பினர் திரு. அ. ம. பரமசிவன் அவர்கள் ஏற்கனவே ஒப்புதல் ஆகி வந்த ஆசிரியர் பொது மாறுதல் பிரேரேபணையை செயல்படுத்தினால் ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடைஞ்சல் ஏற்படும் என்று கூறி மாற்றும் பிரேரேபணையை அனுப்ப ஆலோசனையை கூறியதன் பிரகாரம்





ஏற்கனவே இணக்கம் அளிக்கப்பட்ட பிரேரேபணைக்குப் பதில் புதிய பிரேரேபணையைத் தயாரித்து அனுப்ப கூறப்பட்ட கருத்தின் படியும் கோட்ட வளர்ச்சி அலுவலர் அவர்களின் நேரடி ஆலோசனையின்படியும் மற்ற பிரேரேபணைகளைத் தயாரித்து வைக்கவும், ஏற்கனவே வந்துள்ள பிரேரேபணையை அமல் செய்வதை நிறுத்தி வைக்கவும்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. இது தலையீடு இல்லையா, ஆளும் கட்சி எம்.எல்.ஏ. ஒருவர் செய்த தலையீடு இல்லை என்று யார் வந்து கூற முடியும்? 22 ஆசிரியர்களுடைய பெயரை அவரே எழுதி அவர்கள் மாற்றப்பட வேண்டிய ஊர்கள் எது எது என்பதையும் அவரே எழுதி அதைக் கோட்டாட்சி அலுவலருக்கு அனுப்பி அது கமிஷனருக்கு அனுப்பப்பட்டு முதலிலே அங்கிருந்த மாவட்ட கல்வி அதிகாரி அனுப்பிய உத்தரவு மறுபரிசீலனைக்கு ஆளாகி நிறுத்தி வைக்கப்பட்டு இது செயல்படுத்தப்படுகின்றது என்றால் இது முறைதானா? இதுதான் நேர்மையான காரியமா என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆளும் கட்சியினுடைய முன்னணித் தலைவர்களில் ஒருவர் பெரிய பதவியில் இருப்பவர் அவர். அவர்களுடைய மருமகன் மதுரை மாநகராட்சி மன்றத்திலே பணி புரிகிறார். மதுரை மாநகராட்சி மன்றத்தில் 27-4-1980 அன்று ஒரு தீர்மானம் நிறைவேறுகின்றது. இது பற்றி வந்த செய்திகளை எல்லாம் அறிந்து நமது முதலமைச்சரவர்கள் கூட மதுரையிலே கடிந்து கொண்டார் என்று கேள்விப் பட்டேன். அவர்களுடைய காதுக்கு இந்தச் செய்திகளையும் போட்டு வைக்கிறேன். 27—4—1980 அன்று ஒரு தீர்மானம் வருகின்றது. அந்தத் தீர்மானத்தின் எண் 69. அதனுடைய வாசகம் என்ன தெரியுமா? அதன்படி அந்த மாநகராட்சியிலே பணி புரிகின்றவர் அர்பன் இன்ஜினியரிங் கோர்ஸ் என்ற ஒரு படிப்பை இரண்டாண்டுகள் படிக்க செல்வதற்கு அனுமதிக்கப்பட்டு அவருடைய படிப்புக் காலம் முழுவதையும் பணிகாலமாகக் கருதி சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்றும் அவர் மேல்படிப்புக்காக கல்லூரிக்கு செலுத்தவேண்டிய நுழைவுப்படி தேர்வு மற்றும் சிறப்புக் கட்டணங்களை மாநகராட்சியே செலுத்த வேண்டும் என்றும் விடுதிச் செலவு அன்னார் படிப்புக்குப் போய் வரும் பிரயாணக் கட்டணம் பிரயாணப் படி போன்றவைகளையும் மாநகராட்சியே செலுத்த வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இதற்கு மொத்தம் 50 ஆயிரம் ரூபாய் செலவாகக் கூடும். எதற்காக இந்த சலுகை கொடுக்கப்படுகின்றது?

[முற்பகல் 11-40]

இப்படி ஒரு சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. மாநகராட்சியிலே மருமகன் பணியாற்றுகிறார். அந்த மருமகனுக்கு படிப்புக்கு ஆகும் செலவு, பிரயாணச் செலவு, விடுதிச் செலவு போன்ற அத்தனைச் செலவுகளையும் கிட்டத்தட்ட 50,000 ரூபாய்

அளவிற்கு மாநகராட்சி மன்றமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை மாநகராட்சி மன்றமே போட்டு அதை நிறைவேற்றுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அடுத்து இதே மதுரையிலே அண்ணா நகர் என்ற ஒரு இடம் இருக்கிறது. இதை முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். அண்ணா நகரில் பிளாட் எண் 65 ஒரு பெரியவருடைய பெயரில் இருக்கிறது. பிளாட் எண் 64 அவருடைய மருமகன் பெயரில் உள்ளது. அதற்கு அடுத்த பிளாட் எண் 66 திரு. எஸ். எம். சிதம்பரம் என்ற பெயரில் உள்ளது. பிளாட் எண் 65 என்பது 2 இரவுண்ட் 99 சதுர அடி. 64-வது பிளாட் 2 கிரவுண்ட் 174 சதுர அடி. இரண்டையும் சேர்த்து சென்ட்டு கணக்கில் சொல்ல வேண்டுமானால் 22.75 சென்ட். அதாவது 64-வது பிளாட்டும் 65-வது பிளாட்டும், அந்த பெரியவருடைய பெயரிலே இருக்கிற பிளாட்டும், அவருடைய மருமகன் பெயரிலே உள்ள பிளாட்டும் சேர்த்து 22.75 சென்ட் வருகிறது. இந்த இரண்டு பிளாட்டு களையும் இணைத்ததாக ஆடம்பர பங்களா ஒன்று கட்டப் பட்டிருக்கிறது. இரண்டு மாடி கட்டிடம். சில விவரங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. கொஞ்சம் போரடிக்கத்தான் செய்யும். ஆனாலும் சொல்கிறேன்.

கீழே தரையில்

10-க்கு 8-ல் ஆர்.சி.சி. ஹால் ஒன்று

20-க்கு 15-ல் ஒரு ஆர்.சி.சி. ஹால்

10-க்கு 10-ல் ஒரு ஆர்.சி.சி. படுக்கை அறை

12-க்கு 8-ல் ஒரு அலுவலக அறை

15-க்கு 10-ல் ஒரு சாப்பாட்டு அறை

10-க்கு 10-ல் ஒரு சமையல் அறை

10-க்கு 6-ல் ஒரு ஸ்டோர் ரூம்

இதைத் தவிர

12-க்கு 10-ல் ஒரு குளியல் அறை.

இது கீழே உள்ளது.

அது மாத்திரம் அல்ல முதல் மாடியில்

12-க்கு 8-ல் ஒரு ஆர்.சி.சி. ரூம்



20-க்கு 15-ல் ஒரு ஆர்.சி.சி. ஹால்

15-க்கு 8-ல் ஒரு ஆர்.சி.சி. ஹால்

10-க்கு 10-ல் ஒரு ஆர்.சி.சி. படுக்கை அறை

10-க்கு 10-ல் ஒரு ஆர்.சி.சி. அறை

12-க்கு 10-ல் ஒரு குளியல் அறை.

இவ்வளவும் இருக்கிறது.

இரண்டாவது மாடியில்

15-க்கு 8-ல் பெரிய அறை ஒன்று.

இது பிளாட் நெம்பர் 65-ல் கட்டப்பட்டிருப்பவை.

இதனை ஒட்டியுள்ள பிளாட் நெம்பர் 64-ல்

60-க்கு 14-ல் பெரிய ஷெட் ஒன்று

30-க்கு 10-ல் பெரிய ஷெட் ஒன்று

ஆக மொத்தம் 22.75 சென்ட்டுக்கும் மாநகராட்சி போட்டிருக்கிற வரி 328.60 காசு. பிளாட் நெம்பர் 65-க்கு 303.60 காசு பிளாட் நெம்பர் 64-க்கு 25.00 என்று மாநகராட்சி மொத்தம் 328.60 காசு வரி போட்டிருக்கிறது. இதைக் கேட்டதும் சென்னையிலே இருப்பவர்களுக்கெல்லாம் கூட மதுரைக்கே குடி போய் விடலாம் போல் இருக்கிறதே. அவ்வளவு வரி குறைவாக இருக்கிறதே என்று கூட எண்ணம் தோன்றும். ஆனால் எல்லோ ருக்கும் இந்தச் சலுகை கிடையாது. ஒருவரே ஒருவருக்கு மாத் திரம் தான். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஒரு காலத்தில் மதுரை மாநகரத்திலே 'வீரர்' என்று பாராட்டப் பெற்ற அந்த ஒருவருக்குத் தான் இவ்வளவு சலுகையும்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் அதைவிட மிக மோசமான லொக்காலிட்டியில் இருக்கிற எஸ்.எம். ஐயர் என்ப வருக்கு சொந்த வீடு பிளாட் எண் 430/-1ல் இருக்கிறது. நிலம் மொத்தம் 5¼ சென்ட் தான். அவர் சாதாரணமாக

10-க்கு 8-ல் ஒரு வராண்டா

8-க்கு 5-ல் ஒரு அறை

12-க்கு 10-ல் ஒரு ஹால் ஒரு சமையல் அறை.

மாடியில் ஒரு ரூம் என்று கட்டப்பட்டிருக்கிற இந்த 5½ சென்ட்
இடத்திற்கு வரி எவ்வளவு தெரியுமா? 413.94 காசு. ஆனால்
22 3/4 சென்ட்டுக்கு 328.60 காசு என்று வரிகளை மதுரை
மாநகராட்சி மன்றம் போட்டிருக்கிறது.

அதே போல் தான் சொக்கிகுளம் பகுதியில் உள்ள குருசாமி
என்பவருக்கு 4 சென்ட் அளவு சொந்தமான வீட்டிற்கு 393.40
காசு என்றால் அதற்கும் இத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில்
எவ்வளவு வரி வித்தியாசம் என்பதை நீங்கள் தெரிந்துக் கொள்ள
லாம்.

எனவே ஆளும் கட்சிக்காரர்களாக இருந்தால் எந்த அளவிற்கு
சலுகைகளை தங்களுக்கென்று அவர்கள் செய்துக் கொள்ளு
கிறார்கள் என்பதற்கு உதாரணமாகத் தான் நான் இங்கே எடுத்
துக் காட்டினேன். இங்கே எடுத்துக் காட்டியவைகளில் குற்றச்
சாட்டுகள் என்ற முறையில் எடுத்து வைத்தாலும் இந்த அவை
தெரிந்துக் கொள்ள வேண்டும், நாடு புரிந்துக் கொள்ள வேண்டும்
என்று எடுத்து வைத்தாலும் அவைகளை ஆராய வேண்டியதும்
அதற்கான தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதும்
அளிக்கப்பட்டுள்ள வாக்குகளை நிறைவேற்ற வேண்டியதும் அது
காவல் துறையானாலும், மற்றும் உள்ள நிர்வாகத்துறையா
னாலும் மாவட்ட துறைகளானாலும் தீயணைப்புத் துறை
யானாலும் எடுத்து வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளுக்கு
பரிகாரம் காண வேண்டிய பொறுப்பு முதலமைச்சர் அவர்களுக்கு
இருக்கிற காரணத்தினால் அதற்குரிய விளக்கங்களை பதிலை
எதிர்பார்த்து இந்த அளவில் அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு
சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்
கைகளின் மீது இது வரையில் தங்களுடைய கருத்துக்களை வெளி
யிட்டவர்களுக்கு நான் முதலில் நன்றி கூறிக் கொள்கிறேன்.
குறிப்பாக எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் வெறும் எதிர்க்
கட்சியாக தங்களை ஆக்கிக் கொள்ளாமல் நாட்டின் நலனை
முன்விட்டு நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற
நோக்கத்தோடு, அதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியில்
இருக்கிற இந்த அரசாங்கம் எந்த அவப் பெயருக்கும் ஆளாகி
விடக் கூடாது என்ற அக்கறையோடு, நல்ல எண்ணத்தோடு
தங்களுடைய கருத்துக்களுக்கு ஏற்ப என்றில்லாவிட்டாலும் நியா
யம் என்று அவர்கள் காதுக்கு ஆதாரங்களோடு வந்த செய்தி
களுக்கு முதல் இடம் கொடுத்து வெளியிட்டதற்காக நான் உள்
மையிலேயே நன்றி கூறிக் கொள்கிறேன்.

ஒரு ஆட்சி சரிவர நடைபெற வேண்டுமென்றால் எதிர்க்
கட்சியிலே இருப்பவர்கள் இங்கே மன்றத்தில் எடுத்து வைத்ததைப்
போல், தங்களுக்குத் தெரிந்த உண்மைகளை எல்லாம் நாகரிக
மாகவும், கண்ணியமாகவும், தமிழ் பண்போடும் வெளியிடுகிற



முறையில் வெளியிட்டு ஒத்துழைப்பு தருகிறபோதுதான் நல்லாட்சி மலரும் என்பதையும், நல்லாட்சி நடைபெறும் என்பதையும் நான் நன்கு உணர்ந்திருக்கிறேன்.

இங்கே பல குறைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நிறைகளைச் சொல்கிறவர்களுக்கு நான் நன்றி கூறுவதைவிட குறைகளைச் சொல்லியவர்களுக்கு நன்றிகூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். காரணம் நேரடியாகச் சில இடங்களுக்கு போய் உண்மை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்குப் பொறுப்பில் இருக்கிறவர்கள் இருக்கும்போது—இந்த மன்றத்தில் மக்களின் சார்பாக உறுப்பினர்கள் தங்களுக்கு தெரிந்த உண்மைகளை எடுத்து வைக்கும் போது தான், எந்தெந்த வகையில் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழி முறைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்கும் வெறும் கையெழுத்து இட்டு உத்தரவு போட்டு விட்டால் மட்டும் போதாது, அதை நடைமுறைப்படுத்துபவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் அத்தகைய தகுதி பெற்றவர்கள் எங்கெங்கே இருக்கிறார்கள் எங்கெங்கே இல்லை, அதிலும் தவறான செய்கைகளின் சொந்தக்காரர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்வதற்குள்ள வாய்ப்பு பெற்றிருக்கிறவர்கள் எடுத்துக் கூறுவது எங்களுக்கும் இந்த நாட்டுக்கும் நன்மை பயக்கக் கூடியது என்பதில் நான் மன நிறைவு கொள்கிறேன்.

அந்த வகையில் இந்த மானியக் கோரிக்கைகள் மீது குறை சொன்னவர்கள் எனக்கு இந்த ஆட்சியை நடத்துவதற்கு மிகவும் உதவி செய்திருக்கிறார்கள் என்பதை நான் நன்றி உணர்ச்சியோடு கூறி அவர்களுக்கு என்னிடமுள்ள தகவல்களுக்கு ஏற்ற முறையில் பதில் கூறுவது என் கடமை என்று நான் கருதுகிறேன்.

முதலாவதாக, காவல் துறை சம்பந்தமாக நிறையப் பேசியிருப்பதால், ஒவ்வொருவரும் பல்வேறு விவரங்களை இங்கே எடுத்துச் சொல்லியிருப்பதால் அதை முதலில் எடுத்துக் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். காவல் துறையைப் பொறுத்த வரையில் காவல் துறையில் பணியாற்றுகிறவர்கள் எப்போதுமே நல்ல பெயர் எடுக்க முடியாது என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்

[முற்பகல் 11-50]

காரணம், கொஞ்சம் தீவிரமாக, ஆர்வத்தோடு செயல்படுகிற போது, சிறு தவறு நேர்ந்தாலும், அதன் காரணமாக அவர்கள் குற்றவாளிகள் என்று சொல்லப்படுவதற்குக் காரணமாகி விடுகின்றார்கள். அதே போல், ஏதாவது சோர்வு காரணமாக, கடமையைச் செய்யக் கூடிய அந்தச் சுறுசுறுப்பு இல்லை அல்லது

வேறு நிலை ஏற்பட்டு விட்டாலும் அவர்கள் கடமையைச் செய்ய வில்லை என்ற குற்றச் சாட்டிற்கு ஆளாக்கப் படுகின்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. இதே நிலையிலே தான் இங்கு தமிழக காவல் துறையைப் பற்றியும் பேசப்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டாலும், அவ்வளவும் பொய் என்று நான் சொல்லிவிட முடியாது. உண்மைக்கு மாறானது என்றும் சொல்லிவிட முடியாது. சில நேரங்களில் சில காரியங்கள் மிகைப்படுத்தப்படுகின்றது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டியவனாக இருக்கிறேன்.

அனைத்துலக் காவல் துறையைச் சேர்ந்த அனைவரும் தங்களுடைய கடமைகளை அப்படியே ஒழுங்காகச் செய்கிறார்கள் என்று நான் உறுதி கூறத் தயாராக இல்லை. அதே போல், காவல் துறையைச் சார்ந்த அத்தனை பேரும் தவறு செய்வதற்கு தங்களை ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் ஏற்றுக் கொள்ள வில்லை. இதைத் தான் அவர்கள் குறிப்பிட்டதற்கு விளக்கமாக, பதிலாக நான் தர வேண்டி இருக்கிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். குறிப்பாக அவர்கள் கூறியதிலே, இன்றைய தினம் பேசிய எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியது போல், மான்யக் கோரிக்கையிலே கொடுக்கப்படுகின்ற விளக்கங்களைப் பற்றி எடுத்துக் கூறி, இரண்டு வெவ்வேறு விதமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறீர்களே என்றார்கள். ஆனால், நடந்தது வேறு. ஆனால், எப்படி உண்மைக்கு மாறாக இந்த மான்யக் கோரிக்கையிலே இரண்டாம் தேதி பற்றிய செய்தியை முதலமைச்சர் அவர்கள் அனுமதியுடன் வெளியிட்டார்கள் என்று மாண்புமிகு உமாநாத் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். டி.ஐ.ஜி. அறிக்கைக்கு மாறாக இப்படி ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அது மானிய கோரிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கெல்லாம் பணிவோடு சொல்லிக் கொள்வது ஒன்று தான். இந்த மானியக் கோரிக்கையைத் தயாரிப்பதில், அவர்களுக்கு என்னென்ன குறிப்புகள் இருக்கின்றனவோ. அவைகளை நீங்கள் அப்படியே வெளியிடுங்கள், அதை மாற்றி வெளியிட வேண்டியத் தேவையில்லை என்று நான் முதலிலேயே அவர்களுக்குச் சொன்னேன். காரணம், இரண்டாம் தேதி என்னுடைய அனுபவம் தனிப்பட்ட முறையிலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசியல் கட்சியைச் சார்ந்தது வேறு விதமாக இருந்தாலும், ஆட்சியிலே நாங்கள் வந்த பிறகு, இருக்கின்ற குறிப்புகள் என்ன இருக்கின்றதோ அதை வைத்துத் தான் பேச வேண்டுமே தவிர, உண்மைக்கு மாறாக எழுதக் கூடாது என்ற நோக்கத்தோடு, அவர்களை அப்படியே எழுதச் சொல்லி, இந்த மானியக் கோரிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.



இந்த விஷயத்தில் நான் என்னுடைய அனுபவத்தைச் சொல்ல வேண்டுமென்றால், இரண்டாம் தேதி நடந்தது மிகக் கொடூரமானது தான். நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் இவர்கள் எல்லோரும் அன்றைய தினம் தாக்கப்பட்டார்கள்; அடிக்கப்பட்டார்கள் என்பதையும், மண்டை பிளக்கப்பட்டது உண்மை என்பதையும், நான் இங்கே அனுபவம் மூலமாக அறிந்ததை நேரிடையாகக் கண்டதை, அந்த நபர்களை மருத்துவமனையிலும், வேறு இடங்களிலேயும் சந்தித்ததை வைத்துக் கொண்டு நான் சொல்ல முடியும். ஆனால், முதலமைச்சர் என்ற பொறுப்பிலே பேசும் போது, இங்கே காவல் துறை அதிகாரிகள் என்ன குறிப்புகளை வைத்திருக்கிறார்களோ அவைகளை வெளியிட வேண்டியது என் நீங்காத கடமையாகும். அதற்காகத் தான் நியாயத்தின்பால் வழக்குகள் வாபஸ் வாங்கியும், அதே நேரத்தில் உண்மை என்ன என்பதை வெளியிடுவதற்கு வாய்ப்பைத் தருவதற்காக இந்த மானியக் கோரிக்கையிலே வெளியிடுவதற்கு நான் வாய்ப்பு தந்தேன்.

இன்னொன்றும் சொல்லப் போனால் மதுரையிலே நடந்த நிகழ்ச்சி பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கின்ற அறிக்கையில் இருப்பதை நான் ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு நேர் மாறாக நடந்தது என்பதை நான் சொல்லி, அதிகாரிகள் எந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்களோ அதையும் இங்கே வெளியிடுவது கடமை. என்ற வகையிலே சொல்லி இதை உங்களுடைய மனச் சாட்சிக்கும் நியாய உணர்வுக்கும் நான் உணவாகவே தர விரும்புகிறேன் என்று சொல்ல விரும்புகிறேன்.

காலையில் எத்தனை மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஊர்வலம் புறப்பட வேண்டுமென்று அங்கே அனுமதி கேட்டு நடத்த இருந்தார்களோ அது தாமதமாகத் துவங்கியது என்பதும் பிற்பகல் என்று குறிப்பிட்டு ஒரு மணிக்கே கூடி கூட்டம் அதிகமாகி விட்ட காரணத்தால் அவர்கள் புறப்பட்டதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் புறப்பட்டதும் அங்கே பொறுப்பிலே இருந்தவர்கள் இந்த இரண்டு ஊர்வலங்களும் சந்திக்க முடியாத வகையில் அவர்கள் ஏற்பாடு செய்யத் தவறி இவை இரண்டும் சந்திக்கக்கூடிய நிலைமையை அவர்கள் அனுமதித்ததன் விளைவு தான் இவ்வளவு பெரிய, எல்லோருக்கும் மன வேதனைதரக் கூடிய நிகழ்ச்சியாக மாறிவிட்டது என்பதையும் இங்கே நான் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

அந்த வகையில் ராஜசேகரன் டி.ஐ.ஜி. அவர்கள் ஏனோ அப்படிப்பட்ட ஒரு அறிக்கையை அந்த நேரத்தில் வெளியிட்டார் அதைப் பற்றி அப்போதே எங்கள் கருத்தை வெளியிட முடியாத வகையில் நாங்கள் ஆட்சியில் இருந்தோம். இருந்தாலும் எங்கள் கட்சிக்காரர்கள் உண்மையை வெளியிட்டிருக்கிறார்கள். அது விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கிறது என்ற

நிலையில் நான் அதிகமாக அந்தப் பிரச்சினைக்குள்ளே சொல்லாமல் (குறுக்கீடு) நான் அதற்கு மேல் இப்போது சொல்ல முடியாதவனாக இருக்கிறேன்.

ஆனால் தேவையற்ற நிலையில் அங்கே சுடப்பட்டது என்பது மட்டும் உண்மை என்ற நிலைமையை அனைத்து அரசியல் கட்சியினர்களும் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிடுவதில் தவறு இல்லையென்று கருதுகிறேன். யார் சுட்டார்கள், யாரிடமிருந்து துப்பாக்கி வாங்கி எந்த அதிகாரி சுட்டார், ஏன் சுட்டார், அந்தச் சூடு நடைபெறாமல், அந்தத் துப்பாக்கிச் சூடு இல்லாமல், இருவர் சாகாமல் பலபேருக்குத் தொல்லை ஏற்படாமல் அந்த ஊர்வலங்களை ஒழுங்காக நடைபெறச் செய்ய முடிந்திருக்க முடியாதா செய்து முடித்திருக்க முடியாத என்பதையெல்லாம் இப்போது, நான் தெளிவாக, விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை என்றாலும், இப்படிப்பட்ட சந்தேகங்கள், தெளிவுகள் எல்லாம் நமக்கு உண்மையை உணர்த்தக் கூடிய வகையில் விரைவிலே கிடைக்கும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அப்போது இதே மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உண்மை அறிந்து தங்கள் தீர்ப்பை வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கும். அப்போது நாடும் உண்மையை உணரும். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் நான் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மதுரை மாநகராட்சியில் நடந்ததைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். யாராக இருந்தாலும் சரி—இந்த அமைச்சரவையின் சார்பாகச் சொல்லிக் கொள்கிறேன்; அப்படிப்பட்ட தவறு நடந்திருக்குமானால் நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன். அதிலே எனக்கு தாட்சண்யம் இல்லை என்பதை நான் சொல்லுவதை விட எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் அவராகவே சொல்லியிருக்கிறார்கள். இந்தச் செய்தி இப்போது தான் எனக்குத் தெரிந்திருக்கிறது. இதைப் பற்றி நான் நிச்சயமாக விசாரித்து நடவடிக்கையை நியாயமான வகையில், எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகின்ற வகையில் எடுத்துக் கொள்வேன் என்பதை மீண்டும் சொல்லிக் கொள்கிறேன்.

அதோடு, சென்னையிலே முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் மாநகராட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்பு அண்ணாமலை மன்றத்திற்கு என்ன வரி என்பதையும், அதே சமயத்தில் வால்டாக்ஸ் தியேட்டருக்கு என்ன வரி போட்டிருந்தார்கள் என்பதையும் மேடையில் பேசியவன் நான் ஒருவன் என்பதையும் அதைப் பற்றிக் கூறி அரசு அவர்கள் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது மாற்றியமைக்க ஏற்பாடு செய்யப்பட்டதையும் நான் கூறிக் கொள்ளுகிறேன்.



[நண்பகல் 12-00]

இதைப் போன்ற நடவடிக்கைகளிலே ஈடுபட்டவர்கள் சுயலாபத்திற்காக ஆனாலும் சரி—நோட்டை அடுக்கி, இன்ஞ் என்றெல்லாம் இங்கே சொன்னார்களே—அதைப் போன்று இருந்தாலும் சரி எத்தகைய நிலைமைகளிலே அவைகள் நடத்தப்பட்டிருந்தாலும் சரி, அவற்றைப் பற்றி நிச்சயமாக இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து ஆவன செய்யும் என்றும் நான் செய்வேன் என்றும் சொன்னால் எல்லோரும் நம்புவீர்கள் என்பதிலே எனக்குச் சந்தேகம் இல்லை.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். 6 மாத காலமாக மதுரையிலே நடை பெறுகிறது பயிற்சிப் பள்ளி என்றார்கள். இப்போது என் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக நான் நன்றி செலுத்துவதோடு அதற்கு யார் பொறுப்பானவர்களோ அவர்களைச் சட்டப்படி எந்த எந்த வகையிலே நடவடிக்கை எடுத்து என்னுடைய கடமையைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வேன் என்று கூறுகிற போது நான் ஒரு கருத்தை வேதனையோடு வெளியிட்டாக வேண்டும். இரண்டு, மூன்று மாதங்களுக்கு மேல் நாங்கள் ஆட்சியிலே இல்லை, இடையிலே இருந்த அதிகார வர்க்கம், அல்லது ஆட்சி செய்தவர்கள் ஏன் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டார்கள் என்பதைப் பற்றியும் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்பதற்கும் எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 3 மாதங்களிலே ஆளுநர் ஆட்சி நடை பெற்றிருக்கிறது, இந்த 3 மாதங்களில் ஏன் இதை கவனிக்கவில்லை, அந்த மூன்று மாதங்களிலே ஆட்சியிலே இருந்த அதிகாரிகள் ஏன் இதை கவனிக்காமல் விட்டு வைத்தார்கள் என்ற காரணத்தைத் தெரிந்து கொண்டு அதைப் பற்றியும் நடவடிக்கை எடுப்பதற்கு நான் தயங்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக விரோதிகள் யார் என்று கேட்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஊர்வலம் என்று நடைபெறும் போது பல தரப்பட்டவர்கள் அந்த ஊர்வலத்திலே கலந்து கொள்வதும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். முன்பெல்லாம் அய்யா பெரியார் அவர்கள் பொதுக் கூட்டம் கடற் கரையிலே பேசுவார்கள். பேசி முடிந்த பிறகு ஒரு ஹோட்டல் தாக்கப்படும். மேலேயிருந்து காய்ச்சிய எண்ணெயை அங்கே இருப்பவர்கள் வெளியே ஊற்றுவார்கள், கீழே இருந்து கற்கள், சோடா புட்டிகள் மேலே பறக்கும். இந்தக் கொடுமையை யார் செய்கிறார்கள் என்பதல்ல. இது எங்கே போயிற்று என்றால் அய்யா பேசினார்கள் இங்கே கலவரம் நடந்தது என்று பேசியவர்கள் உண்டு நாட்டிலே. அதைப் போல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யாரைப் பழி தீர்த்துக் கொள்ள வேண்டுமோ குறிப்பாக எந்த நபரை பழி தீர்த்துக் கொள்ள வேண்டுமோ அதைச் செய்வதற்குச் சிலர் நாட்டிலே இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் அதைப் பயன்படுத்திக்

கொள்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட வேண்டியிருக்கிறது. நாங்கள் குறிப்பிடுவது அப்படிப்பட்ட சமூக விரோதிகளைத்தான். அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, தி.மு.க.வாக இருந்தாலும் சரி, காங்கிரஸாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் (இ) ஆக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி அல்லது ஏதோ மதச் சார்புள்ள அமைப்புகள் என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் சரி, எங்கே இருந்தாலும் கொள்கைக்கு அப்பால் தங்களுக்கு ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளக் கூடாது என்ற மனப் பக்குவத்தைப் பெறாதவர்கள் சிலர் அப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகிறபோது அவர்கள் சமூக விரோதிகளாகிறார்கள். நான் இங்கே குறிபபிட்டாக வேண்டும். இன்னும் சொல்லப் போனால் வேலூர் நாராயணன் அவர்கள் தலைமையிலே நடந்த ஒரு ஊர்வலத்தில் என்ன என்ன கொடுமைகள் இழைக்கப்பட்டன என்பது வரலாற்றிலே இருக்கிறது. வேலூர் நாராயணன் இதற்கு எந்த விதத்திலும் பொறுப்பல்ல. அவர் அப்படிப்பட்டவர் அல்ல, அப்படிப் பேசக் கூட அவர் யோசிப்பார் என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். வேலூர் நாராயணன் அதற்குப் பொறுப்பு என்று சொல்ல முடியாது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். சிலர் இந்த சூழ்நிலைகளையெல்லாம் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆகவே, அது போன்ற நிலைகளிலே சமூக விரோதிகள் யார் என்பதை நமமைப் போன்ற அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஒரு முடிவு எடுத்து நமக்குள் சில ஒருமை உணர்வுகளுக்கு இடம் தந்து அதைப் பயன்படுத்திக் கொண்டு ஊர்வலம், நிகழ்ச்சிகள், போராட்டங்கள் நடத்துவது என்று முடிவெடுப்போமானால் சமூக விரோதிகள் இடையிலே நுழைவதை நம்மால் தடுக்க முடியும் என்பதைத் தெரித்துக் கொள்கிறேன்.

ஆயிரக்கணக்கான இலட்சக் கணக்கான அளவிலே மக்கள் ஊர்வலத்திலே கலந்து கொள்கின்ற பொழுது, அந்த மக்களுக்கிடையிலே ஒரு சில நூறு பேராக இருக்கினற காவல் துறையைச் சார்ந்தவர்கள், அவர்களையெல்லாம் கண்டு பிடித்து விட முடியும், கண்டுபிடித்து பிரித்து ஒதுக்கி விட முடியுமம என்று எதிர்பார்க்க இயலாது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், வெறும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்த பொழுது ஒரு ஒட்டு மொத்தமான வேலை நிறுத்தம் தமிழகத்திலே நடைபெற வேண்டுமென்று அறிக்கை வெளியிட்டோம். அந்த அறிக்கையிலே நான் ஒன்றைச் சேர்த்தேன். நமது கொள்கைக்கு விரோதமாகக் குழப்பத்தை விளைவிக்க விரும்புபவர்கள் நம்முடைய கூட்டத்திலே, ஊர்வலத்திலே கலந்து கொள்ளலாம்; அப்படி யாராவது இருந்தால் உடனே அவர்களைப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்று அறிக்கையிலே நான் வெளியிட்டிருந்தேன்.



ஆனால் 2 ஆம் தேதி நாங்கள் அப்படி எதிர்பார்க்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு மற்றவர்கள் தயாராக இருப்பார்கள், சமூக விரோதிகள் இருப்பார்கள் என்று எதிர்பார்க்காததன் விளைவு, அங்கே விபரீதத்தை உண்டாக்கி, சமூக விரோதிகளுக்கு ஒரு வாய்ப்பைத தந்து விட்டது.

இங்கே அதைப் பற்றி பேசும் பொழுது குறிப்பிட்டார்கள். காவல் நிலையத்தைத் தாக்குவது, உள்ளே புக முயற்சிப்பது, துப்பாக்கிகளைப் பறிப்பது, இவைகளையெல்லாம் செய்ய முயற்சித்து, அதன் காரணமாக ஆகாயத்திலே சுட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

நான் முதலமைச்சராக இருந்தாலும் கூட, நடந்த உண்மைகளைச் சொல்லியாக வேண்டும். கண் தெரியாத-பார்வையிழந்த ஒருவரை ஒரு குற்றவாளியாக்கி அவர் காவல் நிலையத்திற்குள்ளே புகுந்து இந்தப் பெரிய குற்றத்தைச் செய்ய முயற்சித்தார் என்று அவரைக் கொண்டு வந்து மாஜிஸ்ட்ரேட் முன் நிறுத்தினார்கள். அதற்குப் பிறகு அந்த நீதிபதி கண்டித்த பிறகு அந்த வழக்கிலிருந்து அவரை விடுவித்தார்கள்.

இதை நான் இங்கே குறிப்பிடும்பொழுது என் மேலேயே நான கல்லை எறிந்து கொள்கிறேன் என்று சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். இருந்தாலும் உண்மையைச் சொல்ல வேண்டும். இந்தத் தவறுகள் நடைபெறுகின்றன. சில சமயங்களில் காவல் துறையைச் சார்ந்தவர்கள் தாங்கள் செய்துவிட்ட தவறுகள் ஏதேனும் இருந்தால், அவைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக சில புனைந்துரைகளைச் சொல்வது, நாம் முன்னாலேயே எதிர்த்துப் பேசியிருக்கிற அந்த செய்திகள் தான். எதிர்க் கட்சியினராக இருக்கின்ற பொழுது சொன்னவைகளை இன்று நான் என் வாய் மூலமாக, உங்கள் சார்பாகச் சொல்வதாகத்தான் இதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் நான் இதை இங்கே சொல்லும்பொழுது, காவல் துறையினர் அத்தனை பேரும் நான் முன்பு சொன்னதைப் போலத் தவறான காரியங்களைச் செய்வதற்காகவே இருக்கின்றார்கள் என்று எடுத்துக் கொண்டால், தமிழகத்தில் இந்த அமைதி கூட இருந்திருக்க முடியுமா, இருக்க முடியுமா என்பதனை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இங்கே எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்புகளைச் சொன்னார்கள்; காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்; பத்தாயிரம் பேர்களைச் சேர்க்கப் போகிறோம் என்று சொன்னோம், எங்கே போயிற்று, காணோம்; சில நூற்றுக் கணக்கானவர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் குறை கூறினார்கள். அந்தக் குறையை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதை விரைவிலே நிறைவு செய்வேன் என்பதைப் பணிவோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், சில சட்டப் பிரச்சினைகள் வரும் பொழுது நம்முடைய நல்லுணர்வுகள் வேகமாகச் செயலாக்கப்பட முடியாமல் தடைப்படுத்தப்படுகின்றன என்பதை இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும். இப்பொழுது காவலர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், மேற்கு வங்காளத்திலே எத்தனை ஆயிரக் கணக்கான, இலட்சக் கணக்கான என்று சொல்ல வேண்டும், நான் கேள்விப் பட்ட பொழுது இரண்டு இலட்சத்திற்கும் மேல் அங்கே காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்—நம்மிடத்தில் 47,000, 48,000 தான் இருக்கிறார்கள்.

அங்கே நடந்திருக்கின்ற, அது போல பீகாரிலே மத்தியப் பிரதேசத்திலே, மற்ற இடங்களிலே நடைபெற்றிருக்கின்ற குற்றங்களையும், — நடந்தவை உண்மையான குற்றங்கள் தானா என்பதை இப்பொழுது நாம் சொல்ல முடியாது என்றாலும், பத்திரிகையிலே வந்த செய்திகள், கேள்விப் பட்டவைகள், அங்கிருந்து வந்த தகவல்கள் என்று வைத்துக் கொண்டால், நிச்சயமாக எவ்வளவோ குறைந்த அளவில்தான் தமிழகத்தில் குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இதைச் சொல்வதால் குறைந்த அளவுக்குக் குற்றம் நடந்தால் அது பரவாயில்லை என்று நான் சொல்வதாக யாரும் நினைத்துக் கொள்ள மாட்டார்கள். எந்த அளவிற்குக் குற்றங்களைக் குறைக்க வேண்டுமோ அதற்கு நாம் முயற்சிக்கிறோம். அந்தப் பொறுப்பு காவல் துறையினருக்கு மட்டும் தான் உள்ளது என்று இங்கேயிருக்கின்ற நம்மில் யாரும் அந்த எண்ணத்திற்கு அடிமையாகி விட மாட்டோம். ஒவ்வொரு தனி மனிதனும் இந்த முயற்சிக்கு ஒத்துழைத்தால் தான் நாட்டிலே குற்றங்கள், கலவரங்கள், குழப்பங்கள் குறைய முடியுமே தவிர எங்கு குழப்பங்கள் வரும், எங்கே கலவரம் வரும், அதைப் பெரிய போராட்டமாக, போர்க்களமாக ஆக்கி விடலாம் என்று விரும்புகின்றவர்கள் நம்மிடையே இல்லை—வெளியிலே இருந்தார்களானால் அப்படிப் பட்டவர்கள் இருக்கின்ற வரையில் நிச்சயமாக நம்முடைய முயற்சி அவ்வளவு பெரியதாக வெற்றி பெற முடியாது.

[பிற்பகல் 12-10]

அந்த வகையில் நான் ஒன்றை இங்கே என் கருத்து என்று அல்ல அரசினுடைய கருத்தாக சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் எவ்வளவு தீவிரமாக நடவடிக்கைகள் எடுத்து எப்படி இவைகளைக் குறைக்க வேண்டுமோ அப்படிக் குறைக்க வேண்டுமென்பது எங்களுடைய விருப்பம் என்பதை நான் கொஞ்சம் ஆழமாக அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் நம்பியாக வேண்டும். அதற்கு



சில உதாரணங்களை நான் சொல்ல முடியும். சில பத்திரிகைகளில் சில செய்திகள் மிகைப்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கே படித்துக் காட்ட முடியாத செய்திகளை எல்லாம் நான் ஆதார பூர்வமாக வைத்திருக்கிறேன்.

* * * * * *

அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நான் குறிப்பிட்ட இந்தச் சம்பவத்தை பத்திரிகைகளிலே வெளியிட வேண்டாமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இந்தக் குறிப்பிட்ட சம்பவம்பற்றி அவைக் குறிப்பிலும் இடம்பெற வேண்டாமென்று தெரிவிக்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : நன்றி. ஆனால் மன்றத்திலே இருப்பவர்களுக்கு உண்மை தெரிந்தாக வேண்டும் என்பதற்காகத் தான் அதைத் தெரிவித்தேன். இந்த வேதனையை எப்படி உங்களுக்குச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. பத்திரிகைகள் ஏதேதோ எழுதுகின்றன. மிகவும் பெரிதுபடுத்தி சமுதாயத்தின் முழு நிலையும் அப்படி ஆகிவிட்டது போல எழுதப் பெறுவதற்கு வேதனைப்படுகிறேன். அதற்காகத்தான் உண்மை நிலையை எடுத்து உங்களுக்குத் தெரிவித்தேன். எனினும் இதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவது தான் நமது பொறுப்பு என்று நான் சொன்னேன். இது போன்ற செய்தி பத்திரிகைகளில் மிகைப்படுத்தப்பட்டு வெளி வருகிறபோது அவற்றைத் தடுக்க முடியாதவாறு காவல் துறை இருப்பதுபோல செய்தி வெளிப்படுத்தப் பெறும்போது தான் மற்றவர்களுக்கும் சில வேளை தவறான துணிச்சலை ஏற்படுத்துகிறது; நாமும் இப்படிச் செய்தால் என்ன என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விடுகிறது; இந்த நிலையை நான் வேதனையோடு எண்ணிப் பார்க்கிறேன். சொல்லலாம்; பத்திரிகைகளில் இப்படிப்பட்ட செய்தி வரும்போது தான் பலருக்கு அதைப் பார்த்து 'சே' இவ்வளவு கொடுமையா என பலருடைய மனம் இரங்கலாம்; திருந்தலாம் என்று. ஆனால் இந்தச் செய்திகளை பலர் பார்க்கிறபோது நல்ல உணர்வு பெறுவதைவிட தவறான வழியிலே இழுத்துச் சென்றுவிடக்கூடிய சூழ்நிலைதான் மிகுதியாக ஏற்படுகிறது. இளைஞர்கள் திருந்துவதைவிட மாறாக செய்தித்தாள்கள் மிகைப்படுத்தி 'பருவப்பெண்', 'இத்தனை வயது' 'இப்படியெல்லாம் இருந்தார்கள்' என்றெல்லாம் சொல்வது அவர்களை தவறான பாதைக்குத்தான் கொண்டு செல்லும்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இந்த நிலையை உணர்ந்து பத்திரிகையிலே செய்தி வெளியிடுகின்றவர்கள் கொஞ்சம் எச்சரிக்கையாக அதைப் பற்றி மக்கள் மனதிலே அருவருப்பு ஏற்படுகின்ற வகையில் மற்றவர்கள் மனதிலே பீதி ஏற்படாத வகையில் அதே நேரத்தில் மற்றவர்கள் எந்த நேரத்திலும் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கின்றவர்களை எதிர்த்துத் தடுக்கக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு துணிச்சலையும் நல்லெண்ணத்தையும் உண்டாக்குகின்ற அளவுக்கு வெளியிடவேண்டும் என்ற அளவுக்கு இங்கே இருக்கிற அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

அதை நான் இங்கே இவ்வளவு அழுத்தமாகச் சொல்லுவதற்குக் காரணம் நாங்கள் இந்த இரண்டு மாத ஆட்சி நடத்துகின்ற இந்த இடைக்காலத்தில் எத்தனை குற்றங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் படித்துக் காட்டினார்கள். நான் இங்கே படித்துக் காட்டப் போவது போட்டிக்காக அல்ல. லாவணிக்காக அல்ல. நிலைமை எப்படி இருந்தது எப்படி இருக்கிறது என்பதை நாட்டு மக்களுக்கும் நமக்கும் தெரியவேண்டும் என்பதற்காக சொல்கிறேன். மற்றவர்கள் அதைக் கவனிக்காமல் விட்டுவிடுவார்கள் அல்லது அதைப்பற்றி மிகைப்படுத்திப் பேசுவது இல்லை அல்லது கவனிக்க மாட்டார்கள். வேண்டாத மனைவி கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்ற அளவுக்கு சிலவற்றை மிகப்படுத்தி செய்தி தருவதால் நல்ல எண்ணம் படைத்தவர்களுக்கும் ஆத்திரம் வருகிறது. அதன் விளைவாகவும் அதைப்பற்றிப் பேசுகிறார்கள் என்பதையும் நாம் எண்ணி அவர்களுக்குத் திருப்தி ஏற்படுத்துவதற்காக அல்லது உண்மையைத் தெரிந்துகொள்வதற்காக இந்தப் பட்டியலை படிப்பது என் கடமை என்று கருதுகிறேன்.

குடியரசுத் தலைவர் ஆட்சியில் நிகழ்ந்த குற்றங்களைப்பற்றிய செய்திகளை நான் படிக்கின்றேன்.

24—2—1980—கணவனோடு சென்ற பெண்ணைத் தூக்கிப் போய்க் கற்பழித்த 3 பேர்கள் கைது.

28—2—1980—அரிசன வீடுகள் தீயிட்டு சாம்பல், ஒருவர் படுகொலை.

2—3—1980—மாஜி பஞ்சாயத்துத் தலைவர் கொலையா. கொலை என்று போட்டு கேள்விக்குறி.

4—3—1980—சென்னையில் கோஷ்டி கலவரத்திலே அரிவாள் கம்புகளோடு தாக்குதல்.

8—3—1980—மர்மக் கொலை. கிணற்றிலே சமூக சேவகி சடலம் மீட்பு—நாற்காலியோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தாள்.



—3—1980—மதுரையில் இளம் மாணவர்கள் கடத்தல்.

6—3—1980—விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர் காவல் நிலையத்தில் தீக்குளிப்பு.

பத்திரிகையின் பெயரைப் படிக்கவேண்டும் என்றாலும் படிக்கிறேன்.

13—3—1980—நக்சல்பாரி செயலர்—மாஜி எம்.எல்.ஏ. போலீஸ்காரருக்கும் கத்திக்குத்து.

14—3—1980—44 பேர் மீது வழக்கு. இருவர் கைது. விழுப்புரம் தாலுகா இந்திரா காங்கிரஸ் தலைவர் அவர் தம்பி தாக்கப்பட்டு காயம்.

17—3—1980—சாமியார் தூண்டுதல்—நரபலி, மதுராந்தகம் அருகே குழந்தை கொலை—தந்தை கைது.

17—3—1980—மேஜையோடு ரூ. 39,000 ரொக்கம் காணோம். உத்தரமேரூர் சம்பவம்.

17—3—1980—ஓடும் பஸ்ஸில் ரூ. 27,000 நூதன முறையில் களவு.

18—3—1980—திருமுல்லைவாயிலில் கோஷ்டி மோதல் 6 பேர் காயம். திண்டிவனம் அருகே ஒருவர் கொலை தாக்கியா தற்கொலையா ?

21—3—1980—பட்டப்பகலில் சென்னையில் வங்கியில் துணிகரக் கொள்ளை.

23—3—1980—பத்தாவது படித்தவள் மாயமாக மறைந்தாள். பள்ளிக்குச்சென்ற மாணவி கடத்தல்.

28—3—1980—வால்பார் சுட்டுக் கொலை. சொத்துத் தகராறு.

[பிற்பகல் 12-20]

28—3—1980—பரமக்குடியில் சம்பவம்—சைக்கிள் ரிக்ஷாவில் சென்ற முன்னாள் பஞ்சாயத்து தலைவர் படுகொலை.

28—4—1980—அரசன்கட்டநல்லூர் அருகில் விழாவையொட்டி மோதல்.

30—4—1980—பால்குடியில் போலீஸ் நிலைய பந்தலில் தீ.

4—4—1980—1. தூங்கிய பெண்ணின் தாலி திருட்டு.

2. பெண் விவகாரம்— ஒருவர் கொலை.

5—5—1980—லேவாதேவிக்காரர் வெட்டப்பட்டு படுகாயம்.

7—5—1980—பிடிக்க வந்த நபரை திருடன் கத்தியால் தாக்கிக் கொலை.

10—5—1980—நகையாகவும், பணமாகவும் 59 ஆயிரம் ரூபாய் மோசடி செய்ததாக பெண் சாமியார் கைது.

11—5—1980—திருவெள்ளரை கோவிலில் வைரமாலைகள் காணோம்.

16—5—1980—தகப்பன், மகள், 2 மகன்கள் கொலை (மற்றொரு மகனும், மருமகளும் கைது).

17—5—1980—மிராசுதார் உட்பட மூவர் குண்டுகளை வீசி படுகொலை.

19—5—1980—தூத்துக்குடியில் போலீஸ் சுட்டது.

19—5—1980—பி.டி.ஸி. டிரைவருக்கு கத்திக்குத்து.

20—5—1980—அடிக்கடி பணம் கேட்டு தொல்லை தந்த மகன் கொலை (தந்தை கைது).

21—5—1980—திருச்சியில் விவசாயிகள் ஊர்வலத்தில் வன்முறை போலீஸ் தடியடி.

22—5—1980—தர்மபுரி பகுதியில் மிராசுதார் கொலை.

23—5—1980—மாந்தோப்பு குத்தகைக்காரர் கொலை.

24—5—1980—முன்னாள் அரசு தலைமைச் செயலர் வீட்டில் ரூ. 2 இலட்சம் களவு.



6—3—1980—மதுரையில் இளம் மாணவர்கள் கடத்தல்.

10—3—1980—விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர் காவல் நிலையத்தில் தீக்குளிப்பு.

பத்திரிகையின் பெயரைப் படிக்கவேண்டும் என்றாலும் படிக்கிறேன்.

13—3—1980—நக்சல்பாரி செயலர்—மாஜி எம்.எல்.ஏ. போலீஸ்காரருக்கும் கத்திக்குத்து.

14—3—1980—44 பேர் மீது வழக்கு. இருவர் கைது. விழுப்புரம் தாலூகா இந்திரா காங்கிரஸ் தலைவர் அவர் தம்பி தாக்கப்பட்டு காயம்.

17—3—1980—சாமியார் தூண்டுதல்—நரபலி, மதுராந்தகம் அருகே குழந்தை கொலை—தந்தை கைது.

17—3—1980—மேஜையோடு ரூ. 39,000 ரொக்கம் காணோம் உத்தரமேரூர் சம்பவம்.

17—3—1980—ஓடும் பஸ்ஸில் ரூ. 27,000 நூதன முறையில் களவு.

18—3—1980—திருமுல்லைவாயிலில் கோஷ்டி மோதல் 6 பேர் காயம். திண்டிவனம் அருகே ஒருவர் கொலை தாக்கியா தற்கொலையா ?

21—3—1980—பட்டப்பகலில் சென்னையில் வங்கியில் துணிகரக் கொள்ளை.

23—3—1980—பத்தாவது படித்தவள் மாயமாக மறைந்தாள். பள்ளிக்குச்சென்ற மாணவி கடத்தல்.

28—3—1980—வாலிபர் சுட்டுக் கொலை. சொத்துத் தகராறு.

[பிற்பகல் 12-20]

28—3—1980—பரமக்குடியில் சம்பவம்—சைக்கிள் ரிக்ஷாவில் சென்ற முன்னாள் பஞ்சாயத்து தலைவர் படுகொலை.

28—4—1980—அரகண்டநல்லூர் அருகில் விழாவையொட்டி மோதல்.

30—4—1980—லால்குடியில் போலீஸ் நிலைய பந்தலில் தீ.

4—4—1980—1. தூங்கிய பெண்ணின் தாலி திருட்டு.
2. பெண் விவகாரம்— ஒருவர் கொலை.

5—5—1980—லேவாதேவிக்காரர் வெட்டப்பட்டு படுகாயம்.

7—5—1980—பிடிக்க வந்த நபரை திருடன் கத்தியால் தாக்கிக் கொலை.

10—5—1980—நகையாகவும், பணமாகவும் 59 ஆயிரம் ரூபாய் மோசடி செய்ததாக பெண் சாமியார் கைது.

11—5—1980—திருவெள்ளரை கோவிலில் வைரமாலைகள் காணோம்.

16—5—1980—தகப்பன், மகள், 2 மகன்கள் கொலை (மற்றொரு மகனும், மருமகளும் கைது).

17—5—1980—மிராசுதார் உட்பட மூவர் குண்டுகளை வீசி படுகொலை.

19—5—1980—தூத்துக்குடியில் போலீஸ் சுட்டது.

19—5—1980—பி.டி.சி. டிரைவருக்கு கத்திக்குத்து.

20—5—1980—அடிக்கடி பணம் கேட்டு தொல்லை தந்த மகன் கொலை (தந்தை கைது).

21—5—1980—திருச்சியில் விவசாயிகள் ஊர்வலத்தில் வன்முறை போலீஸ் தடியடி.

22—5—1980—தர்மபுரி பகுதியில் மிராசுதார் கொலை.

23—5—1980—மாந்தோப்பு குத்தகைக்காரர் கொலை.

24—5—1980—முன்னாள் அரசு தலைமைச் செயலர் வீட்டில் ரூ. 2 இலட்சம் களவு.



7—5—1980—தீ விபத்தை அடுத்து வேலூரில் ரகளை, போலீஸ் பிரம்படி.

1—5—1980—டெபுடி கலெக்டரைத் தாக்கி சென்னையில் துணிகர கொள்ளை.

5—5—1980—சாராய கோஷ்டிகள் மோதல் (கொலை).

10—5—1980—பேய் ஓட்டுவதாக ரூ. 60,000 மோசடி (பெண் சாமியார் கைது).

13—5—1980—அரிவாள் வெட்டு, வாலிபர் கை துண்டிப்பு.

15—5—1980—கங்கை அமரன் மனைவியிடம் வழிப்பறி.

18—5—1980—மனைவிக்குப் பரிந்துகொண்டு சண்டைக்கு போனவர் கொலை.

18—5—1980—குமாஸ்தாவை ஏமாற்றி ரூ. 14,000 அபேஸ்.

17—5—1980—வெடிகுண்டு வீசி 3 பேர் கொலை.

19—5—1980—குண்டு பாய்ந்து ஒருவர் சாவு.

23—5—1980—தலையில் கல்லைப்போட்டு மனைவி படுகொலை (தொழிலாளி கைது).

24—5—1980—அண்ணா தி.மு.க. பிரச்சார காருக்கு தீவைப்பு.

24—5—1980—ரூ. 6 இலட்சம் மதிப்புள்ள நகைகள் கொள்ளை.

27—5—1980—2 போலீசாருக்கு கத்திக் குத்து.

1—6—1980—ஓட்டுச் சாவடியில் கொலை.

5—6—1980—அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ. தம்பி படுகொலை.

8—6—1980—6 மாத குழந்தை கிணற்றில் பிணமாக மிதந்தது.

திரு. ப. நெடுமாறன்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் படித்த பட்டியலை படித்த பட்டியலையும், இப்போது தாங்கள் படித்த பட்டியலையும் பார்க்கும்போது அல்லது அதை கேட்கும்போது எதிர்காலத்தில் அச்சம் தரும் சூழ்நிலைகளை மக்களுக்கு ஏற்படுத்திவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன்.

ாத்தாக வேண்டும். தொழிலாளர்களுடைய நலனையும் பாது
ாத்தாக வேண்டும். ஆகவே இந்த அரசைப் பொறுத்தவரை
யில் தொழில் முடக்கம், வேலை நிற்பது என்கிற நிலைமையை
அனுமதிக்க முடியாது என்ற வகையிலும் அதே நேரத்தில் தொழி
லாளர்களுடைய உரிமைகள் பறிக்கப்படாமல் காப்பாற்றப்
படுவதற்கு போலீஸ் பயன்படுத்தப் பெறும் என்ற வகையிலும்
இந்த அரசினுடைய கொள்கையை நான் தெரிவிக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

சிலர் சொல்லலாம், இந்தப் பக்கம் பாதுகாப்புத் தருவதாகச்
சொல்கிறார்கள், அந்தப் பக்கமும் பாதுகாப்புத் தருவதாக
சொல்கிறார்கள் என்று. தொழில்துறையைக் காப்பாற்ற
வேண்டும் என்ற நிலைமையில், என்னைப் பொறுத்தவரையில்
வேலை நிறுத்தம் என்பது இறுதியாக, தவிர்க்கமுடியாத
நிலைமையில் எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு ஆயுதம் ஆகும்
என்பேன். அந்த வகையில் இந்த அரசை எப்படி பயன்படுத்திக்
கொள்ள வேண்டுமோ அப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
தொழில் அதிபர்களிடம் உரிமைகளை எப்படிப்பெற வேண்டுமோ
அப்படிப் பெறுவதற்கு பேச்சு வார்த்தைகள் மூலம், அல்லது
சட்ட நுணுக்கங்களைப் பற்றி பேச்சு நடத்தி, எப்படி எப்படி
யெல்லாம் செய்யவேண்டுமோ அப்படியெல்லாம் செய்து நமக்கு
சாதகமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர யாரோ
சிலர் போராட்டத்தைத் தூண்டி விட்டு, ஒரு தொழிற் சங்கத்தில்
50 பேர்கள் 100 பேர்கள் இருந்தாலும் கூட, சங்கம் என்றுவைத்து
விட்டார்களோ, அவர்களை எப்படிக் கைவிடுவது என்று பெரிய
சங்கங்கள் எல்லாம் ஆதரவு கொடுக்கிற ஒரு நிலைமை எல்லாம்
இருப்பது நாட்டுக்கு நல்லது அல்ல என்பது என் முடிவு.

ஆகவே, எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும், தொ
ழிலாளர்கள் குறைந்தது 60 சதவீதம் பேர்கள் ஒன்று சேர்ந்து,
சங்கங்கள் வேறுபாடின்றி அவர்களை ஒன்று பட்டு ஒரு முடிவுக்கு,
அது 12(3) செட்டில்மெண்ட் என்று சொல்கிறார்களே அந்தவகை
யிலானாலும் அல்லது எவ்வளவு ஊதியம், எவ்வளவு போனஸ்
அல்லது எவ்வளவு அதிகப்படி கொடுப்பது என்பதையெல்லாம்
எப்படி எப்படி வகுத்துக் கொள்ள வேண்டுமோ அப்படி எல்லாம்
அந்த முடிவு எடுக்கும்போது 100க்கு 60 பேர்கள் உள்ள, அனைத்
துச் சங்கங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் வாக்களித்து
அதை ஏற்றுக் கொள்வார்களேயானால், அது உடனடியாக நடை
முறைப் படுத்த வேண்டும். அது வேலைநிறுத்தம் ஆனாலும்
சரி, ஒப்பந்தம் ஆனாலும் சரி அப்படித்தான் முடிவு எடுக்க வேண்
டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக வைக்கிறேன். பல
முறை சொல்லியும் வந்திருக்கிறேன்.

அந்த வகையில் காவல் துறையைப் பொறுத்தவரையில்
சொல்லப்போனால் தொழிற்சாலைகளை சிலர் அழிப்பதை
அனுமதிக்க வேண்டும் என்று நிச்சயமாக இந்த மன்றத்தில் உள்ள



27—5—1980—தீ விபத்தை அடுத்து வேலூரில் ரகளை, போலீஸ் பிரம்படி.

31—5—1980—டெபுடி கலெக்டரைத் தாக்கி சென்னையில் துணிகர கொள்ளை.

5—5—1980—சாராய கோஷ்டிகள் மோதல் (கொலை).

10—5—1980—பேய் ஓட்டுவதாக ரூ. 60,000 மோசடி (பெண் சாமியார் கைது).

13—5—1980—அரிவாள் வெட்டு: வாலிபர் கை துண்டிப்பு.

15—5—1980—தங்கை அமரன் மனைவியிடம் வழிப்பறி.

18—5—1980—மனைவிக்குப் பரிந்துகொண்டு சண்டைக்கு போனவர் கொலை.

18—5—1980—குமாஸ்தாவை ஏமாற்றி ரூ. 14,000 அபேஸ்.

17—5—1980—வெடிகுண்டு வீசி 3 பேர் கொலை.

19—5—1980—குண்டு பாய்ந்து ஒருவர் சாவு.

23—5—1980—தலையில் கல்லைப்போட்டு மனைவி படுகொலை (தொழிலாளி கைது).

24—5—1980—அண்ணா தி.மு.க. பிரச்சார காருக்கு தீவைப்பு.

24—5—1980—ரூ. 6 இலட்சம் மதிப்புள்ள நகைகள் கொள்ளை.

27—5—1980—2 போலீசாருக்கு கத்திக் குத்து.

1—6—1980—ஓட்டுச் சாவடியில் கொலை.

5—6—1980—அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ. தம்பி படுகொலை.

8—6—1980—6 மாத குழந்தை கிணற்றில் பிணமாக மிதந்தது.

திரு. ப. நெடுமாறன்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
படித்த பட்டியலையும், இப்போது தாங்கள் படித்த பட்டியலை
யும் பார்க்கும்போது அல்லது அதை கேட்கும்போது எதிர்காலத்
தில் அச்சம் தரும் சூழ்நிலைகளை மக்களுக்கு ஏற்படுத்திவிடுமோ
என்று நான் அஞ்சுகிறேன்.

[பிற்பகல் 12-40]

அதே நேரத்தில் அரசாங்கம் தலையிட்டு யார் யார் இரகசியமாக வாக்களிக்கவேண்டுமோ வாக்களியுங்கள் என்று அந்தப் பொறுப்பை ஏற்பது எதிர்காலத்தில் ஏதாவது ஒரு சங்கம் அல்லது ஒரு கட்சிக்கு நாம் ஆதரவு தருவதுபோல் ஒரு எண்ணத்தை உருவாக்கவோ அல்லது அப்படிப்பட்ட ஒரு சிக்கலை உருவாக்கவோ காரணமாகிவிடும் என்பதால் அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்காமல் சங்கத் தலைவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் எங்கள் எண்ணம் என்றாலும் இதுபற்றி சட்டம் வர இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதைப்பற்றி அனைத்து கட்சித் தலைவர்களுடன் பேசித்தான் முடிவு எடுக்கவேண்டும் என்று சொன்னாலும் கூட அதையும் இந்த அரசு செய்யத் தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விழைகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எந்தக் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சிக்குப் பாதுகாப்பும் அந்தக் கட்சி வளர வேண்டும் என்று விரும்புவதும் ஒரு அரசாங்கத்தினுடைய, அண்ணாவின் கொள்கைகளை பின்பற்றி வாழவேண்டும் செயல்பட வேண்டும் என்று விரும்புகிற ஒரு கட்சியின் தலையாய கடமையாகும். ஆனால் பிரிந்து வருவது சேருவது விலகுவது என்பதெல்லாம் தனிப்பட்டவர்களுடைய கருத்துக்களே தவிர அதற்காக யாராவது வற்புறுத்துகிறார்கள் அல்லது வேலை செய்கிறார்கள் என்று எண்ணினால் அதைப்பற்றி விவாதிக்க நான் நிச்சயமாக தயங்க மாட்டேன்.

நான் இதைச் சொல்லும்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன எண்ணிக்கொண்டிருப்பார்கள் என்று எனக்குத் தெரியும். அவருக்காகவே சொல்கிறேன். அதைப்பற்றி நான் அவர்களோடு பேசத் தயாராயிருக்கிறேன். இந்த 3 ஆம் தேதி ஏதோ கூட்டம் நடைபெறப்போகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். முதல் அமைச்சர் என்ற முறையில் நான் சொல்கிறேன். 3 ஆம் தேதி அந்த மாநாடு இல்லை. அதற்கு நான் இன்னும் ஒப்புதல் தரவில்லை. ஒருவர் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் இன்னொரு கட்சிக்குப் போய் சேர்ந்திருக்கிறார் என்றால் அது அவரது சொந்தப் பொறுப்பாகும். ஏன் விலகினார் என்பது அவருடைய தனிப்பட்ட பிரச்னை. ஆனால் ஒரு கட்சியில் சேருகிறார் என்றால் அந்தக் கட்சியின் கொள்கையை ஏற்று சேருகிறார் என்பது அது வேறு. ஆனால் நாங்கள் அதற்காக இந்த ஆட்சியில் இருக்கிற சட்ட பூர்வமான வலுவை அல்லது வாய்ப்பை நாங்கள் பயன்படுத்திக் கொள்ளமாட்டோம்





என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்களுக்கு முதல் அமைச்சர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றி. ஆனால் ஒரு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் காங்கிரஸ் ஊழியர்கள் மாநாடு நடத்துவதற்கு என்ன தகுதியிருக்கிறது? அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் ஆதரவு அளிக்கிறாரா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அது அவர்கள் கட்சிக்குள் உள்ள பிரச்னை. அதுபற்றி முதல் அமைச்சர் என்ற முறையில் எதுவும் சொல்ல முடியாது. தனிப்பட்ட முறையில் எம்.ஜி.ஆர். வெளியே வந்து கேட்டால பதில் சொல்லலாம்.

திரு. நா. சுந்தரராஜ்: எங்கள் கட்சிக்குள் இப்போது பிரச்னை இல்லை. ஆனால் திரு. துரை ராமசாமி எம்.எல்.ஏ. உங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர். அவர்கள்தான் இந்த கார்ட் அடித்து அவர் மூலமாக இன்றைய தினம் அச்சுறுத்தி, அரசுத் துறையைச் சேர்ந்தவர்களை வைத்து மிரட்டி இன்று கட்சிக்கு ஆள் சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. துரைராமசாமி அவர்கள் ஒரு கட்சியிலிருந்து விலகினார் அல்லது விலக்கப்பட்டார். அது அவருடைய பிரச்னை. அவர் பதில் சொல்ல வேண்டும். அவர் இப்போது மன்றத்தில் இல்லை. அவர் இருந்தால் சொல்லியிருப்பார். அவர் அவர்களுடைய நண்பர்களைக் கூட்டி ஒரு மாநாடு நடத்தி, அதற்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைவர் அல்லது தொண்டன் அல்லது பிரதிநிதி யாரோ ஒருவர் கலந்து கொள்ளவேண்டும்; அங்கே அவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அதற்கும் முதல் அமைச்சருக்கும் சம்பந்தம் கிடையாது. ஆனால் எம்.ஜி.ஆர். என்ற முறையில் நான் முதல் அமைச்சராக இருக்கிற நிலையில் நான் மனம் விட்டு சொல்லவேண்டும் என்றால் அதை எவ்வளவு தூரம் தள்ளிப்போட்டு எவ்வளவு தூரம் தடைப்படுத்த முடியுமோ அந்தப் பணியை மக்கள் சிந்திக்க வாய்ப்பு கொடுக்க முடியுமோ என்பதை மட்டும் நான் செய்துகொண்டிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

காத்தாக வேண்டும். தொழிலாளர்களுடைய நலனையும் பாது
காத்தாக வேண்டும். ஆகவே இந்த அரசைப் பொறுத்தவரை
யில் தொழில் முடக்கம், வேலை நிற்பது என்கிற நிலைமையை
அனுமதிக்க முடியாது என்ற வகையிலும் அதே நேரத்தில் தொழி
லாளர்களுடைய உரிமைகள் பறிக்கப்படாமல் காப்பாற்றப்
படுவதற்கு போலீஸ் பயன்படுத்தப் பெறும் என்ற வகையிலும்
இந்த அரசினுடைய கொள்கையை நான் தெரிவிக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

சிலர் சொல்லலாம், இந்தப் பக்கம் பாதுகாப்புத் தருவதாகச்
சொல்கிறார்கள், அந்தப் பக்கமும் பாதுகாப்புத் தருவதாக
சொல்கிறார்கள்' என்று. தொழில்துறையைக் காப்பாற்ற
வேண்டும் என்ற நிலைமையில், என்னைப் பொறுத்தவரையில்
வேலை நிறுத்தம் என்பது இறுதியாக, தவிர்க்கமுடியாத
நிலைமையில் எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு ஆயுதம் ஆகும்
என்பேன். அந்த வகையில் இந்த அரசை எப்படி பயன்படுத்திக்
கொள்ள வேண்டுமோ அப்படிப் பயன்படுத்தி: தொழிலாளர்
தொழில் அதிபர்களிடம் உரிமைகளை எப்படிப்பெற வேண்டுமோ
அப்படிப் பெறுவதற்கு பேச்சு வார்த்தைகள் மூலம், அல்லது
சட்ட நுணுக்கங்களைப் பற்றி பேச்சு நடத்தி, எப்படி எப்படி
யெல்லாம் செய்யவேண்டுமோ அப்படியெல்லாம் செய்து நமக்கு
சாதகமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர யாரோ
சிலர் போராட்டத்தைத் தூண்டி விட்டு, ஒரு தொழிற் சங்கத்தில்
50 பேர்கள் 100 பேர்கள் இருந்தாலும் கூட, சங்கம் என்றுவைத்து
விட்டார்களே, அவர்களை எப்படிக் கைவிடுவது என்று பெரிய
சங்கங்கள் எல்லாம் ஆதரவு கொடுக்கிற ஒரு நிலைமை எல்லாம்
இருப்பது நாட்டுக்கு நல்லது அல்ல என்பது என் முடிவு.

ஆகவே, எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும், தொ
ழிலாளர்கள் குறைந்தது 60 சதவீதம் பேர்கள் ஒன்று சேர்ந்து,
சங்கங்கள் வேறுபாடின்றி அவர்களை ஒன்றுபட்டு ஒரு முடிவுக்கு,
அது 12(3) செட்டில்மெண்ட் என்று சொல்கிறார்களே அந்தவகை
யிலானாலும் அல்லது எவ்வளவு ஊதியம், எவ்வளவு போனஸ்
அல்லது எவ்வளவு அதிகப்படி கொடுப்பது என்பதையெல்லாம்
எப்படி எப்படி வகுத்துக் கொள்ள வேண்டுமோ அப்படி எல்லாம்
அந்த முடிவு எடுக்கும்போது 100க்கு 60 பேர்கள் உள்ள, அனைத்
துச் சங்கங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் வாக்களித்து
அதை ஏற்றுக் கொள்வார்களேயானால், அது உடனடியாக நடை
முறைப் படுத்த வேண்டும். அது வேலைநிறுத்தம் ஆனாலும்
சரி, ஒப்பந்தம் ஆனாலும் சரி அப்படித்தான் முடிவு எடுக்க வேண்
டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக வைக்கிறேன். பல
முறை சொலலியும் வந்திருக்கிறேன்.

அந்த வகையில் காவல் துறையைப் பொறுத்தவரையில்
சொல்லப்போனால் தொழிற்சாலைகளை சிலர் அழிப்பதை
அனுமதிக்க வேண்டும் என்று நிச்சயமாக இந்த மன்றத்தில் உள்ள



யாரும் சொல்லமாட்டார்கள். அந்தச் சொத்துக்களைக் காப்
பாற்றுவதற்கு அரசு காவல் துறையைப் பயன்படுத்துவதைத்
தவிர்க்க வேண்டும் என்று யாரும் சொல்லமாட்டார்கள். இந்த
மன்றத்தில் உள்ள ஒவ்வொருவரும் அதை ஒப்புக் கொள்வார்கள்.
அதை இந்த அரசு செய்துதான் ஆக வேண்டும்.

ஆனால் அதே நேரத்தில் தொழிலாளர்களுடைய உரிமை
பாதிக்கப்படாமல் அவர்களை விலைக்கு வாங்க முயற்சிக்கிற
வகையில் துணிச்சலை தொழில் அதிபர்களுக்குக் கொடுப்பதற்
கான நிலைமையையும் இந்த அரசு உருவாக்கித் தராது என்பதை
யும் நான் தெள்ளத் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன்.

அப்படி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் பட்டினி
கிடந்து அவதியுறும் நிலைமையில் வேறு வழியின்றி தன்த்தனி
யாக கையெழுத்துப் போட்டுவிட்டு தொழிலுக்குச் செல்லலாம்
என்கிற நிலைமையை உருவாக்குவதற்கும் இந்த அரசு நிச்சயமாக
ஆதரவு தராது. அதைப்போலவே வன்முறையில் ஈடுபடுபவர்
களுக்கும் இந்த அரசு நிச்சயமாக ஒத்துழைப்பு தராது என்
பதையும் இந்த நேரத்தில் தெளிவு படுத்த விரும்புகிறேன்....

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே,
12(3) செட்டில்மெண்ட் ஒப்பந்தம் பற்றி சொல்லி வருகையில்
தொழிலாளர்களில் 60 சதவீதத்தினர் அந்த முடிவினை ஒப்புக்
கொள்வதாகத் தெரிவித்தால்தான் அது செயலாற்றப்பெற
வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல
தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. ஆகவே சீக்ரட் பேலட் முறை
யில் அவர்களுடைய விருப்பங்களை அறிய ஒரு முறையினை அர
சாங்கம் கொண்டு வந்தால், அவர்கள் அனைவரின் எண்ணத்தை
யும் அறிய வாய்ப்பு ஏற்படும் அல்லது வேறு வழிமுறை ஏதாவது
முதல் அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
தலைவர் அவர்களே, இதைப்பற்றி நான் முன்பே சொல்லியிருக்
கிறேன். அதாவது அனைத்துச் சங்கங்களிலே இருக்கிற உறுப்
பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாக்களிக்க வேண்டும் என்று
நான் சொன்ன யோசனையை இங்கே இருக்கிற பொது உடைமை
கட்சித் தோழர்களின் தலைவர்கள் விவாதிக்கத் தயாராக இருக்
கிறார்கள் என்பது மட்டுமல்ல, வங்காளத்திலிருந்து வந்திருந்த
வங்காள முதலமைச்சர் அவர்களிடம் இதைப்பற்றி நான் சொன்ன
போது, 'இது நல்ல முறைதான், இதை முயற்சிப்பது நல்லதுதான்,
என்று சொன்னார்கள்' என்று சொன்னது என்னுடைய எண்ணத்
திற்குப் பாதுகாப்பு மகிமையை ஏற்படுத்துகிறது என்பதற்காகச்
சொல்கிறேன்.

பத்திரிக்கைகளில் செய்திகள் எப்படி வெளியிடப்படுகின்றன என்பதற்கு ஒரு உதாரணத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

கோபி தாலுகா, சித்தாம்பாளையம் கிராமத்தில் சுமார் 13 வருடங்களுக்கு முன்னர் வீரப்பன்பாளையத்திலிருந்து குடி பெயர்ந்து வந்த பச்சைக் கவுண்டர் அங்கே 6 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கி விவசாயம் செய்து வந்தார். அதாவது 5 நபர்களை வீட்டிற்குள் பூட்டி தீவைத்துக் கொளுத்தினார்கள் என்றார்களே அதைப்பற்றிய விளக்கம்—அந்த நிலத்திற்கு அடுத்து அமைந்துள்ள நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகிய சென்னிமலைக் கவுண்டர் மற்றும் சென்னியப்ப கவுண்டர் ஆகியோருக்கும் பச்சை கவுண்டருக்கும் இடையே வாய்க்கால் காரணமாகத் தகராறு இருந்து வந்தது. இது தொடர்பாகப் போடப்பட்டிருந்த வழக்கில் பச்சைக் கவுண்டருக்குச் சாதகமாக கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ்வழக்கின் முதல் குற்றவாளியாகிய சுப்பிரமணியன் சென்னிமலைக் கவுண்டர் மற்றும் சென்னியப்ப கவுண்டர் மகன்களுக்கும் தனது இரு மகள்களையும் மணம் முடித்துக் கொடுத்துள்ளார். எனவே கிராம பஞ்சாயத்து வழக்குகளில் இவர் சம்பந்திகளுக்கு ஆதரவாகவே நடந்துகொண்டு வந்திருக்கிறார். பச்சைக் கவுண்டர் குடும்பத்தில் உண்டான பகைமை தீரவில்லை. மேலும் 11 வருடங்களுக்கு முன்பு முதல் குற்றவாளியாகிய சுப்பிரமணியத்தின் மகன் அருணாசலத்திற்கும் பச்சை கவுண்டர் மகள் கருப்பாயிக்கும் சுப்பிரமணியன் விருப்பத்திற்கு மாறாக பச்சைக் கவுண்டரால் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. பின்னர் இந்தத் திருமணம் முறிவுற்றது. இதன் காரணமாக இரு குடும்பங்களுக்கும் இடையே பகைமை இருந்து வந்தது.

இரண்டாவது குற்றவாளியாகிய ராஜனுக்கு முதல் குற்றவாளியாகிய சுப்பிரமணியன் மாமனார் ஆவார். சம்பவம் நடப்பதற்கு 3 நாட்களுக்கு முன்னதாக தீ விபத்தில் இறந்து போன முத்துச்சாமியினுடைய கோழி ஒன்று ராஜன் மாட்டுத் தொழுவத்தில் மேய்ந்தபோது, அதை ராஜன் குடும்பத்தினர் பிடித்து வைத்துக்கொண்டனர். 2—7—1980 அன்று காலை அதனை சம்பவ தினமான அவரது தாயும் சென்று அந்தக் கோழியைத் திருப்பித் தரவேண்டுமென்று கேட்டபோது, ராஜன் மறுத்ததினால் தகராறு ஏற்பட்டது. இதன் பிறகு ராஜன் தன்னுடைய மாமனாராகிய சுப்பிரமணியத்திடம் புகார் செய்திருக்கிறார். சுப்பிரமணியன் ராஜன் இருவரும் மூன்றாவது எதிரியாகிய பழனிச்சாமியை பச்சைக் கவுண்டன் மகன் முத்துச்சாமியின் நடத்தைகளை கவனித்து வரும்படியும், எல்லோரும் ஒன்றாக இருக்கையில் ஒரே முயற்சியில் அனைவரையும் தீர்த்து விடலாம் என்று கூறியுள்ளார். அதன்படியே ராஜன் 2—7—80 அன்று இரவு 9.30 மணி அளவில் சுப்பிரமணியத்தின் வீட்டிற்குச் சென்று



மூவரும் ஒன்றுசேர்ந்து முத்துச்சாமி கவுண்டரின் வீட்டிற்கு தீ வைத்துக் கொளுத்துவது என்று முடிவு செய்தனர். அதன்படி முத்துச்சாமியின் வீட்டை நெருங்கியவுடன், அவரது வீட்டை பூட்டிவிட்டனர். அதன்பிறகு கூரை மீது மண்ணெண்ணையை ஊற்றி, வீட்டிற்கு தீ வைத்தார்கள். இதனால் வீட்டிற்குள் உறங்கிக்கொண்டிருந்த ஐவரும் தீயினால் சூழ்கடிக்கப்பட்டு, கருகி இறந்து விட்டனர். இதில் பச்சை கவுண்டர் என்பவர், வயது 85, வீட்டின் முன்புறத்தில் படுத்திருந்தவர் ஏதும் செய்ய இயலாத நிலையில் தன்னைக் காப்பாற்றிக் கொண்டார். சற்றுத் தொலைவில் இருந்தவர்கள் தீ அணைப்பு முயற்சியில் ஈடுபட்டும் பயனில்லை. இந்த வழக்கு சம்பந்தமாகத் தொடர்புடைய சுப்பிரமணியம் 11—7—1980 அன்று உஞ்சனூர் கிராம முன்சீப்பிடம் சரணாகி, ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேலும், ராஜன், பழனிச்சாமி ஆகிய இருவரும் ஈரோடு புகைவண்டி நிலையத்தில் 12—7—1980 அன்று கைது செய்யப்பட்டிருக்கின்றனர் இவர்கள் மூவரும் தற்போது காவல் துறையின் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இக்குற்றத்தில் பயன்படுத்தப்பட்ட தடயங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டுள்ளன. வழக்கு விசாரணையில் உள்ளது. அவைகளைப் பற்றி இங்கே கூறக்கூடாது என்பதால்தான் மேலெழுந்தவாரியாக இதைக் குறிப்பிட்டேன்.

இதை நான் இங்கே சொன்னதற்குக் காரணம், ஏதாவது ஒரு தீ வைப்பு அல்லது கொலை என்றவுடனேயே அதற்கு ஜாதி முலாம் பூசப்படுவது அல்லது மதச் சார்புடையது என்று சொல்லி அதனால் வேறுபட்ட நிலையைச் சொல்வது, அதைப்பற்றி கற்பனை செய்வது இயற்கையாக, வழக்கமாக ஆகிவிட்ட ஒரு நிலைமையில் இன்றையதினம் நாட்டிலே இருக்கின்ற பத்திரிக்கைகள் செய்திகள் வெளியிடுவது என்கிற ஒரு நிலைமை உருவாகி விட்டதோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது. எதற்கெடுத்தாலும், எங்காவது ஒரு குடிசைக்குள் ஒரு தாழ்த்தப்பட்டவன் இருந்தால், அவனை ஜாதி இந்துக்கள் கொடுமை செய்தார்கள் என்று சொல்வது. அதைப்போல், ஏதாவது ஒரு முஸ்லிம் நடந்து கொண்டு போயிருந்தால் போதும், அவர்மீது கடுமையான குற்றத்தைச் சாட்டுவது என்றெல்லாம் கற்பனையாகச் சொல்லப்படுகிறது.

இங்கே முஸ்லிம் லீக் உறுப்பினர் அவர்கள் பாலக்கோட்டைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி நான் தெளிவாகச் சொல்லவேண்டும் என்று அவர்கள் விரும்ப மாட்டார்கள், காரணம் வழக்கு இருக்கிறது என்பது அவர்களுக்கும் தெரியும். ஒரு சிறு கடையில் ஒரு பொருள் வாங்கச் சென்றவனுக்கும், விற்பனை செய்யக்கூடியவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு மிகப் பெரிய போராட்டமாக மாறிவிட்டது என்பதை மட்டும் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

[பிற்பகல் 12-50]

இதிலிருந்து உண்மை ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும்.
ஏதாவது இரு ஜாதிகளுக்கிடையே ஏற்படுகிற தகராறுகளை
பெரியவர்கள் சமாதானப்படுத்தி தீர்த்து வைக்க வேண்டுமே
தவிர, அதற்காக வரிந்து கட்டிக்கொண்டு ஒரு சாதியை
எதிராக்கிக்கொண்டு அல்லது ஒரு மதச் சார்புள்ளவர்களை
எதிராக்கிக்கொண்டு வன்முறை நிகழ்ச்சிகளை உருவாக்க அங்கி
ருப்பவர்கள் முன்வந்தால் பெரியவர்கள் அதைத் தடுத்து
நிறுத்திவிட வேண்டுமென்ற நல்லுணர்வோடு செயல்பட நாம்
அனைவரும் ஒன்றுபட்டு ஆவன செய்தாக வேண்டும்.

இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
கூறும்போது இதைப் பற்றிக் கூறி இவைகளை எல்லாம் கூறுவது
கண்டிக்க வேண்டுமென்பதற்காக அல்ல, எல்லோரும் கூடி
இந்த நாட்டுக்கு நல்ல நிலைமைகளை உருவாக்க வேண்டு
மென்பதற்காகத்தான் என்று கூறினார்கள். அவர்களுக்கு
நன்றி கூறி இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு
சொல்லுகிறேன்—பல முறை வேண்டுகோள் விடுத்தது போல்
நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இதைப்பற்றி ஒரு முடிவு
எடுத்தாக வேண்டும். குழுக்களை அமைத்து அதற்காக
ஏதாவது செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள்
எண்ணினார்களானால் அவர்கள் கருத்துக்களைச் சொல்லலாம்,
இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யும். நாட்டில்
குழப்பம் இருந்தால் நன்மைகள் எதுவும் செய்ய முடியாது
என்பதை அறிந்திருக்கிற நாம் நன்மைகள் செய்தே தீரவேண்டு
மென்று விரும்புகிற நண்பர்கள் கூடியிருக்கும் இந்த மன்றம்
அதை ஒழுங்குபடுத்த விரும்புகிறது என்பதில் சந்தேகம் இல்லை.
ஆகவே, அந்த வகையில் ஒன்றுபட்டு முயற்சித்து சாதிச் சண்டை
கள் மதவேறுபாட்டுச் சண்டைகள் இப்படிப்பட்டவைகள்
இல்லாமல் செய்ய நாம் என்ன செய்ய முடியுமோ அதைச்
செய்வதற்கு முன்வரவேண்டும்.

இங்கே இதைக் குறிப்பிடும்போது எனக்கு ஒரு கடிதம்
வந்திருக்கிறது அறிக்கை மூலமாக. 'டாக்டர் ஹாண்டே
அவர்களைப் பதவியிலிருந்து நீக்காவிட்டால் நாங்கள் போராடு
வோம்' என்று சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளை தங்க
ளுடைய உயிர் மூச்சாகக் கொண்ட ஒரு அமைப்பின் சார்பாக
அந்த அறிக்கை வந்திருக்கிறது. இதையும் இந்த மன்றத்தின்
முன் நான் வைக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
சொன்னதற்காக அதை ஏற்றுக்கொண்டு அதை அப்படியே
செய்யவேண்டுமென்ற முறையில் நான் வேண்டுகோள் விட்ட
தற்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் தெரிந்தாக வேண்
டும். நான பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதற்காகச்
சொல்லவில்லை. ஆனால் இப்படிப்பட்ட நினைவுகள் ஏதோ



ஒரு காலத்தில் இருந்த நிலை மறைந்து, எல்லோரும் தங்களை
மாற்றிக்கொள்ளக்கூடிய நிலைமை நாட்டிலே தோன்றிய பிறகு
இப்படிப்பட்ட நிலைமைகள் தேவைதானா, இது வளர்க்கப்பட
வேண்டியதுதானா என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: முதலமைச்சர் அவர்கள் இப்போது
குறிப்பிட்ட அந்தப் போராட்டம் பற்றி ஏற்கெனவே பத்திரி
கையில் செய்தி வந்தது. சமுதாயச் சீர்திருத்த இயக்கம்
என்று குறிப்பிட்டார்கள். பத்திரிக்கையில் வந்த செய்தி—
திராவிடர் கழகத்தார் டாக்டர் ஹாண்டே அவர்களை
அமைச்சர் பதவியிலிருந்து எடுக்காவிட்டால் போராட்டம்
நடத்தப் போவதாகச் செய்தி வந்து மறுநாளே திராவிடர்
கழகப் பொதுச் செயளாளர் வீரமணி அதை மறுத்து பத்திரி
கையில் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே எனக்கு
விளக்கம் தர எது உண்மை என்று தெரிவிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜீ. இராமச்சந்திரன் : அந்த அறிக்
கையின் நகல் இருக்கிறது. இப்போது கிடைத்தவுடன் தரு
கிறேன். இல்லையெனில் நிச்சயமாக நாளைய தினம் இந்த
அவையில் வைக்கப்படும். அது கு. கிருஷ்ணசாமி அவர்கள்
தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டம் என்று
இருப்பதாக நினைவு.

டாக்டர் மு. கருணாநிதி : நான் முதலமைச்சருக்கு ஒரு
விளக்கம் தர விழைகிறேன். திராவிடர் கழகம் இரண்டாகப்
பிரிந்து இன்றைக்கு அது மூன்றாகப் பிரிந்தது. திருவாரூர்
தங்கராசு தலைமையிலே ஒரு திராவிடர் கழகம் உருவாயிற்று.
வீரமணி தலைமையில் பெரியார் உருவாக்கிய திராவிடர் கழகம்
தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. தங்கராசு அவர்களை
விலக்கிவிட்டதாக தாங்கள் குறிப்பிடுகிற கிருஷ்ணசாமி அவர்கள்
அறிக்கை விட்டு, கிருஷ்ணசாமியை விலக்கிவிட்டதாக தங்கராசு
அறிக்கை விட்டு பிறகு அந்த கிருஷ்ணசாமி தலைமையில் இயங்கு
கிற திராவிடர் கழகம் அது. எனவே, ஆளும் கட்சியோடு
தோழமையாக இருக்கிற திராவிடர் கழகமோ அல்லது சில
கொள்கைகளை ஆணித்தரமாக எடுத்துச் சொல்லி வருகிற
வீரமணி அவர்கள் திராவிடர் கழகமோ அந்த அறிக்கையை
அனுப்பவில்லை என்பதையும், எனவே, இது கிருஷ்ணசாமி
திராவிடர் கழகம் புதிதாக உருவான திராவிடர் கழகம்
என்பதையும் முதலமைச்சருக்கு உதவியாக இந்த அவையின்
மூலம் நாட்டுக்குத் தர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜீ. இராமச்சந்திரன் : பேரவைத்
தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
விளக்கத்திற்கு நன்றி, ஆனால் அதிலே என்ன எழுதியிருக்கிறது
என்பதை நான் சொல்லிவிடுகிறேன், சென்னை மாவட்ட

திராவிடர் கழகம், தந்தை பெரியாருக்கு இணை யாரும் இல்லை, அவர் கற்பித்த கொள்கைக்கு இணை ஏதும் இல்லை. தலைவர் டி. எம். சண்முகம், எக்ஸ். எம்.சி., செயலாளர், காஞ்சி மணி, பா. ஜானகிராமன், 89 நாச்சிமுத்து நாயக்கன் தெரு, சென்னை-18. பா. ஜானகிராமன், உயர்திரு காவல் துறை ஆணையர் அவர்கள், எழும்பூர், சென்னை. அய்யா, தமிழக அமைச்சர வையில் பார்ப்பனரை அமைச்சராக நியமித்ததை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பார்ப்பன அமைச்சர் திரு. ஹண்டே அவர்களை விலக்கிக்கொள்ளவேண்டுமென்று திராவிடர் கழக செயற் குழு 29—6—1980 அன்று தீர்மானித்தது, இது வரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக் காத காரணத்தால் எங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கும் முறையில் செயற்குழு தீர்மானப்படி ஆகஸ்ட் மாதம் 1ஆம் தேதி கழகத் தோழர்கள் கழகத் தலைவர் கு. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் ஊர்வலமாக சென்னை அண்ணா சாலை, சிம்சன் எதிரில் இருக்கும் தந்தை பெரியார் உருவச் சிலைக்கு எதிரி லிருந்து காலை 9 மணிக்குத் தொடங்கி வாலாஜா ரோடு வழி யாகச் சென்று சட்டமன்றத்தின் முன் போராட்டம் நடத்த இருக்கிறோம். ஆகவே தாங்கள் மேற்கூறிய ஊர்வலத்திற்கு அனுமதி தரும்படி கேட்டுக்கொள்கிறோம். திராவிடக் கழகம் என்று அதில் போடப்பட்டிருக்கிறது. நீங்கள் சொன்ன விளக் கத்தையும் பத்திரிகைகள் தெளிவாக வெளியிடவேண்டும்.

டாக்டர் மு. கருணாநிதி: விடுதலை ஆசிரியரும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளருமான திரு வீரமணி அவர்கள் அந்தப் போராட்ட அறிவிப்பை மறுத்தும், அப்படி ஒரு செயற் குழு கூடவில்லை, செயற்குழுவில் தீர்மானம் போடவில்லை என் றும் அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர் களே, அவர்கள் அறிவிக்கவில்லை என்பதை நான் மறுக்க வில்லை, ஆனால் அந்த விளக்கம் பத்திரிகைகளிலே தெளிவாக வெளிவந்தால் நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று கருதுகிறேன். யார் எப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பது நாட்டுக்குத் தெரிந்தால் நாட்டுமக்கள் அவர்களைப்பற்றி புரிந்துகொள்வதற்கும் நாம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் போது நாட்டு மக்கள் தீர்ப்பு அளித்து அவர்கள் ஆதரவைத் தருவதற்கும் உதவும் என்பதற்காக நான் இதை இங்கே தெளிவு படுத்துகிறேன். நண்பர் வீரமணி அவர்களுடைய அறிக்கையிலே ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார்கள். ஒரு முதலமைச்சர் அமைச்சர் களை நியமித்துக்கொள்வது அவருடைய உரிமை, அதிலே யாரும் தலையிட முடியாது, அதைப்பற்றி நாங்கள் பேசவில்லை என்றுகூட அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போதுதான்



அது எனக்கு நினைவுக்கு வந்தது. திராவிடர் கழகம் இல்லை என்று சொல்லும்பொழுது, திராவிடர் கழகம் என்று சொல்லி பெரியார் அவர்களுடைய கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் என்று சொன்னால் சமுதாய சீர்திருத்தக் கொள்கை என்று நம்மைப் போன்றவர்கள் எடுத்துக்கொள்ள முடியும் என்ற நிலையிலேதான் அதைக் குறிப்பிட்டேனே தவிர மற்றவர் களைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டு அவர்களுக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு நான் குறிப்பிட வில்லை என்பதைச் சொல்லி அப்படிப்பட்டவர்கள் என்று சொல்லும்பொழுது அதை நாட்டு மக்களுக்குப் புரியக்கூடிய வகையிலே யார் யார் எப்படிப்பட்டவர்கள் என்பதை விளக்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதைக் கூறும்பொழுது அதே போன்று பல்வேறு பிரச்சினைகளிலே ஆங்காங்கே—இது மாமன்றம்—ஆனால் கிராமங்களிலே ஏற்படுத்தி தொல் லைகளை உருவாக்கி வருகிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும்.

நான் வேதனையோடு ஒன்றைக் குறிப்பிட விரும்பு கிறேன். நாட்டிலே இருக்கிற ஜாதிப் போராட்டங்கள் என்று சொன்னால் பல புள்ளிவிவரங்களை நாம் எடுத்துப்பார்த்தால் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நாயுடுமார்களுக்கும் போராட்டம், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் போராட்டம், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் போராட்டம், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மற்ற உயர்ந்த ஜாதி என்று சொல்லிக்கொள்கிறவர்களுக்கும் போராட்டம் இப்படி சொல்லி கடைசியிலே அவர்களுக்குள்ளே யும் போராட்டம் என்று வந்து அதனுடைய விளைவுகள் அவர்களுக்கு ஆதரவா இவர்களுக்கு ஆதரவா என்ற நிலை மையிலே மற்றவர்களுக்கிடையே தாழ்த்தப்பட்டவர்கள் அல் லாதவர்களுக்கிடையே ஜாதிப் போராட்டம் வந்துவிடுகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட வேண்டி இருக்கிறது. இவை களை நாம் நிச்சயமாக கிராமப்புறங்களிலே இல்லாமல் செய்கிற அளவுக்கு நாம் ஒவ்வொருவரும் ஒரு பொறுப்பை நிறைவேற்று வதற்கு துணிந்து துணிச்சல் இருந்தால்கூட ஒத்துழைத்து அதை வெற்றிகரமாகச் செய்வதற்கு விட்டுக்கொடுத்து செய்வோமானால் நிச்சயமாக நல்ல பலன் கிடைக்கும் என்பதை நான் எதிர் பார்க்கிறேன். இங்கே விவசாயிகளைப் பற்றிப் பேசும் பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள்.

திரு. ஏ. ஷாகுல் ஹமீது: தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் அபிராமத்தில் கலவரங்கள் நடந்து இப்போது ஒரு அமைதி ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க கவனம் வைத்து சரியான பாதுகாப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன். பாலக்காட்டைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டிலே

நடைபெற்ற சம்பவங்கள் இப்போது ஒரு வாரமாக சலசலப்பு ஏற்பட்டிருப்பதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. அதையும் பேரவைத் தலைவரவர்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அமைதியாக இருக்கிறது என்று சொல்லி அதைக் கவனிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அதைக் கவனித்து மற்றவர்கள் யாரும் உள்ளே புகுந்து அந்த அமைதியை கெடுக்காமல் பார்த்துக் கொள்ள நாங்கள் எச்சரிக்கையோடு செயல் புரிவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகள் பிரச்சனைகளைப்பற்றிச் சொல்லும்பொழுது ஒரு எச்சரிக்கை விடுத்தார்கள். கர்நாடகத்திலே நடைபெறுவதைப்போல இங்கும் நடைபெறலாம் அந்த இடத்திற்கு அதற்கு வழி கொடுக்காதீர்கள் என்று எச்சரிக்கை விடுத்தார்கள். அதைப்போலப் பேசுவதே நல்லது அல்ல. கர்நாடகத்தில் நடப்பதைப் போல இங்கு நடப்பது என்றால் அப்படிப்பட்டவைகள் எல்லாம் நடந்த பிறகுதான் இந்த வாக்குறுதிகளைத் தந்தோம். வாக்குறுதிகள் தந்து விட்டுத்தான் எங்களால் முடிந்ததைச் செய்து நேற்றையதினம் அங்கே இட்டக் குழுவிடம் சென்று அவர்களிடம் பேசி அதைப்பற்றி மேலும் பல வகைகளில் என்னென்ன செய்ய வேண்டுமோ அதைத் தொடர்வதற்கு பேச்சைத் தொடர்ந்து நடத்துவது என்ற வகையிலே நாங்கள் வந்திருக்கின்றோம். ஆகவே எங்களால் ஆன முயற்சிகளை நாங்கள் பலவகைகளிலேயும் செய்து கொண்டிருக்கிறோம். நாங்கள் என்ன வாக்குறுதி கொடுத்தோமோ அதை இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றிவிட வேண்டுமென்பதிலே நாங்கள் மிகுந்த அக்கறையோடு இருக்கிறோம்.

ஆனால் இந்த மாமன்றத்திற்குச் சொல்லிக்கொள்வதெல்லாம், வசதி படைத்தவர்கள் எங்கெங்கே தங்களுக்கு, தங்களுடைய சொத்துக்களுக்கு, தாங்கள் சேர்த்து வைத்திருக்கின்ற அளவுகடந்த பொருள்களுக்கெல்லாம் ஆபத்து விளையும் என்று கருதுகிறார்களோ அப்பொழுது உடனே அவர்களெல்லாம் ஒன்றுகூடி சில தீர்மானங்களைப் போடுகிறார்கள். பிறகு அதற்காக பழம் பெருந்தலைவர்களுடைய அறிக்கைகளையெல்லாம் வாங்கி வெளியிடுகின்றார்கள். அதற்குப் பிறகு ஒன்றுமறியாதவர்களை போராட்டத்தில் ஈடுபடுத்தி, எப்பொழுதும்போல் வசதி மிக்கவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தொல்லைகள் அவர்களை நெருங்குவது இல்லை. துன்பங்கள் அவர்களைத் தாக்குவது இல்லை.



ஆனால் இதற்கெல்லாம் ஆளாகின்றவர்கள் அப்பாவி சாதாரண மக்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். போராட்டம், போராட்டம் என்பதெல்லாம் தேவைக்காகப் போராட்டம்; தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளப் போராட்டம்; உரிமைகளை காப்பாற்றிக் கொள்வதற்காகப் போராட்டம் என்றால் அது போராட்டம் என்று அர்த்தம். அதுவல்லாமல், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எதிலாவது ஈடுபடுவார்களேயானால் அதற்கு என்னைப் பொறுத்தவரையில் கலவரம் என்றுதான் பெயர் கொடுக்க விரும்புவேன். அந்தக் கலவரத்தை நிச்சயமாக நாட்டு மக்களிடையே பரப்புவதற்கு யார் விரும்பினாலும், எவ்வளவு வசதி படைத்தவர்களாக இருந்தாலும் அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது இந்த மாமன்றத்தின் மாபெரும் கடமை என்பதனை நான் பணிவன்போடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அது ஆட்சியிலே இருக்கின்ற எங்களைப் பொறுத்தது மட்டுமல்ல; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நம் அனைவருடைய கடமை என்பதனையும், பொறுப்பு என்பதனையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விழைகின்றேன்.

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இதற்காக நமது கடமைகளைச் செய்து, அவர்களுக்கு உண்மைகளைத் தெரிவித்து, அந்த ஒன்றுமறியாதவர்கள் தொல்லைகளுக்கு ஆளாகக்கூடிய சூழ்நிலைகளை நாம் தவிர்த்தாக வேண்டும்.

இங்கே ஒரு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. பினாமி நிலங்களை எடுத்து விநியோகிப்பது என்பது. உடனே பார்த்தால், குழு போடுகிறார்கள், யார் யார் அதிலே சேர்ந்திருக்கிறார்கள் என்று வரிசையாகப் பார்த்தால் அவ்வளவு பேரும் மிகப்பெரிய வசதி உள்ளவர்கள்; பல சொத்துக்களுக்குச் சொந்தக்காரர்கள் என்பதும், அப்படிப்பட்டவர்களெல்லாம் சேர்ந்து தீர்மானம் போடுகிறார்கள் என்றால் நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதுவரையில் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது இவர்கள் ஏதாவது சொன்னார்களா? எத்தனையோ சட்டங்களைக் கொண்டு வந்தார்கள் பெரியவர்கள், முன்னாலே இருந்தவர்கள். அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள், நடைமுறைக்கு வர முடியாது என்ற நிலையிலே இருந்தபொழுது பேசாமல் இருந்தார்கள். இது நிச்சயமாக அவர்களைப் பாதிக்கும், அவர்களுடைய பினாமி சொத்துக்கள் போய்விடும்; அது சாதாரண ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமாக்கப்பட்டு விடும் என்பது தெரிந்தவுடன் அவர்கள் ஒன்று கூடுகின்றார்கள். யாரைப் பயன்படுத்துகின்றார்கள்? நம்மையோ பயன்படுத்திப் பார்க்கிறார்கள். அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களானாலும் சரி, மதச் சார்புடையவர்களானாலும் சரி, அல்லது சமுதாயத்திலே பணியாற்றிக்கொண்டிருக்கின்றவர்களாக இருந்தாலும் சரி

வர்களையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு, நம் கை விரலை வைத்து நம் கண்ணையே குத்துகின்ற நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றம் எச்சரிக்கையோடு கண்காணிக்க வேண்டுமென்பதை மட்டும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட ஆட்சியைப்பற்றிச் சொன்னார்கள். மாவட்ட நிர்வாகத்தில் பல்வேறு மாறுதல்...............

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வரவர்கள் இப்பொழுது வேறு மான்யத்திற்குப் போகின்றதால், நான் குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். சப்-இன்ஸ்பெக்டர் அய்யாப்பழம் கொலை வழக்கு சம்பந்தமாக, நாராயணசாமி நாயுடு அவர்களைச் சம்பந்தப்படுத்தி வழக்கு போடப்பட்டது. அந்த வழக்கை இந்த அரசு திரும்பப் பெற்றுவிட்டது. அதற்காக நான் என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், அவருடன் வழக்கிலே உட்படுத்தப்பட்டுள்ள 17 பேர் மீது வழக்குகள் நடைபெறுகின்றன, நடந்து கொண்டிருக்கின்றன. வருகிற 17-ந்தேதி கூட செஷன்ஸ் கோர்ட்டில் அந்த வழக்கு நடைபெற இருக்கிறது. ஆகவே, நிகழ்ச்சி ஒன்று, செக்ஷன் ஒன்று. நாராயணசாமி நாயுடு அவர்கள் மீதுள்ள வழக்கை மட்டும் அரசு வாபஸ் வாங்கியிருக்கும்போது, மீதியிருக்கும் 16 அக்யூஸ்ட் அவர்கள் மீதுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுவதுதானே முறை. முதல்வர் விளக்கம் தருவாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் நாயுடு அவர்களையும் நேரிலே சந்தித்துப் பலமுறை பேசியிருக்கிறேன். அதைப் பற்றியெல்லாம் பேசிய பிறகு கொலை முயற்சியில் நேரடியாக ஈடுபட்டவர்கள் என்று சாட்சியத்தோடு இருக்கின்றவர்கள் மீது மட்டும்தான் அந்த வழக்குகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவே தவிர, மற்றவர்கள் மீதுள்ள வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதையே நாயுடு அவர்களிடமும் நான் சொல்லியுள்ளேன். அவர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பிரச்னையைக் கிளப்புவதற்கு அதிலே ஒன்றும் இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசினுடைய கருத்தை நான் சொல்லியாக வேண்டும். இது வரையில், மாவட்ட நிர்வாகத்தில் யூனியன் பிரதேசம் என்று



தனியாகவும், அதுபோல் தாலுகா என்று தனியாகவும் இருக்கிற நிலைமை இடையிலே உருவாக்கப்பட்டது என்பதை இங்கே நான் கோடிட்டுக் காண்பித்து, அதிக விளக்கம் தெரிவிக்கவேண்டியதில்லை, எல்லோருக்கும் தெரியும். மீண்டும் அந்த தாலுகாக்களை அதிகப்படுத்தி, எத்தனை யூனியன்கள் இருக்கின்றனவோ அத்தனை தாலுக்காக்களாக ஆக்கி, அந்தப் பொறுப்பை ஒப்படைத்து, இரண்டையும் சமநிலைக்குக்கொண்டு வந்து செயல்படுத்தலாமா என்கிற ஒரு யோசனை இருக்கிறது. அதைப் பற்றிய முடிவு எடுக்கும்போது, இங்கேயிருக்கிற அனைத்துக்கட்சிகளுடைய பிரதிநிதிகள் அனைவரையும் அழைத்துப் பேசி, அரசு முடிவெடுக்கும் என்பதையும் இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைச் செய்வதால், நிர்வாகத்திலே நல்ல முறையிலே, விரைவாக காரியங்கள் நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற ஒரு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ஏனெனில், தாமதம், தாமதம் என்கிற பிரச்னை எங்கு பார்த்தாலும் இருக்கிறது. உத்தரவிடுகிறோம், நடைபெறவில்லை, உத்தரவிடுகின்றோம், அது சரியாகச் செயல்படவில்லை, உத்தரவிடுகிறோம் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. இப்படி இருக்கிற நிலைமையை மாற்றி ஒழுங்குபடுத்தலாமா. அதை எப்படி மாற்றுவது என்பதைப் பற்றி நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம். அது ஒரு நிலைக்கு வந்தவுடனே நிச்சயமாக நான் குறிப்பிட்டபடி, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற தலைவர்களை அழைத்துப்பேசி, அரசு ஒரு முடிவெடுக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போல நிர்வாகத்திலே பல மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்பதும், அந்த நிர்வாகத்திலே மாற்றம் செய்யப்படும்பொழுது பல பேருக்குப் பதவிகள் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதும் எங்களுடைய நோக்கமாகும்.

அதோடு, கணக்குப் பிள்ளை என்று இருக்கிற பதவிகளை நீக்கிவிட்டு, படித்த இளைஞர்களை அந்தப் பதவிக்கு நியமித்து, முழு நேர அரசு ஊழியர்களாக அவர்களை ஆக்கி, அவர்களிடம் அந்த பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. (பலத்த மேசையொலி) அதற்கேற்றவாறு, உங்களுடைய அனுமதியைப் பெற, விரைவிலே நடைமுறைப்படுத்த முயற்சிப்போம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : விவசாயிகள் பிரச்னையில் முதலமைச்சரவர்கள் ஒரு கூட்டம் கூட்டுவதாகச் சொன்னார்கள். மாநில அளவிலே இருக்கக்கூடிய விவசாயிகளை வைத்து, அடிக்கடி இந்தப் பிரச்னைகளை விவாதித்தால் சரியாக இருக்கும் முதல் அமைச்சர் அவர்கள் அதை எப்பொழுது கூட்ட இருக்கிறார்கள்? கூட்டுவார்களா? கூட்டினால், அந்தப் பிரச்னைகள் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னபடி இந்த அரசுக்கு அந்த எண்ணம் உண்டு என்பதை யும், அதற்காக ஒரு சில தலைவர்களிடம் நான் பேசுவதற்கு நேரம் குறிப்பிட விரும்பியபொழுது அவர்களுக்கு சில வேலைகள் இருந்த காரணத்தால்தான் தேதி தள்ளிவைக்கப்பெறு கின்ற நிலைமை இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கி றேன். விரைவிலே அந்த முயற்சி கைகூடும்போது அனைத்து விவசாயச் சங்கங்களைச் சேர்ந்தவர்களையும் அழைத்து, அதைப் பற்றி விவாதித்து, தொடர்ந்து விவாதிக்கக் கூடிய அளவிலே இருக்கிற குழுவே தொடர்வதா, அல்லது புதிதாக நியமிப்பதா என்பதையும் தீர்மானம் செய்து, முடிவு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

இது தவிர, அரசு அதிகாரிகளுக்கும், அரசைச் சேர்ந் நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் உள் அதிகாரிகளுக்கும் தொழில் நுட்பப் பயிற்சி நிர்வாக இய பொதுப் பயிற்சி அளிக்கவும். Madras Institute Management என்ற பெயரில் சென்னையில் நிர்வாகப் பயிற் இயல் நிறுவனம் ஒன்று அரசால் அண்மையில் அமைக்கப்பட் ருக்கிறது. அரசின் கொள்கை வரம்புக்கேற்ப சுய அதிகார களுடன் இயங்கும் சங்கமாக இந்த நிறுவனத்தை பதிவு செய் இந்த அரசு உத்தேசித்துள்ளது. இப்பயிற்சி நிலையத்திற்கு சொந்தமான ஒரு கட்டடம் சென்னையில் இருக்கவேண்டு என்பதற்காக ஒரு கட்டடம் ஒதுக்குவதற்கு நடவடிக்கைக எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிர்வாக கலை பயிற்சி கழகத்திற்கு முழு நேர இயக்குநர் ஒருவரை நியமிக்கும் உத்தே மும் இந்த அரசுக்கு உண்டு. இந்த ஆண்டு முதல் இந் நிறுவனம் பணிகளைத் தீவிரமாக நடத்தினாலும் அனை திந்திய அடிப்படையில் நிர்வாக கலை வட்டாரங்கள் முதன்மை இடம் பெறவும், அனைத்து நிலையங்களையும் றாக இயக்குவதற்கும் அரசு எல்லாவிதமான உதவியை செய்ய முன்வரும். தமிழக அரசின் முதல்வராக குறு காலமே பணியாற்றியபோதும் நிர்வாக வரலாற்றில் இணைய புகழையும், தமக்கென பெயரையும் நிறுத்தி நம் அனை யும் கௌரவித்துள்ள மறைந்த நம் அண்ணா அவர்க பெயரை இந்த நிர்வாகப் பயிற்சி நிலையத்திற்கு சூட் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்ப நிலையம் ஆங்கிலத்தில் Anna Institute Management என்று அழைக்கப்படும். இதிலே மற் சிறப்பு என்னவென்றால் இந்த முழுப் பெயரை வழக் கூறுவதுபோல் சுருக்கினால் A.I.M. என்று வரும். A.I.M. ஆங்கிலத்திலேயும் சொல்லுக்கு தமிழின் 'குறிக்



என்றும் பொருள்படும். நம் லட்சியப் பாதையில் நம்முடைய குறிக்கோளை நாள்தோறும் நினைவுபடுத்தி நமக்குத் தெம்பூட்டும் வண்ணம் இந்தப் பெயர் இருக்கிறது. ஆங்கிலத்தில் Anna Institute of Management 'அண்ணா நிர்வாக இயல் நிலையம்'' என்றும் அழைக்கப்படும் என்று கருதுகிறேன்.

அடுத்து, இங்கே காவல்துறை சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது காவல் துறையினருக்கு நாங்கள் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டை குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த வாக்குறுதியை நாங்கள் மறக்கவில்லை என்பதையும் அதைச் சட்ட அமைப்புக்குட்பட்டு நிறைவேற்றுவதற்கு நாங்கள் எங்களுடைய கருத்தை வெளியிட்டு, மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். அது வந்த உடனே அரசு அமைத்துக் கொடுக்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, காவல் துறை சங்கத்தை அங்கீகரிப்பதில் இருக்கின்ற சட்டப்பிரச்சினை பற்றி மத்திய அரசுக்கு எழுதி இருப்பதாகச் சொன்னார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டு, அவர்களுக்குச் சம்பளம் இல்லாத விடுமுறை அளிக்கப்பட்டது. அதை மாற்றி அவர்களுக்குச் சம்பளத்தோடு கூடிய விடுமுறை அளிக்கப்படுமா? ஏனென்றால் இப்போது கொடுக்கப்பட்ட ஆணையில் அது இல்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நிச்சயமாக மாற்றிக்கொடுக்கப்படும்.

அடுத்து காவல் துறைக்கு என, தமிழ்நாட்டிலே 873 காவல நிலையங்கள் உள்ளன. அவைகளில் பீட் காவல்காரர்களுக்கு வாக்கி டாக்கி என்னும் கருவி வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நிலையத்திற்கும் 2 கருவிகள் வீதம் மொத்தம் 1746 செட்டுகள் வாங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு வாக்கி டாக்கி ஏறத்தாழ ரூ. 2,000 ஆகிறது. இதன் மூலம் 70 லட்சம் ரூபாய் அரசுக்கு செலவாகும்.

காவலர்களுக்கு குறைந்த விலையில் அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை முதலிய உணவுப் பொருள்களை பங்கீட்டுக் கடைகள் மூலம் விநியோகிக்கும் திட்டத்தை அரசு பரிசீலித்தது. மேற்கு வங்கத்தில் அரசிதழ் பதிவு இல்லாத ஒவ்வொரு காவலருக்கும் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த 3 பேருக்கு குறைந்த விலையில் பொருள்கள் வழங்கும் திட்டத்தை அந்த அரசு செயல்படுத்தி வருகிறது. ஒரு வாரத்திற்கு ஒரு நபருக்கு அரிசி ஒரு கிலோ விலை 50 பைசா, சர்க்கரை 300 கிராம்

0 பைசா, பருப்பு 750 கிராம் விலை 60 பைசா, சமையல் எண்ணெய்
50 கிராம் ரூ. 2 என்ற அளவில் வழங்கப்பட்டு வருகிறது.
மேற்கு வங்கத்தில் 1975-76-ல் இதற்கான செலவு ரூ. 9.2 கோடி
76-77-ல் 6.47 கோடி 77-78-ல் 6.32 கோடி என்ற அளவிற்கு
இத் திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது. எனவே, அங்கே
யுள்ள படைகளின் எண்ணிக்கையை விட நமது படைகளின்
எண்ணிக்கை குறைவாக இருப்பதால் இந்தத் திட்டத்திற்காகும்
செலவு குறைவாக இருக்கும் என்ற கருத்தை மனதில் கொண்டு
இந்தத் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படும்.

தமிழ் நாட்டில் பணியாற்றும் காவலர்கள் இரவு நேரங்களில்
வெளியே ரோந்து போகும் போது பாதுகாப்பிற்காக அவர்
களுக்குக் கைத்துப்பாக்கிகள் வைத்து இருப்பது தேவை என்று
கருதுகிறது. தற்போது மேல் அதிகாரிகளுக்கு மட்டும் இந்தக்
கைத்துப்பாக்கி வழங்கப்படுகிறது. இனி இரவு நேரங்களில்
முறைக்காவல் பணிக்காகப் போகும் காவலர்களுக்கு பாதுகாப்
பிற்காக ஒரு காவல் நிலையத்திற்கு 5 கைத்துப்பாக்கிகள் விதம்
தமிழ் நாட்டில் உள்ள மொத்தம் 873 காவல் நிலையங்களுக்கும்
கைத்துப்பாக்கி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
இதில் 55 காவல் நிலையங்கள் சென்னை நகரத்தில் உள்ளன.
இதற்காக ஆகும் செலவு ரூ. 23,73,250 என்று மதிப்பிடப்பட்டு
இருக்கிறது.

குற்றப்புலனாய்வுத் துறை மாவட்ட தனிப்பிரிவு, ரயில்வே
ஆகிய பிரிவுகளில் பணியாற்றும் காவலர்களுக்கு மாதம்
ரூ. 1.87 வீதம் இதுவரை வழங்கப்பட்டு வந்த துணிச் செலவுப்படி
இனி மாதம் ரூ. 10 வீதம் உயர்த்தி வழங்கப்படும்.

ரூ. 100 இலட்சம் செலவில் ஒரு நுண்அலை முறை அமைப்பு
அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் மாவட்டக் காவல் தலை
மையகங்கள், மாநிலக் காவல் தலைமையகத்துடன் உடனடி
யாகத் தொடர்பு கொள்ள முடியும். இவ்வசதிகளைக் குற்றப்
புலனாய்வுத் துறை பெருமளவில் பயன்படுத்திக்கொள்கிறது என
றாலும் மாவட்டக் குற்றப் புலனாய்வுத் தலைமையகங்களை
மாநிலக் குற்றப்புலனாய்வுத் தலைமையகத்துடன் இணைக்கும்
வகையில் தனியான தகவல் தொடர்பு முறை ரூ. 1,51,000
செலவில் அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இந்த
வசதி நுண்அலைத் தகவல் தொடர்புடன் இணைக்கப்படும்.
பேலும் யு. எச். எப். வசதியும் குற்றப்புலனாய்வுத் துறைக்குச்
செய்து தரப்படும்.

மொத்தமுள்ள 873 காவல் நிலையங்களில் 640 காவல்
நிலையங்கள் அந்தந்த மாவட்டங்களிலுள்ள காவல் தலைமை
யகத்துடன் வி. எச். எப். முறையில் இணைக்கப்பட்டுள்ளது.
மீதியுள்ள 233 காவல் நிலையங்களுக்கும் சுமார் ரூ. 35 இலட்சம்
செலவில் இவ்வாண்டிலேயே வி. எச். எப். வசதி செய்யப்பட்டு
மாநிலக்காவல் தலைமையகத்துடன் இணைக்கப்படும்.



சென்ற ஆண்டு காவல் துறை மானியத்தின்போது அறிவிக்
கப்பட்டவை நிறைவேற்றப்படவில்லை என்பதை இங்கே எடுத்துச்
சொன்னார்கள். அதற்கு நான் அதிகமாக விளக்கம் சொல்ல
விரும்பவில்லை என்றாலும், நாங்கள் இட்ட உத்தரவுகள்
எப்படி செயல்படுத்தப்பட்டன என்பதை நாடு அறியும். எப்படி
ஒரு சிலர் ஒத்துழைக்க மறுத்தார்கள் என்பதையும் நாடும் அறியும்
ன்றமும் அறியும். அந்த நிலைமையில் சில தவறுகள் ஆங்காங்கு
ற்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாமல் அல்லது நிறை
வற்றப்படாமல் தள்ளி வைக்கப்பட்டு இருந்தது. நான் இதைச்
சால்லிக்கொள்வதிலே வெட்கப்படவில்லை. ஆனால் இந்த
றை நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அந்த நிலை மாறி ஒழுங்காக
ரியாக உத்தரவுகள் அமலாக்கப்படுகின்றன என்பதை இந்த
ாமன்றத்தில் நான் சொல்லிக்கொள்வது என் கடமை என்று
ருதுகிறேன். அந்த வகையில் தமிழகத்தில் சுமார்
73 காவல் நிலையங்களும் 185 புறக்காவல் நிலையங்களும்
ள்ளன.

பெண் குற்றவாளிகளை விசாரணை செய்வதற்காக பெண்
காவலர்கள் அதிக அளவில் நியமிக்கப்பட வேண்டும் என்று இந்த
அரசு ஏற்கனவே 1978-79-ல் எடுத்த முடிவின்படி கூடுதலாக
இந்த ஆண்டு கீழ்க்கண்டவாறு பெண்காவலர்கள் நியமிக்க அரசு
முடிவு செய்துள்ளது. பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள் 60, பெண்
தலைமைக் காவலர்கள் 60, காவலர்கள் 600. இதற்காகும்
கூடுதல் தொடர் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50.04 லட்சமா
கும். தொடரா செலவு ரூ. 1.08 லட்சமாகும். இந்த நிதி
ஆண்டில் இதற்காக ரூ. 25.12 இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம்.

தற்போது காவலர் முதல் ஆய்வாளர் வரையில் உள்ள அனை
வருக்கும் மாதம் ஒன்றுக்கு இடையூறு படியாக ரூ. 20 வழங்கப்படு
கிறது. இந்த முறையைப் பின்பற்றி அந்தக் காவல் துறையில்
உள்ள துணைக் கண்காணிப்பாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 30
மாதம் ஒன்றுக்கு அளிப்பது என்றும், காவல் துறை கண்காணிப்
பாளருக்கு ரூ. 50 வீதம் மாதம் ஒன்றுக்கு இந்த ரிஸ்க் அலவன்ஸ்
இடையூறுப் படி அளிப்பது என்றும் அரசு முடிவு செய்துள்ளது.

[பிற்பகல் 1.20]

இதன்மூலம் மாநிலம் முழுவதும் 263 காவல் துறை துணை
கண்காணிப்பாளர்களும், 77 காவல்துறை கண்காணிப்பாளர்
களும் பயனடைவார்கள். இதற்கு ஒவ்வொரு ஆண்டும் தொடர்
செலவு ரூ. 1,40,800.

நாளுக்கு நாள் சாலை விபத்துக்களால் ஏற்படும் உயிர் இழப்பு
அதிகமாக இருக்கிறது. இதற்கு முதல் காரணம் அதிவேகமாக
வாகனங்கள் போவதாகும். இதைத் தடுக்க, பஸ், லாரிகளில்

வேகத் தடுப்புகள் உடனடியாகப் பொருத்த வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இதை கண்காணிக்கவும் சென்னையிலும் மற்றுமுள்ள பெரும் நகரங்களிலும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும் கண்காணிக்கவும் அதை சரியானபடி செயல்படுத்தவும் பொறியியல் வல்லுநர்களைக் கொண்ட ஒரு 'ட்ராஃபிக் செல்' காவல் துறையில் அமைக்கப்பட்டு, போக்குவரத்துப் பிரிவு விரிவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது மதுவிலக்கை தீவிரமாகச் செயல்படுத்த தனியாக ஒரு பிரிவு இயங்கி வருகிறது. மேலும் காவல் நிலையங்களில் உள்ள காவலர்களும் மதுவிலக்கை செயல்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மதுவிலக்கைத் மேலும் தீவிரமாகச் செயல்படுத்த காவல் நிலையங்களில் உள்ள காவலர்களும் குற்றங்களைத் தடுப்பதிலும் கண்டுபிடிப்பதிலும், சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதிலும் ஈடுபடுத்தப்பட்டு, மதுவிலக்கை காவல்துறை சீரமைக்க காவலர்கள் எண்ணிக்கையை கூடுதலாக்கி, ஒவ்வொரு காவல்துறை மாவட்டத்திலும் கீழ்க்கண்ட காவல்துறை பணியாளர்கள் அடங்கிய ஒரு தனி (பிரிவு (செப்பரேட் செல்) வீதம் 20 காவல்துறை மாவட்டங்களிலும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. துணைக் கண்காணிப்பாளர்—1; ஆய்வாளர்கள்—2; துணை ஆய்வாளர்கள்—4; காவலர்கள் (ஆயுதங்களுடன்)—40; வாகனங்கள்—4; இதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 60 இலட்சம் தொடர் செலவும்; ரூ. 30 இலட்சம் தொடராச் செலவும் ஆகும். இந்த நிதியாண்டில் ரூ. 30 இலட்சம் தொடர் செலவும், ரூ. 30 இலட்சம் தொடராச் செலவும் ஆகும்.

காவல் துறையினர் சொந்த வீடு கட்டிக்கொள்ள அரசு அளிக்கும் கடன் வசதி முழுப் பிரச்சனையையும் தீர்க்கக்கூடியதாக இல்லை. ஓய்வு பெற்ற காவல் துறையினருக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அரசு பரிசீலித்தது. பெருமளவில் இப்பிரச்சனைத் தீர்வு காணவும் காவலர்களின் வீட்டு வசதியைக் கணிசமாகப் பூர்த்தி செய்யவும் 'காவலர் வீட்டுவசதிக் கழகம்' ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

தற்போது சென்னை நகரில் 85 மோட்டார் சைக்கிள் காவல் துறை துணை ஆய்வாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ரோந்து பணிகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில் காவலர்களின் உபயோகத்திற்கு சென்னை நகரிலுள்ள 51 காவல் நிலையங்களுக்கும் 51 மோட்டார் சைக்கிள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு 5,61,000 ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காவல் துறை வாகனங்கள் பழையனவாகவும் பழுதடைந்தும் இருப்பதால் அவைகளுக்குப் பதிலாக கீழ்க்கண்ட புதிய



வாகனங்களை இந்த நிதியாண்டில் வாங்க அரசு முடிவு செய்துள்ளது:—

கார்—ரூ. 1,08,000

லாரிகள், பஸ்கள், மற்றைய வாகனங்கள் 50—ரூ. 85 00,000

பிக்கப் வண்டிகள் 35—ரூ. 52,50,000

ஜீப்கள், (ஸ்டேஷன் வாகன்கள் உட்பட) 14—ரூ. 8,40,000.

மோட்டார் சைக்கிள் 80—ரூ. 9,60,000 ஆக சுமார் 1,56,58,000 ரூபாய் செலவில் 181 புதிய வண்டிகள் வாங்கப்படும்.

சென்னை உட்பட ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் வீடு கொடுக்கப்படாத ஒவ்வொரு காவல் துறை அதிகாரிக்கும், சார்பு நிலை பணியாளருக்கும் வீட்டுவாடகைப் படி தவிர மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் அதிகமாக வழங்கப்படும். மாவட்டத் தலைநகரம் அல்லாத இடங்களில் பணியாற்றும் வீடு கொடுக்கப்படாத ஒவ்வொரு காவல் துறை அதிகாரிக்கும் சார்புநிலை பணியாளருக்கும் வீட்டு வாடகைப்படி தவிர, மாதம் ஒன்றுக்கு ரூ. 30 அதிகமாக வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும். அதற்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1,50,00,000 அதிகமாக செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதோடு, இன்னொன்றையும் நான் இங்கே சொல்லியாக வேண்டும். போக்குவரத்துத் துறை அமைச்சர் அந்தக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார் என்றாலும் ஒன்றை நான் அழுத்தமாக, மீண்டும் நினைவுபடுத்தும் வகையிலே எடுத்துக்கொண்டாலும் சரி, சொல்லியா வேண்டும். காவல் துறையினருக்குப் பொறுப்புடைய சில நிலைமைகளில், சில காரியங்களை தடுத்து நிறுத்தவும், தீமை பயக்குகின்ற செயல்களில் ஈடுபடுகின்றவர்களை தடுத்து நிறுத்தவும் அவர்களை கைது செய்து கொண்டு போவதற்கும், எங்கெங்கே எந்த நிகழ்ச்சி நடக்கிறது என்பதை உடனுக்குடன் தலைமை காவல் நிலையத்திற்குத் தெரிவிப்பதற்கும் வசதியுள்ள தொடர்புடைய கருவிகள் 'வாக்கிடாக்கி' ஒவ்வொரு பேருந்திலும் பொருத்துவதற்கு நாங்கள் திட்டங்களை உருவாக்கி, பிறகு நண்பர் இராதாகிருஷ்ணன் ஐ.ஜி, அவர்கள் வெளிநாட்டுக்குச் சென்று திரும்பி வந்தவுடன் அவருடைய அனுபவத்தைப் பயன்படுத்திக்கொண்டு அதை அமுலாக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது.

எங்கே பஸ் நின்றுவிட்டாலும் அல்லது தாக்கப்பட்டாலும் அல்லது வேறு விபத்துக்கள் ஏற்பட்டாலும் உடனடியாக குறிப்பிட்ட இடத்திற்கு தகவல் அனுப்புகின்ற வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு அது உதவும் என்ற வகையிலேயும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறோம். இதை வெளிநாடு

களில் மிகச் சாதாரணமாக டாக்ஸியிலே முதற்கொண்டு வைத்துக்
கொண்டிருக்கிறார்கள். அது மிகவும் பலன் உள்ளதாக இருக்
கின்றது. பயணம் செய்கின்றவர்களும் பயப்பட வேண்டிய
தில்லை. அல்லது ஓட்டுநரோ, நடத்துநரோ அச்சப்பட வேண்டி
யதில்லை. ஏதாவது எங்கேயாவது திட்டம் போட்டு தாக்கு
வதாக இருந்தால் கூட உடனடியாக 10 நிமிடங்களில் காவல்
துறை அந்த இடத்திற்குப் போய் சேரும் அளவுக்கு தகவல்
கிடைக்கும்படி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்
என்று இந்த அரசு விரும்புகிறது. ஆகவே அதையும் இந்த
அரசு ஆலோசனையில் வைத்திருக்கிறது என்பதை மட்டும் நான்
குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தீயணைப்பு பற்றிச் சொன்னார்கள். அதுபற்றிய
எண்ணிக்கைகளை எல்லாம் நாங்கள் எடுத்து வைத்தோம், ஆனால்
அது நிறைவேற்றப்படவில்லை என்பது மட்டுமல்லாமல் விரும்பிய
படி அவர்களுக்கு வாகனங்கள் கிடைக்கவில்லை என்பதையும்
இயந்திரங்கள் கிடைக்கவில்லை என்பதையும் அதே நேரத்தில்
கட்டிடங்கள் கிடைக்கவில்லை என்பதையும் சொன்ன காரணத்
தால் நாங்கள் எப்படியும் அவைகளை நிறைவேற்றியே தீருவது
என்ற வகையில் உத்தரவிட்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள், முன்பு
நாம் என்னென்ன திட்டங்களை தீட்டி இருந்தோமோ அதையும்
மேற்கொண்டு குறைந்தபட்ச அளவுக்காவது செய்ய வேண்டும்
என்று தீர்மானித்திருக்கிறோம்.

அடுத்து ஒரு குற்றச்சாட்டை இங்கே சொல்லி இருக்கிறார்கள்
ஒரு இடத்தில் தீயணைக்கப் போகும்போது தண்ணீர் கொண்டு
போகவில்லை என்றும் அதற்குக் காரணம் தண்ணீர் கொண்டு
போகவேண்டிய இயந்திர வசதி இல்லை என்றும் சொன்னார்கள்.
இதிலே நடந்ததை நான் சொல்லியாக வேண்டும். தீயணைப்ப
வர்கள் தண்ணீர் நிரப்பிக்கொண்டு போய் ஒரு இடத்திலே தீயை
அணைக்கவேண்டும் என்று முயற்சித்தபோது இன்னொரு பக்கத்
திலே இருந்தவர்கள் வந்து தங்களுடைய வீடுகளிலே ஏற்பட்ட
தீயை அணைக்க வேண்டும் என்று மல்லாட அந்தத் தகராறு
காரணமாக தண்ணீர் எதற்கும் பயன்படாமல் வீணாகிவிட்டதன்
விளைவாக தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. அதற்குப்பிறகு
தண்ணீர் எடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டபோது சர்ச்சை
ஏற்பட்டு அடிதடி மூண்டு அங்கே வழக்குப்போட வேண்டிய அள
வுக்குச் கூட நிலைமை ஏற்பட்டது. அதனால் காயம்பட்ட அதி
காரிகள் மருத்துவமனைக்குச் சென்று வெளி நோயாளிகளாகத்
தங்களைப் பதிவு செய்து அதே நேரத்தில் அந்த நோயாளித்தன்
மையையும் ஆதாரத்தோடு நிரூபித்திருக்கிறார்கள் என்பதை
இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இது உண்
மையா பொய்யா என்று எண்ணுகின்றபோது கட்டுக்கதையாக
யாரோ சொல்லி இருக்கிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம்
இங்கே இருக்கின்ற நமக்கு நாட்டிலே இருக்கின்ற சாதாரண ம
களுடைய எண்ணம் தெரியும். யாருக்காவது அடிபட்டு தனக்கு



அடிபட்டால் முதலில் என்னைக் கவனி என்று சொல்வது மனித
இயற்கை. அதுபோல் தங்களுடைய வீடுகளில் தீப்பிடித்திருப்
பதை முதலில் அணையுங்கள் என்று சொல்வது கூட இயற்கை
யாகத்தான் இருக்கும். அதுமட்டுமல்ல. போகின்ற அதிகாரிகள்
ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்களாக, இருந்து, அது
முன்பே தெரிந்திருந்து எந்த இடத்திற்கு தீயை அணைக்க வந்
திருக்கிறார்களோ அந்த இடத்திலே இருக்கின்ற சில வீடுகளில்
உள்ளவர்கள் அவர்களுடைய ஜாதியைச் சேர்ந்தவர்காளக இருப்
பார்களேயானால் உடனே அவர்கள் அவர்களுடைய ஜாதிக்கார
ருக்குப் போய் உதவி செய்தார் என்ற ஆத்திரத்திலே கூட அந்த
எண்ணம் தோன்றுவதற்கு இடம் உண்டு என்பதை குறிப்பிட்டுச்
சொல்லிக்கொள்கிறேன். ஆகவே பொதுத் தன்மையோடு எல்
லாவற்றையும் நோக்குகின்ற எண்ணம் இங்கே வளருவதற்கு நாம்
அனைவரும் ஒன்று பட்டு பணியாற்றவேண்டும் என்று கேட்
டுக் கொண்டு இங்கே வெட்டுத் தீர்மானங்கள் தந்தவர்கள் தங்
களுடைய....................

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலை
வரவர்களே, மதுரையிலே நடைபெற்ற நடிகர்திலகம் திரு. சிவாஜி
கணேசன் அவர்களுடைய 200-வது படத்திற்கான வெற்றி விழா
விலே ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலத்திலே கலந்து கொண்ட
வர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளைத் திரும்பப்பெற வேண்
டும் என்று எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. ராஜசேகரன்
அவர்களும், சுந்தரராஜ் அவர்களும் வேண்டுகோள் விடுத்திருந்
தார்கள். அந்த வழக்கு பற்றி அரசு என்ன முடிவு எடுத்திருக்
கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்
களே, அந்த விழாவிற்கு மாட்டுவண்டி கொண்டுவரக்கூடாது
என்ற வகையிலே தான் உத்தரவு பெற்றிருந்தார்கள். ஆனால்
வந்தவர்கள் மாட்டு வண்டிகளைக் கொண்டு வந்தார்கள். அதைத்
தடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டபோது அந்த மாட்டு வண்டி
ஊர்வலத்தை அனுமதிக்க மாட்டோம் என்று சொன்னார்கள்.
அப்படிச் சொன்னவர்களோடு தகராறு செய்து அதனால் சில
காவலர்களுக்கு காயங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இது
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே அத
னால் வந்திருக்கின்ற தவறுதானேயொழிய வேறொன்றும் இல்லை
ஆனாலும் இதைப்பற்றி அரசு சிந்திக்கும் என்பதை மட்டும் நான்
சொல்லிக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவரவர்களே, நம்முடைய
முதலமைச்சரவர்கள் தண்ணீர் வேறு பகுதியிலே செலவழிக்கப்
பட்டுவிட்டதாகச் சொல்கிறார்கள். நான் அந்த பகுதியைச்
சேர்ந்தவன். அந்த வண்டியில் தண்ணீர் வராதது மட்டுமல்ல.
அங்கே ஏற்பட்ட சச்சரவால் பிரம்படிப் பிரயோகம் நடத்தப்

பட்டதாகச் சொன்னார்கள். அது அப்படி அல்ல. அங்கே வந்த போலீசார் மிகக் கொடுமையான முறையில் எங்கள் நகரத்தை ஏறத்தாழ 30 ஆண்டு காலத்தில் தாக்கி இராத அளவுக்கு இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள குழந்தைகளையும் தாய்மார்களையும் தாக்கி இருக்கிறார்கள். அதையும் முதலமைச் சரவர்கள் தீர விசாரிக்க வேண்டும். தண்ணீர் வரவில்லை என்பது உண்மை. இன்னும் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லேன். அதையும் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு பேரவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாவட்ட நிர்வாகம் என்ற வகையில் மனு நீதி நாள் என்று வாரம் ஒரு நாள் வைக்கிறோம். அந்த நாளன்று மாவட்டம் முழுவதும் உள்ள மக்கள் ஒரு இடத்தில் கூடி ஆயிரக்கணக்கான பேர் மனுக்களைக் கொடுக்கின்றபோது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாமல் மனுக்களைப் பெறுவதற்குக் கூட நேரம் இல்லாமல் போகக் கூடிய சூழ்நிலை இருப்பதால் ஒவ்வொரு தாலுக்கா மையத்திலும் மனு பெறும் நாளைப் பிரித்து வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு. அதையும் முதலமைச்சரவர் கள் கவனித்து அப்படிப்பட்ட முறையைக் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன்.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு எங்கெங்கே அப்படிப்பட்ட தண்ணீர் தேக்கி வைக்கப் பெறாத நிலைமை இருக்கிறதோ அங் கேயெல்லாம் தண்ணீர் தொட்டிகள் கட்டுவதற்கு ஏற்பாடுசெய்ய திட்டமிட்டிருக்கிறது என்பதை சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்களை கொண்டு வந்திருக்கிற நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்கள் என்ன எதிர்பார்த்தார்களோ, அதில் ஓரளவிற்கு என் னுடைய பதில் அவர்களுக்கு விளக்கமாகக் கிடைத்திருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர் கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.





திருமதி. ஏ. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் போலீஸ் மானியக் கோரிக்கையில் பல சலுகைகளை கொடுத்திருக்கிறார்கள். பெண் வார்டன்கள் போலீஸ் எஸ்கார்ட்ஸ் (Fem le Warders Poli e Escorts) என்று ஏ.ஆர்.எஃபில் வேலை செய்கிற பெண்கள் நிறையப் பேர் கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் விதவைகள். அவர்கள் மகஜர்கள் கூட கொடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 10, 15 வருஷங்களாக டெம்பரரியாகவே வேலை செய்து வரு கிறார்கள். அவர்களுக்கு 5 ரூபாய் தான் கூலி. பேட்டா நாள் ஒன்றுக்கு 1½ ரூபாய். அவர்கள் வேலைநேரமோ காலை 6.30 முதல் பகல் 1.30 வரை, மாலை 4.30 முதல் 9.30 வரை என்றிருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது சலுகைகள் கொடுக்க முடியுமா என்பதை யும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தால் நலமாக இருக் கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சலுகைகளைப் பற்றி இப்பொழுது என்னால் சொல்ல முடியாது. உரிமைகளாக இருந்தால் நியாயமாக அரசு கவனிக்கும்.

கோரிக்கை எண் 9.

திருவாளர்கள் சு. பாலன், என்.எஸ்.வி. சித்தன், என். வரத ராஜன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''மானியக் கோரிக்கை எண்-9 மாநில ஆட்சித் தலை வர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப் பின் கீழ் ரூபாய் 17,25,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்ற, கோரியத் தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 11.

திருவாளர்கள் ஜே. எஸ். இராசு; என். எஸ். வி. சித்தன், என். வரதராஜன், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

[1980 ஜூலை 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : '' மானியக் கோரிக்கை எண், 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 21,31,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

## கோரிக்கை எண். 15.

திருவாளர்கள் சு. பாலன், என். எஸ். வி. சித்தன், கு. ரமணி, எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : '' மானியக் கோரிக்கை எண்-15-காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 43,81,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

## கோரிக்கை எண் 16.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், கே. கல்லன், என். பழனிவேல், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளபபெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :—மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,28,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

## கோரிக்கை எண். 37.

திருவாளர்கள் சு. பாலன், கே. கல்லன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.



1980 ஜூலை 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :—'' மானியக் கோரிக்கை எண். 37—பொது பணிகள்—கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ.3,97,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

## கோரிக்கை எண். 38.

திரு. சு. பாலன், திருமதி த. இராசாம்பாள், திரு. தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :—

'' மானியக் கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,96,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது,

## கோரிக்கை எண். 51.

திருவாளர்கள் சு. பாலன், கே. எம். தங்கமணி கவுண்டர், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :—

மானியக் கோரிக்கை எண். 51—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,55,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது,

[1980 ஜூலை 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் மாலை 4.00 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை 1.38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாலை 4.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

வரவு-செலவுத் திட்டம் 1980-81. வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(ஏ) கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் நலன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 7,60,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

திரு. சு. பாலன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு அதிகமான ஹாஸ்டல்கள் கட்ட வேண்டுமென்ற கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெற்ற ரூ. 7,60,68,000-லிருந்து ரூ. 100 குறைக்கவேண்டும் ".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் நலன் பற்றிய விவர அறிக்கை ** அவைமுன் வைக்கப் பட்டுள்ளது. அதை நான் படித்ததாக எடுத்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**526-568-ம் பக்கங்களில் இணைப்பு I—ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1980 ஜூலை 29]

* திரு. சி. த. சிதம்பரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நல மானியத்தின்மீது பேசுகின்ற நல் வாய்ப்பினைத் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், பேசுகின்ற நல்வாய்ப்பினை அளிக்கும் வகையில் சட்டமன்றத்திற்கு அனுப்பி உள்ள காரைக்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோர் நலத் துறையுடன் இணைந்திருந்த பிற்பட்டோர் நலத் துறையை 1969-ல் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் தனியாக அமைத்து சிறப்பாக இந்தத் துறை செயல்பட்டு வருகிறது. தி. மு. க. ஆட்சிக்காலத்தில்தான் மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். இன்னும் சிறப்பாக பிற்பட்டோர் நலத்துறைக்கு தனி அமைச்சர் நியமிக்கப்பட்டார். இன்னும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 1971-72-லேதான் தி.மு.க. அரசிலேதான் பிற்பட்டோர் நலத் துறைக்கு தனி மானியம் ஏற்பட்டது. பிற்பட்டோர் நலத் துறைக்கு செலவழிக்கக்கூடிய தொகையை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கி, அதிலே பாதிக்கப் பட்டிருக்கக்கூடிய பகுதி மக்களுக்கு இன்னும் சிறப்பான வசதிகளை இந்த மானியத்தின்மூலம் செய்து கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பட்டோர் மாணவர்கள் விடுதியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த விடுதிகள் எல்லாம் எப்படிச் செயல் படுகின்றன என்பதைக் கண்காணித்துப் பார்த்தால், சரியான முறையிலே நடத்தப்படுகிறதா என்பதே ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. இந்த விடுதிகள் எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டனவோ, அந்த அடிப்படையிலே சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பிற்பட்ட மாணவர்கள் நல விடுதிகளை எல்லாம் கூடுதலாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். காரணம் நிறைய மாணவர்கள் இந்த பிற்பட்டோர் நல விடுதிகளில் சேரமுடியாமல் தவிக்கக்கூடிய காட்சியை நாம் காண்கிறோம். என்னுடைய தொகுதியில், கண்டரமாணிக்கத்தில் 30 பேர்கள் கொண்ட விடுதி அமைந்திருக்கிறது. அதை 50 பேர்கள் கொண்ட விடுதியாக மாற்றித் தரவேண்டும். அதேபோல், புதுவயலில் 50 பேர்கள் கொண்ட விடுதி இருக்கிறது. அதை 75 பேர்கள் கொண்ட விடுதியாக மாற்றித் தரவேண்டும்; அதைப் போல், திருக்கோஷ்டியூரில் 70 பேர்கள் கொண்ட ஒரு விடுதி இருக்கிறது; அதை 100 பேர்கள் கொண்ட ஒரு விடுதியாக மாற்றித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

புதிதாக 34 விடுதிகள் திறக்கப்படும் என்று அரசு செய்திக் குறிப்பிலிருந்து தெரிகிறது. அதிலே பெரிய நகரமாகிய என்னுடைய ஊரான காரைக்குடியிலும், பக்கத்தில் உள்ள கல்லலிலும், பள்ளத்தூரிலும்—ஆகிய இந்த மூன்று ஊர்களிலும் பிற்பட்டோர் நல விடுதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிகளுக்கான பிற்பட்டோர் விடுதிகள் திறக்கப்படுவதில் இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடியில் அதற்கான விடுதியை ஏற்படுத்தித் தரவேண்டும். காரணம் அழகப்பா கல்லூரி பல்கலைக் கழகமாக மாற்றப்படும் நேரத்தில் பிற்பட்டோர்—விடுதி அவசியம் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள் ஆகியோருக்குக் கருவிகள் வழங்கப்படுகின்றன. அவை போதுமானதாக இல்லை. அவர்கள் அதிகமாகப் பயன்பெறத்தக்க வகையில் நிறைய உதவிகள் செய்ய வேண்டும். கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளுக்கு இலவசமாகத் தொழில் கருவிகள் வாங்க ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டம் இல்லை. ஆகவே, இராமநாதபுரம் மாவட்டமும் புதுக்கோட்டை மாவட்டமும் கருவிகள் வழங்கப்படும் மாவட்டங்களோடு சேர்த்துக் கொள்ளப் பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சலவைத் துறை கட்ட பாதி கடன், பாதி மானியமாக வழங்கப்படுகிறது. அந்தத் திட்டம் காரைக்குடியிலும் செயல்பட அனுமதி வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோர் நல மாணவ-மாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள இடங்களில் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியரைச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளிக்க ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் வகுப்பில் 100-க்கு 90 பேர் வறுமை கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள் என்பது தெரிந்ததே. பிற்பட்டோர் வகுப்பில் நகரத்தார் சமுதாயத்தை சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் சேர்க்கவில்லையாயினும் கல்வித் தகுதி பெறுவதிலாவது வசதி, சலுகை பெறத் தக்க வகையிலே அவர்களைச் சேர்த்துக் கொள்ள சிறு திருத்தம் செய்யவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

குற்ற மரபினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு, கல்லூரிகளில் அனுமதி ஆகியவைகளில் பிற்பட்டோர் வகுப்பினருக்கான சலுகைகள் வழங்கப்படவில்லை



எனத் தெரிகிறது. அவை வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஐம்பது சதவிகித ஒதுக்கீடு என்பது எப்படிச் செயல்படுகிறது? சரியாகச் செயல்படுகிறதா? எல்லாத் துறைகளிலும் பின்பற்றப்படுகிறதா என்று கவனித்து சரியாகச் செயல்படச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புத் தந்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் வகுப்பினர் நலன் மானியக் கோரிக்கைமீது பேசுகின்ற நல்லதொரு வாய்ப்பும் பெற்றதற்காக என்னை ஆளாக்கி அனுப்பிய எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பினர் மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். குறிப்பாக பிற்பட்டவர்களானாலும் சரி, தாழ்த்தப்பட்டவர்களானாலும் சரி வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள், ஏழை எளிய மக்கள் எதிலும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழை எளிய மக்கள் இந்த பிற்பட்ட வகுப்பினரிலே வாழ்வதற்கு வழியற்ற முறையிலே பெரும்பாலான பகுதி மக்கள் இருக்கிறார்கள் என்பதை இங்கு நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்டவர்களுடைய முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும் வகையில் பிற்பட்டோர் நலத்துறை புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுபோன்ற இந்த பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் வருகிற மக்கள் நலனையும் வாழ்க்கைத் தரத்தையும் வளப்படுத்த பிற்பட்ட நலத்துறையை கவனிக்க நம்முடைய புரட்சித் தலைவர் அரசு தனி அமைச்சரை நியமிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். பிற்பட்டோர் நலன்களுக்கான திட்டங்களைப் பற்றி ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்காக மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு இயங்கி வருகிறது.

[மாலை 4.10]

இக்குழுக்கள் விரிவுபடுத்தப்பட்டு மாவட்ட அளவிலே ஆலோசனைக் குழுக்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலனுக்காக அரசு புரட்சிகரமான தீவிரமான திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் கல்வி கற்பதற்கு போதிய வசதிகள் இன்மையால் இன்னும் பிற்பட்டநிலையிலேயே அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்தைக்

கருத்தில் கொண்டு கல்வி மேம்பாட்டிற்காக வழிவகை செய்வது
மிக மிக அவசியமாகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு
9ஆம் வகுப்பிலிருந்து கல்வி வசதிக்காக உதவித் தொகை வழங்
கப்படுகிறது. அதை அனைவரும் பாராட்டினாலும் மேற்படி
உதவித் தொகையை 5ஆம் வகுப்பிலிருந்து கொடுத்தால் நலமாக
இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இந்த உதவித் தொகையைப் பெறு
வதற்கு மாணவர்களின் பெற்றோர்களுடைய ஆண்டு வருமானம்
ரூபாய் 2,500-க்கு அதிகமாக இருக்கக்கூடாது என்பதை ரூபாய்
5,000-க்கு அதிகமாக இருக்கக்கூடாது என்ற நிலைமைக்கு உரு
வாக்கி அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று இந்த
மாமன்றத்தின் மூலமாக கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை அளிக்கும்
பொழுது தேர்விலே 40 சதவீதமதிப்பெண்கள் எடுக்கவேண்டும்
என்பதை தேர்விலே தேர்ச்சி பெற்றவர்கள் அனைவருக்கும்
உதவித் தொகை உண்டு என்று ஆக்குகின்ற நிலைமை ஏற்படு
மானால் ஏழை எளிய மக்களுடைய வாழ்விற்கும் வளத்திற்கும்
மேம்பாட்டிற்கும் ஏழை எளிய மக்களின் படிப்பு வசதிக்கும்
வாய்ப்பாக அமையும் என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்
படுகிறேன்.

அது மட்டுமல்ல, மத்திய அரசு உதவியுடன் குறைந்த
வருமானம் உடையோரின் பிள்ளைகளுக்கு உதவித் தொகை
வழங்கும் திட்டம் 1964-65ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டு
நடந்து வந்தது. 1971-72ஆம் ஆண்டு முதல் அத்திட்டம்
கைவிடப்பட்டுள்ளது. ஆகவே மறுபடியும் புரட்சித் தலைவர்
அரசு மத்திய அரசுடன் போராடி குறைந்த வருமானம் உடை
யோரின் பிள்ளைகளுக்கு உதவித் தொகை மீண்டும் பெற்றுத
தந்து பிற்பட்டோர் வாழ்விற்கும் மேம்பாட்டிற்கும் வழி
காட்டியாக விளங்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்
படுகிறேன்.

அது மட்டுமல்ல, ஜாதிப் பாகுபாடு இல்லாமல் மேல்
நிலைப் பள்ளியிலே தமிழ் போதனா மொழி படிக்கும் எல்லா
மாணவர்களுக்கும் முழு சம்பள சலுகை அளிப்பதன் மூலம்
தமிழ் மொழியின் நலனிலே எந்த அளவுக்கு இந்த அரசு அக்கறை
கொண்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதாக அமையும்.
பிற்பட்டோர் நலனிலே சேர்ந்துள்ள மாணவர்களுக்கு ஆங்காங்கே
இல்லங்கள் அமைக்கப்படுகின்றன. அந்த இல்லங்களிலே
அந்த மாணவர்களின் நன்மையைக் கருதி அவர்களுக்கு அளிக்கப்
படுகிற உதவித் தொகையை மேலும் விரிவுபடுத்த வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.





என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே 3 இடங்
களிலே 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வசிக்கிறார்கள்.
காவிரிப்பாக்கம், சோலிங்கர், குருவராஜபேட்டை அங்கே
ஒரு உயர்நிலைப்பள்ளி, மூன்று ஊராட்சிப் பள்ளிகள் இருக்
கின்றன. அந்தப் பள்ளிகளிலே படிக்கின்ற பிற்பட்ட வகுப்பைச்
சேர்ந்த மாணவர்களுக்கு விடுதிகள் கட்டிக் கொடுக்கப்பட
வில்லை, அப்படிக் கட்டிக் கொடுக்கப்படாத காரணத்தால்
அந்த ஏழை எளிய மக்கள் வாழ்வு பெறுவதற்கும் மேம்பாடு
அடைவதற்கும் வாய்ப்பு இல்லாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்
கிறது.

ஆகவே, இந்த நேரத்திலே அப்படிப்பட்ட விடுதிகளைக்
கட்டிக் கொடுக்க இந்த அரசு முன் வந்திருப்பதாலே என்னுடைய
தொகுதிக்கு—குறிப்பாக பிற்பட்டோர் அதிகமாக வாழ்கின்ற
என்னுடைய தொகுதிக்கு அந்த நலன்களை ஏற்படுத்தித் தர
வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொண்டு, இப்படி
யொரு நல்ல வாய்ப்பினை அளித்தமைக்காக நன்றி கூறி, விடை
பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, பிற்பட்டோர் நல மானியத்திலே நான் இரண்டொரு
கருத்துக்களைக் கூறலாம் என்று விழைகிறேன். இது சமுதாயம்
அடித்தளத்திலேயும் இல்லாமல், மேல் மட்டத்திலேயும் இல்லா
மல் மத்திய தர வகுப்பாக இருக்கிறது என்ற கண்ணோட்டத்து
டன் பார்க்க வேண்டும். இவர்களுக்கு என்று இப்படிப்பட்ட
ஒரு நிலை இருப்பது வேதனையையும், வருத்தத்தையும் தரு
கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறைக்காக இருக்கக்கூடிய அமைச்சரும், இந்தத்
துறையின் தலைவரும் பின்தங்கியவர்களாக இருக்க வேண்டு
மெனபதே என்னுடைய கருத்தாக இருக்கிறது. இந்தத் துறை
யை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அமைச்சர் அவர்கள் பின் தங்கி
யவர்களா என்கின்ற ஆராய்ச்சிக்கு நான் செல்லவில்லை என்றா
லும்கூட, பின் தங்கியவர்கள் பட்டியலிலே அவர்கள் சேர்கிறார்
களா என்பது எனக்குத் தெரியவில்லை என்றாலும்கூட, அப்படி
இருக்க வேண்டுமென்பது என்னுடைய நியாயமான கோரிக்கை
என்பதை இந்த நேரத்தில் நான் வைக்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
துணைத்தலைவர்களே, என்னைப் பிற்பட்டோர் பட்டியலில்
சேர்த்துக் கொண்டால் மிகமிக நல்லது.

திரு. இல. பலராமன் : நன்றி. ஆனால் என்னுடைய
உணர்வு பூராவும், இந்தத் துறைக்குப் பிற்பட்டோர் வகுப்பைச்
சேர்ந்தவர் அமைச்சராக இருக்க வேண்டும், துறைத் தலைவராக
இருக்கின்ற அதிகாரியும் பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்தவராக
இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம்.

சமுதாயத்திலே பிற்பட்டோராக இருப்பவர்கள் கடினமாக உழைக்கக் கூடியவர்களாகவும், சமுதாயத்திலே மிகமிகப் பலவீனப்பட்டு, அவர்களுக்கெனத் தனி மரபு, தனி நிலை இருந்தாலும், அவர்கள் இன்றைக்கு மேம்படாமல் இருப்பதற்குக் காரணம், வேலைவாய்ப்புகளும் மற்றவைகளும் இல்லாததால் இன்றைக்கும்அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாகஇருக்கிறார்கள் என்பதை நாம் இன்றைக்குக் கூறிக்கொண்டிருக்கிறோம். இதை மாற்றுவதற்கு ஒரு சோஷலிச சமுதாய அமைப்பிலே அவர்களைக் கொண்டு வருவதற்கு, கல்விக் கோரிக்கைகளாக இருந்தாலும், பொருளாதார வளர்ச்சிக்காக இருந்தாலும் வேறு என்ன செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் யோசிக்க வேண்டும்.

கல்விக்காக இன்னின்ன சலுகைகளை அளிக்க வேண்டுமென்று இருந்தாலும் அவைகளைப் பரவலாக்க வேண்டுமென்பதைப் பற்றி எனக்கு முன் பேசிய நண்பர்கூடக் கூறினார். அந்த அள விற்குக் கல்வித்துறை சலுகைகளையும், தொழில்துறை சலுகை களையும் வழங்குகின்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்விச் சலுகைகள், 9,000 ரூபாய் என்ற வரையறையை நீக்கி இன்றைக்கு எடுத்திருக்கின்ற நிலையை நான் வரவேற்கிறேன். பின் தங்கியவர்களுக்கு 50 சதவீதம் வேலைவாய்ப்பு என்பதைப் பார்க்கின்ற பொழுது அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால், அந்த நிலைகளெல்லாம் நல்லமுறையில் பயன்படுத்தப் படுகிறதா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். அவை களெல்லாம் நல்லமுறையில் பயன்படுத்தப்பட வேண்டும். பின் தங்கியோர் பட்டியலிலே சேர்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர் களுக்குக் கூட ஒரு வேட்கை, ஆசை உண்டாகி, தன்னையும் பின் தங்கிய வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று சொல்கின்ற அளவிற்கு அந்த வகையில் பட்டியல் நீண்டு கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் போட்டி மனப் பான்மைதான் ஏற்படுகிறது.

இதற்கு முன் இருந்த அரசாங்கம், பின் தங்கியவர்கள், மிக வும் பின் தங்கியவர்கள் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார் கள். மிகவும் பின் தங்கியவர்கள் என்று பிரிப்பதற்கான சூழ் நிலைகள் இன்றைக்கும் நாட்டிலே இருக்கின்றன. மிகமிக வறு மைக் கோட்டிற்குக் கீழே பல சமுதாயத்தினர் இருக்கிறார்கள். என்பதை அரசு உணராமல் இல்லை. அந்தச் சமுதாயத்தினர் யார் என்பதைப் பார்த்துப் பிரிப்பதற்காக ஒரு குழுவை அமைக்க அரசு முயலுமா என்று கேட்டு, அதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்றுகூட நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வேலைவாய்ப்பிலே முன்னால், மாவட்ட வாரியாகப் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கிச் செய்தார்கள். ஆனால் உயர்நீதி மன் றத்திலே வழக்கின் காரணமாக மாவட்ட அளவில் ஒதுக்க முடி





யாத நிலை ஏற்பட்டது. இதை மீண்டும் பரிசீலித்து ஒவ்வொரு மாவட்டத்திலேயும் பின் தங்கிய பகுதிகளிலே இருக்கும் மக்க களுக்குக் கல்விச் சலுகைகள் தருவதற்கான சூழ்நிலைகளையும் உருவாக்கி, மாவட்ட அளவில் ஒதுக்கி வழங்குவதற்கான சூழ் நிலைகளையும் இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

[மாலை 4-20]

இந்தப் பின்தங்கிய வகுப்பினர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக் களுக்கும் இடையே ஒரு சமுதாயப் பிரச்னையாக இன்றைக்குக் கலவரங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தக் கலவரங் களுக்கு அடிப்படைக் காரணம், பொருளாதார வளர்ச்சியில்லாதது தான் என்பதை நாம் உணருவோம். அவர்களுக்குள்ளே தொடர்பு ஏற்படுத்த, பிரதானமாக வீடுகளை ஒன்றாக அமைக்கவேண்டும். விழுப்புரம் கலவரத்தில்கூட, சதாசிவம் கமிஷன் அறிக்கையின்படி அவர்கள் இரண்டறக் கலந்திருக்கக்கூடிய இடங்களிலே கலவரம் இல்லை,இருதரப்பாரது வீடுகளை இரண்டறக்கலந்திருக்கக்கூடிய வகையிலே கட்டித் தருவோமேயானால், சமுதாயப் பிரச்னை எழாது, ஏற்றத்தாழ்வுகள் இருக்காது, என்று கூறியிருக்கிறார்கள். அந்த முறையில், அவர்கள் இரண்டறக் கலந்திருக்கக்கூடிய சூழ் நிலையை உருவாக்குவதற்கு அரசு வழிவகைசெய்ய வேண்டும்.

நகர்ப்புறங்களிலே வளரக்கூடிய தொழிற்சாலைகளை, கிராமப் புறங்களிலேவளர்த்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். கிராமப்புறங்களிலேதான் பின்தங்கியவர்கள் அதிகமாக இருக் கிறார்கள். ஏதோ, ஒன்றிரண்டு பின்தங்கியவர் நகர்ப் புறங் களிலே இருந்தாலும், கிராமப்புறங்களிலேதான் அவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, கிராமப்புறங்களிலே ஏராள மான தொழிற்சாலைகளை, குடிசைத் தொழில்களை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், வன்னியர் சமு தாயத்தினர் மிக அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பின்தங்கிய மக்கள் இன்றைக்கும் விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கக்கூடிய மக்களாக அவர்கள் இருக்கிறார்கள். அதோடு நெசவுத் தொழிலை நம்பியிருக்கக்கூடிய மக்களாக அவர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் எளிமையான தொழிலை செய்யக்கூடிய நிலைமையிலிருப்பதால், அவர்களது வளர்ச்சிக்கு ஆங்காங்கு, சிறுசிறு தொழில்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு செய்ய வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டம் 39(ஏ)-ன்படி, வேலை வாய்ப்புக்கு ஒவ்வொருவருக்கும் உரிமையிருந்தாலும், எந்த அளவுக்குச் சட்டப் படி நாம் வழங்குகிறோம், எந்த அளவுக்கு அவர்களுக்கு வழங்கு கிறோம் என்பதைப் பரிசீலிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கி,

[திரு. இல. பலராமன்] [1980 ஜூலை 29

எல்லா மக்களுக்கும் பகிர்ந்து கொடுக்கக்கூடிய அளவு வேலை வாய்ப்பினை நல்குவதற்கு மாவட்ட அளவில் வேலை வாய்ப்பு தருவதற்கான சூழ்நிலையை அரசு உருவாக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வன்னிய மக்களை மிகவும் பின் தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.



1980 ஜூலை 29] [திரு. என். வரதராஜன்]

இது என்ன கணக்கு என்று எனக்குத் தெரியவில்லை. நாம் கடன்களை ரத்து செய்கிற ஒரு விதியை வைத்திருக்கிறோம். ஆண்டு வருமானம் இவ்வாறு இருந்தால், அவர்களுடைய கடனை யெல்லாம் ரத்து செய்யலாம் என்று நாம் சொல்லியிருக்கி றோம்.

ஆகவே இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையிலே இந்த அறிக் கையிலே இருக்கக்கூடிய 1 கோடியே 67 இலட்சம் 67-68லே இருந்து இன்றைக்கு 7 கோடியே 60 இலட்சம் ரூபாய் [illegible] யிருக்கிறார்கள். அது குறித்து மெத்த மகிழ்ச்சி அடை[illegible] உயர்ந்து வருகின்ற பண மதிப்பின் நிலைமைகளை [illegible] நாம் கொடுக்கும் சலுகைகளைத்தான் அவர்களுக்குக் கிடைக்கும் [illegible] லதைப் பார்க்க வேண்டும். அப்படி பார்க்கின்றபோது இந்த பெற்றோர்களுடைய வருமானம் குறைந்த பட்சம் 5,000 ரூபாயாக உயர்த்தவேண்டும். ஏற்கனவே நமது தமிழ்நாட்டில் இருக்கின்ற 4½ கோடி மக்களில் 75 லட்சம் பேர்கள் அரிசன மக்கள் இருப்ப தாகக் மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப்போல பின்தங்கிய மக் கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கை நான் இந்த அறிக்கையிலே துருவித் துருவிப் பார்த்தேன். இதிலே ஒன்றும் திட்டவட்டமாக இல்லை. எனவே நான் வற்புறுத்துவது எல்லாம், ஏதாவது ஒரு துறையிலே ஆய்வு செய்து, நிபுணர் குழு வையாவது அமைத்து, பின்தங்கிய மக்களுடைய நிலைமைகளைப் பற்றிப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்பதையும் அறிய முயற்சிகள் எடுக்கவேண்டும். ஏற்கனவே நாம் அமைத்திருக் கிற இந்த ஆலோசனைக் குழுவை விரிவுபடுத்தி மாவட்ட அள விலே இந்த ஆலோசனைக் குழுக்கள் செயல்பட ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்து, விடுதிகளைப் பொறுத்தவரையில், ஆஸ்டல் வசதி கள் மிகக் குறைவான அளவுக்கு இருக்கிறது. நம்மிடம் இருக் கின்ற நிதி ஆதாரத்தை வைத்துக் கொண்டு இந்த அளவுக்குத் தான் செய்ய முடியும். பின் தங்கிய மாணவர்கள், தாழ்த்தப் பட்ட மாணவர்களைவிட மிகவும் மோசமாக இருக்கிறார்கள் அவர்களுக்கு ஈடாகவே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மாணவர்கள் வீட்டிலிருந்து படிக்க முடியாது. நாம் கொடுக்கும் சிறு உதவியைக் கொண்டுதான் மூச்சைப் பிடித்துக் கொண்டு படிக்கிறார்கள். எனவே அவர்களுக்கு ஆஸ்டல் வசதியை விரிவு படுத்தி, மாணவர்களுக்கு உதவி புரிகின்ற வகையில் ஏற்பாடு களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பிற் படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 5,000 மாணவர்கள் பயன்படத் தக்க வகையில் ஆஸ்டல் வசதி செய்கிறோம் என்று சொல்லி இருக் கிறீர்கள். ஆனால் தமிழ்நாட்டிலே இருக்கின்ற மொத்த பிற் படுத்தப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கும், இந்த எண் ணிக்கைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக் கிறது. எனவே அவர்களுக்கு ஆஸ்டல் வசதியை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மானியக் கோரிக்கை எண் 32 பிற்படுத்தப்பட்
டோர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பின் மீது இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு சில விவரங்களைக் கூற ஆசைப்
படுகிறேன்.

இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்காக 1980-81 ஆம் ஆண்டு
7 கோடியே 60 லட்சத்து 680 ஆயிரம் ரூபாய் மானியம் கோரி
இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக பிற்படுத்தப்பட்
டோர் நலத்துறையின் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருப்
பதாக இதிலே கூறப்பட்டிருக்கிறது. அந்த ஆலோசனைக்
குழுவை மாற்றி அமைக்கவேண்டும் என்றும், அதிலே திருத்தங்
கள் செய்யப்படவேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்
கிறேன்.

வருமானம் என்பது மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன்
அவர்கள் கூறியதுபோல 2500லிருந்து 5000 ரூபாய்க்கு உயர்த்தப்
படவேண்டும். ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள்கூட கூறினார்கள். அதை 5,000 ஆக உயர்த்த
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களை விடுதியில் சேர்ப்பதற்காக ஒன்று தூரம்
5 கிலோ மீட்டர் இருக்க வேண்டும். இரண்டாவது அந்த அளவுக்கு
மார்க்கு இருக்க வேண்டும், என்று ஒரு நிர்ணயம் இருப்ப
தாகச் சொல்லப்படுகிறது. இந்த இரண்டு நிர்ணயத்தையும்
போட்டுவிட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினரையும் இணைத்து
ஒரு கமிட்டி அமைத்து தேர்வு நடந்ததாகத் தெரிகிறது. இந்த
இரண்டு நிர்ணயங்களையும் சொல்லிவிட்டு பின்னர் தேர்வு
என்றால் அந்தத் தேர்வு தேவையில்லை. இதிலே முக்கியமான
விஷயம் என்னவென்றால் அவன் வீடு 4 கிலோ மீட்டர் தூரம்
இருக்கும். அந்தப் பையனின் கால்கள் நடக்க முடியாது
இருக்கும். வீட்டிலேயும் இருந்து படிக்க முடியாத நிலை இருக்கும்
எனவே இத்தகைய பையன்களை ஆஸ்டலில் சேர்ப்பதற்கு 5
கிலோ மீட்டர் தூரமும், மார்க்கும் தடையாக இருக்கக்கூடாது
ஒரு குறிப்பிட்ட மார்க்குதான் இருக்க வேண்டும். இவ்வளவு
தூரம் தான் இருக்க வேண்டும் என்றால் இந்தக் கமிட்டிக்கே
வேலை கிடையாது. ஆக இதை பரிசீலிக்கின்ற முறையில் தூரம்
அதிகம் இல்லாமல் இருந்தாலும் சரி, மார்க்கு குறைந்திருந்தாலும்
சரி, சில பிரத்தியேகமான நிலையில் இதைப் பரிசீலிக்கவேண்
டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 4-30]

நேற்றையதினம் மன்னார்குடியில் நடந்த ஆலோசனைக்குழு
கூட்டத்தில் கூட அந்தக் கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள்
என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு
கொண்டு வருகிறேன்.



குறிப்பாக இன்றைக்குத் தொழில் கல்வி நிறுவனங்களில் படிக்
கும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் கடன் உதவித் தொகை
வேலைக்குச் செல்லும்போது பிடிக்கவேண்டும் என்று இருந்
தாலும், அந்த மாணவர்கள் ஸ்டைபண்டு கொடுக்கப்படுகிற ரூ.
150 லேயே பிடித்துக்கொள்ள வேண்டும் என்கிற வகையில், வலி
வலம் தேசிகர் பாலிடெக்னிக்கில் செய்து வருகிறார்கள். இந்த
ஸ்டைபண்டு என்பது ஒரு வருமானம் அல்ல. ஆகவே, வருமானம்
நிரந்தரமான வகையில் வரும் வரையில் தவிர்க்கப்படவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், மாணவர் இல்லங்களில் தங்குவோர் இடவசதியை
25% அதிகரிக்கவேண்டும். பல்வேறு இடங்களில் அதிகரிக்க
வேண்டும் என்று சொன்னாலும், குறிப்பாக குளித்தலை, பன்
னார்குடி போன்ற இடங்களில் அதிகரிக்கவேண்டும் என்று கேட்
டுக்கொள்கிறேன்.

கடனைப் பெற்று படித்த மாணவன் இறந்து போய் விட்டான்
என்று சொன்னால், அவன் தகப்பனிடம் அந்த பணத்தை வசூ
லிக்க நடவடிக்கை எடுக்கிறார்கள். கடனை வாங்கிப்படித்த
மாணவனே இறந்து விட்டபோது, அவனுக்காக கடன் வாங்கிய
தந்தையிடம் அந்தப் பணத்தை வசூலிப்பது என்பது சரியல்ல.
அப்படி எங்காவது நடந்து இருந்தால், அதை ரத்து செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விடுதிகளில் மாணவர்களுக்கு அனுமதிக்கப்படும் உணவு
செலவுத் தொகையைப் பொறுத்த வரையில், சென்னையில்
கல்லூரி மாணவர் விடுதிகளில் இருக்கிறவர்களுக்கு ரூ. 80-ம்,
தொழிற்கல்வி மாணவர் விடுதிகளில் இருக்கிறவர்களுக்கு
ரூ. 80-ம் இதர விடுதிகளில் இருப்பவர்களுக்கு ரூ. 45-ம்
என்றும் கொடுக்கப்படுகிறது. அதேபோல், வெளியூர்களில்
இருக்கும் கல்லூரி மாணவர் விடுதிகளில் இருப்பவர்களுக்கு
ரூ. 65-ம் தொழிற்கல்வி மாணவர் விடுதிகளில் இருப்பவர்
களுக்கு ரூ. 65-ம், இதர விடுதிகளில் இருப்பவர்களுக்கு ரூ. 45-ம்
என்று கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகை போதாது.
இதை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், மறவர்கள் மிகவும்
பின் தங்கியவர்கள். அவர்கள் குற்றப்பரம்பரைப் பட்டிய
லில் இருந்தபோது கைபெழுத்துப் போடப்பட வேண்டும் என்ற
நிலைமை இருந்தபோது பல சலுகைகள் இருந்தன. அத்தகைய
சலுகைகள் 'டி' நோடிபைட்' "ட்ரைப்' என்கிற வகையில் அவர்
களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. அப்படி கிடைத்த சலுகைகள்
நிறுத்தப்பட்டு இருக்கிறது. அதைத் திருப்பவும் கொடுப்ப
தற்கான முறையில் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் குறிப்பிடவிரும்புவது இந்தக்கொள்கை விளக்கக் குறிப்பில் 17-வது பக்கத்தில் 'நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்குத் தனிப்பயிற்சி அளித்தல்' என்று போடப்பட்டு இருக்கிறது. நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்கு எதற்காகத் தனிப் பயிற்சி அளிக்கவேண்டும்? நன்றாகப் படிக்காத மாணவர்களுக்குத்தான் மேலும் பயிற்சி கொடுத்து, அவர்களை ஊக்குவித்து, அதற்காக மாலை நேர வகுப்புகள் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும். நன்றாகப்படிக்கும் மாணவர்களுக்கு மேலும் ஊக்கம் கொடுப்பதைவிட, நன்றாகப் படிக்காமல் இருக்கும் மாணவர்களுக்கு ஊக்கம் கொடுக்கிற வகையில் நட வடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

கடைசியாக நான் கேட்டுக்கொள்வது—மாணவர்கள் விடுதி யில் 25 சதவீதம் இடம் அதிகரிக்கவேண்டும். மாணவர்கள் விடுதி புதிதாகக் கட்டப்படவேண்டும். மாணவர்கள் ஒம்புரூவ் செய்ய வேண்டும். மாணவர்களுக்கு அளிக்கப்படுகிற உணவுத் தொகை போதாது. அதை உயர்த்தவேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம ஆண்டுக்கான பிற்பட்டோர் நலத் துறை மானியக்கோரிக்கை மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தற்கு நன்றி கூறி, பிற்பட்டோர் நலத்துறை பிற்படுத்தப்பட்ட மக்களுடைய குழந்தைகளின் படிப்பிற்காகவும், வேலைவாய்ப் பிற்காகவும் என்று ஒதுக்கப்படுகின்ற தொகையான ரூ. 7,60,68,000-மிகவும் வரவேற்கத்தக்கதொரு செய்தியாகும் என்று சொல்லி, அந்த நல்ல செய்தியை வரவேற்று, அதே நேரத்தில் பிற்பட்டோர் நலத்துறையின் மூலமாக செலவிடப் படுகின்றதொகை அந்த மாணவர்களுக்குப் போய் சேருகிறதா, அந்தத் திட்டம் முறைப்படி செயல்படுகிறதா என்பதையும் பார்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட மாணவர்களுக்கு ஏழை மாணவர்களுக்கு மதிய உண வழங்கப்படுகிறது. அதற்காக நாள்தோறும் 22 காசு கள் செலவிடப்படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல திட்டம். ஆனால் அந்தத் திட்டம் சரியாக இரா களில் இருக்கிற பள்ளிகளில் நிறைவேற்றப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். அங்கெல்லாம் ஆசிரியர்கள்தான் அந்த மாணவர்களுக்கு உணவை சமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆனால் அப்படி உணவு சமைத்து, சில பள்ளிகளில் போடுகிறார்கள்; சில பள்ளிகளில் அதையே விற்று விட்டு மதிய உணவு போடாத நிலைமை இருக்கிறது அல்லது மதிய உணவு 5 காசு கூட பெறாத அளவுக்கு வழங்கப்படுகிறது.





அதேபோன்று சீருடை ஆண்டுக்கு இருமுறை வழங்கப் படுகிறது என்று இருக்கிறது. சீருடை வழங்கும் திட்டம் சரியான முறையில் இல்லை. அதில் சில சிக்கல்கள் இருப்பதை நடைமுறையில் நாம் பார்த்திருக்கிறோம். 2, 3 ஆண்டு களுக்கு முன்னால் மதுரையில் உள்ள ஒரு தனி துணைக் கலெக்டர் அவர்கள் சீருடை வழங்குவதற்குள்ள அவ்வளவு பணத்தையும் செலவிடாமல் தனக்கே எடுத்துக்கொண்டார் என்றகுற்றச்சாட்டு வருகிறபோது அவர் தானே 'சூயிசைடு'—தற்கொலை செய்துகொண்டார். அவர் தற்கொலை செய்துகொண்ட பின் னாலும் அது சம்பந்தப்பட்ட மற்றவர்கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால், சீருடை வழங்கும் மானியம் சரியாக அந்தப்போல காலத்தில் வழங்கப்படுவதில்லை; அதேபோல புத்தகம், நோட்டுகள் அந்த பிற்பட்ட மாணவர்களுக்கு உரிய காலத்தில் போய் சேருகிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. ஜூன் மாதம் பள்ளி ஆரம்பிக்கிறது. ஜூலை 30-ந்தேதி வரையில் அவை கொடுக்கப்படவில்லை. அதற்காக பணம் கொடுக்கப்பட்டு, ஏற்கெனவே, பிற்பட்ட மாணவர்கள் என்று அறிவிக்கப்பட்ட அவர்களுக்கு 2, 3 மாதம் தாமதமாகத் தான் வழங்கப்படுகிறது என்று சொன்னால் அது அந்த மாணவர்களின் கல்வி தரத்தை நிச்சயமாக பாதிக்கும். சில இடங்களில் கொடுக்கப்படாமலே கூட இருக்கிறது.

இப்போது அந்த மாணவர்களுக்கு கடன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அதை எங்கே கொடுக்கிறார்கள், எப்படி கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. அப்படியே கொடுத் தாலும் 500 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்படும் என்று சொல்கிறார்கள்; அது எந்த அளவுக்கு போதும் என்று தெரிய வில்லை.

இங்கே இந்த பிற்பட்ட நலன்களுக்காக வழங்கப் பட்டிருக்கிற அறிக்கையில் குற்ற மரபில் இருந்து நீக்கப் பட்டவர்களுக்கு தனியாக விடுதிகள் அமைத்து, தனி சலுகைகள் கொடுக்கப்படுவதாக சொல்லியிருக்கிறார்கள். இந்த வகையில் ஏறத்தாழ 20,000 மாணவர்கள் சலுகை அடைகிறார்கள்: விடுதிகளில் படிக்கிறார் கள் என்றால் குற்ற மரபிலிருந்து நீக்கப்பட்டவர்கள் 5,000 மாணவர்கள் விடுதிகளில் இருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டி ருக்கிறது. அப்படி அந்த குற்ற மரபிலிருந்து நீக்கப்பட்டவர் கள் பட்டியலில் உள்ளவர்களுக்கு சலுகை என்று சொல்லும் போது மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இருக்கிற கள்ளர், மறவர் இவர்களுக்குத்தான் அந்த சலுகை கிடைக் கிறது. இவர்களுக்கு கிடைக்கிற அந்த சலுகை அந்தக் குறிப்பிட்ட பகுதியிலிருந்து மாறி இருக்கிறவர்களுக்கு கிடைக்க வழியில்லை. கள்ளர் என்றால் தஞ்சை, திருச்சி மாவட்டங்

களிலும் இருக்கிறார்கள்; மற்ற பல மாவட்டங்களிலும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் குற்ற மரபிலிருந்து நீக்கப்பட்டவர்கள் எங்கே இருந்தாலும், இந்த சலுகைகளை விஸ்தரித்து, அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில் 1966-67-ல், சாங்ஷண்டு ஸ்ட்ரெங்த் என்று சொல்லியிருக்கிறார்கள், எத்தனை மாணவர்களுக்கு விடுதி வசதி இருந்ததோ அதே அளவுக்குத்தான் இந்த 1980-81ஆம் ஆண்டுக்கும் ஸ்ட்ரெங்த் இருக்கிறது. அப்படியானால் இந்த பிற்பட்ட மக்களுடைய ஜனத்தொகை ஏறவில்லை என்று அரசு கருதுகிறதா? 10 ஆண்டு காலமாக வளர்ந்து வருகிற ஜனத்தொகை அடிப்படையில் இந்த பிற்பட்ட மாணவர்களுக்கு விடுதி வசதிகள், மற்ற வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், 1965 லிருந்த இந்த மாணவர்களின் ஸ்ட்ரெங்த் தான் இன்றும் இருக்கிறது. அதை அதிகரித்து கொடுக்க வேண்டும். குற்றப்பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள் என்று சொல்லி, அவர்களுக்கு கல்வி சலுகை அளிக்கின்ற இந்த அரசு அவர்களுக்கு வேலைவாய்ப்பில் சலுகை அளிக்கவில்லை என்றுதான் தோன்றுகிறது. சமுதாயத்தில் அழுந்தப்பட்டிருக்கிற அந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு வெறும் கல்வி சலுகை இருக்கிறதே தவிர வேலை வாய்ப்பில் தனி இடம் ஒதுக்கப்படவில்லை; வேலை வாய்ப்பிலும் தனி இடம் ஒதுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் அரசை கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 4.40]

குற்றப் பரம்பரையினர் பட்டியலிலே இருக்கின்ற அவர்கள் ஆங்கில ஏகாதிபத்திய காலத்திலே அழுத்தப்பட்டவர்கள். அவர்களுக்கு அரசு இவ்வளவு சலுகைகளை அளித்து வந்தாலும் அதேபோன்று வேலைவாய்ப்பிலும் தனிச் சலுகை கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதி கட்டுவது மட்டும் அரிசன நலத்துறையிலே இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதுவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் இருந்தால் நல்லது. பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இருக்கின்ற விடுதியைப் பொறுத்த வரையில் 600 பேர்கள் இருக்கின்றார்கள் என்று சொன்னால் அதற்குரிய கட்டிடம் இல்லை. சில இடங்களிலே அவை வாடகைக் கட்டிடங்களிலே இருக்கின்றது. அந்த இடம் சுத்தமானதாக இருக்கின்றதா என்றால் இல்லை. அவர்கள் குளிப்பதற்கும் சிறுநீர் கழிப்பதற்கும் உரிய வசதிகள்கூட



இருக்கின்றது. இப்படிப்பட்ட
ல இடங்களில் இல்லாத நிலை இருக்கின்றது. இப்படிப்பட்ட
லையில் 10, 15 ஆண்டுகளாக பல விடுதிகள் இயங்கி வருகின்றன.
அங்கெல்லாம் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை கூட திருத்தங்கள் செய்வதில்லை. குறிப்பாக என்னுடைய தொகுதியில் 35 ஆண்டுகளுக்கு முன்னால் நான் படிக்கின்றபோது இருந்த நிலையில்தான் அந்த விடுதி இன்றும் இருக்கின்றது. அன்றைக்கு 300 மாணவர்கள் தங்கிய விடுதியில் இன்று 650 மாணவர்கள் தங்குகிறார்கள். ஆனாலும் அதற்கு வேண்டிய கட்டிட வசதி ஏற்படுத்தப்படவில்லை. கட்டிடங்கள் விஸ்தரிக்கப்படவில்லை. ஆகவே அந்த மாணவர்களின் விடுதிகளுக்கு கட்டிட வசதியைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வாடகைக் கட்டிடங்களிலே இருக்கின்ற விடுதிகளைப் பொறுத்த வரையில் தகுந்த வாடகைக்குரிய ரசீது கொடுக்கப்படாமல் அதிகமான பணத்திற்கு ரசீது அளிக்கப்படுகின்ற அவல நிலையைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

* டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பிற்பட்டோர் நலத்துறை நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தோடு கோரியுள்ள இந்த மானியத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதைப்போல பல ஆண்டுகாலம் இந்த அரிசன மக்கள் நலனும் பிற்படுத்தப்பட்டோர் மக்கள் நலனும் ஒரே அமைச்சரால் கவனிக்கப்பட்டு, அப்படி கவனிக்கப்பட்ட காரணத்தால் இருசாரருடைய நலனும் செம்மையாக கவனிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகவில்லை என்பதை உணர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அமர்ந்த பிறகு 1969 ஆம் ஆண்டு மே திங்கள் அரிசன நலத்துறையையும் பிற்பட்டோர் நலத்துறையையும் தனித்தனியாக இயங்க வைக்கவேண்டும் என்ற ஒரு முனைப்பான முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதுவரையிலே அரிசன நலத்துறையைக் கவனித்து வந்த அமைச்சரவர்கள்தான் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலத்துறையையும் கவனித்து வந்தார்கள். காங்கிரஸ் கட்சியின் ஆட்சிககாலத்திலேகூட இந்த மாமன்றத்தில் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் பலர் இந்த இரண்டு துறைகளும் ஒழுங்காக இயங்க வேண்டுமென்றால் இவை தனித்தனி துறைகளாக பிரிக்கப்பட்டு அதற்கென தனித்தனிச் செயலாளர்கள், இன்னும் சொல்லப்போனால் தனித் தனியான அமைச்சர்களுடைய பொறுப்பிலே விடப்படவேண்டும் என்ற கருத்தை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்கிற அந்தக் கடமையை நிறைவேற்றி இந்த மாமன்றத்திலே இருந்த உறுப்பினர்களிடத்திலே நான் சில கருத்துக்களைச் சொன்ன போது அப்போதே குறிப்பிட்டேன் என்னுடைய ஆட்சிக்காலத்திலே அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலே பிற்படுத்தப் பட்ட மக்களுக்காகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் வாதாடவும், போராடவும் நாம் தயாராக இருக்கிறோம், அதே நேரத்தில் முன்னேறிய அல்லது முற்படுத்தப்பட்ட மக்களுடைய உரிமைகளும் அவர்கள் இதுவரையிலே அனுபவித்து வருகின்ற சலுகைகளும் பாதிக்கப்படாமலும் பார்த்துக்கொள் வோம் என்ற அந்த உறுதிமொழியினை இந்த அவையிலே அறிவித்துவிட்டுதான் நான் 1969-ஆம் ஆண்டு முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு, பின் தங்கிய மக்களுக்காக நலக் குழு ஒன்றினை திரு. சட்டநாதன் அவர்களுடைய தலைமையில் உருவாக்கி, அவருடைய பரிந்துரையை அரசின் சார்பிலே பரிசிலித்து, பரிந்துரைகள் முழுவதையும் ஏற்க முடியாவிட்டாலும், எந்த வரையரைக்குள்ளே பரிந்துரைகள் அமைய வேண்டும் என்று கேட்கப்பட்டதோ, அந்த வரையரைக்குள் தரப்பட்ட பரிந்துரைகளை கழக அரசு அன்றைக்கு ஏற்றுக் கொண்டு, அவைகளை நிறைவேற்ற முற்பட்டது. அப்படி முற்பட்டதன் காரணமாகத் தான், இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிற கொள்கை விளக்க அறிக்கை ஏட்டில் 7,60,68,000 ரூபாய் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக செலவழிக்கப்பட வேண்டிய தொகை என்று குறிப்பிடப்பெற்றிருக்கிறது. எதிலிருந்து 1967-68ல் இருந்து 1,61,40,000 ஆக இருந்த தொகை 1980-81-ல் 7,60,68,000 ஆக எட்டியிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள்.

இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஆறு கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்தது என்பதையும், ஆக அது இப்போது 7 கோடியாக உயர்வதற்கு அடித்தளம் அமைத்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான் என்பதையும், நம் முடைய நிதியமைச்சரும் அன்றைக்கு ' பொறுப்பிலிருந்த அந்த அமைச்சரவையிலேதான் இத்தகைய முடிவுகள் மேற் கொள்ளப்பட்டு, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்காக அதிக தொகை ஒதுக்கீடு செய்கிற நற்செயல் நடைபெற்றது என்பதையும் நான் இங்கே நினைவூட்டுவதில் தவறு இல்லை என்று கருது கிறேன்.

நான் காலையிலேயே காவல் துறை மான்யத்தில் பேசுகிற போதே குறிப்பிட்டேன். நம்முடைய தமிழகத்தில் பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்களே, இவர்கள்தான் இந்துக்களுக்கும், அரிசனங்களுக்கும் மோதல் என்கிற செய்திகளை





நாட்டு மக்களுக்கு தந்துக் கொண்டிருக்கிறார்கள். ஜாதி பிரிவுகளை, ஜாதி உணர்வுகளை, வருணாசிரம உணர்வுகளை உருவாக்கி விட்ட உயர்ந்த சாதிக்காரரர்கள் இன்று தாழ்த்தப்பட்ட வர்களோடு மோதிக் கொள்வது இல்லை. ஆனால், பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட அல்லது அரிசன மக்களுக்கும் மத்தியிலேதான் பல்வேறு நிகழ்ச்சி களை நாம் தமிழகத்தில் அங்கிங்கு எனாதபடி எங்கெங்கும் கண்டு கொண்டிருக்கிறோம். அதை சட்டத்தினால் மாத்திரம், காவல் துறையினுடைய கண்காணிப்பினால் மாத்திரம், அல்லது முன் எச்சரிக்கை நடவடிக்கைகளால் மாத்திரம் தீர்த்து விட முடியுமா என்றால், முடியாது. அதற்கான அணுகு முறைகளை நாம் புதிய சிந்தனையோடு நிச்சயமாக உருவாக்கியாக வேண்டும். அதற்கான பிரச்சாரத்தை செய்ய முற்பட வேண்டும்.

''நீயே பிற்படுத்தப்பட்டவன், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த நீ, உன்னினும் பிற்படுத்தப்பட்டவர்களாக கருதிக் கொண்டிருக்கும் மக்களிடையே வம்புக்கு செல்லக் கூடாது, அதே போல் தாழ்த்தப்பட்ட மக்கள் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்க ளிடையே அமளிகள் உருவாவதும் முறைதானா?'' என்கிற இந்தப் பிரச்சாரத்தை அரசின் சார்பில் அரசு உதவியோடு இந்தமன்றத்தில் இருக்கிற எல்லா உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு செய்தால் தான் சட்டத்தை விட, காவல் துறையை விட, முன் கூட்டியே எடுக்கப்படுகிற நடவடிக்கையை விட, அல்லது நிகழ்ச்சிகள் நடந்து முடிந்த பிறகு காவல் துறையினர் அதன் மீது போடுகிற வழக்குககளை விட, அது மேலானதாக, சிறந்ததாக இருக்கும் என்ற கருத்தினை எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால் இப்பொழுது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையேதான் எங்கு பார்த்தாலும் மோதல்கள் நடைபெறுகின்றன. இடுகாட்டுக்கு செல்கிற பாதையில் பிரச்சினையானாலும் சரி, தெருவுக்குள் அவர்கள் நுழைந்து விட்டார்கள். என்ற சச்சரவு ஆனாலும் சரி, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களிடையேதான் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது.

எனவே வருணாசிரம தர்மத்திலே துளி அளவேனும் நம்பிக்கை இல்லாத நாம், நாம் என்று ஆளும் கட்சியையும் சேர்த்துக் கொள்வது இவ்விஷயத்தில் தவறு இல்லை என்று கருதுகிறேன். ஆனால் இவற்றில் யாருக்கேனும் மாறுபட்ட கருத்து இருக்குமே யானால் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தந்தை பெரியாருடைய பேரறிஞர் அண்ணாவி னுடைய வழியில் வந்தவர்கள், வர்ணாசிரம தர்மத்தை, நாட்டில் நிலை நாட்டக் கூடாது என்கிற எண்ணத்திலே வேறுபட முடியாது. வர்ணாசிரம தர்மம் என்கிற நச்சு விதையை விதைத்தவர்கள், ஏதோ சில சாஸ்திர சம்பிரதாயங்களையும் உருவாக்கி விட்டார்கள். அதற்கு தங்களை பலி கொடுத்து விட்ட மக்கள்

இன்னும் தங்களுக்குள்ளாகவே அமளியில்ஈடுபட்டு மேலும்மேலும் தாழ்ந்து தாழ்ந்து போய்க்கொண்டே இருக்கிறார்கள். எனவே அந்த சமுதாயத்தை முதலிலே அவர்களை நல்லபடியாக வாழ விடுவதைக் காட்டிலும், அமைதியாக வாழ விட வேண்டும் என்பதிலே நாம் அனைவரும் அக்கரை செலுத்த வேண்டும். அந்த வகையிலேதான் இந்த மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துக்களை மிக முக்கியமாக எடுத்துக் கூறுவது என்னுடைய கடமை என்று நான் கருதினேன்.

[மாலை 4-50]

இங்கே தரப்பட்டிருக்கிற பட்டியல்களில் 1966-67-ம் ஆண்டில் குற்றமரபினர் பட்டியிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் மாணவர்களுக்கு ரூ.13.71 லட்சம் செலவழிக்கப்பட்டு 24,745 மாணவர்கள் உயர்பள்ளிப் படிப்பும், 1,619 மாணவர்கள கல்லூரிப் படிப்பும் பெற்றார்கள் என்ற பட்டியல் இங்கே தரப்பட்டிருக்கிறது. 1974-75-ல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உயர்பள்ளிப் படிப்பு படித்தவர்கள் எண்ணிக்கை 60,661 என்று வளர்ந்திருப்பதையும் அதற்காக செலவு செய்யப்பட்ட தொகை 35.66 லட்சம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருப்பதை நமது நிதி அமைச்சர் அவர்கள் அளித்துள்ள இந்த கொள்கை விளக்கக் குறிப்பே நமக்கு எடுத்துக் காட்டுகிறது. அதே குறிப்பில் 1978-79ஆம் ஆண்டு கணக்கைப் பார்த்தால் 31 லட்சம் ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்து விடுகிறது. 1976-77ஆம் ஆண்டு கணக்கைப் பார்த்தால் கூட 60,000 மாணவர் எண்ணிக்கை 57,000 ஆகக் குறைகிறது. 35.66 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்ட தொகை 33.65 லட்சம் ரூபாயாக 1976-77-ல் குறைந்து விடத் தொடங்குகிறது.

அதேபோல் பிற்பட்ட வகுப்பினர் 1966-67-ல் உயர்பள்ளிப் படிப்பு படித்த மாணவர்களின் எண்ணிக்கை 10,306. கல்லூரிப் படிப்பு பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 21,099. அவர்களுக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 82.90 லட்சம் ரூபாய். 1966-67-ல் செலவழிக்கப்பட்டதற்கு மேலாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று தனி அமைப்பு, தனி நிர்வாகம், தனி அமைச்சர் இவைகள் எல்லாம் உருவாக்கப்பட்ட பிறகு 1975-76-ல் 10,356லிருந்து உயர்நிலைப் பள்ளிப் படிப்ப மாணவர்கள், 90,620 என்றும், கல்லூரிப்படிப்பு பெற்றவர்கள் 21,000-ல இருந்து 71,433 என்று உயர்ந்தும் 82 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டதற்கு மாறாக 317 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டதும் நீங்கள் வைத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பே காட்டுகிறது.

ஆனால் இன்றைக்கு 1976-77-ல் அது குறையத் தொடங்கி 295 லட்சமாகி, இப்போது 264 லட்சம் ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது. 1977-78, 1978-79-ல் ஓரளவு குறைந்ததற்குக்



காரணம் காட்டினாலும் 1976-77ல் 317 லட்சம் என்றிருந்தது 295 லட்சமாக ஏன் குறைந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனவே பிற்பட்டோர் நலனில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய அக்கறை போதுமான அளவு எடுத்துக் கொள்ளப்படவில்லையோ என்பதைத்தான் இது காட்டுகிறது.

அதேபோல் பிற்பட்ட மாணவர்களுக்கான விடுதிகள் 1966-67-ல் 11 ஆக இருந்தது இன்று 261 விடுதிகளாக மாறியிருக்கிறது என்றாலும் நமது நண்பர் திரு. ஆண்டித் தேவர் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கு அம்மாணவர்கள் எண்ணிக்கை 1966-67-ல் 3,619 என்றிருந்தது இன்றைக்கு 5,369 என்றிருக்கிறதேயல்லாமல் பெருமளவு அது உயர்ந்துவிடவில்லை.

அதேபோல் பிற்பட்ட மாணவர்களின் விடுதிகளில் மாணவர் எண்ணிக்கை 1967-ல் 979 என்றிருந்தது 1975-76-ல் 12,060 என்று உயர்ந்து 1978-79-ல் 14,565 ஆக உயர்ந்து 1979-80-ல் 15,538 ஆக உயர்ந்திருந்தாலும் அது போதுமான அளவிற்கு விகிதாசார உயர்வு அல்ல என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பட்ட மக்கள் பிரச்சினை இந்த கொள்கை விளக்க அறிக்கையில் இடம் பெறவில்லை என்றாலும் அதைப் பற்றி பரிசீலிக்க வேண்டியது இந்த அரசுக்குரிய கடமை என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பிற்பட்டோர் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இடம் ஒதுக்கப்படுவது, ஏற்கனவே தமிழகத்தில் குறிப்பாக நீதிக் கட்சிக் காலத்தில் விவாதிக்கப்பட்டு திரு. முத்தையா முதலியார் அவர்கள் பொறுப்பில் இருந்த காலத்தில் கம்யூனல் ஜீ.ஓ. அறிமுகப்படுத்தப்பட்டு அந்த கம்யூனல் ஜீ.ஓ. அரசியலமைப்புச் சட்டம் உருவான பிறகு அந்த அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்குவதற்கு யார் யார் ஒத்துழைத்தார்களோ அவர்களே தமிழ்நாட்டிற்கு திரும்பி கம்யூனல் ஜீ.ஓ. கூடாது என்று நீதிமன்றத்திற்குச் சென்று உயர்நீதிமன்றத்தில் அவர்கள் வெற்றி பெற்று, இப்படி வெற்றி பெற்ற போது சட்ட மன்றத்தில் இருந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூட அன்றிருந்த காங்கிரஸ் அரசைப் பார்த்து—அப்போது இணைந்திருந்த மாநிலங்கள்—மதராஸ் ப்ராவின்ஸ் என்றளவில் இருந்த அந்தக் காலக் கட்டத்தில் இங்கிருந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட கம்யூனல் ஜீ.ஓ. ஹைகோர்டில் அடிபட்டுப் போய் விட்டது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பேராபத்து விளைவிக்கக் கூடிய ஒன்றாகு என்று கூறினார்கள்.

எனவே, கம்யூனல் ஜீ.ஓ. வை காப்பாற்றக் கூடிய பொறுப்பை
இந்த அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அன்றைக்கு இருந்த
சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எடுத்து வாதாடி, அன்றைக்கு
இருந்த அரசு உயர்நீதி மன்றம் அளித்த பாதகமான
தீர்ப்பை எதிர்த்து, உச்சநீதி மன்றத்திற்குச் சென்று, உச்சநீதி
மன்றமும் பாதகமான தீர்ப்பை அளித்த பிறகு, தந்தை பெரியார்,
பேரறிஞர் அண்ணா ஆகியோர் பெருந்தலைவர் காமராஜ் அவர்
கள் நேரடியாக இல்லாவிட்டாலும், தங்களுடைய கருத்தை,
அரசியல் செல்வாக்கால் எடுத்துச் சொல்லக் கூடிய வகையிலே
இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் மிக மிக முக்கியமானது
என்பதை அறிந்தார்கள். ஏனென்றால், கரை ஏற்றப்பட
வேண்டிய மக்கள், இன்றைக்கு பாதாளத்திலே உள்ள பிற்பட்ட
மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இது ஒரு வரப் பிரசாத
மாக அமைந்து இருக்கிறது. இந்த கம்யூனல் ஜீ.ஓ. வில் கை
வைக்கப்பட்டு, அழிக்கப்படுமானால், இவர்கள் காலாகாலத்திற்கு
தலை தூக்க முடியாது என்பதை உணர்ந்து போராட்டத்திலே
பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் அன்றைக்கு ஈடு
பட்டார்கள். தமிழகத்தின் கொந்தளிப்பை அன்றைக்கு இந்தியாவி
னுடைய பிரதமராக இருந்த பண்டித நேரு பெருமான் அவர்
களுக்கு எடுத்துக் காட்டி, நேரு அவர்கள் அரசியல் சட்டத்திலே
முதல் தடவையாக கொண்டு வந்த முதல் திருத்தமே, இந்த
பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சாதகமாக கொண்டுவந்த திருத்தம்
தான். இந்த திருத்தத்தின்படி, எஜுகேஷனலி அண்டு
சோஷயலி பேக்வர்ட் என்று அந்த வார்த்தைகள் இடம் பெற்று,
கல்வித் துறையிலும், சமுதாயத் துறையிலும் பின் தங்கிய மக்கள்
என்ற அடிப்படையிலே திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இந்தத் திருத்தத்திற்குச் சாதகமாக அப்போது இருந்த அரசு
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்
இட ஒதுக்கீடு செய்வதற்காக தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 சத
விகிதம் அதாவது கல்லூரிகளிலோ அல்லது வேலை வாய்ப்புகளிலே
100 இடங்கள் இருந்தால், அதிலே 16 இடங்கள் அரிசன மக்க
ளுக்கு என்றும், 25 இடங்கள் பின் தங்கிய நிலையிலுள்ள பிற்பட்ட
மக்களுக்கு என்றும், மீதமுள்ள 59 இடங்கள் ஓபன் காம்படிஷன்
என்ற முறையில் அதிலே எல்லோரும் போட்டியிடக் கூடிய முறை
யிலே, அதாவது பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட
மக்களும், மற்றவர்களும், போட்டியிடலாம் என்ற அளவில்
அரிசனங்களுக்கு 16 சதவீதம், பின்தங்கிய மக்களுக்கு 25 சத
வீதம், ஓபன் காம்படிஷன் அதாவது எல்லோரும் போட்டி
யிடுகின்ற அளவிற்கு 59 சதவீதம் என்றும் செய்யப்பட்டது.

அதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு
வந்த பிறகு, தங்களையும் பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக
சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சிறு சிறு பிரி
வினர் வேண்டுகோள் விடுத்த முறையில், அவர்களையும் சேர்க்கப்
பட வேண்டுமென்ற முறையிலே, பிற்படுத்தப்பட்டோர்



தாழ்த்தப்பட்டோர் சதவிகிதத்தை உயர்த்த வேண்டுமென்று
கருதி, சட்டநாதன் சிபார்சையும் மனதிலே வைத்துக் கொண்டு,
கழக ஆட்சியில் அரிசனங்களுக்கு இருந்த 16 சதவிகிதத்தை 18
சதவிகிதமாக உயர்த்தினோம். அதேபோல், பிற்படுத்தப்பட்ட
மக்களுக்கு 25 சதவிகிதம் என்றிருந்ததை
31 சதவிகிதமாக உயர்த்தினோம். ஓபன் காம்படி
ஷன் 51 சதவிகிதம் என்று நிர்ணயித்து அறிவித்தோம். அது
நடைமுறையிலே செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கடந்த ஆண்டு அண்ணா தி.மு.க. ஆட்சியில் திடீரென்று ஒரு
பெரிய கல்லைத் தூக்கிப் போடுவதுபோல், 9,000 வருமான
வரம்பு கட்டப்பட்டு, 'எகனாமிகலி பேக்வர்ட்' என்று அதாவது
பொருளாதாரத்திலே பலவீனமாக இருக்கின்றவர்கள் தான் பிற்
படுத்தப்பட்டோராக கருதப்பட வேண்டுமென்ற முறையிலே இந்த
வருமான வரம்பைக் கொண்டு வந்தார்கள். ஏற்கனவே இருந்த
31 சதவிகித இட ஒதுக்கீட்டில், இந்த 9,000 ரூபாய்க்கு கீழே
வருமானம் பெறக் கூடியவர்கள் தான் இடம் பெறுவார்கள், மற்ற
வர்கள் எல்லாம் பிற்படுத்தப்பட்டவர்களாக கருதப்பட மாட்டார்
கள் என்றும், அவர்கள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த
51 சதவிகித இட ஒதுக்கீட்டிலே தான் போட்டியிட வேண்டு
மென்றும், அந்த அடிப்படையிலே ஒரு உத்தரவு வந்தது. அதை
எதிர்த்து நாடெங்கும் கட்சி சாற்பற்ற முறையிலே எல்லோரும்
வாதாடினார்கள், போராடினார்கள், திராவிடர் கழகம்
போராட்டம் நடத்தியது. திராவிட முன்னேற்றக் கழகம்
மாநாடுகளைக் கூட்டி, தீர்மானங்களைப் போட்டது. போராட்டம்
நடத்துவதற்கும் முன் வந்தது. அந்த நேரத்திலே திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எடுத்து வைத்த கருத்தை
நான் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு, பிற்பட்டோர்
நலனைக் கவனிக்கின்ற நிதி அமைச்சர் அவர்களுக்கு, இங்கே
கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாலை 5-00]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: அவையின்
அனுமதியோடு இந்த மானியத்தைப் பற்றிய விவாதம் மேலும்
சிறிது நேரம் நீடிக்கும்.

<u>டாக்டர் மு. கருணாநிதி</u>: பொருளாதாரத் துறையில் பலகீனப்
பட்டிருக்கின்ற மக்களுக்குச் சலுகைகளை அல்லது இட ஒதுக்கீடு
களைச் செய்ய வேண்டுமென்பதிலே திராவிட முன்னேற்றக் கழ
கத்திற்கு எந்த விதமான கருத்து மாறுபாடும் இல்லை. எனவே
தான் கழகத்தின் சார்பில் அன்றைக்கே மிகத் தெளிவாக எடுத்து
வைக்கப்பட்டது. 31 சதவிகிதம் பின் தங்கிய மக்களுக்கு அப்ப
டியே இருக்கட்டும். அதிலே கை வைக்காதீர்கள். 18 சத
விகிதம் அரிசன மக்களுக்கு அப்படியே இருக்கட்டும், அதிலும்
கை வைக்காதீர்கள். ஓப்பன் காம்படிஷன் எல்லோரும் போட்டி

யிடக்கூடிய 51 சதவிகிதம் இருக்கிறதே அந்த 51 சதவிகிதத்தில் 10 சதவிகிதம் அல்லது 15 சதவிகிதம் தேவைப்பட்டால் 20 சதவிகிதம் கூட 'எகானாமிகலி பாக்வர்டு—பொருளாதாரத் துறையில் பலஹீனமாக இருக்கக்கூடிய மக்களுக்கு, அவர்கள் முற்பட்ட மக்களாக இருந்தாலும், பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும்—வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், பிராமணர்களாக இருந்தாலும், முதலியார்கள், செட்டியார்கள், பிள்ளைமார்களாக இருந்தாலும் பொருளாதாரத்தில் பலஹீனமாக உள்ளவர்களுக்கு அந்த 51 சதவிகிதத்தில் 10 அல்லது 15 அல்லது 20 சதவிகிதம் தனியாக ஒதுக்கிக் கொடுத்து விடுங்கள் என்ற கருத்து கழகத்தின் சார்பில் வைக்கப்பட்டது. நாடு கொந்தளிப்புக்கு ஆளாகியிருக்கிறது என்பதை உணர்ந்த பிறகு, இன்னும் சொல்லப் போனால் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள், ஒன்பதாயிரம் ரூபாய் வருமான வரம்பு சரிதான் என்று வாதிட்ட நிதியமைச்சர் நாவலர் போன்றவர்களும் மற்றவர்களும் இணக்கம் தெரிவித்து எடுத்து வைக்கப்பட்ட கோரிக்கையைக் கவனிக்க முன் வந்தார்கள்.

அப்படியே 'ஸ்டேடஸ்கோ'வை விட்டு விட்டார்களா என்றால் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துச் சொன்ன கருத்தையாவது ஏற்றுக் கொண்டு 51 சதவிகிதத்தில் பொருளாதாரத்தில் பலஹீனமாக இருக்கின்ற முற்பட்டோரும் பலன் அனுபவிக்கத் தக்க அளவு 51 சதவிகிதத்தில் 10 அல்லது 15 அல்லது 20 சதவிகிதம் பொருளாதாரத்தில் பலஹீனமாக உள்ளவர்களுக்கு ஒதுக்கினார்களா என்றால் அதுவும் இல்லை. 31 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வருமான வரம்பைக் கொண்டு வந்த அண்ணா தி.மு.க. ஆட்சியாளர்கள் 31 சதவிகிதந்தானே கேட்கிறீர்கள், மறுபடியும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி 50 சதவிகிதம் என்று தாராளமாக பிற்பட்ட மக்களுக்கு என்று தந்தார்கள்.

நான் கேட்பதெல்லாம் நீங்கள் வாதிட்டீர்களே, முதலமைச்சரிலிருந்து இந்த அமைச்சரவையில் இருக்கும் அத்தனை அமைச்சர்களும், பொதுச் செயலாளர் நாவலர் அவர்களும் வாதிட்டு வந்தீர்களே, பொருளாதாரத்தில் பலஹீனப்பட்ட முற்பட்ட மக்கள் என்னாவது என்று கேட்டீர்களே—திடீரென்று உங்கள் உத்தரவை வாபஸ் பெற்றுக் கொண்டு அறிவிப்புச் செய்தீர்கள். பொருளாதாரத்தில் பலஹீனப்பட்ட பிற்பட்ட மக்கள் அல்லது தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது முற்பட்ட மக்கள் என்ன ஆவார்கள்? அதை மறந்து விட்டீர்களே, என்ன செய்யப் போகிறீர்கள்? அவர்கள் அப்படியே திரிசங்கு சொர்க்கத்தில் நிற்கப் போகிறார்களா? பிற்பட்டோர் நல அமைச்சர் அவர்கள் முற்பட்ட மக்கள் நலனையும் கவனிக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளவர்கள். முற்பட்டோரில் குறிப்பாக பொருளாதாரத்தில் பலஹீனமாக இருக்கும் பகுதியினர் பலன் பெற என்ன நடவடிக்கை?



நாங்கள் போராடினோம், ஆத்திரப்பட்டு, கோபப்பட்டு 31 சதவிகிதம் கேட்கிறீர்களா, இந்தா, 50 சதவிகிதம் பிடியுங்கள் என்று கூறி விட்டீர்கள்! இது எல்லா மக்களையும் திருப்திப்படுத்துமா என்று எண்ணிப் பார்த்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவோடு அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலன் குறித்து, இங்கே கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கையின் மீது விவாதங்கள் நடத்திய மன்ற உறுப்பினர்கள் இந்தத் துறை மேலும் மேம்பாடு எய்துவதற்கான பல்வேறு சீரிய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பட்டவர்கள் நலன் நாளுக்கு நாள், ஆண்டுக்கு ஆண்டு மிகச் சிறப்பான முறையில் கவனிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன என்பதை மன்ற உறுப்பினர்கள் பலரும் தெரிவித்தார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போன்று இந்தத் துறை, ஆண்டுக்கு ஆண்டு கவனிக்கப்பட்டு வரும் தன்மையை நன்றாகக் காண்கிறோம்.

1971-72 ஆம் ஆண்டிற்கு முன்பாக இரண்டு மானியக் கோரிக்கைகளும் ஒன்றாக இருந்தன. அமைச்சரும் ஒருவரே இருந்தார். 1971-72 ஆம் ஆண்டிலிருந்து இரண்டிற்கும் தனித்தனி மானியக் கோரிக்கைகள் ஏற்படுத்தப்பட்டு தனித்தனி அமைச்சர்களாக இருக்கக்கூடிய தன்மை, தனி கவனம் செலுத்தப்பட வேண்டுமென்ற முறையிலே தான் அவ்வாறு ஏற்படுத்தப்பட்டு, அந்த நோக்கம் ஓரளவுக்கு நிறைவேறி வந்திருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது மாதிரி, 1967-68 ஆம் ஆண்டிலே 1,61,40,000 ஆக இருந்த மானியத் தொகை ஆண்டு தோறும் வளர்ந்து 1980-81-ல் 7,60,68,000 என்ற அளவுக்கு வளர்ந்திருக்கிற நிலைமை இருக்கின்ற நிதி நெருக்கடியினுடைய அளவில் இந்த அளவுக்குத்தான் ஒதுக்கித் தரமுடியும் என்ற நிலைமை இருக்கிறது. இந்தத் தொகை இந்தத் துறைக்கு போதுமா என்றால் போதாதுதான், தேவையா என்று கேட்டால் தேவை தான். ஆனால் முடிந்தது அவ்வளவுதான் என்ற வகையிலே 7,60,68,000 ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறோம்.

எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. முதல் அமைச்சர் அவர்கள் பார்த்து ஒரு பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவரிடம் இந்தத் துறையை ஒதுக்கித் தந்தாலும் அதிலே எனக்கு ஒன்றும் மறுப்போ வெறுப்போ கிடையாது. ஆனால் என்னிடத்திலே ஒப்படைத்து இருக்கிறார்கள். பிற்பட்டோர் நலன், தாழ்த்தப்பட்டோர் நலன் ஆகியவற்றிலேதான் நான் என்னுடைய 45 ஆண்டுகால பொதுவாழ்விலே ஈடுபட்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றவர்களோடு இணைந்து பணியாற்றி வந்திருக்கிறோம். ஆகவே நான் எந்த வகுப்பிலே பிறந்தேன் என்பதைவிட எந்த வகுப்பினருக்காக என்னுடைய நேரம், நினைப்பு, உழைப்பு எல்லாம் பயன்பட்டு வருகின்றன என்பதைக் காணுகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் யாருக்கும் என்னைப் பற்றி ஐயப்பாடு ஏற்பட வேண்டாம் என்பதற்காகத்தான் இந்த அறிவுரையை நான் தருகிறேன்.





மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவை ஓரளவுக்கு ஆண்டுக்காண்டு வளர்ந்து கொண்டு வருகிறது என்ற பட்டியலையும் நான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். ஓரளவுக்கு வளர்ந்து வருகிறது. இன்னும் கொஞ்சம் நிதி ஒதுக்கம் அதிகமாக இருக்க வேண்டுமென்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். புத்தக வடிவிலே நாம தருகின்ற முயற்சியின் காரணமாக தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் சார்பாக ஒரு தொகை அவர்களுக்குப் போய்ச் சேருகின்ற அளவுக்கு ஒரு சில லட்சம் ரூபாய் அவர்களுக்கு செலவழிக்கின்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.

1975-76ஆம் ஆண்டிலே பிற்பட்ட மாணவர்களுக்கான விடுதிகள் 196 ஆக இருந்தது என்றால் இப்போது 261 ஆக உயர்ந்திருக்கிறது. அதைப் போன்றே மாணவர்களுடைய எண்ணிக்கை 1975-76 ஆம் ஆண்டிலே 12 ஆயிரத்து 69 ஆக இருந்தது 15,538 என்ற அளவுக்கு வந்திருக்கிறது. குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான விடுதிகள் 53 ஆக இருந்தது, 60 விடுதிகள் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. மாணவர்களின் எண்ணிக்கை 5069 ஆக இருந்தது, 5.369 என்று ஏறி இருக்கிறது. ஆனாலும்கூட ஓரளவிற்கு மெள்ள மெள்ள ஏறிக்கொண்டே வந்திருக்கிறது. இந்த ஆண்டு 36 விடுதிகள் திறப்பதற்கான வழிவகைகளைச் செய்து வருகிறோம். அதற்கான இடம் மற்றவற்றை நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அந்த 36-ல் 34 பிற்பட்ட மாணவர்களுக்கும் 2 குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்காகவும் திறக்கப் போகிறோம். வருமான உச்ச வரம்பு 2,500க்கு கீழே உள்ளவர்களுக்கு மட்டும்தான் உண்டு என்று வைத்திருக்கிறோம். அதை உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் வரதராஜன், அம்பிகாபதி ஆகியோர் குறிப்பிட்டார்கள்.

[மாலை 5.10]

ஆக, இந்த உச்சவரம்பிற்குக் கீழே இருக்கின்ற மக்களுடைய வகுப்பினருடைய மாணவர்களுக்கே போதுமான வசதி இன்னும் செய்யப்படவில்லை இப்பொழுதே, 2,500 என்ற உச்சவரம்புக்குக் கீழே வருகின்ற மாணவர்கள் அத்தனை பேர்களுக்கும் எல்லா இடங்களிலும் விடுதிவைக்க வாய்ப்பு வசதி ஏற்படும் சூழ்நிலை இல்லை. ஆகவே, இந்த அளவிற்குக் குறைந்து இருக்கின்றவர்களின் தன்மைகளை நாம் நிறைவேற்றி விட்டால் இந்த உச்சவரம்புக் கட்டத்தை தூக்குவதற்கான வாய்ப்ப இருக்கும். 5,000 என்று ஆக்கினால் எண்ணிக்கை அதிகமாகிவிடும். 2,500 என்ற உச்ச வரம்புக்குக்கீழே இருப்பவர்களே இன்னும் விடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பலயிடங்களில் விடுதி திறக்க வேண்டியிருக்கிறது. அவர்களே இன்னும் வசதி பெற முடியாமல் இருக்கிறார்கள். நிதி வசதிகளின் அடிப்படையில் 36 விடுதிகளை இந்த ஆண்டில்

றக்க முடியும் என்றால், 2,500 ரூபாய் உச்சவரம்பிற்கு ழ உள்ள அத்தனை பேர்களுக்கும் நிறைந்து விடுகிறதா ன்று கேட்டால் இல்லை. அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் ாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப் போல நான்காயிரம், ந்தாயிரம் என்று தூக்குவதன் மூலம் அதிகமானவர்கள் வசதி ளைப் பெற முடியும்.

பிற்பட்ட வகுப்பினர்களாக விளங்குகின்ற சலவைத் தொழிலாளி, முடி திருத்துவோர், போயர்கள் ஆகியவர்கள் அதிகமாகக் கவனிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுக் ாட்டினார்கள். பிற்பட்டோர்கள் வகுப்பில் சேர்க்க வேண்டு மென்று பல வகுப்பினர்களும் கோரிக்கைகளைத் தந்து கொண் டிருக்கிறார்கள். எடுத்த எடுப்பிலேயே அத்தனை பேர்களையும் சேர்ப்பதன் மூலம், பிற்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட் டுள்ள சலுகைகள், ஏராளமானவர்களுக்குப் பரவலாகச் சென்று விட்டால், யாருக்கு இதன் நன்மைகள் போக வேண்டுமென்று எண்ணுகிறோமோ அது அதிகமாகப் போவதற்கு வழிவகை ஏற்படாது. ஆகவே, இதைப்பற்றி உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறிய மாதிரி பிற்பட்டோர் நலனை ஆராய்ந்து அறிக்கை தருவதற்காக திரு. சட்டநாதன் குழு அமைக்கப்பட்டது. அவர்களும் அதைப்பற்றி ஆராய்ந்து அறிக்கை தந்தார்கள். அதில் சில பல பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன; வேறு பல பரிந்துரைகளை நிதி நெருக்கடி மற்ற சூழ்நிலைகளின் காரண மாக நிறைவேற்றுவதைப்பற்றி ஆய்வு செய்ய வேண்டியவர் களாக இருக்கிறோம்.

இப்பொழுது பல வகுப்பினர்கள் தங்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக் கிறார்கள். அதே நேரத்தில் பல பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த வர்கள் தங்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டு மென்று விண்ணப்பங்களைத் தந்து இருக்கிறார்கள். தாழ்த்தப் பட்ட வகுப்பில் ஒரு வகுப்பினரைச் சேர்க்க வேண்டுமென்றால் மத்திய அரசுதான் சேர்க்கவேண்டும். அவர்கள்தான் இதற்கான உதவித் தொகை, மற்றவைகளைக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

பிற்பட்டோர் வகுப்பில் சேர்ப்பது நம்மிடத்திலே இருந்தா லும் கூட அவர்களுடைய நலன்களைக் கவனிக்கின்ற பொறுப்பும் நம்மிடத்திலே இருக்கிறது. இதை ஆராய்வதற்காக பிற்பட் டோர் நலத் துறை இயக்குநர் தலைமையில் குழு அமைக்கப் பட்டு, ஆராயும்படி சொன்னோம். அவர்கள் தங்களுடைய ஆராய்ச்சியைத் தருவதற்கு முன்பாக, இப்பொழுது முழு



விவரங்களும் கிடைக்க வேண்டியதாக இருக்கிறது. பலபேர் தங்களைப் பிற்பட்டோர் வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று சொல்லி வருகிறார்கள். எனவே, அதற்கான முழு விவரங் களும் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிதம்பரம் அவர்கள் கூட நாட்டுக்கோட்டைச் செட்டியார், நகரத்துச் செட்டியார் ஆகியோரை இதில் இணைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதேபோல் பலரும் பல கோரிக்கைகளைச் சொல்லியிருக்கிறார்கள். பிராமணர்கள் மாநாட்டில் கூட ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். எங்களையும் பிற் பட்டோர் வகுப்பில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று அவர்களும் ஒரு தீர்மானம் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, பிற்பட்டோர் வகுப்பில் யார் யாரைச் சேர்க்க வேண்டுமென்று நாமே முடிவெடுப்பதைவிட அதைப் பற்றி ஒரு குழு ஆராய்வது நல்லது என்று நினைக்கிறோம். அடுத்த ஆண்டு சென்சஸ் எடுக்கப்பட இருக்கிறது. மக்கள் எண்ணிக்கை எடுக்கப்பட இருக்கிறது. அப்பொழுது மக்களின் முழுத் தன்மை, அவர்களின் கல்வி நிலை, பொருளாதார நிலை, சமுதாயத்தில் இருக்கக் கூடிய நிலை போன்ற முழு விவரங்கள் அத்தனையும் இந்தக் குழுவோடு சேர்ந்து எடுக்கின்ற நிலை இருந்தால், அதற்குப் பிறகு ஆராய்ந்து, உண்மையாகவே பிற்பட்டோர் வகுப்பில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் யார் என்று நிர்ணயிப்பதற்குத் தெளிவான முடிவு ஏற்படும் என்பதால், இப்பொழுது எந்த முடிவும் எடுக்காமல், சென்சஸினுடைய கணக்கு, இந்த விவரங் களை அறிந்த பிறகு, இங்கே வைத்திருக்கின்ற விண்ணப்பங் களை ஆராய்ந்து தக்க முடிவெடுக்கலாம் என்று எண்ணியிருக் கிறோம்.

பிற்பட்டோர் நலனைக் கவனிப்பதற்கு அரசு இப்பொழுது பல்வேறு தன்மைகளில், முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளி, மற்றும் போயர்கள் ஆகியோர்களை முன்னேற்ற வேண்டுமென்றும், அவர்களின் வாழ்க்கை வசதிகளை உயர்த்த வேண்டுமென்றும், தனியாக அவர்களைக் கவனிக்க வேண்டு மென்றும் சொன்னார்கள். அதற்காக இந்த அரசு எண்ணிக் கொண்டிருப்பது என்னவென்றால், '' பிற்பட்டோர் நல வளர்ச்சி வாரியம் ''. Backward Class Welfare Development Corporation ஏற்படுத்தி அதற்கு ஒரு தொகையை அரசு மூலதனமாக ஒப்படைத்து, அதாவது ' ஆதரைஸ்ட் கேபிடல் ' தந்து, நான்காண்டுக் காலத்தில் கணிசமான தொகை வருமளவிற்கு வைத்து, பிற்பட்டோரில் மிக நலிந்தவர்களாக இருப்பவர்கள் தொழில் நடத்த உதவி செய்யவும், தொழில்துறையில் மேம் படுத்தவும் வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறது. இந்த '' பிற்பட்டோர் நல வளர்ச்சி வாரியம் '' அதற்குப் பயன்படும் என்ற நிலையில் அதை ஏற்படுத்த இந்த அரசு இப்பொழுது திட்டமிட்டிருக்கிறது.

அதற்கான முயற்சிகளை நாளடைவிலே இந்த அரசு மேற்
கொள்ளும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளவிரும்பு
கிறேன். அதற்கு ஓரளவுக்கு ஒப்பிய மூலதனம் (ஆத்தரைஸ்ட்
காப்பிட்டல்) ஒதுக்கியதற்குப் பிறகு, தொழில் துறை, கூட்
டுறவுத்துறை, மற்றும் பிற்பட்டோர் நலத்துறை அலுவலர்
களை அதிலே ஈடுபடுத்தி, அலுவல் சாராபற்றவர்களையும்
அந்த வாரியத்திலே இடம் பெறச் செய்து, அவர்களுடைய
பரிந்துரைகளை, மற்றவைகளை, நடைமுறைப் படுத்தும்
முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

பிற்பட்டோர் நலன்கள் கவனிக்கப்பட வேண்டுமென்று,
மக்களுடைய எண்ணிக்கை கணக்கினுடைய அடிப்படையிலே,
அவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்யும் முறையை இந்த அரசு
நீண்ட நெடுங்காலமாகக் கடைபிடித்துக் கொண்டிருக்கிறது.
தமிழகம், நீண்ட நெடுங்காலமாக, ஒரு சமுதாய நீதியை
வழங்கி வருகிறது என்பதை மிக நன்றாக எல்லோரும் அறிவார்
கள். அந்தச் சமுதாய நீதி வழங்கப்பட வேண்டுமென்ற
கருத்து நீதிக் கட்சியினரால் துவக்கப்பட்டு, அதற்காக தந்தை
பெரியார் அவர்களும் மற்றவர்களும் அந்தக் காலத்திலிருந்து
வாதாடி, அதை நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுத்து,
முன்னால் அமைச்சராக இருந்த திரு. முத்தையா அவர்கள்
அதற்காக ஒரு அரசாணை வழங்கி, தற்பொழுது நீதி வழங்கப்
பட்டு வருகிறது.

இப்பொழுது மத்திய அரசைப் பொறுத்தவரையிலும்
பல்வேறு மாகாணங்களைப் பொறுத்த மட்டிலும் அவர்கள்
பாக்வார்ட் கிளாஸ், மற்றைய பொது என்று இரண்டு பிரிவாகத்
தான் வைத்திருக்கிறார்கள். நீண்ட நெடுங்காலமாக, பல
மாநிலங்களிலே 2 தட்டுகள்தான் வைத்திருக்கிறார்கள். குறிப்
பிட்ட, சில மாநிலங்களிலேதான் 3 தட்டுகள் வைத்திருக்
கிறார்கள். ஆனால், மத்திய அரசு 2 தட்டுகள்தான் வைத்
திருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களையும் பழங்குடி மக்களையும்
தான் மத்திய அரசு பாக்வார்ட் கிளாஸ் என்று வைத்திருக்கிறது.
நாம் பிற்பட்டோர் என்று கருதுகிற வகுப்பினரையும் மற்ற
வர்களையும் முற்போக்கு வகுப்பினராகத்தான் மத்திய
அரசு கருதி வருகிறது. நாம் கூட அடிக்கடி வற்புறுத்தி
வருகிறோம் மத்திய அரசு, தமிழகம் பின்பற்றுகிற
சமுதாய நீதிமுறைக்கு ஒத்த வகையில், 3 தட்டுகளாக,
தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்குத் தனிச் சலுகைகளும்,
பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தனிச் சலுகைகளும் தந்து, மற்ற
வர்களைப் பொதுவாக கவனிக்கின்ற சூழ்நிலையைப் பின்பற்ற
வேண்டுமென்று. இந்த முறையை மத்திய அரசு மட்டுமல்லாது,
மற்ற மாநிலங்களும் பின்பற்றுகிற அளவுக்கு வைக்க வேண்டு
மென்று நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், மத்திய அரசு
இரண்டு தட்டுகளைத்தான் நடைமுறைப்படுத்தி வருகிறது.



பலர், நாம் சொல்வதைப் போல், அதற்கான முயற்சிகளை
எடுக்கலாம் என்று மத்தியிலே எடுத்துச் சொல்லியும், நடை
முறையில் அத்திட்டம் இன்னும் வரவில்லை. நாம் அந்த
வகையினுடைய அடிப்படையிலேதான் மெள்ள, மெள்ள
கொண்டு வருகிறோம்.

இன்றைய சூழ்நிலையில் தமிழகத்தினுடைய மக்கள் எண்
ணிக்கையில் 100-க்கு 18 பேர்கள் பழங்குடி மக்கள் இருக்கிறார்
கள். அதேபோல், 100-க்கு 54 பேர்கள் பிற்படுத்தப்பட்ட
மக்களாக இருக்கிறார்கள். அந்த வகையிலேதான் இங்கே
16% என்று இருந்ததை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, அவர்களுக்கு 18% ஒதுக்க
வேண்டுமென்ற நியாயத்தின் அடிப்படையில் 18% ஒதுக்கப்
பட்டது, பிறகு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 31% ஆக
இருந்த தன்மையை, சென்ற ஆண்டிலிருந்து 50% ஆக அளிக்க
வேண்டுமென்ற சூழ்நிலை வந்து, 50% ஆக பிற்படுத்தப்
பட்ட மக்களுக்கு ஒதுக்கி இருக்கிறோம். ஆக, அவர்களுக்கு
50% தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு 18% ஆக,
மீதி உள்ளவர்களுக்கு 32% என்று எல்லா தரப்பினருக்கும்
பொதுவாக ஒதுக்கியிருக்கிற சூழ்நிலையிலே, எல்லா துறை
களிலும், அது பொதுத் தேர்வாணைக் குழு தேர்விலானாலும்
சரி, அல்லது அரசுக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, தொழில்
நுட்பக் கல்லூரி போன்றவைகளிலே மாணவர்களைத் தேர்ந்
தெடுக்கிற நிலையிலும் சரி, இந்த விகிதத்தில் தேர்ந்தெடுக்கும்
முறை இப்பொழுது கையாளப்பட்டு வருகிறது. அதுபற்றிய
குறையை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முன்னால், 18% தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பழங்குடி
மக்களுக்கும் ஒதுக்கப்பட்டு, 31% பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
ஒதுக்கப்பட்டு, 51% பொதுவாக எல்லோருக்கும் ஒதுக்கப்
பட்டிருந்த நிலை இருந்தது. சென்ற ஆண்டு மாண்புமிகு
முதல்வர் அவர்கள் 31 சதவிகிதத்திலே பிற்பட்ட வகுப்பினரிலே
சிலர் மிகவும் பிற்பட்ட நிலையிலே, நலிந்தவர்கள், வசதி
யற்றவர்கள், பொருளாதாரத்திலே தாழ்ந்தவர்கள் இருக்
கிறார்கள். அவர்கள் முன்னேற முயற்சி எடுத்துக் கொள்ள
வேண்டுமென்றால் தனிச் சலுகை அளிக்க வேண்டுமென்று கருதி
ஆண்டு வருமானம் ரூ. 9,000-க்கு குறைந்தவர்களுக்கு முற்
பட்டவர்களில் பொருளாதாரத்திலே நலிந்தவர்களுக்கு, அந்த
வசதிகள் செல்ல வேண்டும், செல்வது நியாயம் என்ற அடிப்
படையில், அந்த 31% பொருளாதார அடிப்படையிலே,
ஆண்டு வருமானம் ரூ. 9,000-க்கு குறைவாக இருப்பவர்களுக்குத்
தான் அந்தச் சலுகைகள் போகவேண்டுமென்ற அளவுக்கு ஒரு
திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது பற்றிய கருத்துப்
பரிமாற்றங்களெல்லாம் இங்கே நடைபெற்றன. பல பேர் அதை
எடுக்க வேண்டுமென்றார்கள்.

[மாலை 5.20]

**திரு. எல். இளையபெருமாள் :** தலைவர் அவர்களே,
நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னபோது, 50%
கொடுக்கப்பட்ட பிறகு பாதிக்கப்பட்ட முற்போக்கு சமுதாயத்
தினர் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறவர்கள், குறிப்பாக
அரசுப் பணியில் இருப்பவர்கள்—அப்ரஸ்ட் யூனியன்— என்று
வைத்துக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின்
தங்கிய மக்களுக்கும் விரோதமான செயலிலே, அரசு உத்தரவை
மீறி அங்கே பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள் பல தவறான
பிரச்சாரங்களை செய்து வருவது அமைச்சர் அவர்களுக்கு
தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். பொதுவாக தகுந்த
விளக்கம் தரவிரும்பினால் பிற்படுத்தப்பட்ட மக்கள், அரிசன
மக்கள், மலைவாழ் மக்களுக்கு மத்திய அரசு, மாநில அரசு
கொடுத்த உத்தரவுக்கு பலவீனத்தை உண்டாக்கவும், அரசியல்
சட்டத்திற்கு விரோதமாக பிரச்சாரங்களை உருவாக்கிக் கொண்டு
நம்முடைய தமிழகத்தில் நடந்து வருவதற்கு அமைச்சர்
அவர்கள் பதில் சொல்ல வேண்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்
அவர்களே, அரசினுடைய உத்தரவை மாறுபடுத்தவோ, மத்திய
அரசு உத்தரவினை மாறுபடுத்தவோ, அரசியல் அமைப்பு
சட்டத்தினுடைய விதி முறைகளை மாறுபடுத்தவோ, அல்லது
பிரசுரங்களை, பிரச்சாரங்களை பரப்புவதில் ஈடுபட்டு இருந்
தால் அதன் மீது நடவடிக்கைகளை எடுக்கலாம். ஆனால் அவர்
கள் தங்களுக்கு இன்னின்ன உரிமைகள் வேண்டும் என்று கேட்க
அவர்களுக்கு உரிமை உண்டு. அவர்கள் கேட்டுக் கொண்டே
இருக்கலாம். நாம் தருகிறோமா என்பதுதான் அதிலே இருக்
கின்ற கேள்வி. ஆகவே இப்போது நாம் எடுத்துக் கொண்டு
இருக்கிற முடிவின்படி 18% தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்
பழங்குடி மக்களுக்கும் என்ற அந்த முறையிலே மாற்றம்
இல்லை. 50 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும்
பதிலேயும் மாற்றம் எதுவும் இல்லை. அதற்குப் பிறகுதான்
அதைப்பற்றிய கருத்து விளக்கங்கள், பல்வேறு விதமாக வந்
தாலும், அது கொண்டு வரப்படவேண்டும் என்ற முதலமைச்சர்
அவர்களுடைய நோக்கம் சரியான நோக்கம் என்றாலும், அதிலே
சில பல இடர்ப்பாடுகளும், மற்றவைகளும் வருகின்றதன் காரண
மாக அது மாற்றப்பட்டது. குறிப்பிட்ட அளவுக்கு வருமானம்
உடையவர்களாக இருந்தால், அரசு ஊழியர்கள், ஒரு வங்கி
யிலே வேலை செய்கின்றவர்கள், ஆயுள் காப்பீட்டுக் கழ
கத்திலே பணிபுரிபவர்கள் அல்லது ஒரு குறிப்பிட்ட நிறுவனத்
திலே வேலை பார்ப்பவர்கள் தங்களுடைய வருமானத்தைக்
காட்டிவிட முடிகின்றது.

ஆனால் மற்றவர்கள் தங்களுடைய வருமானத்தைக்
காட்ட முடியாமல் எவ்வளவு அதிகமான வருமானம் இருந்தாலும்
அது 5 லட்சமாக இருந்தாலும் 5 ஆயிரம் என்று காட்டி அந்த



இடத்தை பெற்றுவிட முடிகிறது. எனவே நம் நோக்கம்
சரியாக வைத்தாலும் கூட அந்த நோக்கம் இடர்ப்பாடு கொள்
வதற்கு வழி இருக்கிறது என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.
அதற்குப்பிறகு அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களைக்
கொண்ட கூட்டம் ஒன்றைக் கூட்டி, மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் எல்லோருடைய கருத்தையும் கேட்டார்கள். அப்படிக்
கேட்டறிந்ததற்குப் பின்னாலே கொண்ட கொள்கையை மாற்றக்
கூடாது என்ற பிடிவாதம் இல்லாமல் அதிலே இருக்கிற நியா
யத்தின் அடிப்படையில் வரவேண்டும் என்ற கருத்தின் அடிப்
படையில்தான் இந்த முடிவுக்கு வந்தார்கள். மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவர் கூறிய கருத்தையும் நான் ஏற்றுக் கொள்
கிறேன். அந்தக் கருத்திலே இப்போதும் நம்பிக்கை உடைய
வனாகத்தான் இருக்கிறேன். இப்போதும் அதைத்தான் விவா
தித்தேன். இப்போது கூட சொல்லுகிறேன் இந்த 31 சத
விகிதத்தை 9,000க்கும் கீழே வருமானத்தை உடையவர்களுக்கு,
மேலும் ஒதுக்குவது என்பது இல்லாமல், சர்வகட்சித் தலைவர்
கள் கூட்டத்திலே நான் சொன்னேன். மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர் எடுத்துச் சொல்வதைப் போல அவர்களுடைய
கருத்திலே இருக்கிற உண்மையும், அதிலே ஒரு
நியாயம் உண்டு. மற்றவர்கள் எடுத்துச் சொன்னதைப்
போல அதிலே அச்சத்திற்கு இடம் இருந்தது. ஆகவேதான்
இந்த 31 சதவிகிதத்திலேயாவது ஒரு குறிப்பிட்ட சதவிகித்
வருமானம் உடையவர்களுக்கு என்றும் மற்றவைகளை பொது
வாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்றும் பிரிக்கலாம் என்ற
என்னுடைய கருத்தை நான் அங்கே எடுத்துச் சொன்னேன்.

இப்போது கூட இருக்கிற சூழ்நிலை அடிப்படையில்,
அவர்கள் எடுத்துச் சொன்னதன்படி, இப்போது கூட சர்வ
கட்சித் தலைவர்களைக் கலந்து இதிலே 32 சதவிகிதத்தைப்
பொதுவாக நாம் ஒதுக்கி வைத்திருக்கிறோம். அதேபோல
50% பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று ஒதுக்கி வைத்திருக்
கிறோம். இந்த 50 சதவிகிதத்தில் கூட அனைத்துக் கட்சி
யினுடைய தலைவர்களின் ஒப்புதலின்படி நாம் உட்கார்ந்து
யோசித்து இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டி
லிருந்தாவது ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை பொருளாதார
நிலையில் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கி, அதே மாதிரி 32
சதவிகிதத்திலே ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை பொருளா
தாரத்தில் பின்தங்கிய முற்பட்ட வகுப்பினர்களுக்கு ஒதுக்கக்
கூடிய ஒரு நியாயமான முடிவுக்கு நாம் வருவோமேயானாலும்
கூட அதையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தயார். அதற்கு
அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய சீரிய யோசனைகளும்
பரிந்துரைகளும் வருமேயானால், அதற்காக நாம் வேண்டு
மானால் யோசித்து இந்த ஆண்டு நடைமுறைப்படுத்துவது
கடினம் என்றால் அடுத்த ஆண்டிலேயாவது அதை நாம் யோசிக்
கலாம். இதிலே ஒரு நியாயம் கிடைக்கும். அதைத்தான்
அவர்களும் எடுத்துத் தெரிவித்தார்கள். இப்போது 51 சத
விகிதத்திலேயும் எல்லோருக்கும் கிடைக்கிறது.

சட்டநாதன் அவர்கள் கூட தன்னுடைய பரிந்துரையில் மிகத் தெளிவாக எடுத்துவைத்திருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கிட்டத்தட்ட 160-க்கும் மேற்பட்ட வகுப்பினர்களாக அடக்கி வைத்தார்கள். பல்வேறு வகுப்பினர்களை உள்ளடக்கி அவர்கள் ஒரு பட்டியலை போட்டிருக்கிறார்கள். 160-க்கும் மேற்பட்ட பிற்பட்ட வகுப்பினர் பட்டியலைக் கொடுத்தார்கள். ஒரு குறிப்பிட்ட 10, 15 வகுப்பினர்கள், நாம் எவ்வளவு ஒதுக்கினாலும், பிற்பட்ட வகுப்பினர்கள் என்ற பெயரிலே அவர்களே அனுபவித்துக் கொண்டு போகிறார்கள். கீழ்மட்டத்திலே இருக்கிறவர்கள் அனுபவிக்க முடியாமல் இருக்கிறது என்பதை எல்லாம் சுட்டிக் காட்டினார்கள். அந்த 50 சதவிகிதத்திலேயே நாம் கணக்கு வைத்து, இன்ன சதவிகிதம் என்று நான் சொல்லவில்லை, அனைத்துக் கட்சித் தலைவர்களும் உட்கார்ந்து யோசித்து ஒரு குறிப்பிட்ட சதவிகிதம்—மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியதைப் போல—ஒரு 15, 16, 19, 20 சதவிகிதம் இதற்கு ஒதுக்கிவிட்டு, 50 சதவிகிதத்திலே ஒரு 20 சதவிகிதத்தை பொருளாதாரத்திலே பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கிவிட்டு, 30 சதவிகிதம் பொதுவாக என்று ஒதுக்கினாலும் சரிதான். அதே போல 32 சதவிகிதத்திலே ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பொருளாதாரத்திலே பின்தங்கியவர்களுக்கு என்று ஒதுக்கிவிட்டு, மீதி மற்றவர்களுக்கு ஒதுக்குவதிலே ஒரு நியாயம் கிடைக்கக்கூடும். அதற்கான முயற்சிகளைக் கூட அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கலந்து கொண்டு எதிர்காலத்திலே செய்யலாம் என்று நான் கருதுகிறேன். அதுபற்றி அவர்களுடைய சீரிய யோசனைகள் வருமானால் ஒரு நல்ல நியாயத்தின் அடிப்படையில் முடிவெடுக்கவேண்டும்.

100 ஆண்டுகாலம், ஆயிரம் ஆண்டுகாலம் என்கிற அளவிற்கு தாழ்த்தப்பட்டு, புறக்கணிக்கப்பட்டுவிட்டவர்களுக்கு நாம் எந்த அளவிற்குச் சலுகைகள் கொடுத்து முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமோ அந்தக் கட்டத்திலே அரசு இருக்கிறது. நாமும் இருக்கிறோம். அப்படி ஆயிரம் ஆயிரம் ஆண்டும் பிற்படுத்தப்பட்டு இருந்தவர்களை நாம் பெரிய அளவிற்கு வசதி வாய்ப்புகள் கொடுத்து தூக்கி விட்டால் தான் அவர்கள் மற்றவர்களோடு இணையாக முன்னுக்கு வர முடியும்.

பள்ளத்தில் விழுந்து விட்டவனைப் பார்த்து நீயே மேலே ஏறி வா என்றால் அவனால் வரமுடியாது தான். மேலே இருப்பவர்கள் கை கொடுத்து—கீழே இருப்பவர்களுக்குக் கை கொடுத்து—மேலே இழுத்தால் தான் அவன் வரமுடியும். அந்த வகையில் எந்த அளவிற்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவிற்கு நாம் உதவிகளைச் செய்ய வேண்டும். அந்த உதவிகளை நியாயமான வகையில் செய்ய வேண்டிய முறையில் செய்ய வேண்டும். அதற்காக பிற்பட்டோர் நல வளர்ச்சிக் கழகம் ஒன்றை நிறுவவும் அரசு கருதி



அதன் மூலம் அவர்களுக்கு பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்த முடியும் என்று கருதுகிறோம். அந்த வகையில் இந்த மானியக் கோரிக்கைகளின் மீது எனது கருத்துக்களை தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் அதைத் திரும்பப்பெற்றுக்கொண்டு, இந்த மானியக்கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் மாணவர்களுக்கு 20,000 இடங்கள் தான் விடுதிகளில் இன்றைக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஹையர் செகண்டரி ஆரம்பிக்கப்பட்ட பிறகு, அந்த மாணவர்களும் செகண்டரி பள்ளி மாணவர்கள் படிக்கும் விடுதிகளில் தான் சேர்க்கப்படுகின்றனர். ஆகவே, அந்த இடங்களை அதிகரிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முதலில் சொல்லியபடி இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் 36 விடுதிகள் புதிதாகக் கட்டப்படவிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கருத்துக்கொப்ப எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ அதைச் செய்கிறோம். இருக்கிற விடுதிகளில் ஓரளவிற்கு இட வசதி அதிகரிக்க முடியுமா என்பதைப் பற்றியும், இந்த அரசு ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கும்.

### கோரிக்கை எண் 32.

திரு. கு. பாலன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "'மானியக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன்" என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,60,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

### (ஐ) கோரிக்கை எண் 7—மாநில சட்ட மன்றம்

### (ஒ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

### கோரிக்கை எண் 7.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரை மேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

[ டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூலை 29

''மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்
என்ற தலைப்பின் கீழ் ரூ. 83,84,000-க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே,
''ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசு செலவில்
தொலைபேசி வசதி ஏற்படுத்தித் தரவேண்டியதன் அவசியம்
பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை
மொழிகிறேன்.

''மானியக்கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்
என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 83,84,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, சட்ட
மன்ற உறுப்பினர்கள் தங்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி
யில் மற்றைய ஏனைய வசதிகள் சீர்படுத்தி வகை செய்தல் சம்
பந்தமாக விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை
மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 7 —மாநிலச் சட்டமன்றம் என்ற
தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 83,84,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, சட்ட
மன்றக் கூட்டங்கள் ஆண்டுக்கு நான்கு முறை கூடுவதற்கு தக்க
வாறு திட்டமிட்டு குறைந்த பட்சம் 150 நாட்கள் பேரவை கூட்
டங்கள் ஆண்டுதோறும் நடைபெற வேண்டுவதுப்பற்றி விவா
திக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்றம்
என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 83,84,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும்.''

## கோரிக்கை எண் 8

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல் நான் கீழ்க்கண்ட தீர்
மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்கிற
தலைப்பின் கீழ் ரூ. 3,78,33,000-க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.



1980 ஜூலை 29]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே,
கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத்
தீர்மானத்தை மொழிகிறேன்.—

''மானியக்கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற
தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,78,33,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, வாக்
காளர்களுக்கு அத்தாட்சி அட்டை வழங்குதல் குறித்து விவா
திக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி
கிறேன்.—

''மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற
தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,78,33,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே,
வாக்குச் சாவடிகள் அமைப்பது, வாக்காளர் எண்ணிக்கையில்
இல்லாமல் ஒவ்வொரு ஊரிலும் ஏற்படுத்தி தந்து அந்த கிரா
மத்து மக்கள் அந்தந்த ஊரிலேயே வாக்கு அளிக்கும் வாய்ப்பை
ஏற்படுத்தித் தரவேண்டியது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்
கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—

''மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற
தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,78,33,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும்.''

[மாலை 5-30]

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, 18 வயது
வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை உடன் அளிக்கப்பட
வேண்டியது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்
மானத்தை மொழிகிறேன்.—

''மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்
கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,78,33,000-ல் ரூ. 100
குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக்கோரிக்கைகளும்
வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்
கின்றன. சரியாக 7 மணிக்குள் விவாதம் முடிவுறவேண்டும்,
7 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும் என்பதை மாண்புமிகு
உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். இப்போது மாண்பு
மிகு நிதி அமைச்சரவர்கள் ஏதாவது சொல்வதாக இருந்
தால் சொல்லலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, முதலிலும் முடிவிலும் நான் பேசுவதற்கு நேரம் எடுத்துக் கொண்டால் பெரும் பகுதி நேரம் எனக்கே சரியாகிவிடும் ஆகை யால் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பின்னால் நான் பதில் சொல்லுகிறேன்.

திரு. பாபு கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறபோது, இந்த மைக் சரியாக வேலை செய்யவில்லை என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். அதை சீர்படுத்த வேண்டும். அதோடு நான் கீழே குனிந்து கொண்டு பேச வேண்டியிருக்கிறது. அடுத்த கூட்டத் தொடரி லாவது என்னைப் போன்றவர்கள் நின்று பேசக்கூடிய வகையில் மைக்கை கொஞ்சம் உயர்த்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் மாணவனாக இருந்த சமயத்திலும் கடைசி பெஞ் சிலேதான் இருந்தேன். இங்கேயும் எனக்கு கடைசி பெஞ்சுதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது ஆசி ரியர் கை தூக்கச் சொன்னால் நான் கை தூக்குவது கிடையாது. ஏனென்றால் கடைசி பெஞ்சிலிருந்து கையைத் தூக்கினாலும் தெரியாது. அதேமாதிரிதான் இங்கேயும் இருக்கிறது. ஏதாவ வதுகேள்வி கேட்க வேண்டுமென்று நான் கையை தூக்கினால் நீங்கள் கவனிக்க மாட்டேன் என்கிறீர்கள். கடைசி பெஞ்சில் இருக்கிறவர்களை பள்ளிக்கூடத்தில் கவனிக்காதது மாதிரி நீங்களும் இந்த கடைசி பெஞ்சில் இருப்பதால் கவனிக்காமல் விட்டு விடாதீர்கள். நான் கையைத் தூக்கும்போது கொஞ்சம் கவனித்துக்கொள்ளுங்கள்.

அடுத்தபடியாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் பஸ் பாஸ் கொடுத்திருக்கிறீர்கள். மனைவியையும் உடன் அழைத்துச் செல்லலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். மனைவி இல்லாமல் வேறு யரையாவது அழைத்துச் செல்லலாமா என்று சிலர் கேட்கிறார்கள். யாரையாவது ஒருவரை அழைத்துச் செல்லலாம் என்று ஏற்பாடு செய்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய எம்.எல்.ஏ. ஆஸ்டல் இருக்கிறது. அதை கட்டி னவருக்கு ஏதாவது ஒரு பிரைஸ் கொடுக்க வேண்டும். அவ்வளவு அழகாகக் கட்டியிருக்கிறார்; பிரமாதமாக கட்டியிருக்கிறார். காலை 6 மணி 7 மணி ஆனவுடனே இந்தப் பக்கம் வெயில் அடிக் கிறது; தாங்க முடியவில்லை. 'தூங்காதே, தம்பி தூங்காதே, என்று எழுப்பிவிட்டுவிடுகிறது. மத்தியானம் கொஞ்சம் தூங் கலாம் என்று பார்த்தால் 2 மணி 3 மணி ஆனவுடன் அந்தப் பக்கத்திலிருந்து வெயில் அடிக்கிறது. ஓய்வு எடுத்துக்கொள்ள வழியில்லை; தூங்க முடியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள்



ஓய்வு எடுக்கக்கூடாது, தூங்கக்கூடாது, தூங்காமல் பணியாற்ற வேண்டும் என்ற முறையில் 'தூங்காதே தம்பி தூங்காதே' என்று சொல்லி இவ்வளவு அழகாக, பிரமாதமாக அந்த ஆஸ்டல் கட்டிடத்தை கட்டியிருக்கிறார். அவருக்கு நிச்சயமாக ஏதாவது ஒரு மெடல் கொடுக்க வேண்டியதுதான்.

அதுமட்டுமல்ல. அந்த கட்டிடம் எப்போது இடிந்து விழப் போகிறதோ தெரியவில்லை. கிராக் இருக்கிறது. கிராக் விடு கிறது என்றால் டேஞ்சர். இப்போது முட்டு கொடுத்து வைத் திருக்கிறீர்கள். எந்த நேரத்தில் யார் தலையில் விழப்போகிறதோ தெரியவில்லை. அந்த காலத்தில் ஒரு ரூம் கட்ட 27,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அப்போது சிமின்ட் விலை 6½ ரூபாய், குளத்துக்காரன் கூலி 3-50 ரூபாய், கல் விலை 40ரூபாய் தான். இப்போது அது 1¼ இலட்சம் ரூபாய் இருக்கும் 1¼ இலட் சம் ரூபாயில் கட்டிய அந்த ரூம் இப்படியா இருக்க வேண்டும்? எவ்வளவு வசதிகள் அதில் செய்திருக்கலாம்? இந்தத் தொகைக்கு யார் இப்போது கட்டப்போகிறார்கள்? நான் கட்ட மாட்டேன். 1¼ இலட்சம் ரூபாய்க்கு அருமையான குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கலாம். இப்போது இருக்கிற ஆஸ்டல் சரியில்லை; அது நம்முடைய தலையில் இடிந்துவிழ வேண்டாம். வேண்டு மானால் அதை வாடகைக்கு விடலாம். டெல்லியிலிருந்து ஆபீசர்ஸ் வருகிறார்கள். அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வாட கைக்கு விட்டுவிடலாம். அவர்கள் தலையில் விழுந்தால் பரவா யில்லை. நமக்கு புதிதாக வேறு கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல. கூவத்திலிருந்து வருகிற நாற்றம் தாங்க முடியவில்லை. ஓட்டலிலுள்ள எச்சி இலை பூராவையும் அந்தப் பக்கத்தில் தான் போடுகிறார்கள். அந்த நாற்றம் வேறு இருக் கிறது. அதனால் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. எச்சி இலையை அங்கே போடுகிறார்கள்; அதைப் பொறுக்க 20 பையன்கள் சண்டை போடுகிறார்கள். அதற்கு பின்னால் நாய் வருகிறது, மாடு வருகிறது, காக்காய் வருகிறது. இந்த தொல் லைகளைப் போக்க அந்த பகுதியில் எச்சி இலைகளைப் போடக் கூடாது என்று சொல்ல வேண்டும். லாரி வைத்து அல்லது வேறு வகைகளில் வேறு எங்காவது கொண்டு போடட்டும்.

இரண்டாவதாக ஆஸ்டலின் பின்பகுதி ஒரே காடுமாதிரி இருக்கிறது. அங்கே மேலே இருந்து எச்சி இலைகளை கீழே போடுகிறார்கள்.

எச்சி இலைகளை எல்லாம் அவ்வாறு கொண்டுவந்து போடு வதைத் தவிர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும். இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் சுகாதாரக்கேடான நிலை அங்கே இருக்கின்றது.

அடுத்து டெலிபோன் மிக மோசமான நிலையிலே ஹாஸ்டலிலே இருக்கின்றது. கொடுத்தால் நல்லவகையிலே டெலிபோன் வசதியைச் செய்து கொடுங்கள் அல்லது அதை எடுத்துவிடுங்கள். அதைச் சுற்றிச் சுற்றி எங்களுக்கு உயிரே போய்விடுகின்றது. நம்பர் 9 கேட்டுவிட்டு காத்திருப்பதற்குள் வெகுநேரம் ஆகிவிடுகின்றது. ஆகவே நல்ல முறையிலே டெலிபோன் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்து நமது மாண்புமிகு திரு. சித்தன் அவர்கள் கூட சொன்னார்கள். ஹோட்டல் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டம் கொண்டுவர வேண்டும் என்று அவர் எதிர்க்கட்சிக்காரர், உங்களை மாட்டி வைப்பதற்காக அவ்வாறு சொல்லி இருக்கிறார்கள். ஆகவே ரேட் ஃபிக்ஸ் பண்ணுவதெல்லாம் பெரிதல்ல. அங்கே நல்ல தரமுள்ள உணவினை வழங்குகின்ற வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும். கொடுக்கப்படுகின்ற சாப்பாட்டைத் தரம் பிரியுங்கள். விலைக்கட்டுப்பாடு பற்றியெல்லாம் சட்டம் கொண்டுவரவேண்டும் என்று அவர்கள் சொன்னாலும் அந்த மாதிரிச் சட்டங்கள் எல்லாம் ஆந்திரா போன்ற மற்ற மாநிலங்களிலே முதலிலே கொண்டுவரட்டும், அப்புறம் நாம் அதுபற்றி யோசிக்கலாம். நாம் முதலில் செய்ய வேண்டியது சாப்பாட்டைத் தரம் பிரிக்கவேண்டும். ஃபர்ஸ்கிரேட், செகன்ட் கிரேட் என்று தரம் பிரிக்க வேண்டும். இன்றையதினம் சர்க்கரை விலை கிலோ 8½ ரூபாய் விற்கின்றது. ஆகவே ஹோட்டல்காரர்களால் 40 பைசாவுக்கு எப்படி நல்ல காப்பி கொடுக்க முடியும்? முன்பு பாலிலே தண்ணீர் ஊற்றினார்கள். இனிமேல் தண்ணீரிலே பாலை ஊற்றுவார்கள். அந்த நிலைதான் முடியும். ஆகவே நல்ல தரமான உணவுப் பொருட்களை தரம் பிரித்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து அங்கே ஒரு கதர் கடையை வைத்திருக்கிறார்கள். அது மிகவும் நல்லது. நான் கூட கதர் பல நேரங்களிலே உபயோகிக்கிறேன். ஆனால் அதேபோன்று கைத்தறி கடை ஒன்றை அங்கே ஆரம்பிக்கவேண்டும்.

அடுத்து ஹாஸ்டலிலே ஐஸ் பாக்ஸ் முன்பு இருந்தது. இப்போது அதை எடுத்துவிட்டார்கள். நான் எல்லாம் ஐஸ் வாட்டர் குடித்து பழக்கப்பட்டவன். ஆகவே ஐஸ் வாட்டர் வைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து பழைய எம்.எல்.ஏ-க்களுக்கு பாஸ் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது பஸ் பாஸ் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஆஸ்பத்திரிகளிலும் அவர்களுக்கு சலுகை வழங்குகின்ற வகையிலே ஏ கிளாஸோ பி கிளாஸோ ஏதோ ஒன்று கொடுத்து அவர்களுக்கு மருத்துவவசதி கிடைக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்கு இரயில்



பாஸ்கூட இப்போது இரண்டாயிரம் கிலோ மீட்டருக்குக் கொடுக்கப்படுகின்றது. இதை இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டும்.

அடுத்து எம். எல். ஏ-க்களுக்கு 1971லே கலைஞர் ஆட்சிக் காலத்திலே பேனா கொடுத்தார்கள். இப்போது பேனா கொடுக்கவில்லை. அப்படி எம்.எல்.ஏ-க்களுக்கு பேனா கொடுக்க வேண்டும். அதோடு ஒரு நல்ல பெட்டி ஒன்று கொடுங்கள்.

இதோடு நான் முன்பு கூறியபடி ஹாஸ்டலையும் கொஞ்சம் கவனியுங்கள். அங்கே நான் கூறியபடி நல்ல வசதிகளை ஏற்படுத்திக் கொடுங்கள். டெலிபோன் வசதி, சுகாதார வசதி, போன்றவற்றைச் செய்து கொடுங்கள். அங்கே ஹோட்டலிலே நல்ல உணவு வழங்குகின்ற வகையிலேயும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[மாலை 5-40]

டாக்டர். சே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர், நாவலர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கை எண். 7, 8, 42, 43, 55, 56 ஆகிய மானிய கோரிக்கைகள் மீது இந்த தமிழகத்தின் மக்கள் குரலை எதிரொலிக்கிற வகையில் சில கருத்துக்களை சொல்லிக் கொள்ள முன் வருகிறேன்.

பொதுவாகவே சட்டமன்றம் என்பது பாதுகாப்பு முழுக்க முழுக்க இருக்கக் கூடிய இடமாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த மன்றம் அமைக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்கிறபோது, நம்முடைய மாநில சட்டமன்றம் இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் அப்படி இல்லை என்பதை கடந்த கால சான்றாக பல காட்சிகள் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. ஆகவே பாதுகாப்பான இடத்தில் சட்ட மன்றத்தை மாற்றி அமைத்துக் கட்டவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் உங்கள் மூலமாக சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டும் அல்லாமல் பார்வையாளர்களாக வெளியிலிருந்து வருகிறவர்கள், உறுப்பினர்களையும், கட்சித் தலைவர்களையும் பார்ப்பதற்கென்று வருபவர்கள் தங்குவதற்கு இடம் கிடையாது. அவர்கள் பரிதாபமான முறையிலே வெளியிலே தங்குகிற நிலைமை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை மற்றும் பல உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இப்படி சட்டமன்ற உறுப்பினர்களை பார்க்கும் வகையில் வருகிற அந்த மக்களில் சிலர் வறுமை கோட்டிற்கும் கீழே இருக்கிற காரணத்தினால்,

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய சிறப்பு வாய்ந்த தமிழ்நாடு சட்டப்
பேரவைப் பற்றி அதனுடைய பெருமைப்பற்றி, நாம் ஏராள
மாகப் பேசியிருக்கிறோம். ஜனநாயகத்தை விரிவுபடுத்தவும்
பலப்படுத்தவும் இந்த மன்றம் பயன்படவேண்டுமென்ற முறை
யிலே இந்த மானியக் கோரிக்கை சிந்திக்கப் படவேண்டும்
என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பட்ஜெட் கூட்டம் தவிர,
ஆண்டுக்கு 3 முறைகள் கூட்டுவதற்கு நாம் ஏற்பாடுகளைச்
செய்யவேண்டும். ஆண்டில் குறைந்த பட்சம் 120 நாட்கள்
கூடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இந்தப் பேரவை
யிலே சிலசமயங்களிலே உணர்ச்சி ஏற்பட்டு சலசலப்பு ஏற்படு
வது இயற்கை. அதைப் பொருட்படுத்தலாகாது. மக்களி
னுடைய உண்மையான தன்மைகளை, உணர்ச்சிகளை, அவர்
களுடைய உரிமைகளை, அவர்களுடைய கோரிக்கைகளைப் பிரதி
பலிக்கும் சபையாக இந்தச் சபையை உருவாக்க வேண்டும்.
அந்த முறையில் உறுப்பினர்களின் கருத்துக்களை அறிவதற்கு
நம்முடைய அமைச்சரவை முயற்சி செய்ய வேண்டும். அந்த
முறையில் சபை கூடுகின்ற நாட்களை அதிகப்படுத்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டரை ஆண்டுக் காலத்திலே சபையின் நடவடிக்கை
களில் முழுவதும் இன்று தமிழ் சிறந்த ஆதிக்கம் வகிக்கிறது
என்பதைப் பெருமையோடு பார்க்கிறோம். இன்னும் சிறப்
பான முறையில் கடிதப்போக்குவரத்து உட்பட அத்தனையும்
தமிழில் வருவதற்குச் சிறந்த முயற்சிகளைத் துறை மேற்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேள்வி-பதில் என்று வருகின்ற சீட்டை பார்க்கும்பொழுது
ஆச்சரியமாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான வடிகட்டும்
முறையில் வைத்து அங்கீகரிப்பது என்ற முறையை கைவிட



புரிந்து கொள்ளவும், மற்றவர்களின் எண்ணப்பாங்குகளை
அறிந்துக் கொள்ளவும், நட்பு முறை வளர்வதற்கு ஆளும் கட்சி
எதிர்கட்சி உறுப்பினர்கள் நண்பர்களாக ஜனநாயக முறையில்
பழகுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும். ஆகவே அங்கே
ஒரு பூங்காவையும் அமைத்துக் கொடுக்க வேண்டியது மிக மிக
அவசியம் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதைவிட ஒரு முக்கியமான விஷயம் என்று சொல்லப்போ
னால், சட்டமன்றம் எவ்வாறு நடைபெறுகிறது. சட்டமன்றத்
திலே நடக்கிற அன்றாட நிகழ்ச்சிகள் என்ன என்பதை அறிந்து
கொள்ள வேண்டும் என்று மக்கள் மிக ஆவலாக இருக்கிறார்கள்.
பத்திரிகைகளிலே முழுமையாக அந்தச் செய்திகள் எல்லாம் வரு
வது கிடையாது. முழுமையாக போட்டு விடவும் முடியாது. தாங்
கள் தேர்ந்தெடுத்து அனுப்பிய உறுப்பினர்கள் தங்களுக்குகாக
என்ன பேசுகிறார்கள் என்று மக்கள் முழுமையாக தெரிந்து
கொள்ளும் வகையில் சட்டமன்ற நிகழ்ச்சிகளை தொலைக்காட்சி
மூலம் காட்டுவதற்கு ஏற்பாடு செய்தால் மிக மிக சிறப்பாக
இருக்கும். மன்ற உறுப்பினர்கள் அவர்களின் குரலை எப்படி
எடுத்து வைக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள
முடியும். தவறான வழிகளில் தங்களுடைய பதவியை பயன்
படுத்துகிறவர்கள் கூட ஓரளவிற்கு தங்களை திருத்திக் கொள்ள
வாய்ப்பு ஏற்படும்.

ஆகவே அந்த நிலையில் இந்தக் காட்சியை மக்கள் பார்க்கக்
கூடிய வகையில் நல்ல பல உணர்வுகளை எடுத்துச்சொல்லக்
கூடிய நிலையில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியாக அதை
மாற்றியமைத்து இந்த மன்ற உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளை மக்
களுக்கு தெரிவிக்கக்கூடிய வகையில் செய்வது மிக மிக அவசியம்.

பார்வையாளர்கள் மிக மிக பாதுகாக்கப்படவேண்டும். ஒருவர்
நேற்று நோட்டீஸ் போட்டார். அவர் ஓடிவந்து கீழே
குதிக்க முயன்றதாக பேசுகிறபோது சொன்னார். தடபித்தவறி
கீழே விழுந்து படாத இடத்தில் பட்டு அவர் போவதோடு மட்டு
மல்லாமல் அவர் கீழே விழுந்து வேறு ஒருவர் உயிரும்போய் விடு
கிற நிலையும் இருக்கிறது. ஆகவே பார்வையாளர்கள் பார்த்
துவிட்டு போகவேண்டுமே தவிர அவர்கள் எகிறி குதித்தாலும்
எட்டாத அளவிற்கு, எங்கே போகவேண்டுமென்று அவர்கள்
விரும்புகிறார்களோ, அங்கே போக விடாமல் இங்கே இருப்பவர்
களை எங்கேயே அனுப்பிவிட முடியாத அளவிற்கு காலரிகள்
அமைக்கப்படவேண்டும். அப்போதுதான் நல்லமுறையில் தொ
டர்ந்து மேலும் நல்ல பணிகளை செய்ய முடியும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இங்கே ஒரு ஓய்வகம் இருக்
கிறதா என்றால் இல்லை. சில நேரங்களில் 1-30 மணி என்
றல்ல, 3-30 மணி அளவிற்குக்கூட மன்ற நடவடிக்கைகள் போய்

விடுகின்றன. அன்று கூட பேராசிரியர் சங்கடப்பட்டுக்கொண்டார்கள். அவர்கள் பேசுகிறபோது அன்று 2 மணிக்கு மேலாகி விட்டது. ஆகவே சிறிது காலதாமதமானாலும் உறுப்பினர்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளவோ, சிற்றுண்டி சாப்பிடவோ. ஒருவருக்கொருவர் கலந்து பேசி அவசர முடிவு எடுப்பதற்கோ இங்கே ஒரு நாள் ஒரு சிறிய சாதாரணப் பிரச்னை வெளிநடப்பு செய்யக் கூடிய அளவிற்குக் கொண்டுவந்துவிட்டது. கலந்து பேச இடம் இல்லாதது அந்த நிகழ்ச்சி நடக்க ஒரு காரணமாக இருந்திருக்கும் என்பது என் உணர்வு.

ஆகவே ஒருவருக்கொருவர் கலந்து பேசி எந்த நிலையில் எப்படி முடிக்க வேண்டும் என்றெல்லாம் சகஜமான நிலை ஏற்பட ஒரு அமைப்பு முறை தேவை. மேலவை உறுப்பினர்களுக்கு ஓய்வகம் நல்லமுறையில் இருக்கிறது. ஆனால் இந்த மன்ற உறுப்பினர்களுக்கு அந்த பாக்கியம் இல்லை. ஆகவே இந்நிலை மாறுவதற்கு நிச்சயமாக நடவடிக்கைகள் எடுத்தாகவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தன் தொகுதி பற்றி, தமிழ்நாடு பற்றி என்று மட்டும் இல்லாமல் இந்தியாவில் ஜனநாயக முறை எப்படி இருக்கிறது என்று அறிய, சுற்றுப்பயணம் சென்று எங்கெங்கே எப்படி எப்படி நிலைகள் உள்ளன என்பதை தெரிந்த கொள்வது அவசியம். அவர்கள் உலகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டாலும் சரி, வெளிநாடு சுற்றுப்பயணம் மேற்கொண்டாலும் சரி அல்லது இந்தியா சுற்றுபபயணம் மேற்கொண்டாலும் சரி அவர்கள் அப்படிச் செல்வதற்கு அனுமதி அளித்து முன்பணம் கொடுத்து அதை அவர்கள் சம்பளத்தில் இருந்து பிடித்துக் கொள்வதைக்கூட ஏற்றுக்கொள்ளலாம் அப்படிச் செய்தால் அனுபவப்பூர்வமாக பல விஷயங்களை பேச வாய்ப்பாக இருக்கும்.

மாநில சட்டமன்ற நிகழ்ச்சிகளை எல்லா திக்குகளிலும் பரப்பும் ஆற்றல் உள்ளவர்கள் நிருபர்கள்.

The word "NEWS" represents : N for NORTH ; E for EAST; W for WEST; S for SOUTH.

ஆகவே செய்திகளை நான்கு திக்குகளில் மட்டுமல்ல, எட்டு திக்குகளிலும் பரப்பும் நிருபர்களுக்கு தேவையான இடம் இருக்கிறதா என்றால் இல்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் இடித்துக் கொண்டுதான் எழுதுகிறார்கள். ஆகவே போக்குவரத்து வசதி, சலுகை விலையில் சிற்றுண்டி அளிப்பது, எழுது பொருள் கொடுப்பது, போன்ற எல்லா வசதிகளும் அவர்களுக்குச் செய்து தரப்பட வேண்டும்.

நான்முகன் பிரம்மா செய்த தவறு காரணமாக பிரம்மாவிற்கு நாட்டில் கோவில் இல்லாமல் போய்விட்டது என்று சொல்வார்கள். அதேபோல் யாரோ ஒரு சில நபர்கள் அல்லது ஆசிரியர்கள்



அல்லது சஞ்சிகைகள் தவறான பாதையில் சில கருத்துக்களை வெளியிட்டுவிடலாம். ஆனால் ஒருவருக்காக பலர் பாதிக்கப்படும் நிலை இருக்கக்கூடாது. ஆகவே அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு தரவேண்டியது நமது கடமையாகும். அப்போதுதான் நிருபர்கள் இந்த மன்றத்திற்கு மகளாகவும் மக்களுக்கு மருமகளாகவும் இருந்து பணியாற்றி, அது மங்களகரமாக நாட்டில் நடைபெறும்.

ஓய்வூதியம் வாழ வகையற்ற அனைவருக்கும் மேலும் உயர்த்திக் கொடுப்பதில் ஆட்சேபணையில்லை. ஓய்வூதியம் தரப்படுகிறபோது வாழ வகை அற்றவர்களுக்குத்தான் தர வேண்டுமே தவிர வருமான வரி கட்டும் அளவிற்கு சொத்து உள்ளவர்களுக்கு இந்த ஓய்வூதியம் வழங்கக்கூடாது. அவர்களுக்கு வழங்கும் ஊதியங்களை அனாதை இல்லங்கள், குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள், ஏழைகளுக்கான மறுவாழ்வு திட்டங்கள் இவற்றின் கணக்கில் வரவு வைக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் தேவை இல்லை, தரவேண்டிய அவசியமில்லை.

[மாலை 5-50]

அது மட்டுமல்ல. இன்றைய தினம் அதிகாரிகள் நிலை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கின்றபோது, நாம் நிர்வாகத்திலே பல சட்டதிட்டங்களை உருவாக்கி, நாம் பல பிரச்சினைகளை, சட்டம் போட்டு அனுப்பினாலும் கூட பல விஷயங்கள் நடைமுறைக்கு வருவதில்லை. அது எப்படி இருக்கிறது. என்றால் . . . . . . . . . . . . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 7 மணிக்குள் முடித்தாக வேண்டும். இன்னும் பல பேர்கள் பேச வேண்டும்.

<u>டாக்டர் கே. சமரசம்</u> : எப்படிப்பட்ட நிலை இருக்கின்றது என்று சொன்னால், ஒரு நாடகத்திலே சொல்வார்கள். ஒரு பையனிடம் காலணாவைக் கொடுத்து, வெற்றிலை வாங்கச் சொல்லியும், இன்னொரு காலணாவைக் கொடுத்து, பாக்கு வாங்கச் சொல்லியும் அவன் அனுப்பப்பட்டான். சென்ற பையன், மீண்டும் வந்து சொன்னானாம், எந்தக் காலணாவுக்கு வெற்றிலை, எந்தக் காலணாவுக்கு பாக்கு என்று . . . . . . . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : உதாரணம் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். நாவலர் பேசினால் நல்லதாக இருக்கும். இல்லாவிட்டால் காரியம் கெட்டுப் போய்விடும்.

<u>டாக்டர் கே. சமரசம்</u> : எந்தக் காலணாவுக்கு வெற்றிலை எந்தக் காலணாவுக்கு பாக்கு என்று சொன்னானாம். அந்த நிலைதான் பைல்கள் தாமதம், தேக்கம் ஆகக்கூடியதற்கும்

சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை நாம் கவனித்தாக வேண்டும். அப்படிப்பட்ட நிலையிலே இருக்கக்கூடியவர்கள், நல்லமுறையிலே பணியாற்றக்கூடிய முறையில் பல நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கக்கூடிய இடத்திலே ஒரு நல்ல உணவகம் ஒன்றையும், ஒரு கைத்தறி அங்காடியையும் கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையத்தையும் ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட நிலையிலே இருந்தால் உறுப்பினர்களைப் பார்க்க வருவோர் போவோர் அவைகளை வாங்கிப் பயன்படுத்தவும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவசியமாக இருப்பதை விலைக்குப் பெற்றுக் கொள்வதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே, இந்த நிலையை அங்கே உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில சட்டமன்றம் என்ற இந்த மானியக் கோரிக்கையிலே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இங்கே வைக்க விரும்புகிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்திலே உள்ள 3 அமைப்புகளில் சட்டமன்றம் ஒன்றாகும். நீதித் துறை, நிர்வாகத் துறை மற்ற இரு அமைப்புகளாகும். எனவே, சட்டமன்றம் எந்த அளவிற்கு சிறப்பாக செயல்படுகின்றதோ, அந்த அளவிற்கு ஜனநாயகம் வெற்றி பெற்றதாகக் கருதப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த மன்றத்திலே வேறு எந்த மானியத்தின் மீது ஒருமித்த கருத்து இருக்கிறதோ, இல்லையோ. இந்த சட்டமன்ற மானியத்தின்மீது பொதுவான கருத்து இரு தரப்பிலேயும் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சிறப்பாக செயல்படுவதற்கு, நாட்டு மக்களுக்கு அதன் மூலம் ஏற்ற பணிகளை நல்ல முறையிலே செய்வதற்கு வழிகோலியவர்கள் ஆவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய ஆளுங் கட்சி உறுப்பினர் இங்கே இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு நாம் அதைப் பார்க்கிறோம். காற்றாடிகள் மேலே சுழன்று கொண்டிருந்தாலும், எத்தனையோ புழுக்கமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இட நெருக்கடியைப் பார்க்கிறபோது, சென்னையிலே இருந்து டெல்லிக்கு இரண்டாம் வகுப்பிலே ரிசர்வ் செய்யாமல் பிரயாணம் செய்வதைப்போல் இட நெருக்கடி இருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கின்றோம். எனவே, இதற்கு முன்பு நடந்த விவாதத்தைப் பார்த்தேன்.





சட்டமன்றத்திற்குப் போதுமான இட வசதி போதாது, கட்டிடம் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையை இந்த ஆண்டு மட்டுமல்ல 2, 3 ஆண்டுகளாகவே இந்த மாமன்றத்திலே அந்தக் கருத்தை வைத்திருக்கிறார்கள்.

உறுப்பினர்களுக்கு மட்டும் இட நெருக்கடி அல்ல. அரசு அதிகாரிகளுக்கும் இட நெருக்கடி இருக்கிறது. பத்திரிகையாளர்களுக்கும் இட நெருக்கடி இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல், இந்த சட்டமன்றத்திலே உறுப்பினர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கோ, ஏதாவது முடிவெடுக்க வேண்டுமென்றாலோ, இப்போது முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது; அதற்கு இடம் போதவில்லை. எனவே, இதற்கு ஒரு நல்ல மாற்று ஏற்பாட்டை, இட வசதி உள்ளதாக செய்யவேண்டும் அல்லது நீண்டகால அடிப்படையிலே ஒரு நடவடிக்கை எடுத்து, அதற்கு வசதி செய்யக்கூடிய முறையிலே, நவீன வசதிகளோடு கூடிய சட்டசபைக் கட்டிடம் ஒன்று கட்டி, செம்மையாக செயல்பட வழி செய்யவேண்டும். கர்நாடக மாநிலத்திலே, பெங்களூரிலே விதான சபா இருக்கிறது. அப்படி இன்னும் சில இருக்கின்றன. அதைக் கருத்திலே கொண்டு, நவீன வசதிகளோடு கூடிய ஒரு சட்டமன்றக் கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய நூலகம் மிக கொஞ்சமான இடத்திலே இருக்கிறது. புத்தகங்களை அடுக்கி வைப்பதற்குகூட அங்கே இடமில்லை. லைப்ரரியிலே உறுப்பினர்கள் உட்கார்ந்து படிக்கின்ற நிலை இல்லை. நிறைய நாளேடுகள் அங்கே வருகின்றன. அவைகளை அடுக்கி வைப்பதற்குகூட இடமில்லை. அங்கே பணிபுரிகின்றவர்கள் உட்கார்ந்து பணியாற்றுவதற்குகூட மிகுந்த இட நெருக்கடி இருக்கிறது. எனவே, இதை உடனடியாக விரிவுபடுத்தி, இன்னும் உறுப்பினர்களுக்கு பயன்படக் கூடிய முறையிலே இந்த நூலகத்தைச் சீர்செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, சட்டசபையில் மானியங்களைப் பற்றிப் பேசுவதற்கு அண்மையிலே தேர்தல் நடந்து முடிந்த காரணத்தினால், அதிக நாட்களை ஒதுக்குவதற்கு முடியாத காரணத்தால், இனிமேல் அப்படியல்லாமல் மானியங்கள் மீது உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்குத் துணையாக, முக்கியமான மானியங்கள் மீது பேசுவதற்கு இரண்டு நாட்கள் ஒதுக்குகின்ற அளவிலே, இந்தக் கூட்டத்தொடரை நீட்டிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

இந்தச் சபை கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக நடைபெற்று வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைய இலாக்காக்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவையில் கேள்வி நேரம் மிக முக்கியமான நேரம். பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதன் மூலம் மக்களுக்குப் பயன்படுகிற ஒன்றாக இருக்கிறது. கேள்வி நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடரில் ஒரு கேள்விக்குக்கூட பதில் சொல்லவில்லை என்று வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவை முன்னவர் அவர்கள் முதல்வருக்குப் பதிலாக பதிலளிக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களே நேரடியாக கேள்வி நேரத்தில் உறுதிமொழி கொடுப்பார்களானால் நாட்டு மக்களுக்கும் நமக்கும் நல்லது. முதலமைச்சர் அவர்களுக்குப் பல அலுவல்கள் இருந்தாலும் சட்டசபை கூடும் நாட்களில் கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிப்பார்களானால் மெத்த துணையாக இருக்கும்.

சட்டமன்றத்தில் பல குழுக்கள் இருக்கின்றன. தற்போது எட்டு கமிட்டிகள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். இன்னும் சில கமிட்டிகளை அமைத்தால் மன்ற உறுப்பினர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியும். அது தமிழக மக்களுக்கு துணையாக இருக்கும்.

"பெட்டிஷன்ஸ் கமிட்டி" என்று குழு போடலாம். மக்கள் அமைச்சர்களுக்கு பெட்டிஷன்கள் அனுப்புவது போல் நேரடியாக மாமன்றத்திற்கே பெட்டிஷன்களை அனுப்பலாம். எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் பெட்டிஷன் கமிட்டியில் அங்கம் பெற்று அந்த பெட்டிஷன்களுக்குத் தீர்வு காண வழி வகுக்கலாம். அரசு துணையாக அது இயங்கமுடியும்.

"லைப்ரரி கமிட்டி"— நூலகக் குழு என்று ஒன்று ஏற்படுத்தலாம். நிறைய நூல்கள் வாங்க வேண்டும். இங்கே இருக்கிற லைப்ரரியும், ஆராய்ச்சிப் பிரிவும் உறுப்பினர்களுக்குத் துணை செய்யப்போதுமானதாக இல்லை. எந்த ஒரு மானியத்தில் பேசுவதாக இருந்தாலும் புதிய உறுப்பினர்களுக்கும், பழைய உறுப்பினர்களுக்கும் தேவையான புத்தகங்களை வாங்கிக் கொடுக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். திரு. இளையபெருமாள் அவர்கள் இருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்தக் குழுவில் எல்லாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அங்கம் வகிக்க வேண்டும். அந்த வகையில் தாழ்த்தப்பட்டோர், "ஷெட்யூல்டு டிரைப்ஸ்" போன்றவர்களுக்குக் குழு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று பிற்பட்டோருக்கு என்று தனிக் குழு அமைத்தால் அவர்கள் பிரச்சினைகளைக் கவனிக்க துணையாக இருக்குமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மொத்தம் இங்கிருக்கின்ற மானியங்களைக் கணக்கிடும்போது ஏறத்தாழ 17 மானியங்கள் செலவின மானியங்களாக இருக்கின்றன. ஒரு ஆண்டில் மதிப்பீட்டுக் குழு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி) நாலைந்து மானியங்கள் சம்பந்தப்பட்ட பொருள்களைப் பற்றித்தான் எடுத்துக்கொள்ள முடிகிறது. எடுத்துக்கொள்ளப்படுகிற 17 மானியங்களிலும் கவனம் செலுத்த முடியவில்லை. ஆகவே, குறைந்தபட்சம் முக்கியமான மானியத்திற்கும் தனியாகக் குழு அமைக்கலாம் என்று ஆலோசனை கூற விரும்புகிறேன். கல்வி இலாகா, விவசாய இலாகா, போக்குவரத்து இலாகா, மக்கள் நல்வாழ்வுத்துறை, தொழில் இலாகா, வணிகவரி இலாகா, கூட்டுறவுத் துறை போன்றவற்றுக்கு 'சப்ஜக்ட்ஸ் கமிட்டி' என்று சொல்லக்கூடிய அளவுக்கு 'பொருள் ஆய்வுக் குழுவை' ஏற்படுத்துவார்களானால் அந்த மானியங்களின்மீது விரிவான கருத்துக்கள் பரிமாறப்பட்டு முடிவுகளை எடுக்கலாம்.

அப்படிப்பட்ட கமிட்டிகள் கனடாவில் இருப்பதாக அறிகிறேன். ஆஸ்ட்ரேலியாவில் இருப்பதாக அறிகிறேன். பக்கத்து மாநிலமான கேரளாவில் கூட இந்த ஆண்டு எட்டு குழுக்களை அமைத்திருப்பதாக அறிகிறேன். வருகிற ஆண்டுகளிலாவது (சப்ஜக்ட்ஸ் கமிட்டி) பொருள் ஆய்வுக் குழுக்களை அமைத்து மாமன்றத்துக்கு பயன்படும் முறையில் பணியாற்ற வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களில் 10 சதவீதத்திற்கு மேல் இருக்கும் கட்சிகளில் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட கட்சிக்கு எதிர்க்கட்சி அந்தஸ்தும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற அந்தஸ்தும் கொடுக்கப்படுகிறது. அடுத்த அளவில் இரண்டாவது எதிர்க்கட்சியாக பத்து சதவீதத்திற்கு அதிகமான உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்குமானால் அந்தக் கட்சிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்கிற சலுகைகள்—கார்கள், டைப்ரைட்டர், கிளார்க் போன்ற சலுகைகளைக் கொடுத்தால் அதிகமான அளவு நல்ல முறையில் பணியாற்ற முடியும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு சிலரையாவது வெளிநாடுகளுக்கு காமன்வெல்த் பார்லிமென்டரி போர்டு துணையோடு அனுப்புவார்களானால் பயனுள்ளதாக இருக்கும். எவ்வளவோ கோடி ரூபாய் அரசுக்குச் செலவாகிறது. உறுப்பினர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதன் மூலம் பிற நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கவும் என்னென்ன திட்டங்களைத் தமிழகத்தில் கொண்டு வரலாம் என்று அனுபவத்தின் வாயிலாக எடுத்துச் சொல்லவும் உதவியாக இருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆஸ்டலைப் பற்றி உறுப்பினர்கள் சொன்னார்கள். தி.மு.க வைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் கூடச் சொன்னார்கள். கட்டிடத்தைப் பற்றி சொன்னதை நான் மீண்டும் சொல்ல விரும்பவில்லை. அங்கு டெலிபோன் வசதி மிக மோசமாக இருக்கிறது. பல முறை எடுத்துச் சொன்னோம். இந்த மாதிரி மோசமான நிர்வாகம் வேறு எந்த அமைப்பிலும் இருக்க முடியாது என்பதை வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

[மாலை 6.00]

எந்த நேரத்திலேயானாலும் யாருடனும் டெலிபோனில் பேச முடியாத நிலைமை இருக்கிறது. உடனடியாக இருக்கிற டெலிபோன் கெபாசிடியை அதிகப்படுத்தி—இங்கேயெல்லாம் ஜீரோ டையல் செய்தால் வெளியே இருக்கிறவர்களோடு தொடர்புகொள்ளக்கூடிய அமைப்பு இருக்கிறது—அதைப் போல் சட்டசபை விடுதியில் உறுப்பினர்களுக்கு டெலிபோன் வசதிகளைச் செய்து கொடுத்தால் ரொம்ப நல்லது. வெளியே இருக்கிறவர்களோடு முக்கியமான சில விஷயங்களைப் பேச கின்ற நிலைமை வருகிறபோது கீழே இருக்கிற இணைப்பு அகத்தோடு தொடர்புகொள்ள முடியாமல் இருக்கிறது, இதை உடனடியாக கவனித்தாக வேண்டும். ஏனென்றால் 1½ மாத காலமாகிவிட்டது. இனியும் காலதாமதம் செய்யாமல் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்கவருகிற பார்வை யாளர்கள் விடுதியில் தங்குவது மிக அதிகமாக இருக்கிறது. மாமன்ற உறுப்பினர்களின் துணையோடு ஒத்துழைப்போடு இதற்கு ஒரு பரிகாரம் தேடினால் நல்லது என்று நினைக்கிறேன். எங்கே பார்த்தாலும் ஒரே கூட்டமாக இருக்கிறது, ஒரு சில சட்டமன்ற உறுப்பினர்களின் அறைகளைப் பார்த்தால் இட நெருக்கடி மிக அதிகமாக இருக்கிறது. இதற்கெல்லாம் நல்ல தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற விடுதியிலே ரிசப்ஷனிஸ்டுகளாகப் பணியாற்றுகிற வர்கள் 10, 12 ஆண்டுகாலமாகப் பணியாற்றியும் கூட எந்தவிதமான புரமோஷனும் இல்லாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கும் மற்றவர்களைப் போல் பதவி உயர்வு கிடைப்ப தற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினர்கள் நல்ல முறையிலே பணியாற்ற வேண்டுமானால் ஊராட்சி ஒன்றியத் தலைவர் களுக்குக்கூட கிளார்க் கொடுக்கப்படுகிறது. ஒரு சட்டமன்றத் தொகுதி என்று சொன்னாலே இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள்



வருகின்றன, ஒரு நகரசபையும்கூட வருகிறது. ஆகவே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு எழுத்தர் கொடுத்தால் நல்லதாக இருக்கும். தனியாகக் கொடுக்க வேண்டுமென்றுகூட நான் கேட்கவில்லை. ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களோடு சேர்த்து அங்கே போய் அவர்களுடைய பணியைப் பயன்படுத்திக்கொள்கிற முறையிலே, தொகுதிக்குச் செய்யவேண்டிய பணிகளை முறையாக—ஏனென்றால் நூற்றுக் கணக்கான கடிதங்கள் வருகின்றன, அவற்றிற்கு பதில் எழுத வேண்டும்—செய்வதற்கு ஏற்ற முறையிலே எழுத்தர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்களுக்கு எழுத்தர்கள் கொடுப்பது மிக முக்கியமானது. அருள்கூர்ந்து யோசித்துப் பார்த்து இந்தக் கூட்டத் தொடரிலேயே இன்றைய தினமே ஒரு அறிவிப்புச் செய்வார்களானால் மெத்த துணை யாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது ஊராட்சி ஒன்றியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள் இல்லாத காரணத்தால் ஆலோசனைக் குழுக்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்தக் குழுக்களிலே மக்களுடைய பிரதிநிதிகள் ஆக சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற காரணத்தால் அந்தக் குழுக்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் இயங்கச் செய்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் என்ற மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஆலோசனைக் கூடங் களாகவே இருந்துவருகின்றன, அதிலே எடுக்கப்படுகிற முடிவு களின்மீது நடவடிக்கை எடுக்கிற முறையிலே அதை இன்னும் சற்று உபயோகமாக ஏற்படுத்துவதற்கான முறைகளை அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகின்ற நாட்களிலே குறிப் பாக ஊழியர்கள் காலை 8 மணிக்கு அலுவலகத்திற்கு வர வேண்டியிருக்கிறது. அவர்கள் வீடு சென்றடைவதற்கு இரவு 9 மணி ஆகிறது. ஆகவே அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற இடைப்படியை அதிகமாக்கிக் கொடுக்க வேண்டும். அதைப் போலவே சட்டமன்றத்திலே சுற்றிஇருக்கின்ற வெள்ளை உடை அணிந்த காவலர்களுக்கு 2 ரூபாய் தினப்படியாகக் கொடுக்கப் படுகிறது என்று நான் அறிகிறேன், சில நேரங்களிலே இரண்டு நேரமும் கூட சட்டமன்றம் நடைபெறுகிறது, அவர்களுக்குக் கொடுக்கப்படுவது மிகமிகக் குறைவு. குறைந்தபட்சம் 5 ரூபாயாவது கொடுக்கவேண்டும். அதைப்போலவே அவர் களுக்கு உடுப்புகள் 2 ஆண்டுக்கு ஒரு முறை கொடுக்கப்படு கிறது, அதுவும் சிலருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது, சிலருக்குக் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. 1979-80 ஆம் ஆண்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. அவர்களுக்கு அதிகமான படியும் உடுப்புகளும் கொடுப்பதற்கான முயற்சிகளை அரசு செய்யவேண்டுமென்று

கேட்டுக்கொண்டு பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி இர்த மன்றத்திலே பல ஆண்டுகளாக எடுத்துச் சொல்லிவந்தாலும், ஏதோ சொல்கிறார்கள் கேட்கிறோம் என்ற முறையில் இல்லாது நல்ல நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஓய்வுகால ஊதியங்களைப்பற்றி ஒன்றை குறிப்பிடவிரும்புகிறேன். நாட்டின் விடுதலைக்காக போராடிய அரசியல் தியாகிகளுக்கு இந்த அரசாங்கம் கொடுத்து வருகின்ற ஓய்வூதியம் குறைவாக இருக்கிறது. இதற்கு முன்பு பேசுகின்றபோதே சொன்னேன், வருமான அடிப்படையில் இல்லாமல், வருமானம் எவ்வளவு இருந்தாலும்கூட அவர்களுக்கு அதிகமாக ஓய்வூதியம் கொடுக்கப்படவேண்டும். அரசியல் தியாகிகளுக்கு அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவருக்காவது கட்டாய வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சிறப்பு வாய்ந்த தமிழ்நாடு சட்டப் பேரவைப் பற்றி அதனுடைய பெருமைபற்றி, நாம் ஏராளமாகப் பேசியிருக்கிறோம். ஜனநாயகத்தை விரிவுபடுத்தவும் பலப்படுத்தவும் இந்த மன்றம் பயன்படவேண்டுமென்ற முறையிலே இந்த மானியக் கோரிக்கை சிந்திக்கப் படவேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பட்ஜெட் கூட்டம் தவிர, ஆண்டுக்கு 3 முறைகள் கூட்டுவதற்கு நாம் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஆண்டில் குறைந்த பட்சம் 120 நாட்கள் கூடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இந்தப் பேரவையிலே சிலசமயங்களிலே உணர்ச்சி ஏற்பட்டு சலசலப்பு ஏற்படுவது இயற்கை. அதைப் பொருட்படுத்தலாகாது. மக்களினுடைய உண்மையான தன்மைகளை, உணர்ச்சிகளை, அவர்களுடைய உரிமைகளை, அவர்களுடைய கோரிக்கைகளைப் பிரதிபலிக்கும் சபையாக இந்தச் சபையை உருவாக்க வேண்டும். அந்த முறையில் உறுப்பினர்களின் கருத்துக்களை அறிவதற்கு நம்முடைய அமைச்சரவை முயற்சி செய்ய வேண்டும். அந்த முறையில் சபை கூடுகின்ற நாட்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டரை ஆண்டுக் காலத்திலே சபையின் நடவடிக்கைகளில் முழுவதும் இன்று தமிழ் சிறந்த ஆதிக்கம் வகிக்கிறது என்பதைப் பெருமையோடு பார்க்கிறோம். இன்னும் சிறப்பான முறையில் கடிதப்போக்குவரத்து உட்பட அத்தனையும் தமிழில் வருவதற்குச் சிறந்த முயற்சிகளைத் துறை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேள்வி-பதில் என்று வருகின்ற சீட்டை பார்க்கும்பொழுது ஆச்சரியமாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான வடிகட்டும் முறையில் வைத்து அங்கீகரிப்பது என்ற முறையை கைவிட



வேண்டும். துறையிலிருப்பவர்கள், தமிழ்நாட்டில் பொது முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியா என்றுதான் பிரதானமாகப் பார்க்க வேண்டுமே தவிர, ஏதோ ஓட்டப் பந்தயத்திற்கு வைக்கப்படக் கூடிய பலவிதமான சோதனைகளைப்போல வைக்கக்கூடாது. அந்தக் கேள்விகளை எவ்வளவு விரைவிலே எடுப்பதற்கு முயற்சி செய்கிறோமோ அந்த அளவிற்கு ஆளுங் கட்சியிலே இருப்பவர்களுக்கும், எதிர்க்கட்சியிலே இருப்பவர்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் சிறப்பு வாய்ந்த பணியாக 99 சதவீதம் இருக்கும் என்பதை நாட்டில் உள்ள அத்தனைபேர்களும், பாராளுமன்ற ஜனநாயகத்தை விரும்புகின்றவர்கள் அத்தனைபேர்களும் உணர்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்வே, கேள்வி—பதில் பகுதியை பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுககொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திற்குப் புதியதாகக் கட்டிடம் கட்டப்படவேண்டுமென்ற எழுச்சி கடந்த பத்தாண்டுகாலமாக விவாதிக்கப்பட்டு வருவதை நான் பார்க்கிறேன். அதைக் கட்டுங்கள். அதற்கு மத்தியிலே நான் சொல்வதெல்லாம், இந்தச் சட்டமன்றத் துறைக்குப் பக்கத்தில் இருக்கின்ற பகுதிகளில் வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் இருந்தால் அவர்களுக்கு வேறு கட்டிடத்தைப் பார்த்து, இதை விஸ்தரிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

லைப்ரரி, ரீடிங் ரூம், டஞ்சன் மாதிரி இருக்கிறது. அதில் சேர்ந்தாற்போல் பத்து சட்டமன்ற உறுப்பினர்கள் அமர்ந்து படிப்பதற்கான வசதி கிடையாது. ஆகவே அதை விஸ்தரிப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கைகள் விவாதத்தின்பொழுது கிட்டத்தட்ட தினசரி இரண்டரை மணி, மூன்று மணி வரையில் கூட்டம் நடைபெறுகிறது. அந்த நேரத்தில் பக்கத்தில் சரியான கான்டீன் வசதி இருந்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் போய்ச் சாப்பிடுவதற்கு உதவியாக இருக்கும். அந்த வசதியைச் செய்து கொடுத்தால் எத்தனை மணி நேரம் வேண்டுமென்றாலும் இங்கே உட்காருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, அதற்காகச் சில வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே நண்பர் டாக்டர் சமரசம் அவர்கள்கூடச் சொன்னார்கள். எதிர்த்தரப்பிலே இருக்கின்ற அனைவரும் சொன்னார்கள். வருகின்ற பார்வையாளர்கள், நம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கின்ற வாக்காளப் பெருமக்கள்தான் பார்வையாளர்களாக வருகிறார்கள். வெளியிலே ஆயிரக் கணக்கானவர்கள் காத்துக்கொண்டு நிற்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கான இட வசதி இல்லை. அவர்களை நாம் போய்ப் பார்ப்பதற்கான ஒரு இடம் இல்லை. அவர்களைக்

[திரு. என். வரதராஜன்] [1980 ஜூலை 29

காவலர்களின் தடையை மீறி அழைத்து வரவும் முடியவில்லை.
இது ஒரு சிக்கலான பிரச்னையாக இருக்கிறது. ஆகவே,
அதற்குச் சிறந்த ஏற்பாடுகளை நீங்கள் செய்து கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றத்தில் இருக்கின்ற கட்சிகளுக்கு சட்டமன்ற
விடுதியில் அலுவலகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்
களுக்குத் தொலை பேசி வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.
அதைப்போல அங்கே சிப்பந்திகள் இருக்கிறார்கள். அவர்கள்
அலுவலக வேலைகளைத்தான் செய்கிறார்கள். அவர்களுக்கும்
பஸ் பாஸ் கொடுக்க வேண்டும்.

இங்கேயே சட்டமன்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்குச்
சிறிய அலுவலகங்கள் கொடுக்கப்பட வேண்டும். ஒரு கடுமை
யான பிரச்னை வருகிறது என்றால், அதைப்பற்றிப் பேசி
விவாதிப்பதற்கு இடம் வேண்டும். முதலமைச்சரவர்களோ, முன்ன
வரவர்களோ சில யோசனைகளை வைக்கின்ற பொழுது அதைப்
பற்றி ஆலோசித்துப் பதில் சொல்ல வேண்டுமென்றால் சபை
யிலே உட்கார்ந்து பல நோங்களில் பேசுகின்ற காட்சியைப்
பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதைப்பற்றி தனியாக உட்
கார்ந்து விவாதித்து நீங்கள் சொல்லும் கருத்துக்களை ஏற்றுக்
கொள்ளவோ, அல்லது அவர்களுக்குத் தேவைப்படுகின்ற கருத்
துக்களைச் சொல்லவோ வேண்டுமென்றால் லாபியிலே உட்
கார்ந்து பிரச்னைகளைப் பேசிவிட முடியாது. ஆகவே, அதற்கு
வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

[ மாலை 6.10 ]

அடுத்துச் சொல்ல வேண்டியது, நம்மைப் பாதுகாத்து,
நமக்கு உதவி செய்யும்படியான சிப்பந்திகளின் சிறிய
கோரிக்கை. ஏற்கெனவே இந்த மன்றத்தில் ஏற்கெனவே
யிருந்த நிதியமைச்சரவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள், அவர்
களுக்குப் பஸ் பாஸ் வழங்குவதாக. அதை நாம் நிறைவேற்ற
வேண்டும். இரண்டு ரூபாய் தினப்படி இருக்கிறது. திரு.
சித்தன் அவர்கள்கூடக் கேட்டுக்கொண்டார்கள், அதை ஐந்து
ரூபாயாக ஆக்க வேண்டும், எவ்வளவோ படிகள் உயர்த்தப்
படுவதைப்போல, இவர்களுடைய படிகளையும் உயர்த்த
வேண்டும். அவர்கள் காலையில் 8 மணிக்கே வருகிறார்கள்.
அப்படிப்பட்ட காவலர் போன்றவர்களுக்கு நம்முடைய உதவி
அதிகமாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.

நாம் அமைக்கின்ற குழுக்களைப் பொறுத்த வரையில்,
இன்னும் ஒன்றிரண்டு கமிட்டிகளை அமைக்க வேண்டும்.
பெட்டிஷன் கமிட்டி என்பது இல்லை. ஏற்கெனவே ஏற்றுக்
கொள்ளப்பட்டு அதை நடைமுறைக்குக் கொண்டு
வராமல் இருக்கிறோம். அதில் என்ன தயக்கம், என்ன
சிரமம் என்பதைப் பார்த்து, உடனடியாக அந்தக் கமிட்டியை



[திரு. என். வரதராஜன்] [1980 ஜூலை 29

ஏற்படுத்துவது அரசுக்கு உதவி செய்யும். புதிதாக வேறு பல
நாடுகளைப் போலக் கொண்டு வராவிட்டாலும், பாராளுமன்றத்
திலே ஒவ்வொரு அமைச்சகத் துறைக்கும் ஆலோசனைக்குழு
அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் இராஜ்ய சபை உறுப்பினர்
களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள்.
ஆகவே, இங்கே பேரவை, மேலவை உறுப்பினர்களைக் கொண்ட
ஆலோசனைக் குழுக்களை அமைத்து, ஒவ்வொரு அமைச்சுத்
துறைக்கும் அமைத்தால் நல்லது. இப்போது மானியக்
கோரிக்கை வருகின்றபொழுதுதான் நாம் சில விஷயங்களைப்
புரிந்துகொள்ள முடிகிறது. அப்படியில்லாமல் இம்மாதிரி
கமிட்டிகள் இருந்தால் அந்தத் துறையைச் சார்ந்திருக்கும்
அலுவலர்களின் ஆலோசனையை நாம் பெற்றுக்கொள்ள முடியும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட் கூட்டத்தினுடைய ஆரம்பத்திலேயே
நமது நிதிச் செயலாளர் பேரவைத் தலைவருடைய தலைமை
யிலே இந்த பட்ஜெட்டைப் பற்றி ஒரு விளக்க உரை சமர்ப்
பித்தார்கள். அது என்னை பொறுத்த வரையில் நன்றாக
இருந்தது. நான் நன்கு புரிந்து கொண்டேன். அதே போல்
அலுவலர்களுக்கும், அமைச்சர்களுக்கும் இடையிலே, இன்னும்
நல்ல ஆலோசனை பெற கருத்துக்களைப் பரிமாற, உங்களுக்கு
உதவி செய்ய அந்த ஆலோசனை குழுக்கள் இருக்கும் என்று நான்
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற விடுதியிலே இருக்கும் பல நல்ல விஷயங்களை
திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் இங்கே நகைச்சுவை
யோடு எடுத்துச் சொன்னார்கள். அது நகைச்சுவையாக இருந்
தாலும் மேலோட்டமாக அதைக் கருதக்கூடாது. அவர்
சொன்ன குறைகளை, சிரமங்களைத் தீர்ப்பதற்கு நம்முடைய
அவை முன்னவர் முயற்சி மேற்கொள்ளவேண்டும். அங்கு
வேலை செய்யும் சிப்பந்திகளுடைய நலன்களை கவனிக்க
வேண்டும். பொதுப்பணித் துறையிலே இருக்கும்படியான
மின்சார ஊழியர்கள், விப்டிலே வேலை செய்கிறார்கள். அவர்
களுக்குப் பல ஆண்டுகளாகச் சம்பளம் உயர்வு இல்லை
யென்று சொல்லி கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய
தேவைகளைக் கவனிக்க வேண்டும்.

இப்பொழுது ஓல்ட் ஹாஸ்டலை அபிவிருத்தி செய்ய, கட்டிட
வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள், நம்முறைய
சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் தங்களுக்கு வீடுகள் வேண்டு
மென்று கேடகிறார்கள். அந்த ஹாஸ்டல்களுடைய இடங்களைக்
கூட அவர்கள் வீடாகப் பயன்படுத்தச் செய்தால் மிக
நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்சி அலுவலகம் வைத்திருக்கும் இடத்தில் லைட் இல்லை,
கவனிக்கும் சிப்பந்திகள் இல்லை. பராமரிப்பு இல்லை. ஏன்,
கவனிப்பதில்லை என்று புரியவில்லை ஆகவே, நீங்கள்
கவனித்து, அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டு
அமர்கிறேன்.

[1980 ஜூலை 29

திரு. மு. அம்பிகாபதி : சட்டமன்றம் பற்றிய இந்த மானியக் கோரிக்கையில் கம்யூனிஸ்ட் பேரியக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா உறுப்பினர் களுக்கும் சேர்த்துதானே ?

திரு. மு. அம்பிகாபதி : ஆம், சட்டமன்ற கட்சி அலுவலகங் களுக்கு 5 நாட்களுக்குள் ஃபோன் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு தலைவர் அவர்களும் நிதியமைச்சர் அவர்களும் உத்தரவிட வேண்டும். 5 நாட்களுக்குள் அதை அமுல்படுத்த வேண்டும்.

அடுத்தது, அங்கத்தினர்களுக்காக வைக்கப்பட்டுள்ள ஃபோன்கள் 2 நாட்களுக்குள் சரியாக வேலை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசியாக திரு அம்பிகாபதி குறிப்பிட்ட பகுதிகளை நீக்கும்படி உத்தரவிடுகி றேன்.

திரு. மு. அம்பிகாபதி: அடுத்தபடியாக, இங்குள்ள காவலர்களுக்கு டிரஸ் அலவன்ஸ் கொடுக்கப்படுவதில்லை. பிப்ரவரியிலே வேலை செய்ததற்கு இன்னும் பாக்கி இருக்கிறது. ரூ. 2 படி கொடுக்கப் படுகிறது. அதைக்கொண்டு டீ கூட சாப்பிட முடியாது. குறைந்தபட்சம் ரூ. 10ஆவது அளிக்கவேண்டும்.

இங்கே பியூன்கள் டெம்பரரியாக வேலை செய்கின்றார்கள், அவர்கள் 10 வருஷம், 15 வருஷம் என்று கூட வேலை செய் கிறார்கள், டெம்பரரியாக, கிழவராகக்கூட ஆகி விட்டார்கள். அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் டெல்லியிலே பணியாற்றி இருக்கிறார்கள். அங்கே உள்ள உணவு விடுதி யிலே டெல்லிக்குச் செல்லுகிற எம்.எல்.ஏக்கள், மந்திரிகள் தங்குகிற அந்த இடத்திலேயே சப்சிடி கொடுக்கப்பட்டு நல்ல அருமையான உணவு கொடுக்கப்படுகிறது. அங்கே தமிழ்நாடு அவுசிலே காலையிலேயும், மாலையிலேயும் ஆர்டர் கொடுத்தால்

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1980 ஜூலை 29] [திரு. மு. அம்பிகாபதி]

நல்ல சாப்பாடு கிடைக்கிறது. அதைப்போல அரசு சப்சிடி கொடுத்து இங்கே உணவு விடுதியை ஆரம்பிக்க வேண்டும். அதுவும் 3 மாத காலத்தில் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல எம்.எல்.ஏ. க்களைப் போல, அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்கள் சென்றால் டெல்லி தமிழ்நாடு அவுசில் அவர்களுக்கும் வசதிகள் செய்துதரவேண்டும்.

அடுத்து இந்த ரூமிலே இருக்கக்கூடிய தலையணை பெட்ஷிட் போன்றவைகளுக்குக் கையெழுத்து வாங்குகிறார்கள். ஜெயிலில் போனால்கூட எங்களிடம் கையெழுத்து வாங்குவதில்லை. ஆனால் இங்கே பீரோ, கப்போர்டு உட்பட கையெழுத்து வாங்கு கிறார்கள். நாங்கள் என்ன இவைகளை எல்லாம் தூக்கிக் கொண்டா போகப் போகிறோம். இதைத் தாங்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சட்டமன்ற நிகழ்ச்சிகளை தொலைகாட்சியில் டெலி விஷனில்—தொடர்ச்சியாகக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) அதை 6 மாதத்திற்குள் செய்து தரவேண்டும்.

அடுத்து இந்த ஓய்வு ஊதியம் பாண்டிச்சேரியில் அதிகம் கிடைப்பதாகச் சொல்லுகிறார்கள். அதைப் பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து இந்த மைக். இதிலே நாங்கள் கொஞ்சம் பிற்படுத்தப் பட்டவர்களாக இருக்கிறோம். முன் வரிசையிலே இருக்கிற வர்களுக்கு அழகான மைக். முதலமைச்சருக்கும் கலைஞ ருக்கும் இடையிலே உள்ள மைக்கு அழகாக இருக்கிறது. நான் கொஞ்சம் அதிகமான சத்தம் போட்ட காரணத்தால் எனக்குக் கொஞ்சம் நல்ல மைக் கிடைத்திருக்கிறது. எனக்குப் பின்னாலே இருப்பவர்கள் மோஸ்ட் பேக்வேர்டு ஆக இருக்கிறார்கள். ஆகவே அதைப்போன்ற ஒலி பெருக்கிகளை எல்லா இடத்தி லும் அமைக்கவேண்டும் என்று, அதுவும் ஒரு மாத காலத்திற்குள் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

அதே போன்று பல்வேறு கமிட்டிகள் போடப்பட்டுள்ளன. பெட்டிஷன் கமிட்டி ஒன்றைப் புதிதாக போட வேண்டும். எங்க ளிடம் நூற்றுக் கணக்கான பெட்டிஷன்கள் வருகின்றன. அதை எந்தெந்த இலாக்காவுக்கு அனுப்புவது என்ற விபரம் எல்லாம் தெரிவதில்லை. நாங்களும் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். ஆகவே ஒரு பெட்டிஷன் கமிட்டி அமைக்க் வேண்டும். லைப்ரரி கமிட்டி அமைக்க வேண்டும். இப்படி பல்வேறு புதிய கமிட்டி களை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முன்னாலேயே புதிய சட்டமன்றத்தில் அமர்ந்தோம் என்ற
நவீன முறையில் சட்டமன்றத்தைக் கட்டித்தர வேண்டும்.
அப்போது கொடுக்கப்பட்ட உறுதிமொழி இப்போது காப்பாற்றப்
படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு கமிட்டிகள் அமைக்கப்படவேண்டும் என்று கேட்
டோம். பெட்டிஷன் கமிட்டி, ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ், ஷெட்
யூல்ட் டிரைப்ஸ் கமிட்டிகள் என்று இரண்டு கமிட்டிகள் ரூல்ஸ்
கமிட்டியில் சொல்லப்பட்டு, அந்த ரூல்ஸ் கூட ப்ரேம் செய்த
பிறகு, ரூல்சில் இடம் பெற்ற பிறகு ஏதோ கைவிட்டு விட்டதாகத்
தெரிகிறது. அதற்கு என்ன காரணம்? யாரோ சொன்னார்
களாம், பெட்டிஷன் கமிட்டி என்று இருந்தால், மக்கள் சட்ட
மன்றத்திற்கு நேரடியாக பெட்டிஷனை எடுத்துக்கொண்டு வந்து
விடுவார்களாம், ஆகவே, சட்டமன்றத்தை நடத்த முடியாது
என்று சொன்னதாக அறிகிறேன். பாராளுமன்றத்தில்
பெட்டிஷன் கமிட்டி இருக்கிறது, மக்கள் அங்கே படை எடுத்தா
செல்கிறார்கள்? மற்ற பல மாநிலங்களில் பெட்டிஷன் கமிட்டி
இருக்கிறது அங்கே சட்டமன்றத்தை நடத்தவிடாமல் மக்கள்
வந்து இருக்கிறார்களா?

ஜனநாயகத் தத்துவத்தின் அடிப்படையில் சட்டமன்ற
உறுப்பினர்கள் சிறப்பாக காரியங்களை உணர்ந்து பணியாற்ற
வேண்டுமானால் அதற்கான வசதி வாய்ப்புகளை பெருக்கித்
தரவேண்டும். பெட்டிஷன் கமிட்டி, ஷெட்யூல்டு காஸ்ட் அண்ட்
ஷெட்யூல்டு ட்ரைப் கமிட்டி ஆகிய கமிட்டிகள் அமைக்கப்பட
வேண்டுமென்று சொல்லி, அதற்கு உறுதிமொழியும் தந்து,
ரூல்ஸ் ஃப்ரேம் செய்த பிறகு ஏன் கைவிடப்பட்டது என்று
அமைச்சரவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

கேரளத்தில் இன்றைக்கு சப்ஜெக்ட் கமிட்டி என்ற அளவில்
ஏறத்தாழ 10 கமிட்டிகள் அங்கே ஏற்படுத்தும் நிலை உருவாகி
யிருக்கிறது. ஒரு துறைக்கு ஒரு கமிட்டி என்ற அளவில்
உருவாக்கியிருக்கிறார்கள். பார்லிமென்டில் அந்தந்தத்
துறைக்கு அதாவது ஒரு அமைச்சருக்கு வருகிற
டிபார்ட்மென்டுக்கு ஒரு கன்சல்டேட்டு கமிட்டி இருக்கிறது,
அதேமாதிரி நம்முடைய மாநிலத்திலும் ஏன் செய்யக்கூடாது?

கட்டிட வசதியைப் பார்த்தால் மிகவும் குறைவாக இருக்
கிறது. ஜனநாயக நினைவு மண்டபமாக இங்கே ஒரு
பெரிய கட்டிடத்தைக் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். பக்கத்
தில் இருக்கிற கேரளத்திலே கூட மிகப் பெரிய அளவில், 5
அல்லது 6 கோடி ரூபாய் செலவில் சட்டமன்ற கட்டிடத்தைக்
கட்ட திட்டமிட்டிருக்கிறார்கள். அந்த முயற்சியிலே ஈடு
பட்டிருக்கிறார்கள். தமிழகம் எல்லா காரியங்களுக்கும் மற்ற
மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கிறது. இந்த காரியத்தில்
மட்டும் ஏன் பின்னோடியாக இருக்க வேண்டும்? இந்த
விவகாரத்தில் நாம் ஏன் ஆர்தடாக்சாக இருக்க வேண்டும்? நாம்
பணியாற்றுவதற்கு ஏற்ற வகையில் நல்ல முறையில் ஒரு



கட்டிடத்தை விரைவிலே கட்ட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இங்கே இருக்கிற ஊழியர்கள், 'வாச் அண்ட் வார்டு' இருக்கி
றார்களே, அவர்களுக்கு அளிக்கின்ற தினப்படியை உயர்த்த
வேண்டும். அதைப்போல சட்டமன்றம் கூடுமபோது இந்த
சட்டமன்றத் துறையிலே பணியாற்றக்கூடிய அலுவலர்கள்
காலையில் 7, 8 மணிக்கு வரவேண்டியிருக்கிறது இரவு
வீட்டுக்குப் போகும்போது 9 மணி, 10 மணி ஆகிவிடுகிறது.
மற்றத் துறைகளில் பணியாற்றக்கூடியவர்களைப்போல் இவர்கள்
பணியாற்ற முடியாது. மணிக்கணக்கைப்பார்த்து இவர்கள்
பணியாற்ற முடியாது. சட்டமன்றம் நடைபெறும் காலத்தில்
இவர்களுக்கு இலவச பஸ் பாஸ் கொடுக்கப்படும் என்று உறுதி
மொழி கொடுக்கப்பட்டது. அதுவும் காற்றில் பறந்துவிட்டது
அது ஏன் என்று தெரியவில்லை?

அதைப்போல, சட்டமன்ற விடுதியில் கவுண்டர் கிளார்க்
இருக்கிறார்கள், 15, 16 ஆண்டுகளாகியும் அவர்கள்
கவுண்டர் கிளார்க்காகவே இருக்கிறார்கள். (once a counter
clerk is always a counter clerk) இந்த
நிலையை மாற்றி, அவர்களுடைய பிரச்னையை மனிதாபிமான
அடிப்படையில் அணுகி, அவர்களுக்கும் பதவி, உயர்வு தர
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே சொல்ல விரும்புகிறேன்.
நம்முடைய ஆஸ்டல் ( It is more like no mans land )
யார் வேண்டுமானாலும் வரலாம், போகலாம் என்ற முறையில்
இருக்கிறது. பத்திரிகையிலே கூட தர்மசாலா என்று எழுதி
யிருக்கிறார்கள். அதை கவனிக்க வேண்டும். இந்த சட்ட
மன்றத்தின் தனித் தன்மை பாதுகாக்கப்பட வேண்டும். இன்டிப்
பென்டன்ஸ் ஆஃப் லெஜிஸ்லேச்சர் நிலைநிறுத்தப்பட வேண்டும்
என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.
நன்றி, வணக்கம்.

திரு. சட்டநாத கரையாளர் : மாண்புமிகு தலைவரவர்
களே, ஒரு நாட்டின் சுதந்திர பகுதியாக 'ஜுடிஷியல் இன்டி
பென்டன்ஸ்' என்று சொல்வார்களே. அது இருப்பதா
லெஜிஸ்லேச்சருடைய, சட்டமன்றத்தினுடைய அந்த சுத
திரம் போற்றி பாதுகாக்கப்பட வேண்டும். அந்த வகையிலே
இந்தத் துறை, இந்தத் துறையினுடைய நிர்வாகப் பிரிவுக
எந்தெந்த முறையிலே செயலாற்றுகின்றன என்பதைப்பற்
ஒருசில விஷயங்களை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்பு
றேன்.

1961 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் இது ஒரு தன
பிரிவாக, தனி இலாகாவாக பணியாற்றத் தொடங்கியது. அதற்
முன்பு பப்ளிக் எலெக்‌ஷனை சேர்ந்த ஒரு பிரிவாகத்தான் இ
இருந்தது. ஆனால் இன்றும் எந்த அளவுக்கு சுதந்திரம

அடுத்து எங்களுடைய ஹாஸ்டலைக் கட்டிய என்ஜினியர் யார் என்றே தெரியவில்லை. அதைத் தெற்குப் பார்த்து கட்டியிருக்கக் கூடாதா? அதுவும் தற்போது இடிந்து விழுந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் காலத்தில் கட்டிய பழைய ஹாஸ்டல் பாத்ரூம் அட்டாச்சாக இருக்கிறது. ஆனால் இந்த ஹாஸ்டலில் பாத்ரூம் அட்டாச்சாக இல்லாமல் கட்டிய அந்த மாமேதை யாரோ? இரண்டு ரூம்களை இடித்து விட்டு ஒரு ரூமாக ஆக்கி, எம்.பிக்களுக்கு டெல்லியிலே கொடுப்பதைப் போல வாடகை இல்லாமல் இருக்கச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எம்.பிக்களுக்கு வாடகை உண்டு.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, புதிய சட்ட மன்றக் கட்டிடம் ஒன்றை கடற்கரை சாலையின் அருகே கட்டுவதற்கான திட்டமிட வேண்டும். தற்போது இருக்கிற இந்தக் கட்டிடத்தை வேண்டுமானால் ஒரு சினிமா தியேட்டர் மாதிரி சட்டமன்ற உறுப்பினர்கள் உபயோகப்படுத்துகின்ற வகையில் அமைக்க வேண்டும்.

சட்ட மன்ற, கட்சி அலுவலகத்திற்கு உடனடியாக போன் வேண்டும். உறுப்பினர்கள் விடுதியில் உடனடியாக போன் வேலை செய்ய வேண்டும். டெல்லியிலே தமிழ்நாடு ஹவுஸில் கிடைப்பது போன்ற சுவையான உணவு கிடைக்க வேண்டும். கேரளாவைப் போன்று ஒவ்வொரு இலாகாவிற்கும், எல்லா கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஒரு ''லய்சன்ஸ்'' கமிட்டி ஒன்றை ஏற்படுத்தி, அந்தந்த இலாகா பற்றிய பிரச்சினைகளை அந்த இலாகாக்களுடன் கலந்து பேசி தீர்க்க வேண்டும் என்பதைக் கூறிக்கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[மாலை 6-20]

* திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் அவை முன் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை நான் இங்கே எடுத்துரைக்க விழைகிறேன். மூன்றாவது முறையாக இந்தச் சட்ட மன்ற மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறவன் நான். கடந்த இரண்டு முறையாக பல்வேறு கருத்துக்களை இங்கே வலியுறுத்தியும், அந்தக் கருத்துக்கள் நடைமுறைக்கு வராமல் இருப்பதைப் பார்க்கிற போது *** காரியங்களைச் செய்ய வேண்டும் என்று உணரவில்லையோ என்னவோ எனக்குப் புரியவில்லை.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், இந்த கட்டிட வசதி பற்றி இந்த மானியக் கோரிக்கைகள் வருகின்ற போது மட்டும் பேச வில்லை. பல்வேறு ஒழுங்குப் பிரச்சினைகளை பல்வேறு முறையில் எழுப்பியும் அதை இங்கே தெரிவித்து இருக்கிறேன். பல உறுப்பினர்கள் அதை இங்கே எடுத்துரைத்து இருந்தாலும் கூட அது நடைபெற வில்லை. அங்கே 10 மாடி கட்டிடம் கட்டுகிற போது அந்தக் கட்டிடத்திற்கும் இங்கே பழைய தலைமைச் செயலக கட்டிடத்தில் இருக்கிற எல்லா இலாக்காகக்களும் எடுத்துச் செல்லப்பட்டு, அடித்தளம் முழுவதும் சட்டமன்றத் துறைக்கு விட்டு விட வேண்டும் என்ற கருத்து இருந்ததாக அறிகிறேன். ஆனால் இன்று வரைக்கும் அது நடைமுறைப் படுத்தப் பட வில்லை.

இங்கே லைப்ரரி பற்றிச் சொன்னார்கள். நானும் வருஷா வருஷம் அதைப் பற்றி எடுத்துச் சொல்லி வருகிறேன். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க முடிந்தால் எடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய சட்ட மன்ற நூலகம் இங்கே மட்டும் அல்ல, இன்னும் எங்கெங்கோ வியாபித்து இருக்கிறது. வராண்டாவில் லைபரரி, சட்டமன்ற விடுதியில் லைப்ரரி, ராஜாஜி ஹாலுக்குக் கீழே லைப்ரரி என்று எல்லா இடத்திலும் லைப்ரரி இடம் பெற்று இருக்கிறது. லைப்ரரி என்பது ஒரு நல்ல முறையில் உறுப்பினர்கள் உட்கார்ந்து படித்து, பார்த்து, அதனை உணர்ந்து, அவற்றை மக்களுக்கு பயன்படுகிற வகையில் எடுத்துச் சொல்லி, அந்த வகையில் பயன்படவேண்டும் என்று இருக்கவேண்டும். தற்போது நிலைமை அப்படியில்லை என்பதை வேதனையோடு தெரிவித்து கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமை செயலகத்திற்கு வந்தால், சட்டமன்றத்திற்கு வந்தால், உட்கார்ந்து பேசுவதற்கு, எழுதுவதற்கு இடம் இருக்கிறதா என்றால் இல்லை. டெஸ்க் ஓர்க் செய்வதற்கு இங்கே இடம் இல்லை. அறையிலும் எழுத முடியவில்லை. இங்கே வந்தாலும் எழுதமுடியவில்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வந்தால் அவர்கள் உட்கார்ந்து எழுதுவதற்கு வசதியான வகையில் ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே இருக்கிற இட நெருக்கடியை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும். கடந்த முறை சட்டமன்றத் துறை மானியக்கோரிக்கை மீது பேசுகிறபோது மாண்புமிகு அப்போதைய அவை முன்னவர் ஒரு உறுதிமொழி தந்தார்கள். இந்தச் சட்டமன்றதிற்குப் புதிதாக கட்டிடம் கட்டப்படும் என்ற முறையில் சொன்னார்கள். அது என்ன காற்றில் பறந்து போய் விட்டதோ என்னவோ தெரியவில்லை. இந்த முறையாவது அது வந்தால் நாங்கள் வரவேற்போம். இந்தச் சர்க்கார் முன்பிருந்த சர்க்காராக இருக்கிற காரணத்தால் இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிந்து போவதற்கு

மதுரையிலே கூட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அப்போது தான் தெற்கே இருக்கக்கூடிய மக்களுக்கு சட்டமன்றத்தைப் பார்த்து புரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பதைக் கூறிக்கொண்டு அவ்வாறு அவையை மதுரையம்பதியிலே கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று தலைவரவர்களிடம் பணிவோடு வேண்டிக்கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவை தலைவரவர்களே இந்த மானியத்தின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லி, நான் முடித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் சட்டமன்றக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. நம்மால் வாக்களிக்கப் பெற்று தேர்ந்தெடுக்கப் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களை சட்டமன்றத்திலே என்ன பேசுகிறார்கள். சட்டமன்ற நிகழ்ச்சிகள் எப்படி நடைபெறுகின்றன என்றெல்லாம் மிக உன்னிப்பாக கவனிக்கிற சூழ்நிலையிலே வாக்காளப் பெருமக்கள் இருக்கிறார்கள்.

அதனால் இந்த நேரத்தில் நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சிகளிலே கூட கேள்வி நேரங்கள் அல்லது கவன ஈர்ப்பு தீர்மானங்களை எடுத்துக்கொள்வதில், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் ஒன்று நான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இருப்பதைப் போன்ற விதிகளை எல்லாம் கூட நீங்கள் மாற்றியாக வேண்டிய அவசியத்திலே இருக்கிறீர்கள் என்பதை நான் மெத்தப்பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதேபோன்று, கேள்விக்கான பதில் 40 நாளிலேதான் வரும் என்பதையும் மாற்றி, சீக்கிரமாக கொண்டு வரவேண்டிய அவசியத்தில் இருக்கிறீர்கள்.

அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கிற கேள்விகள் சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே வரவேண்டும். போன முறை அந்தக் கேள்விளுக்கான பதில்களை தனியாக புத்தகமாக அச்சடித்துக்கொடுத்துவிட்டார்கள். அப்படி இல்லாமல் சட்டமன்றக் கூட்டத்திலேயே அவைகள் கொண்டுவரப்பட வேண்டும். அப்படி மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று தொகுதியில் நடைபெறுகிற அரசாங்க விழாக்களிலோ அல்லது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலந்து, கொள்கிற நிகழ்ச்சிகளிலோ அந்த தொகுதி சட்டமன்றக் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும்படியாக அவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பெற வேண்டும் என்கிற வகையில் நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும். அரசாங்கத்திர்க்கு அப்படி அவர்களை விட்டுவிட வேண்டும் என்கிற எண்ணம் இல்லாவிட்டாலும் கூட, சில அதிகாரிகளுக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கிற காரணத்தினால் அப்படி செயல்படாத வகையில் இருப்பதை மாற்றுவதற்கு அரசாங்கம் உத்தரவு இட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்ந்து எடுக்கப் பெற்று வருபவர்கள் மிக சாதாரணமான குடும்பத்திலிருந்து கூட வருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் என்றாலே வசதி பெற்றவர்கள் என்று சொல்ல முடியாது. சட்டமன்ற உறுப்பினர்களைத் தேடிக் கொண்டு, தினசரி நூற்றுக் கணக்கான நபர்கள் வருகிறார்கள். அவர்கள் வந்து பார்க்கிற ஒரு சூழ்நிலையில் சட்டமன்ற உறுப்பினருடைய இடம் ஓரளவிற்கு அவர்களால் மதிக்கத் தக்கதாக இருக்க வேண்டும். நல்ல வசதி படைத்ததாக இல்லாவிட்டாலும் கூட. சாதாரணமாகவே ஒரு நல்ல இடத்தில், ஓரளவு வசதி படைத்த வீடாக அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கட்டித்தர வேண்டும் அப்படி எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வீடு கட்டித்தர முடியுமா! என்று கேட்கலாம். அதற்கான முயற்சியை முதலிலே சென்னை மாநகரிலே அந்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டித்தருகிற வகையில் முதன் முதலாக எடுத்துக்கொண்டு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தொலைபேசியைப் பற்றி சொன்னார்கள் அதையும் நிறைவேற்றித்தர வேண்டும் என்று சொல்வதோடு பிரச்னையை நிறுத்திக்கொள்கிறேன். நிறைய உறுப்பினர்கள் அதைப்பற்றி பேசியிருக்கிறார்கள். அதனால், தனியாக அதில் வற்புறுத்த ஒன்றுமில்லை. அதை அவசியமாக செய்துதர வேண்டும் என்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. சித்தன் அவர்கள் கூட கேட்டார்கள். அது மிக நியாயமான கோரிக்கை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எழுத்தர்கள் தனியாக வேண்டும். சம்பந்தப்பட்ட மனுக்கள், கோரிக்கைகள் ஆகியவைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க, அதில் மேற்கொண்டு முயற்சி எடுக்க நிச்சயமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எழுத்தர்கள் தேவை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட ஒரு யோசனையை சொன்னார்கள். அரசாங்கத்தினுடைய செலவில் அவர்கள் நியமிக்கப்படவில்லை என்றாலும் கூட, தொகுதியிலே பல ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அதில் ஏதாவது ஒரு ஒன்றியம் எழுத்தரை தரலாம், வேறொரு ஒன்றியம் கடைநிலை ஊழியர் ஒருவரைத் தரலாம். இப்படி அந்தச் செலவுகளை வேண்டுமானால் உள்ளாட்சி மன்றங்களே ஏற்றுக் கொள்கிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மக்களுடைய குரலை எதிரொலிக்கிற வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். இங்கே நடைபெறும் நிகழ்ச்சிகள் பத்திரிக்கைகளில் அப்படியே செய்திகளாக வருவதில்லை. முழுமையாக அவைகளை வெளியிடவும் முடியாத நிலையில் அந்தந்த பத்திரிகைகளில் கட்சிக்

கேற்ப செய்திகள் வருகின்றன. ஆனாலும் அவ்வைகளிலும்
சில பத்திரிகைகள் நம்முடைய கிராமப்புற பகுதிகளுக்கே வருவது
இல்லை. பத்திரிகைகளே வராத கிராமங்கள் கூட இருக்
கின்றன. கிராம மக்கள் செய்திகளை எப்படி தெரிந்து
கொள்ள முடியும்? அதுவும் சட்டமன்றங்களில் நடக்கும் நிகழ்ச்சி
களைப் பற்றி எவ்வாறு புரிந்துக்கொள்ள முடியும்? டெலிவிஷன்
வசதி கூட சில இடங்களில்தான் இருக்கின்றது. சென்னையில்
இருக்கின்றது. மற்ற சில இடங்களில் இருக்கின்றது.

[மாலை 6.40]

ஆனால் வானொலியில் சட்டமன்ற நிகழ்ச்சிகளை மிகக்
குறைவாகவே சொல்கிறார்கள், ஆகவே அதை அதிகப்படுத்த
லாம், அதிகப்படுத்த வேண்டும்.
தில் எவ்வளவோ நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. சட்டமன்றத்
களெல்லாம் நிச்சயமாக பார்ப்பதற்கு அவ
ஏழை எளிய மக்கள் கூட விவசாயிகள் எல்லாம் மாடு ஆடு மேய்க்கிற
றார்கள். டிரான்சிஸ்டரை வைத்துக்கொண்டு ஆவலாக இருக்கி
மணிக்கு சட்டமன்ற செய்திகள் வாசிக்கிறபோது மாலை ஆறு
சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றி சொல்கிறபோது அல்லது
கேட்க ஆவலோடு இருக்கிறார்கள். அவைகளைக்
ஒதுக்கப்படுவதால் பல பேர்களை நேரம் மிக குறைவாக
களைவிடுகிறார்கள். சரிவர சொல்கிறார்கள், பல பேர்
கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதில்லை. இன்று எதிர்க்
அவர்களும் பதில் அளித்தார்கள். பேசினார்கள், முதல் அமைச்சர்
இருக்கிற நாலரைக் கோடி மக்களும் அதைக்கேட்க தமிழ்நாட்டில்
பார்கள். ஆகவே அதிகமாக நேரம் ஆவலோடு எதிர்ப்
வருடக் கணக்கில் சட்டமன்றம் ஒதுக்கப்படவேண்டும்.
அதிகமாக ஒதுக்கப்படவேண்டும். கூடுவதில்லை. எனவே நேரம்

டி.வி. யில் சட்டமன்ற நிகழ்ச்சிகளை படமாக காண்பிக்க
வில்லை என்றாலும் செய்திகளையாவது டி.வி.யில் சொல்ல
வேண்டும். இதுபற்றி மத்திய அரசுக்கு எழுத வேண்டும்.

பல்வேறு டூரிஸ்ட் ஹோம்களில் சட்டமன்ற உறுப்பினர்
களுக்கு குறைந்த வாடகையில் அறைகள் கிடைக்க தக்க
உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

மின்சார துறை பற்றி இரண்டு நாட்கள்தான் விவாதம்
நடைபெற இருக்கிறது. பல உறுப்பினர்கள் அதில் பேசியாக
வேண்டும். விவசாயிகள் பிரச்னை இருக்கிறது, ஆகவே
அதற்கு அதிகமாக நாட்கள் ஒதுக்கித்தரவேண்டும்.

ஹாஸ்டலில் உள்ள ரிஸப்ஷன் கிளார்க்ஸ் போன்று பல
ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் பல்லாண்டுகளாக





தற்காலிக பணியாளராகத்தான் வேலை செய்கிறார்கள். ஆகவே
அவர்களை நிரந்தரமாக்கவேண்டும். அவர்களுக்கு நியாயமான
ஊதியமும் கொடுக்கவேண்டும்.

இங்கே பணியாற்றுகிற காவலர்களுக்கு தினப்படியை உயர்த்த
வேண்டும். சட்டமன்ற கூட்டம் நடைபெறுகிறபோது சிற்
றுண்டி தரும்போது காபி, சிற்றுண்டி இவை காவலர்கள்,
நிருபர்கள் எல்லோருக்கும் தரவேண்டும். நாங்கள் மட்டும்
காபி, சிற்றுண்டி சாப்பிடுவது என்பது தர்மசங்கடமாக உள்ள
நிலைமை.

க்ளார்க்ஸ்-க்கு பதவி உயர்வு கொடுக்கவேண்டும், பதவி
உயர்வு இல்லாவிட்டால் செலக்ஷன் க்ரேட் என்ற வகையில்
பதவி உயர்வு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

உணவு விடுதிகளில் உணவருந்தும் நாங்கள் மிகவும் கஷ்டப்
படுகிறோம். ஆகவே பேரவைத் தலைவர் நல்லதொரு ஏற்
பாட்டை செய்யவேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்த தங்க
ளுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஹாஸ்டல் டே-க்கு நீங்கள் ஏற்பாடு செய்யவேண்
டும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், டாக்டர்
கலைஞர் அவர்கள், டாக்டர் சமரசம், துரைமுருகன் நாங்கள்
எல்லோரும் சேர்ந்து நாடகம் போடும் முறையில் ஹாஸ்டல் டே
நடத்த வேண்டும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர்.
வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கிற இந்தக்காலத்தில் ஆளும்
கட்சியைச்சேர்ந்த எங்களுக்கு இன்றைய விவாதத்திற்கு போது
மான பிரதிநிதித்துவம் கொடுக்கவில்லை. ஒரே ஒரு உறுப்பினர்
தான் பேச அனுமதிக்கப்பட்டார். என் பெயர் பேச கொடுக்க
பட்டு மறுக்கப்பட்டிருக்கிறது. அது சரியா என்பதை தாங்கள்
தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மானியக்
கோரிக்கை விவாதத்தின்போது மன்ற உறுப்பினர்கள் சட்ட
மன்ற உறுப்பினர்களுக்காக உரிமைகள், வசதிகள், வாய்ப்புகள்
ஆகியவை பற்றியெல்லாம் மிக விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கி
றார்கள். அதிலே இந்த அரசு மிக்க கவனம் செலுத்திக்
கொண்டு வருகிறது என்பதை நான் முதலில் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

சட்டமன்றம் இயங்குகிறது என்பது பரிசீலிக்க வேண்டிய நிலையில் தான் உள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிர்வாகம், நியமனம், நீதி இந்த மூன்றும் (Independence of the Legislature Administrative Independence Financial Independence) பேரவைத் தலைவராகிய உங்களுடைய பொறுப்பில் இருந்தால் தான் இந்தத் துறை சுதந்திரமாக செயலாற்ற முடியும் என்று வலியுறுத்தக் கூற விரும்புகிறேன். இந்த லெஜிஸ்லேச்சரைப் பொறுத்தமட்டில் சட்டம் இயற்றும் துறையில் தங்களுக்கு பரிபூரண அதிகாரம் உண்டு. ஆனால் நிதியைப் பொறுத்தமட்டில் எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் பலரும் கூறிய மகோளிய இருக்கிறது. பல குறைகளை நிவர்த்தி செய்ய தந்து நிதிவசதி இருக்க வேண்டும். இந்த நிதி தொகையை நிதி இலாகாவிலிருந்துதான் பெற வேண்டுமென்ற நிலை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[மாலை 6.30]

சபாநாயகராகிய தங்களுக்கு பரிபூரணமான அதிகாரம் நிதித்துறையிலே இருக்கவேண்டும் என்பதை நான் வற்புறுத்திக் கோருகிறேன். அப்படி இருந்தால்தான் இந்தத் துறையை நல்ல முறையிலே நிர்மாணம் செய்ய முடியும்.

அடுத்தபடியாக இந்தத் துறையிலே வேலை செய்யக்கூடியவர்களை நியமனம் செய்கின்ற அதிகாரம் தங்களுக்கு இல்லை என்பது எங்களுக்குத் தெரியும். இது தற்போது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பொறுப்பிலே உட்படுத்தப்பட்டுள்ளது. அது மாற்றப்பட்டு தாங்கள் நியமனம் செய்யக்கூடிய நிலையிலே இருந்தால் மேலும் சுதந்திரமாக செயலாற்ற முடியும் என்று கருதுகிறேன். இதற்காக ஸ்டாஃப் ரெக்ரூட்டிங் போர்டு என்று ஒரு போர்ட் நியமனம் செய்து அந்த அமைப்பை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

அடுத்து எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சட்டமன்றத்திலே உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய பல்வேறு குறைகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். விடுதியிலுள்ள குறைகளையும் குறிப்பிட்டார்கள். ஆனால் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது என்னவென்றால் எங்களைக்காண வருபவர்களுடைய குறைகளைக் களைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்களைக் காண்பதற்கு நூற்றுக்கணக்கான பேர்கள் வருகிறார்கள். அப்படி வரக்கூடியவர்கள் சீக்கிரத்திலே எங்களிடத்திலே தொடர்பு கொள்ளக்கூடிய நிலையிலே இல்லை. அவர்கள் வெளியே வெகுநேரம் காத்துக்கொண்டிருந்து சிலருக்கு ஒன்றோ இரண்டோ கொடுத்து விட்டு அதன் பின்னர் எங்களோடு தொடர்பு கொள்ளக்கூடிய அவலநிலையிலே இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளக்கூடிய அளவிலே ஒரு பப்ளிக் ரிலேஷன்



ஆபீசரையாவது அல்லது வேறு ஒரு அலுவலரையாவது போட வேண்டும். அவர்கள் மூலமாக, வருபவர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளக்கூடிய நிலையிலே ஏற்பாடு செய்யவேண்டும். சில தினங்களுக்கு முன்பு சுதந்திரப் போராட்டக் காலத்திலே போராடிய திரு. வாஞ்சிநாதன் ஐயர் அவர்களுடைய மகன் கங்காதரன் ஐயர் அவர்கள் என்னைக்காண வந்தார். அவ்வாறு வந்தவர்களை அவமானப்படுத்தக்கூடிய அளவிலே இங்குள்ள காவலாளிகள் விரட்டி இருக்கிறார்கள். அவர்களுடைய தியாகங்களை எல்லாம் இவர்களால் உணர முடியாது. அப்படிப்பட்டவர்கள் எல்லாம் எங்களோடு தொடர்பு கொள்ளக்கூடிய அளவிலே பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆஃபீசரை நியமிக்க வேண்டும். அல்லது வேறு ஒரு ஊழியரையாவது அதற்காக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த சட்டமன்றத்திற்காகக் கட்டடம் கட்ட வேண்டும் என்று எல்லோரும் கேட்டார்கள். ஆனால் நான் வேண்டுவதெல்லாம், இந்த அவை நீண்ட நெடு நாட்களுக்கு முன்பு சென்னையிலே மட்டும் அல்லாமல் பிற இடங்களிலும் கூட்டப்பட்டது. அதுபோல் கூட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த சட்டமன்றத்தை அடுத்த முறை கூட்டும் போது மதுரையிலே கூட்ட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டமன்றத்திலே என்ன நடைபெறுகின்றது என்பதைப் பார்க்க மக்கள் ஆவலாக இருக்கின்றார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சியிலே இருந்த நேரத்தில் இந்த அவை ஒரு முறை ஊட்டியிலே கூடி இருக்கின்றது. கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்பு அவ்வாறு கூட்டப்பட்டது. அதுபோன்று மதுரையம்பதியிலும், கோவையிலும் சட்டமன்றத்தைக் கூட்ட வேண்டும். மக்கள் சட்டமன்றத்தைக் காண்கிற வகையில், மக்களோடு தொடர்பு கொள்கின்ற வகையில், சட்டமன்ற உறுப்பினர்கள் எதையும் சாதிக்கக்கூடியவர்கள் என்று மக்கள் தவறாக எண்ணிக்கொண்டிருப்பதைப் போக்குகின்ற வகையில், எங்களுடைய நிலைமை என்ன என்பதை அவர்கள் தெரிந்துகொள்கிற முறையில், மக்களுக்கு ஜனநாயகம் எப்படிப் பயன்படுகின்றது என்பதை அவர்கள் தெரிந்துகொள்கின்ற வகையில் அவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்துவதற்குரிய வகையில் அவசியம் சட்டமன்றத்தை மதுரையம்பதியில் கூட்டலாம். அதற்கான கட்டட வசதி இல்லாவிட்டாலும் புதிதாகக் கட்டிடம் கட்டி மதுரையம்பதியிலே கூட்டலாம். திருமலை நாயக்கர் மஹால் இதற்குரிய வசதிகள் நிறைந்த இடமாக இருக்கின்றது. அங்கத்தினர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளை எல்லாம் சுலபமாகச் செய்துகொள்ளலாம். அந்த வசதிகள் எல்லாம் அங்கே இருக்கின்றது. இதிலே ஏதேனும் அசௌகரியம் இருந்தால் கூட அதைப் பொருட்படுத்தாது இந்த சட்டமன்றத்தை அங்கே கூட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால் சில இலட்சம் ரூபாய் செலவாகக்கூடும். அதைப் பெரிது படுத்தாமல் அவசியம் இந்த சட்டமன்றத்தைத்

முதலில் நமது சட்டமன்றப் பேரவை கூடுகிற இடம் உறுப்பினர்களின் வசதிக்கு போதுமானதாக இல்லை. வசதிக் குறைவினால் இங்கே உறுப்பினருக்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன என்ற கருத்தை உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்து தெரிவித்தார்கள்.

இந்த பேரவை மண்டபம் 1910 ஆம் ஆண்டு கட்டப்பெற்று, 1912-ல் சிறிது மாற்றங்கள் செய்யப்பெற்று, மறுபடியும் 1920-ல் சில பல மாற்றங்கள் செய்யப்பெற்று இந்த மன்றம் நடந்துகொண்டிருக்கிறது.



வைத்திருக்கிறோம். இதிலே இப்போது உள்ள இரண்டு இடங்களில் எதாவது ஒரு இடத்தில் கட்டலாமா என்று இந்த அரசு இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இந்த 2 இடங்களும் ராணுவத்திற்குச் சொந்தமான இடம். மத்திய அரசிலிருந்து அனுமதி வந்தாக வேண்டும். அந்த அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். கட்டட அமைப்பை வகுத்துக்கொள்வதற்கான முயற்சியிலேயும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, இப்போது கிட்டத்தட்ட 234 தொகுதிகள் கொண்டதாக நம்முடைய தமிழகம் அமைந்திருக்கிறது. இந்த தொகுதிகள் எல்லாம் ஒரு காலத்தில் 75,000, 80,000 வாக்காளர்களைக் கொண்டதாக இருந்த நிலைமை மாறி இப்போது 1,40,000, 1,50,000, 1,60,000 வாக்காளர்களைக் கொண்டிருக்கின்ற தொகுதிகளாக அமைந்து விட்டன. இவ்வளவு பெரும் வாக்காளர் தொகுதியை உறுப்பினர் பார்த்து, தொகுதி மக்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது என்பது கடினமான ஒன்றுதான். ஆனால், பாராளுமன்ற எண்ணிக்கை அரசியல் அமைப்புச் சட்டத்தின் கணக்குப்படி முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்தக் கணக்கின் அடிப்படையிலே நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தமிழகத்திற்கு 39. ஒரு நாடாளுமன்ற தொகுதி இன்றைக்கு 6 சட்டமன்ற பேரவை தொகுதிகளைக் கொண்டதாக இருக்கிறது. இந்த 6 என்கிற எண்ணிக்கையை 7 ஆகவோ அல்லது 8 ஆகவோ மாற்றி அமைக்கின்ற முயற்சியில் டி-லிமிடேஷன் கமிட்டி வருகின்றபோது செய்யவேண்டுமென்ற முயற்சியில் இருக்கிறோம். அப்படி நாடாளுமன்றத் தொகுதியை 7 அல்லது 8 சட்டமன்ற தொகுதிகளாக பிரித்து அமைக்கின்றபோது, இந்தப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 300-க்கு மேல் அதிகமாகும். எனவே புதிதாக கட்ட இருக்கின்ற மண்டபம் 400 உறுப்பினர்கள் உட்காரக்கூடிய வகையில் அமைவதுதான் ஏற்றது. எனவே 50 ஆண்டுகள், 60 ஆண்டுகள் அல்லது 100 ஆண்டுகளுக்குப்பின் பயன்பெறக்கூடிய வகையிலே அமையும்.

அடுத்து சில உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதற்கு இணங்க அங்கே அந்த நூலகம் அமையும். சட்டமன்ற துறையில் உள்ள பெரிய அலுவலர்கள் அங்கே அமர முடியும். ஒவ்வொரு கட்சிக்கும் அலுவலக அறைகளும் அங்கே அமையும். உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியது மாதிரி, உறுப்பினர்கள் கலந்து பேச, அமைச்சர்களோடு உட்கார்ந்து பேச, அவர்களோடு விவாதிக்க, அவர்களிடத்திலே சில பிரச்னைகள் குறித்து பேச, இட வசதி இல்லை. இவற்றையெல்லாம் மனதிலே வைத்து தான் இதற்கான ஒரு புதிய கட்டிடம் அமைக்கும் முயற்சியில் இந்த அரசு விரைவாக செயல்பட இருக்கிறது.

புதிய கட்டிடம் கட்டப் பெறும் வரையில் இந்தப் பேரவை இங்கேயே தான் செயல்பட்டாக வேண்டும். இந்த இடைக் காலத்தில் இப்போது இந்த உறுப்பினர்களுக்குள்ள சங்கடங் களைப் போக்க, சில பல வசதிகள் செய்து தரவும் முயற்சி செய்கிறோம். குறிப்பாக இங்குள்ள கட்டிடத்தில் பேரவைக்கு அதிக இடவசதியைக் கொடுப்பதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த மைய கட்டிடத்தில் கீழ்ப்பகுதியில் இன்னும் பல்வேறு துறைகள் இயங்கிக் கொண்டி ருக்கின்றன. இந்தத் துறைகளை அங்கு இருந்து அகற்றி இந்தக் கட்டிடத்தில் கீழ்ப்பகுதி முழுவதையும் சட்டமன்றத் திற்கு அளிக்க 15 தினங்களுக்கு முன்புகூட தலைமைச் செயலாளர் அவர்களோடு கலந்து பேசினோம். அந்தத் துறைகள் வேறு இடங்களுக்கு அனுப்பப்படுமேயானால் இந்தக் கீழ்ப் பகுதி முழுமையும் நமக்கு கிடைக்கும். அப்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேண்டீன் வசதியை ஒரு பக்கத்தில் ஏற் படுத்த முடியும். நூலகத்தை விரிவுபடுத்த முடியும். பேரவைக் குழுக்களுக்கு தனி அறைகள் கொடுக்க முடியும். புது கட்டிடம் அமையும் வரை தற்காலிக ஏற்பாடாக உடனடியாக இவற்றைச் செய்துதர பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். இந்தக் கட்டிடத்தின் கீழ்ப் பகுதியை விரைவில் காலி செய்து தருவதாக தலைமைச் செயலாளர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த இடம் நம்மிடம் கொடுக்கப்பெற்றவுடன் ஓரளவுக்கு உறுப்பினர் கள் கேட்ட வசதிகளை எல்லாம் செய்துதர முடியும் என்று நம்பு கிறேன்.

[மாலை 6.50]

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தெரிவித்த ஒரு கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். நம்முடைய சட்டமன்றத்தைப் பொறுத் தவரை நம்முடைய நூலகம் மிகச் சிறந்த நூலகமாகும். இந்தி யாவில் இருக்கும் வேறு எந்தச் சட்டமன்றத்தில் போய்ப் பார்த்தாலும் கூட இதைவிடப் பெரிய நூலகத்தைப் பார்க்க முடியாது. பாராளுமன்றத்தில் இருக்கும் நூலகத்திற்கு அடுத்தபடியாக தமிழக சட்டமன்றத்தில் இருக்கும் நூலகம்தான் மிகச் சிறந்தது, பழமையானது என்பது மட்டுமல்ல பழைய கருத் துக்கள், வாதங்கள் மற்றவைகள் எல்லாம் கிடைக்கக்கூடிய அளவுக்கு சிறந்த நூலகமாக இருக்கிறது. இந்த நூலகத்தை பயன்படுத்த முடியாத அளவு அமைந்திருக்கும் இடமும் மற்ற நிலைமைகளும் இருக்கின்றன. நூலகத்தின் ஒரு பகுதி இங்கே இருக்கிறது. இன்னொரு பகுதி ராஜாஜி மண்ட பத்தின் கீழே —அதைக் கிடங்கு என்றுதான் சொல்ல வேண்டும்— இருக்கிறது. உறுப்பினர்கள் நூலகத்தில் இருந்து படிப்பதற்கு மட்டுமல்லாமல் புதிய கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் உறுப்பினர்கள் கலந்து உரையாட, கருத்துக ள் பரிமாறிக்கொள்ள இடம் வேண்டும். உறுப்பினர்களுக்குத் தேவையான நூல்களையும், கருத்துக்களையும் எடுத்துக் கூறும்



வகையில் ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் நியமிக்கப்படுவார் களானால் தேவையான கருத்துக்களை உறுப்பினர்களுக்கு எடுத்துத்தர வாய்ப்பாக இருக்கும். அந்த உதவிகளைச் செய்ய வேண்டுமென்ற எண்ணமும் இருக்கிறது. அதற்கான ஏற்பாடு களைச் செய்யலாம்.

ஒரு தடவை நான் பெங்களூர் சென்றிருந்தபோது அங்குள்ள நூல் நிலயத்தைப் பார்வையிடச் சென்றேன். இங்கே சட்டமன்ற செயலாளராக இருந்த திரு. அனுமந்தப்பா அவர்கள்தான் அப்போது அங்கே செயலாளராக இருந்தார்கள். அங்குள்ள நூல் நிலையத்திற்கும் தமிழகத்தில் உள்ள நூல் நிலையத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன என்று கேட்டபோது அங்குள்ள பேரவை நூலகம், தமிழகத்திலுள்ள பேரவை நூலகத்தின் 20-ல் ஒரு பங்கு கூட வராது என்றும் அங்குள்ளது சாதாரண நூலகம் என்றும் குறிப்பிட்டார்கள். அப்படி மிகச் சிறப்பான முறை யில் அமைந்துள்ள நமது பேரவை நூலகத்தை நமது மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அதிக அளவு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதுதான் என் விருப்பம், விரைவில் இந்த மையக் கட்டிடத்தின் கீழ்ப் பகுதி முழுவதையும் நாம் பெற்று, நமது மன்ற உறுப்பினர்கள் வசதியாக இருந்து படிப்பதற்கேற்ற இடவசதி நூலகத்திற்கு செய்து தரலாம் என்று இருக்கிறோம்.

உறுப்பினர்கள் விடுதியைப் பற்றி எல்லோரும் குறை சொன் னார்கள். உண்மை என்பதை ஒப்புக்கொள்கிறேன். உறுப்பினர் திரு. பா. கோவிந்தராஜன் அவர்கள் தான் அனுபவித்த அத்தனையையும் தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள். கட்டிய போது கவனிக்கப்படவில்லை. தமிழகத்தில் பழமொழி— 'வீடு கட்டினால் தெற்கே பார்த்துக் கட்டு' என்பது. இது நீண்ட காலப் பழமொழி. தென்றல் காற்று தெற்கே இருந்து தான் வரும். வாடைக் காற்றை ஏற்றுக்கொள்ள முடியாது அது வடக்கே இருந்து வருகிற காற்று, அதை ஏற்றுக்கொள்ள முடியாது. தெற்கு பார்த்து வீடு கட்டுவது என்பதுதான் பழைய வழக்கம் திரு. கோவிந்தராஜன் சொன்ன குறைபாடு இருக்கிறது. காலை வெயில் முழுவதும், மாலை வெயில் முழுவதும் அறைக் குள்ளே வரும் உறுப்பினர்களுக்குத் தகுந்த வசதி வாய்ப்பு இல்லை யென்பது உண்மைதான். நானும் எண்ணிக்கொண்டிருக்கிறேன். இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக ஒவ்வொரு உறுப்பின ருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருப்பது போன்ற தனித் தனி வீடுகள் கொடுக்க பிளாக்காக கட்டி ஒவ்வொரு பிளாக்கிலும் ஆறு வீடுகள் என்று அமைத்து அந்த வீடுகளை அந்தந்த உறுப்பினர்களிடத்தில் ஒப்படைத்து விடலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். அப்படி கட்டி உறுப்பினர் களிடம் அந்த வீட்டை ஒப்படைத்துவிட்டால் இந்தப் பிரச்சினை என் வராது. தொகுதியிலிருந்து வருகிறவர்களைப் பார்க்க அவர் களுக்கான வசதிகளை ஏற்படுத்த அவரவர்கள் தாங்களாகவே செய்து கொள்ளக்கூடிய அளவுக்கு அமையும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூலை 29

இப்போது விடுதி அமைந்திருக்கும் பாங்கு சரியாக இல்லை.
ஏழு அடுக்கு மாடியில் நான்கு அடி வரண்டா வைப்பது என்பது
இதைத் தவிர வேறு எங்கும் இருக்காது. இவ்வளவு பெரிய
கட்டிடத்திற்கு நான்கு அடி வராண்டா இருப்பது சரியல்ல.
பொதுவாக 10 அடி, 12 அடி வராண்டாவாவது வைப்பார்கள்
புதிதாகக் கட்டப்பட இருக்கும் விடுகளை அரசினர் தோட்டத்தி
லேயே கட்டலாம். அல்லது வேறு இடத்தில் கட்டலாமா என்பது
பற்றியெல்லாம் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும். இப்போ
துள்ள இந்த விடுதியை மற்றவர்கள் தங்கும் விடுதியாகப் பயன்
படுத்தலாம், விருந்தினர்கள் தங்கும் விடுதியாக்கலாம். பெரிய
மாநாடுகள் நடைபெறுகிறபோது பிரதிநிதிகளாக வருகிறவர்கள்
தங்குகிற விடுதிகளாக மாற்றிவிடலாம். உறுப்பினர்களுக்குத்
தனித் தனி வீடுகள் அமைத்துக் கொடுக்கும் அளவுக்கு திட்டம்
போட முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்
கான திட்டம் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

தொலைபேசி பற்றிக் குறைபாடு சொன்னார்கள்.
இங்கிருக்கும் நிலைமைகளைப் பார்ப்பீர்களானால் முன்னூறு
இணைப்புகள் தரப்பட்டிருக்கின்றன. 30 ஜங்ஷன்கள் அமைந்
திருக்கின்றன. ஆறு சானல்கள் அமைந்திருக்கின்றன. உறுப்பி
னர்கள் போனை எடுத்து நம்பரைக் கேட்டவுடன் கொடுத்து
விட முடியாது. நேரடியாகத் தா என்று சொன்னால் ஆறு சானல்
களுக்கு நேரடியாகத் தந்து விடுவார்கள். அந்த ஆறு பேர்
தவிர வேறு யாரும் பேச முடியாது. இந்த டெக்னிக் புரியாமல்
கையிலேயே வைத்துக் கொண்டிருப்பதன் காரணமாக நேரடி
சானலில் கொடுத்து விடுகிறார்கள். நம்பரைக் கேட்டுவிட்டு
டெலிபோனை வைத்துவிட வேண்டும்.

6 சேனலிலும் கொடுத்துவிட்டால் அதற்குப் பிறகு யாரும்
பேசமுடியாது. அந்த 6 பேரும் எப்போது வைக்கிறார்களோ
அப்போதுதான் மற்றவர்களுக்குத் தருகின்ற நிலையே ஏற்படும்.
ஆகவே மன்ற உறுப்பினர்கள் மட்டும் பயன் படுத்தக்கூடிய
சூழ்நிலை இருந்தால் இப்படிப்பட்ட தகராறுகள் அதிகமாக
வராது. வருகிறவர்கள், மற்றவர்கள் எல்லோரும்
பயன்படுத்தி அவர்கள் கதைகள் முழுவதையும் பேசி
முடித்து அவர்கள் வந்ததிலிருந்து போகிற வரையிலும் அரை மணி
நேரம், முக்கால் மணிநேரம் விடாமல் பேசுவதன் காரணமாக
இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. உடனடியாக
தொலைபேசி அதிகாரிகளை அழைத்து ஏற்பட்டு இருக்கிற குறை
பாடுகளை உடனடியாக நீக்குவதற்கு ஏதாவது செய்யமுடியுமா
அல்லது ஒவ்வொரு அறைக்கும் தனியாக நேரடியாக டையல்
செய்யக்கூடிய அளவுக்கு செய்ய முடியுமா என்பதை யோசித்
துச் சொல்லும்படி சொல்லியிருக்கிறேன். அப்படி நேரடியாக
டையல் செய்கிற சூழ்நிலை வருகிறபோது ஒவ்வொரு உறுப்பின



1980 ஜூலை 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

க்கும். தங்குகிறபோது ஒரு நாளைக்கோ அல்லது நாட்
களுக்கோ இவ்வளவு கால்கள்தான் பேசலாம் என்று வரை
முறைப்படுத்தினால்தான், அதற்குப் பிறகு மேலே வருமானால்
மன்ற உறுப்பினர்கள் செலுத்தவேண்டும் என்று இருந்தால்தான்
வந்து தங்குகிறவர்கள் போடாமல் இருப்பார்கள், நீங்களும்
அவர்களைப் போடவிடாமல் பார்த்துக் கொள்ள முடியும்,
ஆகவே அதையும் செய்வோம். அதையும் நான் யோசிக்கும்படி
யாகச் சொல்லியிருக்கிறேன். தற்காலிக ஏற்பாடாக செய்கிற
போது ஒரு அறைக்கு ஒன்று ஒன்று தரலாமா இப்போது இருக்கிற
முறையிலேயே சங்கடம் இல்லாத அளவுக்கு வரலாமா என்பதைப்
பற்றி யோசிக்கும்படியாக நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.
அதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம். கம்பனுடைய மகன்
அம்பிகாபதி அவசரப்பட்டு ஆற அமர சிந்திக்காமல் சிலபல
விளைவுகள் செய்ததன் காரணமாகத்தான் அவதிப்பட்டான்
என்பதுதான் கதை, அமராவதியா, ஆம் அமரவாதி. ஆகவே
அதுமாதிரியில்லாமல் அப்படிப்பட்ட ஏற்பாடுகளிலே மாண்புமிகு
உறுப்பினர் இறங்குவார்களானால் அவரைப்பற்றி நாடு தவறாக
கருதும், ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கவேண்டாம்.
எவ்வளவுக்கெவ்வளவு வசதி வாய்ப்புகள் செய்ய வேண்டுமோ
அதைச் செய்வதிலே இந்த அரசு கவனம் செலுத்தும் என்பதை
நான் கூறிக்கொள்கிறேன்.

ஒன்றை நான் தெளிவாக உணர்கிறேன். பாராளுமன்ற
உறுப்பினர்களுக்கு மத்திய அரசாங்கமும் அதிலே இருக்கிற
அதிகாரிகளும் எவ்வளவு மதிப்புத் தருகிறார்களோ அவ்வளவு
மதிப்பு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தமிழகத்திலே தமிழக
அரசு அதிகாரிகளாலும் மற்றவர்களாலும் தரப்படவேண்டும்.
அந்த முறையை ஏற்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமோ
அதைச் செய்வதற்கு திட்டமிட நாம் தயாராக இருக்கிறோம்.
அதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களையெல்லாம் ஒரு
நாள் கூப்பிட்டு வைத்துப்பேசி எப்படி எப்படி அந்தக் குறைபாடு
களையெல்லாம் நீக்கலாம் இவர்களுடைய மதிப்பு காப்பாற்றப்
பட்டால் தான் தொகுதியிலே இருக்கிற பொதுமக்களும்
வாக்காளர்களும் நம்மை மதிப்பார்கள். சட்டமன்ற உறுப்பினர்
களை மதிக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டால்தான் அதிகாரி
களும் மதிப்பார்கள். ஆகவே நியாயத்தினுடைய அடிப்படையில்,
நேர்மையினுடைய அடிப்படையில், நாணயத்தினுடைய அடிப்
படையில் நாம் பணியாற்றுவோம், அதே நிலையில் நம்முடைய
தரம் தாழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், அதே நிலையிலே
மற்றவர்களும் நம்மை மதிக்கும்படியான நிலைமையில் நாம்
வைக்கப்படவேண்டும். அதற்காக எதிர்க்கட்சித் தலைவர்களை
யெல்லாம் ஒரு நாள் தனியாக கூப்பிட்டு வைத்துப் பேசி எந்த
எந்த வகையிலே முடிவுகள் எடுக்கலாம் என்பதைப்பற்றியெல்லாம்
நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலை
கள் வருகிறபோது எல்லோருடைய ஒத்துழைப்பும் ஆதரவும்
கிடைக்குமானால் அத்தகைய நிலைமைகளை சிறப்பாகச்
செய்யலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** கிளார்க்குகள் பற்றி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதனாலே பலன் உண்டா அல்லது அவர்களை வைத்துக் கொள்வதற்கான ஒரு அலவன்ஸைக் கொடுக்கலாமா என்பதைப் பற்றிப் பின்னால் யோசிக்கலாம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மாலை மணி 7, வாக்கெடுப்பிற்குக் குறிப்பிடப்பட்ட நேரம். எனவே, விவாதம் முடிவுற்றது. வாக்கெடுப்பு எடுக்கப்படுகிறது.

## கோரிக்கை எண். 7—மாநில சட்டமன்றம்.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், இல. பலராமன், என். வரதராஜன் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 83,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

## கோரிக்கை எண். 8—தேர்தல்கள்.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், இல. பலராமன், என். பழனிவேல், மு. அம்பிகாபதி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,78,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று. நிறைவேற்றப் பெற்று. கோரிய தொகை வழங்கப்பெற்றது.



## (ஓ) கோரிக்கை எண். 42, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,19,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

## (ஔ) கோரிக்கை எண். 43 பல்வகை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 39,91,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

## (க) கோரிக்கை எண். 55—பல்வகை மூலதனச்செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 55—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,62,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

## (ங) கோரிக்கை எண். 56

## மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 56—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 121,73,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையில் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

## 4. அறிவிப்பு.

### ஆளுநர் இசைவு—நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன் வடிவு 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வு செய்வ தற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்ட முன் வடிவு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு 1980

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.2) சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

66. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வீரியம் நீக்கப் பெற்ற சாராவி, மெதில் ஆல்கஹால், வார்னீஸ் (பிரெஞ்சு பாலீஷ்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் (P.&E.-IV) 14—1—1980 ஆம் தேதியிடப் பெற்ற 109 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.







67, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1979 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

68. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தின் 31—3—1979ஆம் தேதி முடிடவுள்ள ஆண்டு அறிக்கையும், கணக்குகளும் [1956ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*118. கோரிக்கை எண் 32—பிற்பட்டோர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

*119. கோரிக்கை எண் 56—மாநில அரசு வழங்கும் கடன் களும் முன் பணங்களும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

@120. கோரிக்கை எண் 43—"பல்வகை" அயல் நாடுகளில் உள்ள இந்தியர் தாயகம் திரும்பியோர், குடி பெயர்ந்தோர் துயர் தணிப்பும், மறு வாழ்வும், 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

*121. கோரிக்கை எண் 8—தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் மற்றும் நிதி அமைச்சரின் வரைவு உரை (தமிழ், ஆங்கிலம்).

*122. 1980-81 ஆம் ஆண்டில் பிற்பட்டோர் நலத் துறையின் செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

@123. 1980-81-ஆம் ஆண்டில் மறு வாழ்வுத் துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

*124. 1980-81 ஆம் ஆண்டில் பாசனம் மற்றும் நில நீர் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

---

*27—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

@25—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

[1980 ஜூலை 29

## இணைப்பு I.

[448 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### 1980-81ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்

### மானியக் கோரிக்கை எண் 32.

### பிற்பட்டோர் நலத்துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக 1980-81 ஆம் ஆண்டிற் கான ரூ. 7,60,68,000 மானியக் கோரிக்கையை நான் இம் மன் றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக தமிழக அரசு முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றியுள்ள பணிகள், 1980-81 ஆம் ஆண்டில் எடுக்க இருக்கும் முன்னேற்றப் பணிகள் ஆகிய விவரங்களைக் கீழே தருகிறேன்.

2. 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன்பு வரை பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்கான திட்டங்கள் தொழிலாளர்நல ஆணையாளரால் அரிசனநலம் மற்றும் பழங்குடியினர் நலம் ஆகிய வற்றுடன் ஒருங்கே கவனிக்கப்பட்டு வந்தன. பின்னர் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலம், காவல் துறை யினரால் கவனிக்கப்பட்டு வந்தது. 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளில் அரிசன நலத்துறை ஏற்படுத்தப்பட்டு அரிசனங்கள், பழங்குடி மக்கள், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பிற்பட்டோர் ஆகியோ ரின் நலன்கள் அத்துறையால் கவனிக்கப்பட்டன. பிற்பட்ட வகுப்பினர் மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் என்பதன் காரணமாக அவர்களுடைய முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் வகையில் பிற்பட்டோர் நலத்துறை புதியதாக ஏற்படுத்தப்பட்டு 1969 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது. அது வரை அரிசன நலத்துறையால் கவனிக்கப்பட்டு வந்த பிற்பட்டோர் நலம், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலம் தொடர்பான பணிகள் இத்துறைக்கு மாற்றப்பட்டன.

3. இத்துறை இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அதிகாரி ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. மாவட்டங்களில் மே 1974 ஆம் ஆண்டு வரை இத்துறையின் வேலைகளை மாவட்ட நல அதிகாரி கள் கவனித்து வந்தனர். 1974 ஆம் ஆண்டு மே திங்கள் 17 ஆம்



980 ஜூலை 29]

ாளிலிருந்து துணை ஆட்சியாளர் பதவி நிலையில் மாவட்ட ிற்பட்டோர் நல அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட ிற்பட்டோர் நல அதிகாரிகள் மாவட்ட ஆட்சியாளரின் நேரடிப் பார்வையில் பணி புரிகின்றனர்.

பிற்பட்டோர் நலன்களுக்கான திட்டங்களைப்பற்றி ஆலோ சனைகளைத் தெரிவிப்பதற்கு பிற்பட்டோர் நலத்துறை அமைச்ச ரின் தலைமையில் ''மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக்குழு'' ஒன்று இயங்கி வருகிறது. இக்குழு 1974ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் திருத்தி அமைக்கப்பட்டது. இக்குழுவை மீண்டும் திருத்தி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இது போன்று மதுரை மாவட்டத்தில் பிரமலைக் கள்ளர் சமுதாய முன்னேற்றத்திற்கு ஆலோசனை கூற மதுரை மாவட்ட ஆட்சி யாளரின் தலைமையில் ஒரு தனிக்குழு செயல்பட்டு வருகிறது.

4. பிற்பட்டோர் முன்னேற்ற நலனுக்கென 1971-72 முதல் தனியாக மானியக் கோரிக்கை ஏற்படுத்தப்பட்டது. 1967-68-ல் பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கு ரூ. 1,61,40,000ஆக இருந்த மானியத் தொகை ஆண்டு தோறும் வளர்ந்து 1980-81-ல் ரூ. 7,60,68,000 ஆக எட்டியுள்ளது. இது பிற்பட்டோர் நலனுக் கென அரசு மேற்கொண்டு வரும் தீவிர நடவடிக்கைகளை காட்டுகிறது.

5. மேலும் இந்த தனி ஒதுக்கீடு தவிர இம்மாநில அரசு மேற்கொள்ளும் பல்வேறு பொதுத் திட்டங்கள் பிற்பட்ட வகுப் பினர் முன்னேற்றம் கருதியே செயலாக்கப்பட்டு வருகின்றன என்பதை இப்பேரவையில் கூற விரும்புகிறேன். இந்தத் துறையின் முக்கியமான பணிகள் அவற்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

6. (i) படிப்பு உதவித்தொகை.—பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் கல்வி கற்க போதிய வசதியின்மையால் இன்ன மும் பிற்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள் என்பதை உறுப் பினர்கள் எல்லோரும் அறிவர். அவர்களுடைய முன்னேற்றத் தினை கருத்திற்கொண்டு கல்வி மேம்பாட்டிற்கு வழிவகை செய்வது மிக அவசியம். எனவே பிற்பட்ட வகுப்பு மாணவர் களுக்கும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும், கல்வி வசதிக்காக படிப்பு உதவித்தொகை மற்றும் உண்டி, உறையுள் வசதிகள் அளித்து ஊக்குவிக்கப் படுகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப் பிலிருந்தும், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கு நான்காம் வகுப்பிலிருந்தும் படிப்பு உதவித்தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகை பெறுவதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்கும் அதிகமாக இருக்கக்கூடாது.

உணவு விடுதிகள் மற்றவற்றைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதற்கான பணிகள் மற்றவற்றையெல்லாம் சிறப்பாக செய்ய முடியும் என்பதை நான் கூறி கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுடைய வசதிகள் பெருகிக் கொண்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் ஒரு விலங்கின் பெயரைச் சொன்னார்கள். அது நல்லதல்ல. அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவது நல்லது. யாரையும் குறிப்பிடும், தங்களையும் குறிப்பிடும், மன்ற உறுப்பினர்களையும் குறிப்பிடும். அரசையும் குறிப்பிடும், அது நல்லதல்ல. அந்த உதாரணம் என்பதற்காக அதை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கும்படி யாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ( * ) என்று தொடங்கி சொன்ன அந்த பகுதியை நீக்கும்படி உத்தரவிடுகி கிறேன். பத்திரிகைகளிலேயும் வெளியிடக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : யாரைக் குறிப்பிடுகிறது என்று தெரியாமல் இருப்பதான் யாரையாவது குறிக்கும் என்ற அளவுக்கு வந்துவிடும். ஆகவே அது தேவை யில்லை. இருந்தாலும் கூட மன்றத்தினுடைய மதிப்பை உயர்த்த நாம் கடமைபட்டிருக்கிறோம். ஆகவே மன்ற உறுப்பினர்கள் மதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டால்ததான் ஏற்றிருக்கிற பொறுப்புகள் நிறைவேறும், ஆகவே அவர்களுடைய வசதிகள் ஆண்டுக்காண்டு வளர்ந்துகொண்டு வருகின்றன. ஒரு காலத்திலே நான் எதிர்க்கட்சித் தலைவனாக இங்கே வீற்றிருக்கும் போதுகூட எனக்கு ஒரு உதவியாளர் வேண்டுமென்று கேட்டபொழுதுகூட மற்ற மாநிலங்களைக் கேட்டுக்கொண்டு சொல்கிறேன் என்று அன்றைக்கு இருந்த முதலமைச்சர் சொல்லி மற்ற மாநிலங்களில் இல்லை. ஆகவே உங்களுக்கு இல்லை என்று எனக்குப் பதில் வந்தது. அதற்குப் பிறகு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் முதல்வராக இருக்கும்பொழுது எதிர்க்கட்சித் தலைவருக்கு சில பல வசதிகள் செய்து தரலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். தொடர்ந்து அந்த வசதிகள் பெருக்கப்பட்டு வருகின்றன. அப்போது 150 ரூபாய் சம்பளமாக இருந்தது. இப்போது 250 ரூபாய் ஆகி அலவன்ஸும் கொடுக்கப்பட்டு வேறு பல வசதி களும் வாய்ப்புகளும் செய்யப்படுகின்றன.

---

* மண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



இங்கே ஓய்வூதியம் தருவது பற்றி சில பேர்கள் குறிப்பிட்டார் கள். சில பேர்களுக்குத் தேவையில்லை என்று குறிப்பிட்டார்கள். அது முறையல்ல, ஓய்வூதியம் என்ற முறை வந்ததற்குப் பிறகு யாராக இருந்தாலும் தர வேண்டியது தான். ஒவ்வொரு உறுப் பினரும் எவ்வளவு கஷ்டப்பட்டு, எவ்வளவு செலவழித்து இந்த நிலைமைக்கு வருகிறார்கள். மற்றைய நிலைமைகளுக்கு மற்றைய பதவிகளுக்குப் போவது மாதிரியல்ல, சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தக் கணக்கு எல்லாம் பார்க் கக் கூடாது. ஆகவே எல்லோரையும் சமமாகத் தான் கருத வேண்டும். ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரைக்கும் நீங்களே கேட்கவில்லை. எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. நீங்கள் கேட்காமல் இருந்தால் கூட ஏதாவது தர வேண்டும் என்பதற்காக தொலைபேசியைப் பொறுத்தவரையில்

[இரவு 7-00]

இதுவரையில் உறுப்பினர்களே தொலை பேசி வாடகைக் கட்ட ணத்தைக் கட்டிக் கொள்ள வேண்டுமென்று இருந்தது. அது ஒரு குவார்ட்டருக்கு 175 ரூபாய். இனிமேல் அதை இந்த ஜூலை 1-ஆம் தேதியிலிருந்து அரசே ஏற்றுக் கொள்ளும் என்பதையும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதன் மூலமாக ஆண்டுக்கு 700 ரூபாய் தொலைபேசியைப் பொறுத்த வரையில் உறுப்பினர் கள் கட்டி வந்த வாடகையை அரசே ஏற்றுக் கொள்ளும். வைப் புத் தொகையை உறுப்பினர்களே ஏற்றுக் கொள்கிறார்கள். கடைசி உறுப்பினர்களுக்கு அதை அட்வான்சாக அரசு தருகிறது. தொகை யில் உறுப்பினர்கள் திரும்ப வாங்கிக் கொள்ள வேண்டிய தொகை அது. ஆனால், இணைப்புத் தொகை - அதை அரசு ஏற்றுக் கொள்கிறது. ஆண்டு வாடகைக் கட்டணத்தையும் 1980 ஜூலை 1ஆம் தேதியில் இருந்து அரசு ஏற்றுக் கொள்கிறது என அறிவிக்கிறேன். கையைத் தட்டும் ஒலி).

அது மட்டுமல்லாமல் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இந்த ஆண்டு ஒவ்வொருவருக்கும் ஃப்ரீப் பாக்ஸ் தரும்படியாகச் சொல்லி யிருக்கிறேன் 200 ரூபாய் மதிப்பீட்டிலே. அது நாளை மறுநாள் கிடைக்கும்.

இங்கேயிருக்கின்ற பாதுகாவலர்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் என்று வழங்கப்படுகிறது. அவர்களுக்கு இனிமேல் 4 ரூபாய், 5 ரூபாய் என்ற அளவிற்கு, இரண்டு ரூபாய் வாங்குபவர்களுக்கு நான்கு ரூபாயும், மூன்று ரூபாய் வாங்குபவர்களுக்கு ஐந்து ரூபாயும் வழங்கப்படும்.

மற்றவர்களுடைய ஊதியம், மற்றவைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அந்தக் கலந்து ஒரு சீரான, ஒரு முறையான ஏற் பாடுகளை அவர்கள் செய்வார்கள் என்று கூறிக் கொள்கிறேன்.

உதவித்தொகை பெற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். ஆனால் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் இலட்சம் ரூபாயுடன் 1948-49-ல் தொடங்கப்பட்டு 609 மாணவர்களுக்கு பயனளித்தது.

பின்னர் இத்தொகை 1949-50ஆம் ஆண்டில் ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்ந்ததில் 2,908 மாணவர்கள் பயனடைந்தனர். 1960-61-ல் 19,900 மாணவர்களுக்கு ரூ. 41 இலட்சம் செலவழிக்கப்பட்டது.



(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் படிப்பு உதவித் தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியினைக் காட்டும்:—

குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்.

| ஆண்டு. | | உயர்பள்ளிப் படிப்பு. | கல்லூரிப் படிப்பு. | ரூபாய் (இலட்சங்களில்.) |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | (உதவித் தொகை பெற்ற மாணவர் எண்ணிக்கை.) | | |
| 1966-67 | .. | 24,745 | 1,619 | 13.71 |
| 1967-68 | .. | 27,967 | 1,941 | 14.50 |
| 1968-69 | .. | 32,347 | 2,122 | 16.71 |
| 1969-70 | .. | 41,361 | 2,828 | 21.16 |
| 1970-71 | .. | 53,769 | 3,173 | 25.55 |
| 1971-72 | .. | 60,614 | 3,805 | 30.85 |
| 1972-73 | .. | 67,772 | 4,638 | 34.29 |
| 1973-74 | .. | 65,876 | 4,338 | 34.38 |
| 1974-75 | .. | 60,661 | 4,673 | 35.66 |
| 1975-76 | .. | 61,845 | 3,964 | 29.64 |
| 1976-77 | .. | 57,026 | 3,985 | 33.65 |
| 1977-78 | .. | 1,10,639* | 4,183 | 29.80 |
| 1978-79 | .. | 1,84,772* | 3,902 | 31.08 |

(vi) உதவித் தொகை வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

| (1) | 1978-79 செலவு. (2) | 1979-80 மதிப்பீடு. (3) | 1979-80 திருத்திய மதிப்பீடு, (4) | 1980-81 மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| பிற்பட்டோர் வகுப்பு மாணவர்கள் .. | 26,738 | 33,881 | 33,530 | 33,428 |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் .. .. | 3,374 | 3,488 | 3,795 | 3,900 |
| மொத்தம் .. | 30,112 | 37,369 | 37,325 | 37,328 |

(vii) மத்திய அரசு உதவியுடன் குறைந்த வருமானம் உடையோரின் பிள்ளைகளுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் 1964-65-ல் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டது. இதற்கு மத்திய அரசு 1968-69 வரைதான் நிதி உதவி செய்து வந்தது. ஆயினும் தொடர்ந்து இந்தத்திட்டத்தின் கீழ் 1969-70-ல் ரூ. 14,84,000மும் இதற்கு சமமான தொகை 1970-71லும் மத்திய அரசின் உதவியின்றியே செலவிடப்பட்டது. 1971-72 ஆம் ஆண்டு முதல் நிதி பற்றாக்குறையின் காரணமாக இந்த திட்டம் கைவிடப்பட்டது. ஆனாலும் ஏற்கெனவே இந்த சலுகை பெற்றவர்களுக்கு இவர்கள் எடுத்துக்கொண்ட பாட முறையில் தேர்ச்சி பெற்று முடிக்கும் வரை அதாவது 1975-76ம் ஆண்டுவரை மாநில உதவித் தொகை விதிகளின்படி புதுப்பித்தல் உதவித்தொகை மட்டும் வழங்கப்பட்டது.

7. (அ) படிப்புக் கட்டண சலுகைகள்.—சாதி பாகுபாடு இல்லாமல் மேல்நிலைப்பள்ளி (+2) வகுப்புவரை (தமிழ் போதனா மொழி படிக்கும்) எல்லா மாணவர்களுக்கும் முழுச் சம்பளச் சலுகைகள் வழங்கப்படுகிறது.



மேல்நிலைப்பள்ளி (+2) வகுப்புக்கு மேல்படிப்புக்கும் மாணவர்களுக்கு கல்வித்துறையின் மூலம் பிற்பட்டோர் நலத்துறையின் மூலமும் சம்பளச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:—

| வருமானப் பிரிவு. (1) | மிகவும் பிற்பட்ட வகுப்பினர். (2) | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். (3) | பிற்பட்ட வகுப்பினர். (4) |
|---|---|---|---|
| ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | முழுச்சம்பளச் சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி. | முழுச்சம்பள சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி. | அரைச் சம்பளச் சலுகை தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி மிகுந்த அரைச் சம்பளம் இத்துறையின்மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,501 முதல் ரூ. 2,500வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | அரைச் சம்பளச் சலுகை மூன்று பிரிவினருக்கும் பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. | | |

7. (ஆ) கடன் உதவித் தொகை.— தொழில் கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு அவரவர்களின் பெற்றோர், பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 2,501 விருந்து ரூ. 6,000-க்குட்பட்டு இருந்தால் வருடத்திற்கு ரூ. 500 வீதம் ஒரு படிப்பிற்கு ரூ. 2,500 வரை இத்துறை மூலமாக கடன் உதவி தொகை வழங்கப்படுகிறது.

8. அரசு மாணவர் இல்லங்கள்.—(1) மாணவர்கள் கல்வி பயில வசதியாக இருக்கும் பொருட்டு அரசினர் உணவு விடுதிகள் திறக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் பல்வேறு வகுப்பு மாணவர்கள் கீழ்க்கண்ட விகிதத்தில் சேர்க்கப்படுகின்றனர்:—

| | குற்ற மரபினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக்கான விடுதிகள். | பின் தங்கிய வகுப்பிலிருக்கான விடுதிகள். | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் விடுதிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) (விழுக்காடு) | (4) |
| பிற்பட்ட வகுப்பினர் | 10 | 65 | 20 |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் | 60 | | |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 25 | 25 | 75 |
| இதர வகுப்பினர் | 5 | 10 | 5 |
| மொத்தம் .. | 100 | 100 | 100 |

(2) பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காகவும், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்காகவும் நடத்தப்பெறும் விடுதிகளின் விவரங்கள்:—

| ஆண்டு. | பிற்பட்ட வகுப்பினர். | | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | |
|---|---|---|---|---|
| | விடுதிகள் எண்ணிக்கை. | மாணவர்கள் எண்ணிக்கை | விடுதிகள் எண்ணிக்கை. | மாணவர்கள் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1966-67 முதல் 1969-70 வரை. | 11 | 979 | 37 | 3,619 |
| 1970-71 .. .. | 28 | 2,144 | 40 | 4,039 |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1971-72 .. .. | 81 | 5,333 | 46 | 4,369 |
| 1972-73 .. .. | 123 | 7,608 | 46 | 4,369 |
| 1973-74 .. .. | 144 | 9,348 | 54 | 5,099 |
| 1974-75 .. .. | 177 | 11,210 | 54 | 5,099 |
| 1975-76 .. .. | 196 | 12,060 | 53* | 5,069 |
| 1976-77 .. .. | 205 | 13,305 | 51* | 4,919 |
| 1977-78 .. .. | 227 | 14,060 | 54 | 5,210 |
| 1978-79 .. .. | 237 | 14,565 | 57 | 5,219 |
| 1979-80 .. .. | 261 | 5,538 | 60 | 5,369 |

*தேவையான மாணவர்கள் இல்லாததினால் 3 குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோருக்கான விடுதிகள் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான விடுதிகளாக மாற்றப்பட்டன.

(3) மேலே குறித்த 321 விடுதிகளில் 54 விடுதிகள் கல்லூரி மாணவர்களுக்கானவை.

1978-79 ஆம் ஆண்டு முதல் மாணவர்கள் விடுதியில் சேர பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் இரண்டாயிரத்திலிருந்து ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ரூபாய் 2,000 முதல் ரூ. 2,500 வரை ஆண்டு வருமானம் உடைய பெற்றோர்களின் குழந்தைகளும் பயனடைவர்.

1980-81-ல் 34 பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் விடுதியும், 2 குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர் விடுதியும் ஆக 36 புதிய விடுதிகள் திறக்கவும் மாணவர்களுக்கு உடைகள் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(4) இந்த 357 விடுதிகளையும் பராமரிக்க 1980-81-ம் ஆண்டில் ரூ. 1,64,13,000 ஒதுக்கப்பட்டுள்ளது. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு குறைந்த பட்ச மரச் சாமான்கள் (பர்னிச்சர்) வழங்குவதை நீண்டகால திட்டமாக ஏற்றுக்கொண்டு நடப்பு ஆண்டில் 1,000 கல்லூரி மாணவர்களுக்கும் 5,000 உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் மரச்சாமான்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பிற்பட்ட வகுப்பினர்.

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| 1966-67 | .. | 10,306 | 21,099 | 82.90 |
| 1967-68 | .. | 10,075 | 25,260 | 91.73 |
| 1968-69 | .. | 20,375 | 33,162 | 113.07 |
| 1969-70 | .. | 42,515 | 48,050 | 160.89 |
| 1970-71 | .. | 74,842 | 59,407 | 201.20 |
| 1971-72 | .. | 92,694 | 76,281 | 290.50 |
| 1972-73 | .. | 1,04,486 | 87,652 | 324.65 |
| 1973-74 | .. | 94,032 | 80,025 | 318.86 |
| 1974-75 | .. | 88,897 | 86,494 | 331.68 |
| 1975-76 | .. | 90,620 | 71,433 | 317.08 |
| 1976-77 | .. | 80,372 | 78,741 | 295.00 |
| 1977-78 | .. | 1,07,501* | 74,469 | 291.53 |
| 1978-79 | .. | 1,02,490* | 66,341 | 264.83 |

*குறிப்பு.—1977-78ஆம் ஆண்டிலிருந்து பள்ளி படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு படிப்பு உதவித்தொகை திட்டம் திருத்தி அமைக்கப்பட்டதனால் 1977-78 மற்றும் 1978-79ஆம் ஆண்டுகளில் அதிக மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

(iii) மேற்கண்ட விவரங்கள் பிற்பட்டோர் கல்வி வளர்ச்சிக்காக புதிதாக இத்துறை தொடங்கப்பட்ட பிறகு உதவித் தொகையினால் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதைக் காட்டும். மேலும் கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், பட்ட மேற்படிப்பு மற்றும் சட்டம் போன்ற படிப்புகளுக்கும் உதவித்தொகை வழங்கப்படுகின்றது. தகுதி பெற்ற பின்தங்கிய வகுப்பு மாணவர்களும், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களும் படிப்பு உதவித்திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். மேலும் பட்டயக் கணக்கர் (சார்ட்டர்டு அக்கவுண்டண்ட்) [illegible] பொறும்



மாணவர்கட்கு உதவித் தொகை 1973-74 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. இதன்படி 1973-74-ல் ரூ. 16,035-ம், 1977-78-ல் ரூ.29,000-ம், 1978-79-ல் ரூ.29.000-ம் செலவிடப்பட்டது. 1980-81-க்கு ரூ. 40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iv) 1977-78 ஆம் ஆண்டு முதல் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித்தொகையினை பணமாக வழங்குவதற்குப் பதிலாக குறிப்பிட்ட புத்தகங்களை நேரிடையாக வழங்கவும் தனிக் கட்டணங்களை நேரிடையாக கல்வி நிலையங்களுக்கு வழங்கவும் பள்ளி இறுதி நிலை தேர்வு எழுதும் மாணவர்களுக்குரிய தேர்வுக் கட்டணங்களை அரசு தேர்வுகள் இயக்குநருக்கு வழங்கவும் புதிய திட்டம் அமுலாக்கப்பட்டது. அரசால் நேரிடையாக செலுத்தப்படும் இச்செலவுகள் முன்பு வழங்கப் பட்ட உபகாரச் சம்பளத்திற்கு இணையாக இருக்கும்.

(v) பிற்பட்ட வகுப்பு மாணவர் பெற்று வரும் உண்டி மற்றும் உறைவிடச் செலவுகள் 1971-72லிருந்து கீழ்க்கண்ட வாறு அனுமதிக்கப்பட்டுள்ளது :—

| | சென்னையில். | | வெளியூர்களில். | |
|---|---|---|---|---|
| | *பி.வ. | **கு.ப.நீ. | பி.வ.* | கு.ப.நீ** |
| 1. கலை, விஞ்ஞானம், சட்டம். | 60 | 70 | 50 | 55 |
| 2. மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம் ஆகியவை | 60 | 75 | 55 | 70 |
| 3. தொழில் நுட்பக் கல்வி .. .. | 50 | 60 | 45 | 50 |

*பி.வ.—பின் தங்கிய வகுப்பினர்.

**கு.ப.நீ.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்.

மேற்படி விடுதியில் மாணவர்களுக்கு அனுமதிக்கப்படும்
உணவுச் செலவுத் தொகை கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது—

| (1) | சென்னை. (2) | வெளியூர். (3) |
|---|---|---|
| | (ரூபாய்) | |
| 1. கல்லூரி மாணவர் விடுதிகள் .. | 80 | 65 |
| 2. தொழிற்கல்வி மாணவர் விடுதிகள் | 80 | 65 |
| 3. இதர விடுதிகள் .. .. .. | 45 | 45 |

குறிப்பு.—(i) மாணவியருக்கு மேற்குறித்த தொகையைவிட
அதிகமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றும், மலைப் பிரதேசங்
களில் மேலும் ரூபாய் ஒன்றும் அதிகம் அளிக்கப்படுகிறது. மேலும்
சில்லறைச் செலவுகளுக்காக ஒவ்வொரு மாணவருக்கும் மாதம்
ரூ. 2 வீதமும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 1 வீதமும்
அளிக்கப்படுகிறது.

(ii) முன்பு சென்னை நகரில் உள்ள கல்லூரி மாணவர்
களுக்கு உணவுத் தொகை ரூ. 65 ஆக இருந்தது 1977 ஆம்
ஆண்டு டிசம்பர் மாதம் முதல் ரூ. 80 ஆக உயர்த்தப்பட்டது.
வெளியூர் விடுதி மாணவர்களுக்கு இத்தொகை ரூ. 55-லிருந்து
ரூ. 65 ஆக உயர்த்தப்பட்டது.

இதர விடுதி (பள்ளி விடுதி) மாணவர்களுக்கு இத் தொகை
ரூ. 40-லிருந்து ரூ. 45 ஆக 1-6-1978 முதல் உயர்த்தப்பட்டது.

1980-81 ஆம் ஆண்டு முதல் தொழிற் கல்லூரி விடுதி
களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான செவுத் தொகை
கல்லூரி விடுதி மாணவர்களுக்கு இணையாக உயர்த்தப்பட்டது.

(5) மாணவர் விடுதிகளுக்கான கட்டிடங்கள்.—மாணவர்
விடுதிகளுக்கான கட்டிடங்களைக் கட்டும் பொறுப்பைத்
தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் ஏற்றுக்
கொண்டு தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கட்டப்பட்ட
வகுப்பு மாணவர்களுக்காக 50 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.
இந்த 50 விடுதிகளில் 23 விடுதிகளில் முடிக்கப்பட்டு திறக்கப்
பட்டுள்ளன மேலும் 5 விடுதிகள் அரிசன நல விடுதியுடன்
கூடிய ஒரே கட்டடமாக கட்டப்பட்டு செயல்படுகின்றன.



9. (i) பள்ளிகள்.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்
பட்ட இனத்து மாணவர்களுக்காக செயல்பட்டு வரும் 275 பள்ளி
களின் விவரம் மாவட்ட வாரியாக கீழே தரப்பட்டுள்ளது:—

| மாவட்டங்கள். | மேல் உயர் நிலைப்பள்ளி. | | உயர் நிலைப் பள்ளி. | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவ மாணவியர். | எண்ணிக்கை. | மாணவ மாணவியர். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| வட ஆற்காடு .. | .. | .. | .. | .. |
| தென்னாற்காடு .. | .. | .. | .. | .. |
| மதுரை (க.சீ.) .. | 1 | 333 | 9 | 2,652 |
| இராமநாதபுரம் .. | .. | .. | .. | .. |
| திருநெல்வேலி .. | .. | .. | .. | .. |
| சேலம் .. .. | .. | .. | .. | .. |
| கோவை .. .. | .. | .. | .. | .. |
| தர்மபுரி .. .. | | .. | | |
| மொத்தம் .. | 1 | 333 | 9 | 2,652 |

| மாவட்டங்கள். | நடுநிலைப் பள்ளிகள். | | ஆரம்பப் பள்ளிகள். | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவ மாணவியர். | எண்ணிக்கை. | மாணவ மாணவியர். |
| (1) | (2) | (3) | (4) | 5) |
| வட ஆற்காடு .. | .. | .. | 0 | 469 |
| தென்னாற்காடு .. | .. | .. | 1 | 304 |
| மதுரை (க.சீ.) .. | 31 | 2,014 | 206 | 30,206 |
| இராமநாதபுரம் .. | 1 | 390 | 5 | 1,013 |
| திருநெல்வேலி .. | 1 | 244 | 9 | 1,004 |
| சேலம் .. .. | 1 | .. | 2 | 358 |
| கோவை .. .. | 1 | 267 | 1 | 56 |
| தர்மபுரி .. | 1 | 85 | 2 | 210 |
| மொத்தம் .. | 35 | 13,002 | 230 | 33,620 |

கல்விச் சுற்றுப் பயணம்.—குற்ற பரபினர் பட்டியலிலிருந்து
நீக்கப்பட்ட இனத்தவர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின்
பொது அறிவு மற்றும் பாட அறிவு வளர்வதற்காக 1979-80ம்
ஆண்டிலிருந்து அவர்கள் கல்விச் சுற்றுப்பயணம் அழைத்துச்
செல்லப்படுகின்றனர்.

பகுதி நேரப் போதனை.—பிற்பட்ட வகுப்பினர் மற்றும்
குற்ற பரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவ
மாணவியர் உணவு இல்லங்களில் சேர்ந்து படிக்கும் ஒன்பதாம்
மற்றும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை வகுப்பு மாணவ
மாணவியரின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காகவும் அவர்கள்
சமூகம் மற்ற பள்ளிகளில் படிக்கும் மணவர்களுக்குச்
சரிசமமான அறிவினைப் பெறவும் 1979-80 முதல் பகுதி
நேர போதனை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

10. மதிய உணவு.—குற்ற பரபினர் பட்டியலிலிருந்து
நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் தம் வறுமையின் காரணமாக
பள்ளிகளில் தொடர்ந்து படிப்பதில்லை.
களை விட்டுச் செல்லாமல் இருப்பதற்குத் தூண்டுகோலாக இப்
பள்ளிகளில் அம்மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. அவர்கள் பள்ளி
ஒரு மதிய உணவின் விலை 22 காசுகள். திருநெல்வேலி மற்றும்
இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள அரசினர் அல்லாத
தனியார் பள்ளிக்கூடங்களில் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து
நீக்கப்பட்ட இனத்து மாணவர்களை இடம் பகுதியினராக
கொண்டு காரணத்தால் அம்மாவட்டங்களில் உள்ள பள்ளி
இல் மதிய உணவு 1975 76 முடிய வழங்கப்பட்டது. இதனால்
மாணவர்கள் தொடர்ந்து படிக்க ஊக்கம் ஏற்பட்டுள்ளது. அரசு
குறைந்த அதிகச் செலவினை தவிர்க்க அம்மாணவர்களுக்கு
கேர் நிறுவனத்தின் மூலமாக மதிய உணவு வழங்கும்படி
உத்தரவிட்டுள்ளது. இது அரசுப் பள்ளிகளில் மார்ச் 1975
முதற்கொண்டும் திருநெல்வேலி இராமநாதபுரம் ஆகிய
மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் சனவரி 1976
முதற்கொண்டும் நடைமுறையில் உள்ளது.

11. உணவு மானியங்கள்—(1) பள்ளிப்படிப்பு.—தனிப்பட்ட
நபர்களாலும் சமூக நல நிலையங்களாலும் நடத்தப்படும்
தனியார் விடுதிகளில் தங்கி உள்ள பள்ளி மாணவர்களுக்கு
1955-56 வரை அரிசன நலத்துறை உணவு மானியம் வழங்கி
வந்தது. 1956-57 முதல் இம்மாதிரி தனியாரின் உணவு விடுதி
களை புதியதாக அங்கீகரிக்கவேண்டாம் என்று அரசு முடிவு
செய்து தேவையான இடங்களில் அரசே விடுதிகளை திறந்து
வருகின்றது. மற்றும் ஒழுங்காகப் பராமரிக்கபபடாத தனியார்
விடுதிகளையும் அரசே எடுத்து அரசாங்க விடுதிகளாக மாற்றி
நடத்தப்படுகின்றன. தற்பொழுது தனியார் உணவு விடுதிகள்
4C உள்ளன. இவைகளில் ஒரு மாணவருக்கு மாதமொன்
றுக்கு ரூ. 25 வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியம் 1978-ம்



ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் முடிய வழங்கப்பட்டது.
1970-75-க்கு முன்பாக இந்த மானியம் ரூ. 20 ஆக இருந்தது
1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் முதல் இத்தொகை
சென்னை மற்றும் மாவட்ட, வட்ட தலை நகரங்களில் உள்ள
விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு ரூபாய் 25-லிருந்து ரூபாய்
35 ஆகவும் மற்ற இடங்களில் உள்ள விடுதிகளில் உள்ள மாண
வர்களுக்கு ரூ. 26 லிருந்து ரூ. 30 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
உணவு மானியம் பெறும் விடுதிகளில் தங்கிப்படிக்கும்
மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் வரம்பு
ரூபாய் இரண்டாயிரத்திலிருந்து ரூபாய் இரண்டாயிரத்து
ஐந்நூற்றுக்கு 1978-79 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்
டுள்ளது. 1980-81-ம் ஆண்டுக்கு ரூபாய் 7,56,000 ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

(2) கல்லூரிப்படிப்பு.—கல்லூரிகளில் படிக்கும் மாணவர்
களுக்கு இவ்வுணவு மானியம் வழங்கப்படுவதில்லை. இந்த
மாணவர்கள் கல்லூரியைச் சார்ந்த விடுதிகளில் தங்கிப் படித்
தாலும் கல்லூரியினர் அங்கீகாரம் செய்த விடுதிகளில் தங்கிப்
பயத்தாலும் கல்வித் துறையினர் அல்லது அரிசன நலத்துறை
மற்றும் பிற்பட்டோர் நலத்துறையின் அங்கீகாரம் பெற்றுள்ள
விடுதிகளில் தங்கிப் படித்தாலும் அவர்களுக்கு படிப்பு உதவித்
தொகையுடன் உணவுச் செலவுக்கான தொகை வழங்கப்படு
கிறது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளின் விவரம்:—

| மாவட்டம். | விடுதிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. சென்னை .. .. .. .. .. | 7 |
| 2. வட ஆற்காடு .. .. .. .. | 7 |
| 3. திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 43 |
| 4. புதுக்கோட்டை .. .. .. | 7 |
| 5. மதுரை .. .. .. .. .. | 2 |
| 6. கோயம்புத்தூர் .. .. .. .. | 2 |
| 7. தஞ்சாவூர் .. .. .. .. .. | 2 |
| மொத்தம் .. | 70 |

தற்போது பதிதாக எந்தத் தனியார் விடுதியையும் அங்கீகா
இல்லை என அரசு முடிவெடுத்துள்ளது. இம்மாணவர்களு
உண்டி மற்றும் உதவித்தொகை பத்தி 6(V)-ல் குறிப்பிட்டு
விகிதத்தில் வழங்கப்படுகிறது.

**12. புத்தகங்களும் எழுதும் பலகைகளும்.**—அரசினர் நடத்
தும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோடு
பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் புத்தகங்களும்
எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ்வாறு
இலவச உதவி பெற்ற மாணவர்கள் 1969-70-ல் 7,600.
இதனால் பயன் பெறும் மாணவர்கள் எண்ணிக்கை ஆண்டு
தோறும் அதிகரித்துள்ளது. 9-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு
வரை புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்பட்டு
வருகின்றன. ஆரம்ப பள்ளிகளில் முதல் வகுப்பு முதல்
மூன்றாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாக
புத்தகம் மற்றும் எழுது பலகைகள் அளிக்கப்படுகின்றன.
இதனால் 1979-80 ஆம் ஆண்டில் பயன் பெற்ற மாணவர்கள்
எண்ணிக்கை 14,000 ஆகும். 1980-81-ல் பயன் பெறும்
மாணவர்களின் எண்ணிக்கை 17,000 ஆக உயரலாம்.

**13.(1) சீருடைகள் வழங்குதல்.**—குற்ற மரபினர் பட்டி
யலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் பள்ளிகளிலும் உணவுவிடுதி
களிலும் உள்ள எல்லா மாணவ மாணவியருக்கும் ஒவ்வொரு
ஆண்டும் இரண்டு முறை உடைகள் வழங்கப்படுகின்றன.
முதல் முறை பள்ளி ஆரம்பித்த உடன் அல்லது தீபாவளிக்கு
முன்பாகவும். இரண்டாவது முறை பொங்கல் சமயத்திலும்
வழங்கப்படுகிறது. முதல் முதலாக இவ்வாறு இலவச சீருடை
கள் வழங்கும் திட்டம் மதுரை மாவட்டத்தில் 1969-70 ஆம்
ஆண்டு துவக்கப்பட்டது. அப்பொழுது கள்ளர் வகுப்பினர்
பள்ளிகளில் படிக்கும் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு மாணவர்
களுக்கு ஒரு முறை மட்டும் சீருடைகள் வழங்கப்பட்டது.
போது இரு முறை வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக இப்
1972-73-ல் ரூ. 3,91,000-ம் 1973-74-ல் ரூ. 8,06,0000-ம் 1974-
75-ல் ரூ. 6,58,000-ம் 1975-76-ல் ரூபாய் 10,39,000-ம் 1976-
77-ல் ரூ. 8,94,000-ம் 1977-78-ல் ரூ. 10,47,000-ம் 1978-79-ல்
ரூபாய் 9,37,000 செலவிடப்பட்டுள்ளது. 1979-80ல்
திருத்திய மதிப்பீட்டில் ரூ. 12,10,000-ம் 1980-81-ல்
ரூ. 12,11,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 1971-72 முதல் அரசினர் நடத்தும் பிற்பட்ட வகுப்பு
மாணவர் உணவு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும்,
மாணவிகளுக்கும் ஆண்டு தோறும் இரண்டு முறை சீருடைகள்
அளிக்கப்படுகின்றன. இதற்கு 1973-74-ல் ரூ. 1,67,000-ம்
1974-75-ல் 2,16,000மும் 1975-76-ல் ரூ. 2,38 000
1976-77-ல் ரூ. 2,98,000மும், 1977-78-ல் ரூ. 3,03,000மும்,
1978-79-ல் ரூ 3,80,000மும் செலவிடப்பட்டது. 1980-81-ல்
ரூ. 5,50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(2) நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி
அளித்தல்** :—கல்லூரிகளில் படித்து அதிக மதிப்பெண்கள்பெற்ற
பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் குற்ற மரபினர்



பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும்
பாங்கள் எடுத்துள்ள பாடத்தில் அதிகத் திறமை பெற 1975-76ம்
ஆண்டு முதல் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம்
சென்ற மூன்று ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது இதற்கு
1980-81 ஆம் ஆண்டிற்கு ரூ. 40,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் 8வது வகுப்புத் தேர்விலும், உயர்நிலைப்பள்ளி
இறுதித் தேர்விலும் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்பட்ட
வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டு தோறும் இரண்டு பரிசுகள்
(முதற் பரிசு ஒன்றும், இரண்டாவது பரிசு ஒன்றும்) வழங்கப்படு
கின்றன. இப்பரிசுகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு
உண்டு இதற்காக இவ்வாண்டிற்கு ரூபாய் 4,000 ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

**14. ஆசிரியர்கட்கு வீடுகள்.**—குற்ற மரபினர் பட்டியலி
லிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக நடத்தப்படும் பள்ளி
களில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக்
கொடுக்க ஒரு திட்டம் உள்ளது. இதன்படி ஒவ்வொரு ஆசிரி
யருக்கு ரூ. 10,000 மதிப்பில் ஒரு வீடு கட்டிக் கொடுக்கப்
படுகிறது. 1980-81 ஆம் ஆண்டில் 10 வீடுகள் கட்டுவதற்கு
ரூ. 1.45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**15. ஐ.ஏ.எஸ். ஐ.பி. எஸ். மற்றும் அரசு உயர் பணி
களுக்கான பயிற்சிக் கூடம்.**—1971 ஆம் ஆண்டு டிசம்பர்
மாதத்தில பிற்பட்ட வகுப்பு மாணவர்களை இந்திய ஆட்சிப்
பணி, இந்திய காவல் பணி மற்றும் உயர் அரசு பணிகளுக்கான
தேர்வுகள் எழுத பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி
நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட
(1971-72 ஆம் ) ஆண்டில் 12 மாணவர்கள் சேர்ந்தனர். இதில்
8 பேர் தேர்வுக்குச் சென்றனர், 3 பேர் நேர்முக தேர்வுக்குச்
சென்றனர். ஆனால் எவரும் தேர்ச்சி பெறவில்லை. 1972-73ல்
50 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். 34 பேர் தேர்வு
எழுதினர். 6 பேர் நேர்முக தேர்வுக்குச் சென்றனர். இதில்
ஒருவர் இந்திய ஆட்சி பணிக்கும் இருவர் மத்திய அரசுப்
பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1973-74ல் 33 பேர்
பரிட்சை எழுதினர். 4 பேர் நேர்முக தேர்வுக்குத் தேர்ந்
தெடுக்கப்பட்டனர். இதில் ஒருவர் இந்திய ஆட்சிப் பணிக்கும்
ஒருவர் மத்திய அரசு பணிக்கும், தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
1974-75-ல் 51 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 41 பேர் தேர்வு
எழுதினார்கள். இதில் 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
கடைசியாக ஒருவர் இந்திய காவல் பணிக்கு, இருவர் மத்திய
அரசுப் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1975-76-ல்
60 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 3 பேர் தேர்வு செய்யப்பட்
டுள்ளனர். 1976-77-ல் 40 மாணவர்கள் சேர்க்கப்பட்டு
32 மாணவர்கள் தேர்வு எழுதினர். இதில் இருவர் மத்திய
அரசு பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1977-78-ல்

(2) 1979-80 ஆம் ஆண்டிற்கு (திருத்திய மதிப்பீடு) இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 13,00,000 மும் 1980—81ம் ஆண்டிற்கு ரூபாய் 13,00,000மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவை தவிர சலவைத்தொழிலாளர்கள் இயங்கும் சலவை யகம் நடத்த பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து கடன் பெறுவதற் காக ஒவ்வொரு நபருக்கும் ரூபாய் 165 மான்யமாக வழங்கவும் ரூபாய் 1,050 மதிப்பளவில் சலவையகம் தொடங்குவதற்கு வங்கியிலிருந்து கடன் பெற வசதியாக சலவைத் தொழிலாளர் களுக்கு மேற்படி தொகையில் 20 விழுக்காடான ரூபாய் 210 மான்யமாகவும் வழங்கப்படுகிறது. 1980-81 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 10.010 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போயர்களுக்கு இலவச தொழில் கருவிகள் வழங்கும்பொருட்டு 1979-80-க்கு ரூபாய் 25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஒரு செட் தொழில் கருவிகளின் விலை ரூபாய் 100 ஆகும். இத்திட்டம் முதலில் சேலம், தென்னாற்காடு, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டது. இது 1979-80 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு, வடாற்காடு, தருமபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள் ளது. 1979-80 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 25,000-மும் 1980-81க்கு ரூபாய் 25,000மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(3) சலவைத் துறைகள் கட்டுதல்.—சலவைத் தொழிலா ளர்கள் தங்கள் தொழிலைத் திறம்படச்செய்வதற்கு சில இடங் களில் சலவைத் துறைகள் தேவையாக உள்ளன. இவைகளை சுகாதார முறைகளில் அமைப்பதற்காக பேரூராட்சிகளுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மொத்தச் செலவில் பாதித் தொகை கடனாகவும், மீதித்தொகை மானியமாகவும் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 48 இடங் களில் சலவைத் துறைகள் கட்ட நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு (1980-81) ஆண்டிலிருந்து மாநகராட்சிகளையும் இந்தத் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற அங்கீகரித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(4) சென்ற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 3 பொது நோக்கு பொறியியல் பணி மனைகள் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களின் உயர்வு கருதி தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இவைகள் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட் டம் செக்கானூரணியிலும், திருநெல்வேலி மாவட்டம் வீர கேரளம்பு தூரிலும் அமைந்துள்ளன. இவை தொழில் வணிகத் துறை இயக்குநரின் மேற்பார்வையில் உள்ளன. இவைகளில் பற்ற வைத்தல், சேர்த்தல் ஆகிய துறைகளில் 18 மாத காலம் பயிற்சி



அளிக்கப்படுகிறது. மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் பொது நோக்கு பொறியியல் பணிமனை ஆரம்பிக்கப்பட இருக்கிறது. பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவரின் நலத்திற்காக கீழ்க்கண்ட இடங்களில் தொழிற்பயிற்சிக் கூடங்கள் நடத்தப்படுகின்றன:—

1. தையல் மற்றும் ஆயத்த ஆடைகள் பயிற்சிக் கூடம், ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம்.

2. தையல் பயிற்சிக் கூடம், செக்கானூரணி, மதுரை மாவட்டம்.

3. பிரம்பு மற்றும் நார்ப் பொருள்கள் செய்யும் பயிற்சி நிலையம் (1) தக்கலை, (2) குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

மேலும் 1978-79-ஆம் ஆண்டில் தையல் பயிற்சி அளிப்பதற் காக புதியதாக 5 தையல் பயிற்சிக் கூடங்கள் கீழ்க்கண்ட இடங் களில் ஆரம்பித்து, நிலையம் ஒன்றில் 20 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.—

| | |
|---|---|
| கிருஷ்ணன் கோயில் .. | கன்னியாகுமரி மாவட்டம். |
| அஜீஸ் நகர் குடியிருப்பு | தென்னாற்காடு மாவட்டம். |
| கம்பம் .. .. .. | மதுரை மாவட்டம. |
| கடலாடி .. .. | இராமநாதபுரம் மாவட்டம். |
| தேவர் குளம் .. .. | திருநெல்வேலி மாவட்டம். |

இப்பயிற்சிக் கூடங்களை பராமரிப்பதற்காக ரூ.5.76 இலட்சம் செலவிடப்பட்டது. 1979-80-ல் திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 5.71 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1980-81-ல் இதற்காக ரூபாய் 6.78 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. விவசாயம்.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட இனத்தவர் விவசாயம் செய்து முன்னேறுவதற்காக அவர் களுக்குக் பாசன கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு கிணற்றிற்கு ரூபாய் 2,500 வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. 1979-80-க்கு திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 1 லட்சத்து 51 ஆயிரமும், 1980-81 மதிப்பீட்டில் ரூபாய் 1,51,000-ம் ஒதுக்கப்பட்டுள்ளன.

18. சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் இதர திட்டங்கள்:— 1956-57-ஆம் ஆண்டு முதல் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக கடன் மற்றும் மானிய அடிப்படை யில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது.

முன்னர் ஒரு வீடு ரூபாய் 1.200 மதிப்பில் கட்டப்பட்டது. இதில் கடன் ரூபாய் 300. மானியம் ரூபாய் 900. 1975-76 ஆம் ஆண்டிலிருந்து வீடு கட்டுவதற்கான மொத்தத் தொகை ரூபாய் 2,700 ஆக உயர்த்தப்பட்டது. இதில், ரூபாய் 2,025 மானிய மாகவும், ரூபாய் 675 (பொருளாகவோ, உழைப்பாகவோ, பணமாகவோ) பயனடைவோர் பங்காகவும் இருந்தது. இத் தொகை 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 4,300 ஆக உயர்த்தப் பட்டு அதில் மானியம் ரூபாய் 3,225 ஆகவும், பயனடைவோர் பங்கு ரூபாய் 1,075 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 1979-80ஆம் ஆண்டில் 665 வீடுகள் டாட்கோ நிறுவனம் மூலமாக கட்டுவதற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1979-80க்கு ரூபாய் 10,00,000-ம் 1980-81-க்கு ரூபாய் 10,00,000 மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19. <u>குழந்தைகள் காப்பகம்</u>.— அஜீஸ் நகர் குடியிருப்பில் குற்ற மரபினர் பட்டியலிருந்து நீக்கப்பட்ட இனத்தவரின் 6 வய திற்குட்பட்ட குழந்தைகளை சரியாக பராமரிக்கும் பொருட்டு அஜீஸ் நகரில் 5 குழந்தைகள் காப்பகங்கள் 1977-78 ஆம் ஆண் டில் திறக்கப்பட்டு உள்ளன. இவை சமூக நலத்துறை இயக்கு நரின் மேற்பார்வையில் இயங்குகின்றன. இவைகளுக்கான செல வினை பிற்பட்டோர் நலத்துறை ஏற்கிறது. "கேர்" நிறு வனத்தின் உதவியும் இவைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இவை களில் 350 தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது. ஐந்து பால சேவகிகளுக்கு பயிற்சி அளிக்கப் படுகிறது. இத்திட்டத்திற்காக 1979-80 திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 15,000-ம் 1980-81-க்கு ரூபாய் 16,000மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக பிற்பட்ட வகுப்பு மக்களின் வாழ்க்கைத்தரத் தினை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. எனவே பிற்பட்டோர் மானியக் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிக் கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்,
நிதி அமைச்சர்.



கொள்கை விளக்கக் குறிப்பு 1980-81 ஆம் ஆண்டு—
1980-81-ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு.

(ரூபாய் ஆயிரத்தில்)

மொத்தம் .. 7,60,68

திட்டத்தில்—7,19,07.

நிர்வாகத்தில்—41,61.

| திட்டங்களின் பெயர். | ஐந்தாண்டுத் திட்டத்தில்—1,18.15. | | திட்டத்தில் இல்லாதவை—6,00,92 | |
|---|---|---|---|---|
| | பிற்பட்ட வகுப்பினருக்காக. | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. | பிற்பட்ட வகுப்பினருக்காக. | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. |
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| உதவித் தொகை .. | 8,61 | 4,33 | 3,25,67 | 34,67 |
| பள்ளிகள் .. .. | .. | 2,00 | .. | 98,29 |
| மதிய உணவு .. | .. | 2,65 | .. | 7,00 |
| புத்தகம் மற்றும் துணி | 3,46 | 12,60 | 2,04 | 4,02 |
| உணவு மானியம் .. | 51 | .. | 6,84 | 21 |
| விடுதிகள் .. .. | 46,18 | 4,21 | 86,92 | 26,62 |

42 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 34 மாணவர்கள் தேர்வு எழுதினர். அதில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1978-79ஆம் ஆண்டில் 49 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். இவர்களில் 12 பேரும் பழைய மாணவர்களில் 4 பேரும் ஆக 16 பேர் இறுதி தேர்வுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களில் 4 பேர் தேர்ச்சி பெற்றனர். இவர்கள் நேர்முக தேர்வுக்குச் சென்ற தில் 8-வது அணியைச் சேர்ந்த ஒருவரும் மற்றும் 6 ஆவது 7 ஆவது அணியைச் சேர்ந்த இருவரும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இது தவிர இந்நிலையத்தில் பயிற்சி பெற்ற 19 மாணவர்கள் பல்வேறு துறைகளில் கீழ்க் கண்டவாறு பதவி பெற்றனர்:—

| | | |
|---|---|---|
| 1. | துணை ஆட்சியாளர்கள் .. .. | 3 |
| 2. | இணை வணிக வரி அலுவலர் .. .. | 1 |
| 3. | துணை பேராசிரியர்கள் .. .. | 7 |
| 4. | ரிசர்வ் வங்கி பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அரசு உடமையாக்கப்பட்ட வங்கிகள் (இளநிலை அலுவலர்). | 3 |
| 5. | வருமான வரி முதல் வகுப்பு அலுவலர் .. | 1 |
| 6. | காப்பீட்டுக்கழக பயிற்சி அலுவலர் .. | 1 |
| 7. | மாவட்ட கல்வி அலுவலர் .. .. | 1 |
| 8. | கல்வெட்டுக் கலை உதவி அலுவலர் (கர்நாடக அரசு). | 1 |
| 9. | எண்ணெய் மற்றும் இயற்கை வாயு கழகம் | 1 |

ஒன்பது ஆண்டாகிய 1980 ஆம் ஆண்டில் 49 பேர் பூர்வாங்கத் தேர்வு எழுத உள்ளார்கள்.

சென்னையிலுள்ள இந்தப் பயிற்சிக் கல்லூரிக்கு இறுதித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்து அனுப்புவதற்காக, மதுரை, திருநெல்வேலி, கோவை திருச்சி ஆகிய ஒவ்வொரு நகரங்களிலும் 50 மாணவர்களைக் கொண்ட ஒரு மாலை நேர துணைப் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து அங்கு பூர்வாங்க தேர்வுக்கு மாணவர்களைத் தயார்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த துணைப் பயிற்சி நிலையங்கள் சனவரி 1981 முதல் செயல்படத் தொடங்கும்.



மேலும் இந்திய அரசின் தேர்வாணைக் குழு நடத்தும் அகில இந்திய தேர்வுகளில் ஒன்றான தேசிய பாதுகாப்பு கல்லூரித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்காக ஒரு தனிப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதில் 15 பிற்பட்ட மாணவர்களுக்கும் 15 அரிசன, பழங்குடி மாணவர்களுக்கும் இடம் அளிக்கப்படுகிறது. அம்மாணவர்களுக்குக் கைச் செலவுக் காகவும் போக்குவரத்து செலவுக்காகவும் மாதம் ரூ. 50 வழங்கப் படுகிறது. இதில் முந்தைய வருடங்களில் மூவர் தேர்ச்சிபெற் றிருந்தனர். 1977-78-ல் இருவர் தேர்ச்சி பெற்றுள்ளனர். 1978-79 ஆம் ஆண்டில் மூவர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

16. பொருளாதார வளர்ச்சி :—(1) இத்திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கும் அவர முடிதிருத்துவோருக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் அவர வர் தொழில்களை செய்து வர தொழிற் கல்விகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1971-72 வரை வெளி மாவட்டங்களிலும் 1971-72 முதல் சென்னை உட்பட எல்லா இடங்களிலும் அமுலாக்கப்படுகிறது. சென்ற ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்தோரின் எண்ணிக்கை :—

| ஆண்டு. | பயனடைந்த நபர்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1966—67 .. .. .. .. .. | 1,440 |
| 1967—68 .. .. .. .. .. | 1,425 |
| 1968—69 .. .. .. .. .. | 1,498 |
| 1969—70 .. .. .. .. .. | 1,542 |
| 1970—71 .. .. .. .. .. | 1,512 |
| 1971—72 .. .. .. .. .. | 1,633 |
| 1972—73 .. .. .. .. .. | 1,654 |
| 1973—74 .. .. .. .. .. | 4.081 |
| 1974—75 .. .. .. .. .. | 3,961 |
| 1975—76 .. .. .. .. .. | 3,505 |
| 1976—77 .. .. .. .. .. | 3,695 |
| 1977—78 .. .. .. .. .. | 4,075 |
| 1978—79 .. .. .. .. .. | 7,240 |
| 1979—80 .. .. .. .. .. | 8,000 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| பல்கலைக் கழகத்திற்கு மானியம். | .. | .. | 3,00 | .. |
| ஆசிரியர்களுக்கு வீடுகள் | .. | 1,45 | .. | .. |
| விவசாயம் .. .. | .. | 1 51 | .. | .. |
| தொழில் பயிற்சி .. | 29 | 5,28 | 71 | 50 |
| இலவச கருவிகள் .. | 13,35 | 25 | .. | .. |
| குடிநீர் .. .. | .. | .. | .. | 1 |
| சலவைத் துறை .. | 1,25 | .. | .. | .. |
| தனிப்பயிற்சி நிலையம் | .. | .. | 3,42 | .. |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கு வீடுகள். | .. | 1,000 | .. | .. |
| சிறப்புப் பயிற்சி .. | .. | .. | 40 | .. |
| பட்டய கணக்கர் படிப்பு | .. | .. | 40 | .. |
| சிறந்த மாணவர்களுக்கு பரிசு. | 4 | .. | .. | .. |
| நரிக்குறவர்களுக்கு வீடுகள். | .. | 1 | .. | .. |
| குழந்தைகள் காப்பகம் | .. | 16 | .. | .. |
| விடுதிகள் கட்டுதல் .. | 1 | .. | .. | .. |
| மொத்தம் .. | 73,70 | 44,45 | 4,29,40 | 1,71,52 |



## அட்டவணை ஆ.

## அரசு பிற்பட்டோர் விடுதிகள்

1979–80

### சென்னை மாவட்டம்.

| | | மொத்தம் |
|---|---|---|
| 1. | கல்லூரி மாணவர் விடுதி, தென் சென்னை .. | 105 |
| 2. | கல்லூரி மாணவர் விடுதி, தியாகராயநகர் .. | 105 |
| 3. | கல்லூரி மாணவர் விடுதி, வட சென்னை .. | 155 |
| 4. | தொழிற் பயிற்சி விடுதி, வாழைமாநகர் .. | 55 |
| 5. | மாணவியர் விடுதி, அடையார் .. .. | 125 |
| 6. | மாணவியர் விடுதி, திருவல்லிக்கேணி .. .. | 70 |

### திருநெல்வேலி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 7. | கல்லூரி மாணவர் விடுதி, தூத்துக்குடி .. | 50 |
| 8. | கல்லூரி மாணவர் விடுதி, திருநெல்வேலி .. | 50 |
| 9. | கல்லூரி மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை | 40 |
| 10. | மீனவர் மாணவர் விடுதி, தூத்துக்குடி .. .. | 150 |
| 11. | மாணவர் விடுதி, ஏருவாடி .. .. .. | 30 |
| 12. | மாணவர் விடுதி, பணிக்க நாடார் குடியிருப்பு | 150 |
| 13. | மாணவர் விடுதி, சாமிநாதபுரம் .. .. | 49 |
| 14. | மாணவர் விடுதி, மேலப்பாளையம் .. .. | 50 |
| 15. | மாணவர் விடுதி, இடிந்தகரை .. .. .. | 90 |
| 16. | மாணவர் விடுதி, மணப்பாடு .. .. .. | 60 |
| 17. | மாணவர் விடுதி, விளாத்திகுளம் .. .. | 40 |

[1980 ஜூலை 29

## திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி.

| | | மொத்தம் |
|---|---|---|
| 18. | மாணவர் விடுதி, பழவூர் .. .. .. | 50 |
| 19. | மாணவர் விடுதி, எட்டையாபுரம் .. .. | 50 |
| 20. | மாணவியர் விடுதி, புதூர் .. .. .. | 75 |
| 21. | மாணவியர் விடுதி, நாங்குநேரி .. .. | 40 |
| 22. | மாணவியர் விடுதி, தூத்துக்குடி .. .. | 50 |
| 23. | மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை .. | 50 |
| 24. | மாணவர் விடுதி, பேட்டை .. .. . | 50 |
| 25. | மாணவர் விடுதி, கோட்டப்புளி . | 50 |
| 26. | மாணவர் விடுதி, கழுகுமலை . | 50 |
| 27. | மாணவர் விடுதி, இடைக்கலம் .. . | 50 |
| 28. | மாணவியர் விடுதி, பணிக்க நாடார் குடியிருப்பு | 50 |

## தஞ்சாவூர் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 29. | கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்-1 | 175 |
| 30. | கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்-2 | |
| 31. | கல்லூரி மாணவர் விடுதி, கும்பகோணம் . | 50 |
| 32. | கல்லூரி மாணவர் விடுதி, திருவாரூர் . | 50 |
| 33. | கல்லூரி மாணவியர் விடுதி, மாயூரம் . .. | 50 |
| 34. | கல்லூரி மாணவியர் விடுதி, தஞ்சாவூர் .. | 40 |
| 35. | மாணவர் விடுதி, மகாதேவப்பட்டினம் .. | 50 |
| 36. | மாணவர் விடுதி, பேராவூரணி .. .. | 50 |



1980 ஜூலை 29]

## தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | மொத்தம் |
|---|---|---|
| 37. | மாணவர் விடுதி, மன்னார்குடி .. .. .. | 100 |
| 38. | மாணவர் விடுதி, நீடாமங்கலம் .. .. | 175 |
| 39. | மாணவர் விடுதி, உம்பளச்சேரி .. .. | 80 |
| 40. | மாணவர் விடுதி, வேதாரண்யம் .. .. | 50 |
| 41. | மாணவர் விடுதி, ஆலத்தூர் .. .. .. | 40 |
| 42. | மாணவர் விடுதி, கண்ணத்தான்குடி .. .. | 50 |
| 43. | மாணவர் விடுதி, மாயூரம் .. .. .. | 75 |
| 44. | மாணவர் விடுதி, மதுக்கூர் .. .. .. | 40 |
| 45. | மாணவர் விடுதி, செம்பனார் கோயில் .. .. | 50 |
| 46. | மாணவர் விடுதி, பூம்புகார் .. .. .. | 50 |
| 47. | மாணவர் விடுதி, களி .. .. .. | 50 |
| 48. | மாணவர் விடுதி, பாபநாசம் .. .. | 50 |
| 49. | மாணவியர் விடுதி, வலங்கைமான் .. .. | 50 |
| 50. | மாணவியர் விடுதி, நன்னிலம் .. .. .. | 40 |
| 51. | மாணவியர் விடுதி, குற்றாலம் .. .. .. | 50 |
| 52. | மாணவர் விடுதி, ஈச்சங்கோட்டை .. .. | 50 |
| 53. | கல்லூரி மாணவியர் விடுதி, கும்பகோணம். | 50 |
| 54. | மாணவியர் விடுதி, நாகப்பட்டினம் .. .. | 50 |

## தென்னாற்காடு மாவட்டம்.

| | மொத்தம் |
|---|---|
| 55. கல்லூரி மாணவர் விடுதி, கடலூர் .. | 75 |
| 56. கல்லூரி மாணவர் விடுதி, திண்டிவனம் .. | 50 |
| 57. கல்லூரி மாணவர் விடுதி, விருத்தாசலம் .. | 150 |
| 58. கல்லூரி மாணவியர் விடுதி, கடலூர் .. .. | 50 |
| 59. மாணவர் விடுதி, விருத்தாசலம் .. .. | 100 |
| 60. மாணவர் விடுதி, பெண்ணாடம் .. .. | 90 |
| 61. மாணவர் விடுதி, பெரியகுப்பம் .. .. | 70 |
| 62. மாணவர் விடுதி, சேத்தியாதோப்பு .. .. | 140 |
| 63. மாணவர் விடுதி, திருநாவலூர் .. .. | 50 |
| 64. மாணவர் விடுதி, சிறுபாக்கம் .. .. .. | 75 |
| 65. மாணவர் விடுதி, கும்மாவரம் .. .. .. | 50 |
| 66. மாணவர் விடுதி, தேவபண்டலம் .. .. | 50 |
| 67. மாணவர் விடுதி, சோமந்தார்குடி .. .. | 50 |
| 68. மாணவர் விடுதி, வடக்கநேந்தல் .. .. | 50 |
| 69. மாணவர் விடுதி, தொழுதூர் (தற்போது புவனகிரி) | 50 |
| 70. மாணவியர் விடுதி, பரங்கிப்பேட்டை (தற்போது புவனகிரி). | 40 |
| 71. மாணவியர் விடுதி, தியாகதுர்க்கம் .. .. | 50 |
| 72. மாணவர் விடுதி, இல்லோடு .. .. .. | 50 |
| 73. மாணவர் விடுதி, சித்தலிங்கமடம் .. .. | 50 |



## மதுரை மாவட்டம்.

| | மொத்தம் |
|---|---|
| 74. கல்லூரி மாணவர் விடுதி, மதுரை .. .. | 50 |
| 75. கல்லூரி மாணவர் விடுதி, திண்டுக்கல் .. .. | 50 |
| 76. கல்லூரி மாணவர் விடுதி, மேலூர் .. .. | 100 |
| 77. கல்லூரி மாணவியர் விடுதி, மதுரை .. .. | 40 |
| 78. மாணவர் விடுதி, அலங்காநல்லூர் .. .. | 104 |
| 79. மாணவர் விடுதி, திருநகர் .. .. .. | 80 |
| 80. மாணவர் விடுதி, தல்லாகுளம் .. .. .. | 110 |
| 81. மாணவர் விடுதி, தர்மபுரி (பெரியகுளம் தாலூகா) | 60 |
| 82. மாணவர் விடுதி, பெரியகுளம் .. .. .. | 80 |
| 83. மாணவர் விடுதி சேக்காப்பட்டி . . | 75 |
| 84. மாணவர் விடுதி, திருமங்கலம் .. .. .. | 50 |
| 85. மாணவர் விடுதி, மேலவளவு .. .. .. | 50 |
| 86. மாணவர் விடுதி, போடிநாயக்கனூர் .. .. | 120 |
| 87. மாணவர் விடுதி, தி. வாடிப்பட்டி .. .. | 80 |
| 88. மாணவர் விடுதி, அச்சம்பட்டி .. .. | 70 |
| 89. மாணவர் விடுதி, மட்டப்பாறை .. .. | 40 |
| 90. மாணவர் விடுதி, பாப்பராய்க்கன்பட்டி .. | 50 |
| 91. மாணவர் விடுதி, கே. பெருமாள் பட்டி.. .. | 50 |
| 92. மாணவர் விடுதி, ஏழுமலை .. .. .. | 50 |
| 93. மாணவர் விடுதி, கருங்காலக்குடி .. .. | 50 |
| 94. மாணவர் விடுதி, பழநி .. .. .. | [illegible] |

### இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | மொத்தம். |
|---|---|---|
| 135. | மாணவியர் விடுதி, தேவகோட்டை | 50 |
| 136. | மாணவியர் விடுதி, குள்ளூர் சந்தை | 75 |
| 137. | மாணவியர் விடுதி, பிரான்மலை | 50 |
| 138. | மாணவியர் விடுதி, காரியாபட்டி | 50 |
| 139. | மாணவர் விடுதி, பெருநாழி | 50 |
| 140. | மாணவர் விடுதி, மண்டபம் | 50 |
| 141. | மாணவர் விடுதி, நரிக்குடி | 50 |

### கோயம்புத்தூர் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 142. | கல்லூரி மாணவர் விடுதி, கோயம்புத்தூர் | 100 |
| 143. | கல்லூரி மாணவர் விடுதி, திருப்பூர் | 100 |
| 144. | மாணவர் விடுதி, தொண்டாமுத்தூர் | 50 |
| 145. | மாணவர் விடுதி, மேட்டுப்பாளையம் | 50 |
| 146. | மாணவர் விடுதி, சொக்கம்பாளையம் | 50 |
| 147. | மாணவர் விடுதி, பெத்திகுட்டை | 50 |

### வடாற்காடு மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 148. | கல்லூரி மாணவர் விடுதி, குடியாத்தம் | 50 |
| 149. | கல்லூரி மாணவர் விடுதி, செய்யார் | 60 |
| 150. | கல்லூரி மாணவர் விடுதி, வேலூர் | 50 |
| 151. | கல்லூரி மாணவியர் விடுதி, வாணியம்பாடி | 50 |
| 152. | கல்லூரி மாணவியர் விடுதி, வாலாஜாப்பேட்டை | 50 |
| 153. | மாணவர் விடுதி, பொன்னை | 50 |



### வடாற்காடு மாவட்டம்—தொடர்ச்சி.

| | | மொத்தம் |
|---|---|---|
| 154. | மாணவர் விடுதி, திருவண்ணாமலை | 50 |
| 155. | மாணவர் விடுதி, திருப்பத்தூர் | 50 |
| 156. | மாணவர் விடுதி, குடியாத்தம் | 50 |
| 157. | மாணவர் விடுதி, ஜோலார்பேட்டை | 50 |
| 158. | மாணவர் விடுதி, ஆரணி | 50 |
| 159. | மாணவர் விடுதி, போளூர் | 50 |
| 160. | மாணவர் விடுதி, செங்கம் | 50 |
| 161. | மாணவர் விடுதி, ஆற்காடு | 50 |
| 162. | மாணவர் விடுதி, வந்தவாசி | 50 |
| 163. | மாணவியர் விடுதி, செங்கம் | 50 |

### நீலகிரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 164. | கல்லூரி மாணவர் விடுதி, உதகமண்டலம் | 100 |
| 165. | கல்லூரி மாணவியர் விடுதி, உதகமண்டலம் | 50 |
| 166. | மாணவர் விடுதி, கூனூர் | 30 |
| 167. | மாணவர் விடுதி, தேவர்சோலை | 40 |
| 168. | மாணவர் விடுதி, உதகமண்டலம் | 50 |

### சேலம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 169. | கல்லூரி மாணவர் விடுதி, சேலம் சந்திப்பு | 100 |
| 170. | கல்லூரி மாணவர் விடுதி, நாமக்கல் | 40 |
| 171. | கல்லூரி மாணவியர் விடுதி, நாமக்கல் | 50 |

சேலம் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | மொத்தம். |
|---|---|---|
| 172. | மாணவர் விடுதி, எலம்பிள்ளை | 90 |
| 173. | மாணவர் விடுதி, கொங்கணாபுரம் | 70 |
| 174. | மாணவர் விடுதி, மகதலேனாசத்திரம் | 70 |
| 175. | மாணவர் விடுதி, கள்ளக்குறிச்சி | 50 |
| 176. | மாணவர் விடுதி, தாரமங்கலம் | 70 |
| 177. | மாணவர் விடுதி, தீவாடிப்பட்டி | 70 |
| 178. | மாணவர் விடுதி, எடப்பாடி | 70 |
| 179. | மாணவர் விடுதி, எருமைப்பட்டி | 70 |
| 180. | மாணவர் விடுதி, எலச்சிப்பாளையம் | 70 |
| 181. | மாணவர் விடுதி, மல்லசமுத்திரம் | 70 |
| 182. | மாணவர் விடுதி, வாழைப்பாடி | 50 |
| 183. | மாணவர் விடுதி, ராமாபுரம் | 40 |
| 184. | மாணவர் விடுதி, ஆட்டையாம்பட்டி | 50 |
| 185. | மாணவர் விடுதி, ஆதனூர் | 50 |
| 186. | மாணவர் விடுதி, சாத்தப்பாடி | 50 |
| 187. | மாணவர் விடுதி, வரகனூர் | 50 |
| 188. | மாணவர் விடுதி, தாரமங்கலம் | 50 |
| 189. | மாணவர் விடுதி, காரைக்குச்சிபுதூர் | 50 |
| 190. | மாணவியர் விடுதி, முள்ளுக்குறிச்சி | 50 |

1980 ஜூலை 29]

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

| | | மொத்தம் |
|---|---|---|
| 191. | கல்லூரி மாணவர் விடுதி, தென்னூர், திருச்சி | 100 |
| 192. | கல்லூரி மாணவர் விடுதி, காஜாமலை, திருச்சி | 200 |
| 193. | கல்லூரி மாணவர் விடுதி, கரூர் .. .. | 40 |
| 194. | கல்லூரி மாணவர் விடுதி, அரியலூர் .. | 40 |
| 195. | கல்லூரி மாணவியர் விடுதி, உறையூர், திருச்சிராப்பள்ளி. | 40 |
| 196. | மாணவர் விடுதி, கல்லக்குடி .. .. | 50 |
| 197. | மாணவர் விடுதி, திருவெறும்பூர் .. .. | 100 |
| 198. | மாணவர் விடுதி, ஜெயங்கொண்டான் .. | 60 |
| 199. | மாணவர் விடுதி, பெரம்பலூர் .. .. | 50 |
| 200. | மாணவர் விடுதி, லாலாப்பேட்டை .. .. | 75 |
| 201. | மாணவர் விடுதி, பூஞ்சம்பட்டி .. .. | 50 |
| 202. | மாணவர் விடுதி, கண்ணனூர் .. .. | 50 |
| 203. | மாணவர் விடுதி, துங்காபுரம் .. .. | 50 |
| 204. | மாணவர் விடுதி, அரியலூர் .. .. | 75 |
| 205. | மாணவர் விடுதி, மருவத்தூர் .. .. | 100 |
| 206. | மாணவர் விடுதி, மணப்பாறை .. .. | 100 |
| 207. | மாணவர் விடுதி, பொன்பரப்பி .. .. | 50 |
| 208. | மாணவர் விடுதி, வி. களத்தூர் .. .. | 40 |
| 209. | மாணவர் விடுதி, குலகாநத்தம் .. .. | 40 |
| 210. | மாணவர் விடுதி, உடையார் பாளையம் .. | 50 |
| 211. | மாணவர் விடுதி, செட்டிக்குளம் .. .. | 50 |

## மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.

| | மொத்தம் |
|---|---|
| 95. மாணவர் விடுதி, சின்னாளப்பட்டி .. .. | 90 |
| 96. மாணவியர் விடுதி, சின்னாளப்பட்டி .. | 60 |
| 97. மாணவியர் விடுதி, பேரையூர் .. .. .. | 50 |
| 98. மாணவியர் விடுதி, தி. கல்லுப்பட்டி .. .. | 50 |
| 99. மாணவியர் விடுதி, ஆண்டிப்பட்டி .. .. | 50 |

## தர்மபுரி மாவட்டம்.

| | |
|---|---|
| 100. கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி .. | 150 |
| 101. மாணவர் விடுதி, ஹோசூர் .. .. .. | 50 |
| 102. மாணவர் விடுதி, சிங்காரப்பேட்டை .. .. | 50 |
| 103. மாணவர் விடுதி, பாலக்கோடு .. .. | 60 |
| 104. மாணவர் விடுதி, பூச்சம்பள்ளி .. .. .. | 50 |
| 105. மாணவர் விடுதி, ஹரூர் .. .. .. | 50 |
| 106. மாணவர் விடுதி, தோகரப்பள்ளி .. .. | 40 |
| 107. மாணவர் விடுதி, களிமங்கலம் .. .. | 40 |
| 108. மாணவர் விடுதி, ஆஞ்செட்டி .. .. | 50 |
| 109. மாணவர் விடுதி, பெண்ணகரம் .. .. | 50 |
| 110. மாணவர் விடுதி, மாரண்டஹள்ளி .. .. | 50 |
| 111. மாணவர் விடுதி, கோணங்கி நாயக்கன் ஹள்ளி | 50 |
| 112. மாணவர் விடுதி, கோட்டப்பட்டி .. .. | 50 |
| 113. மாணவியர் விடுதி, பாப்பாரப்பட்டி .. .. | 50 |
| 114. மாணவியர் விடுதி, காவேரிப்பட்டினம் .. | 50 |



## தர்மபுரி மாவட்டம்—தொடர்ச்சி.

| | மொத்தம் |
|---|---|
| 115. மாணவர் விடுதி, திருமால்பட்டி .. .. | 50 |
| 116. மாணவர் விடுதி, மொரப்பூர் .. .. | 50 |

## இராமநாதபுரம் மாவட்டம்.

| | |
|---|---|
| 117. கல்லூரி மாணவர் விடுதி, விருதுநகர் .. | 50 |
| 118. கல்லூரி மாணவர் விடுதி, இராமநாதபுரம் .. | 100 |
| 119. கல்லூரி மாணவர் விடுதி, சிவகங்கை .. .. | 40 |
| 120. மாணவர் விடுதி, கண்டரமாணிக்கம் | 30 |
| 121. மாணவர் விடுதி, வடக்கு சமுத்திரம் | 50 |
| 122. மாணவர் விடுதி, திருக்கோஷ்டியூர் | 70 |
| 123. மாணவர் விடுதி, காரியாப்பட்டி | 40 |
| 124 மாணவர் விடுதி, புதுவயல் | 50 |
| 125. மாணவர் விடுதி, திருத்தங்கள் | 60 |
| 126. மாணவர் விடுதி, மண்டலமாணிக்கம் | 40 |
| 127. மாணவர் விடுதி, கூமாபட்டி | 50 |
| 128 மாணவர் விடுதி, பரமக்குடி | 50 |
| 129. மாணவர் விடுதி, பெரியகோட்டை .. | 50 |
| 130. மாணவர் விடுதி, சீயத்தார் .. .. .. | 50 |
| 131. மாணவர் விடுதி, தேவிப்பட்டிணம் .. .. | 50 |
| 132 மாணவர் விடுதி, சாயல்குடி .. .. | 50 |
| 133. மாணவியர் விடுதி, பாகனேரி .. .. .. | 30 |
| 134. மாணவியர் விடுதி, நாட்டரசன்கோட்டை .. | 40 |

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—தொடர்ச்சி

| | |
|---|---|
| 212. மாணவர் விடுதி, திருமழப்பாடி .. | 50 |
| 213. மாணவியர் விடுதி, மேட்டுப்பாளையம் .. | 40 |
| 214. மாணவியர், விடுதி, இராமலிங்கபுரம், திருச்சி | 30 |
| 215. மாணவர் விடுதி, தரகம்பட்டி .. .. | 50 |
| 216. மாணவர் விடுதி, கூத்தூர் .. .. | 50 |

செங்கல்பட்டு மாவட்டம்.

| | |
|---|---|
| 217. கல்லூரி மாணவர் விடுதி, காஞ்சிபுரம் .. | 100 |
| 218. கல்லூரி மாணவர் விடுதி, செங்கல்பட்டு .. | 50 |
| 219. கல்லூரி மாணவர் விடுதி, திருத்தணி .. | 50 |
| 220. மாணவர் விடுதி, வரகூர் .. .. | 50 |
| 221. மாணவர் விடுதி, கனகம்மாசத்திரம் .. | 50 |
| 222. மாணவர் விடுதி, மதுரமங்கலம் .. | 25 |
| 223. மாணவர் விடுதி, சாலவாக்கம் .. | 25 |
| 224. மாணவர் விடுதி, பெரியபாளையம் .. | 50 |
| 225. மாணவர் விடுதி, கருங்குழி .. .. | 30 |
| 226. மாணவர் விடுதி, அத்திமாஞ்சேரிபேட்டை | 50 |
| 227. மாணவர் விடுதி, பாதிரிவேடு .. .. | 50 |
| 228. மாணவர் விடுதி, சுண்ணாம்புக்குளம் .. | 40 |
| 229. மாணவர் விடுதி, சோமங்கலம் .. .. | 25 |
| 230. மாணவர் விடுதி, ஓரதி .. .. | 50 |
| 231. மாணவர் விடுதி, வாலாஜாபாத் .. | 200 |
| 232. மாணவியர் விடுதி, வாலாஜாபாத் .. | 60 |
| 233. மாணவியர்விடுதி, மதுராந்தகம் .. | 40 |
| 234. மாணவியர் விடுதி, திருத்தணி .. .. | 50 |

கன்னியாகுமரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 235. | கல்லூரி மாணவர் விடுதி, நாகர்கோவில் .. | 56 |
| 236. | கல்லூரி மாணவர் விடுதி, குழித்துறை .. | 50 |
| 237. | கல்லூரி மாணவர் விடுதி, செங்காங்கடை .. | 50 |
| 238. | மாணவியர் விடுதி, குளச்சல் .. .. | 50 |
| 239. | மாணவர் விடுதி, குலசேகரம் .. .. | 50 |
| 240. | கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை | 157 |
| 241. | கல்லூரி மாணவர் விடுதி (கூடுதல்), புதுக்கோட்டை. | |
| 242. | மாணவர் விடுதி, திருமயம் .. .. | 50 |
| 243. | மாணவர் விடுதி, ஆலங்குடி .. .. | 40 |
| 244. | மாணவர் விடுதி, விராலிமலை .. | 75 |
| 245. | மாணவர் விடுதி, இலுப்பூர் .. .. | 50 |
| 246. | மாணவர் விடுதி, வடக்காடு .. .. | 50 |
| 247. | மாணவர் விடுதி, சுப்ரமணியபுரம் .. | 50 |
| 248. | மாணவர் விடுதி, மணல்மேல்குடி .. | 50 |
| 249. | மாணவர் விடுதி, பொன்பதி .. .. | 40 |
| 350. | மாணவியர் விடுதி, அறந்தாங்கி .. | 40 |
| 251. | மாணவர் விடுதி, ஆவுடையார்கோயில் .. | 50 |
| 252. | மாணவர் விடுதி, திருக்காளம்புதூர் .. | 50 |

## மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 19. | மாணவர் விடுதி, தும்மக்குண்டு | 50 |
| 20. | மாணவர் விடுதி, கம்பம் | 50 |
| 21. | மாணவர் விடுதி, ராயப்பன்பட்டி | 50 |
| 22. | மாணவர் விடுதி, வெள்ளையம்மாள்புரம் | 50 |
| 23. | மாணவியர் விடுதி, உசிலம்பட்டி | 650 |
| 24. | மாணவியர் விடுதி, திருமங்கலம் | 125 |
| 25. | மாணவியர் விடுதி, சின்னமனூர் | 100 |
| 26. | மாணவியர் விடுதி, கம்பம் | 50 |
| 27. | மாணவியர் விடுதி, செக்கானூரணி | 50 |
| 28. | மாணவியர் விடுதி, கூடலூர் | 50 |
| 29. | மாணவியர் விடுதி, திண்டுக்கல் | 50 |
| 30. | மாணவியர் விடுதி, கூடலூர் | 50 |

## திருநெல்வேலி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 31. | மாணவர் விடுதி, கயத்தார் | 50 |
| 32. | மாணவர் விடுதி, கோவில்பட்டி | 60 |
| 33. | மாணவர் விடுதி, சங்கரன்கோயில் | 110 |
| 34. | மாணவர் விடுதி, அம்பாசமுத்திரம் | 75 |
| 35. | மாணவர் விடுதி, பாளையங்கோட்டை | 75 |
| 36. | மாணவர் விடுதி, தென்காசி | 60 |
| 37. | மாணவர் விடுதி, வீரகேரளம்புதூர் | 30 |



## திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 38. | மாணவர் விடுதி, வெள்ளாளன்குளம் | 30 |
| 39. | மாணவர் விடுதி, வன்னிக்கோநேந்தல் | 30 |
| 40. | மாணவர் விடுதி, சாயமலை | 30 |
| 41. | மாணவர் விடுதி, வாசுதேவநல்லூர் | 50 |
| 42. | மாணவியர் விடுதி, சங்கரன்கோயில் | 50 |

## செங்கல்பட்டு மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 43. | மாணவியர் விடுதி, பல்லாவரம் | 50 |

## இராமநாதபுரம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 44. | மாணவர் விடுதி, கோவிலான்குளம் | 50 |
| 45. | மாணவர் விடுதி, கமுதி | 150 |
| 46. | மாணவர் விடுதி, அருப்புக்கோட்டை | 100 |
| 47. | மாணவர் விடுதி, நைனார்கோயில் | 75 |
| 48. | மாணவர் விடுதி, முதுகுளத்தூர் | 100 |
| 49. | மாணவர் விடுதி, பொம்மநேந்தல் | 50 |
| 50. | மாணவர் வடுதி, கடலாடி | 60 |
| 51. | மாணவர் விடுதி, மேலகிடாரம் | 50 |
| 52. | மாணவர் விடுதி, அருப்புக்கோட்டை | 50 |

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 53. | மாணவர் விடுதி, இருதயபுரம், திருச்சிராப்பள்ளி | 50 |
| 54. | மாணவர் விடுதி, மேலமாயனூர் | 50 |

இணைப்புகள்

[1980 ஜூலை 29

## பெரியார் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 253. | கல்லூரி மாணவர் விடுதி, ஈரோடு .. .. | 50 |
| 254. | கல்லூரி மாணவர் விடுதி, கோபிசெட்டிபாளையம் | 100 |
| 255. | மாணவர் விடுதி, பெருந்துறை .. .. | 50 |
| 256. | மாணவர் விடுதி, சத்தியமங்கலம் .. .. | 60 |
| 257. | மாணவர் விடுதி, குருவாரெட்டியூர் .. .. | 40 |
| 258. | மாணவர் விடுதி, ஆத்தியூர் .. .. .. | 40 |
| 259. | மாணவர் விடுதி, கோபிசெட்டிபாளையம் .. | 50 |
| 260. | மாணவியர் விடுதி, புஞ்சைபுளியம்பட்டி .. | 50 |
| 261. | மாணவர் விடுதி, புஞ்சைபுளியம்பட்டி .. | 50 |

## சுருக்கம்.

| | | |
|---|---|---|
| 41 | கல்லூரி மாணவர் விடுதிகள் .. .. | 3,290 |
| 13 | கல்லூரி மாணவியர் விடுதிகள் .. .. | 610 |
| 169 | உயர்நிலைப்பள்ளி மாணவர் விடுதிகள் .. | 9718 |
| 38 | உயர்நிலைப்பள்ளி மாணவியர் விடுதிகள் | 1,920 |
| 261 | | 5,538 |

இணைப்புகள்

1980, ஜூலை 29]

## அட்டவணை-இ.

### அரசு குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர் விடுதிகள்.

1979-80.

## மதுரை மாவட்டம்.

| | | மொத்தம் |
|---|---|---|
| 1. | தொழிற்பயிற்சிப் பள்ளி விடுதி, கே. புதூர், மதுரை | 100 |
| 2. | மாணவர் தொழிற்பயிற்சி விடுதி, தேனி .. | 50 |
| 3. | மாணவர் விடுதி, திருமங்கலம் .. .. .. | 150 |
| 4. | மாணவர் விடுதி, திண்டுக்கல் .. .. .. | 180 |
| 5. | மாணவர் விடுதி, உசிலம்பட்டி .. .. | 650 |
| 6. | மாணவர் விடுதி, ஞானஒளிபுரம், மதுரை .. | 60 |
| 7. | மாணவர் விடுதி, செக்கானூரணி .. .. | 200 |
| 8. | மாணவர் விடுதி, நாட்டாரமங்கலம் .. | 120 |
| 9. | மாணவர் விடுதி, உத்தமபாளையம் .. .. | 150 |
| 10. | மாணவர் விடுதி, வத்தலகுண்டு .. .. | 140 |
| 11. | மாணவர் விடுதி, கடமலைகுண்டு .. .. | 60 |
| 12. | மாணவர் விடுதி, பாப்பாப்பட்டி .. .. | 80 |
| 13. | மாணவர் விடுதி, விளத்தூர் .. .. .. | 45 |
| 14. | மாணவர் விடுதி, ராஜதானி .. .. | 70 |
| 15. | மாணவர் விடுதி, அல்லி நகரம் .. .. | 60 |
| 16. | மாணவர் விடுதி, மேலக்கல் .. .. .. | 50 |
| 17. | மாணவர் விடுதி, வில்லம்பட்டி .. .. | 50 |
| 18. | மாணவர் விடுதி, போடி .. .. .. | 50 |

| | | | |
|---|---|---|---|
| 3. தையல் மற்றும் எம்ப்ராயிடரி நிலையம், செக்கானூரணி, மதுரை. | 1971 | 50 | 30 |
| 4. தையல் பயிற்சி நிலையம், ஊமங்கலம், தென்னாற்காடு மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 5. தையல் பயிற்சி நிலையம், கம்பம், மதுரை மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 6. தையல் பயிற்சி நிலையம், கடலாடி, இராமநாதபுரம் மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 7. தையல் பயிற்சி நிலையம், தேவர்குளம், திருநெல்வேலி மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 8. தையல் பயிற்சி நிலையம், கிருஷ்ணன்கோயில், கன்னியாகுமரி மாவட்டம். | 1978 | 20 | 30 |
| இ. பிற்பட்டோர் நலத்துறையின் கீழ் நடத்தப்படுவன : | | | |
| 1. பிரம்பு பயிற்சி நிலையம், தக்கலை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 15 | 30 |
| 2. தும்பு பயிற்சி நிலையம், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 25 | 30 |

## கோயம்புத்தூர் மாவட்டம்.

| | |
|---|---|
| 55. மாணவர் விடுதி, அவினாசி .. .. .. | 50 |
| 56. மாணவர் விடுதி, திருப்பூர் .. .. .. | 50 |

## புதுக்கோட்டை மாவட்டம்.

| | |
|---|---|
| 57. மாணவர்விடுதி, கந்தர்வகோட்டை .. .. | 50 |
| 58. மாணவர் விடுதி, புதுக்கோட்டை .. .. | 44 |
| 59. மாணவியர் விடுதி, பொன்னமராவதி .. | 50 |

## வடாற்காடு மாவட்டம்.

| | |
|---|---|
| 60. மாணவியர் விடுதி, பி. எல். தண்டா .. .. | 50 |

## சுருக்கம்

| | |
|---|---|
| 48 உயர்நிலைப்பள்ளி மாணவர் விடுதிகள் .. | 4,044 |
| 12 உயர்நிலைப்பள்ளி மாணவியர் விடுதிகள் .. | 1,325 |
| 60 மொத்தம் | 5,369 |



## அட்டவணை ஈ.

| தொழிற்பயிற்சிக் கூடங்கள் | துவங்கப் பட்ட வருடம். | பயிற்சி யாளர்கள் எண்ணிக்கை. | உதவிப் பணம் ரூ. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **அ. தொழில் வணிகத்துறை இயக்குநரின் கீழ் நடப்பவை :** | | | |
| 1. பொதுநோக்கு பொறியியல் பட்டறை, முதுகுளத்தூர், இராமநாதபுரம். | 1961 | 30 | 45 |
| 2. பொதுநோக்கு பொறியியல் பட்டறை, செக்கானூரணி, மதுரை. | 1963 | 15 | 45 |
| 3. பொதுநோக்கு பொறியியல் பட்டறை, வீரகேரளம் புதூர், திருநெல்வேலி. | 1965 | 15 | 45 |
| 4. பொதுநோக்கு பொறியியல் பட்டறை (உசிலம்பட்டி), மதுரை மாவட்டம். | 1978 (திறக்கப்படல் வேண்டும்.) | 15 | 45 |
| **ஆ. சமூக நல இயக்குநரின் கீழ் நடத்தப்படுவன :** | | | |
| 1. தையல் மற்றும் ஆயத்த ஆடை நிலையம், ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி. | 1970 | 20 | 30 |
| 2. மூங்கில் பயிற்சி நிலையம், சாமியாபுரம், தர்மபுரி (தற்போது நடைபெறவில்லை). | 1970 | 15 | 30 |